# இராஜராஜசோழன்

## சதயவிழா நினைவுமலர்

தஞ்சாவூர்

1971

# ஸ்ரீகோமுத்தீசுவரசுவாமி திருக்கோயில்

## திருவாவடுதுறை

இத்தலத்தில் அம்பாள் பசு வடிவாக வந்து இறைவனை வழிபட்டுச் சாப நீக்கம் பெற்றதால் ஆவடுதுறை எனப் பெயர் பெற்றது.

அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல்பெற்ற தலம். இத்தலத்தில் தான் திருமூலர் தவமிருந்து மூவாயிரம் திரு மந்திரப் பாடலைப் பாடியுள்ளார். திருமூலருக்கு தனியாக சன்னிதியும் உள்ளது. திருவிசைப்பா இயற்றிய திருமாளிகைத் தேவரும் இத்தலத்தில் இருந்து இறைவனை வழிபட்டுள்ளார்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனம் 22-வது குரு மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியிலிருந்து வருகிறது. தற்சமயம் சுமார் இரண்டே கால் லட்ச ரூபாய் செலவில், மகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்படி திருப்பணி நடந்து வருகிறது. விரைவில் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

# இராஜராஜசோழன் சதயவிழா

# நினைவுமலர்



பெரியகோயில் நந்தி

**தஞ்சாவூர்**

1971

# பதிப்புரை

எடுப்பதும், கொடுப்பதும் கை. ஆனுல் கொடுக்கும் கைக்கே சிறப்பு. அது போல் பிறப்பதும் இறப்பதும் மனிதன் இயல்பு. ஆனுல் இறவாமல் இருப்பதே மனிதன் சிறப்பாகும். இறவாமல் இருப்பவன் உடல் புகழுடலாகும். அத்தகைய பெருந்தகை புகழுடம்பில் மக்கள் உள்ளத்தில் உலாவருவார். திருவள்ளுவரும் தக்கவர் யார், தகவிலர் யார்? என்ற கேள்வியைத் தானே கேட்டு, ''அவரவர் எச்சத்தாற் காணப்படும்'' என்று விடையிறுத்தார். எச்சமாவது என்ன? எவர் தமக்குப் பின் மக்கள் நடுவே ஞாபகச் சின்னமாய் விட்டுச் சென்றது எதுவோ அதுவே எச்சமாகும். இப்படி இலக்கியம் வகுத்த பெருமக்கள் இனத்தில் தலை சிறந்து விளங்கிய மன்னரே இராசராசனுவார். திருக்குறளில் பொருட்பாலில் கூறப்படும் அவ்வளவு இலக்கண இயல்புகளும் ஒருங்கே காணக்கிடைக்கும் இடமும் இம்மன்னரே. ''ராசன்'' என்ற சொல் இம்மன்னர்பால் ஈராசுபடலின் சிறப்புற்றது. ராசன் என்ருல், விளங்குபவர், மக்களை மகிழ்விப்பவர். சந்திரன் என்றெல்லாம் பொருளாகும். வானத்தின் முகட்டில் இருள் அகற்றி, குளிர்ந்த நிலவொளிபரப்பி, உள்ளப் பண்பைச் சிறப்புப்படுத்தும் சந்திரன்போல் அன்றும், இன்றும், என்றும் நிகரில்லாப் புகழ்படைத்து விளங்கும் மன்னரே ராசராசனுவார். சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் வரும் சிறுபாணுற்றுப்படையில் ''இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனுர், பரிசுபெற வரும் பாணனை, 'ஒய்மான்நாட்டு நல்லியக் கோடன்' பால் ஆற்றுப்படுத்தும்பொழுது அரசன் சிறப்பை மிகவும் அழகாகத் தொகுத்துள்ளார்.

''செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தேன் ஏத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சினம் இன்மையும்
மாணணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வான்மீக் குற்றத்து வயவர் ஏத்தக்
கருதியது முடித்தலும் காமுறப் படுதலும்
... ... ... ... ... ... ...
பன்மீன் நடுவண் பால்மதி போல
இன்னகை ஆயமொடு இருந்தவன்''.

என்று கூறிய பாடலில் 15 இலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. இவை யாவும் ஒருங்கே அமைந்த மன்னர் மன்னரே இராசராசனுவார் என்பது மிகையாகாது. தொன்மையில், மாண்பில் சிறந்த மொழி தமிழ்மொழியாகும். இத்தகைய தமிழ் மொழி சிறப்புற்றது இச்சோழவளநாட்டிலே என்பதும் ஒருதலை.

பதிற்றுப்பத்தில் சோழநாட்டில் தமிழ் வளர்ந்த நிலை.

'' மன்ற வாணன் மலர்திரு அருளால்
தென்தமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின் மாப்பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவரும் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநா டென்ப ''.

எனக் கூறப்பட்டது. தமிழ்ப்பாவலர் சொல்லோவியம் தீட்டி நாட்டைச் சிறப்பித்தனர் என்றார். அரும்பெரும் சோழப் புரவலர்கள் பல கல்லோவியங்களை வான் அளாவ எடுப்பித்து நாட்டின் பெருமையை வான ஏட்டில் எழுதிவைத்தனர். இதுவே தமிழ்நாட்டின் அழியாச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டு.

மூவேந்தர்கள் சிறப்புடன் அரசாட்சி புரிந்த இத்தமிழகத்தில் பல்லவப் பேரரசு நிலைகுன்றியதும், சோழர் சுய ஆட்சி பெற்றனர். முற்காலச் சோழர்கள், பிற்காலச் சோழர்கள் என்ற பிரிவில் பிற்காலச் சோழர்களின் பொற்காலம் இதுவே. விசயாலயச்சோழன் பல்லவர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி அதனைத் தலைநகராகக்கொண்டு சோழ ஆட்சியை நிலைநாட்டினார் என்பர். இர்ராசராசன் ஆட்சியில் சோழர் ஆட்சி மிகவும் உச்சநிலையை அடைந்தது. கடற்படைகொண்டு ஈழம் கிழக்கு இந்தியத் தீவுகளைவென்றார். இம்மன்னரின் குமாரர் இராசேந்திரசோழன், கங்கைவரை சென்று கடாரத்தைவென்றும் விரிவுபடுத்தினான். இம்மன்னருடைய பெருமை எல்லையற்றது என்றே யாவரும் கூறுவர். இவர் வீரர்களின் வாள், புலவர்களின் நா, கவிஞர்களின் கற்பனை, பக்தியின் பண்பு, அன்பின் இதயம், வள்ளன்மையின் கை, அழகின் முடி, கலைஞர்களின் கண். இவர் சிவநெறிப் பற்றுள்ளவர். சமய சமரச மனப்பான்மை கொண்டவர். இப்பெரிய கோயிலை வானளாவும் விமானத்துடன் கட்டினார். அவற்றிற்கு ஏராளமான மானியங்கள் வழங்கினார். இவர், சைவ சமய நூல்களை நம்பியாண்டார் நம்பியின் மூலம், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் அருந்துணைகொண்டு பன்னிரு திருமுறைகளாக வகுக்கவைத்து திருமுறை கண்டவன் எனப் பெயர்பெற்றார். இவருக்கு சயங்கொண்ட சோழன், கேரளாந்தகன், பாண்டிய குலாசனி, மும்முடிச்சோழன், அருள்மொழிவர்மன், சிவபாதசேகரன் முதலிய பல சிறப்புப் பெயர்கள் உண்டு. கி. பி. 957 முதல் 970 ஆம் ஆண்டுவரை அரசுபுரிந்த சுந்தரச்சோழன் என்பவருக்கும் வானவன்மா தேவியாருக்கும் தவத்திருக் குமாரனாய்த் தோன்றிக் கிட்டத்தட்ட 29 ஆண்டுகள் (கி. பி. 985 முதல் 1014 வரை) தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டார். இவருடைய மைந்தனே மாபெரும் மன்னராய், விளக்கிலிருந்து ஏற்றிய விளக்குப் போலத் தந்தையை ஒத்தவராய் கங்கைகொண்ட சோழபுரத்தில் கோவிலைக்கட்டிய இராசேந்திரசோழர் ஆவார். இரு புதல்விகள், சந்திரமௌலி, குந்தவைப்பிராட்டி என்பவர். இவரைச் சிறுவயதில் எடுத்து உடலுக்கு உணவும், அறிவுக்கு சிவப் பற்றையும் ஊட்டி வளர்த்தவரே பெரிய பாட்டியாரான செம்பியன்மாதேவி ஆவார். இவர் பெயரால் நாகபட்டினத்துக்கு அருகில் ஓர் சிற்றூர் இருப்பதையும் அறியலாம்.

தமிழ்நாட்டின் சிறப்பின் பெட்டகமாக விளங்கிய இம்மன்னர் ஐப்பசி மாதம் சதயநன்னாளில் தமிழ்நாடுசெய்த தவப்பயனாய் அவதரித்தார். இவர் கட்டிய வானளாவிய கருங்கற்களாலான விமானம்கொண்ட தஞ்சைப் பெரியகோயிலே பிற்காலத்தில் இவருடைய உயர்ந்த எண்ணத்தையும், ஒப்பில்லாப் பெருமையையும் விளக்கிக்கொண்டிருக்கிறது. இக்கோயிலில் இவரது அருமைப் புதல்வர் இவரது உருவத்தை வெண்கலத்தில் எடுப்பித்து, இவர் பிறந்த நன்னாளான சதயநாளைப் பெரும் திருவிழாவாகக் கொண்டாடிவந்தார், என்பதும் சிலர் கருத்து. மற்றும் சிலர் இவர் காலத்திலேயே நாட்டு மக்கள் பெரும் மதிப்புடன் இச்சதயத் திருவிழாவைக் கொண்டாடினார்கள் என்றும் கூறுவர்.

இந்தச் சதயவிழாவை நாம் உண்மையில் ஓர் ஒப்பற்ற தமிழர் திருவிழாவாகக் கருதவேண்டும். ஒப்பற்ற, இணையற்ற, நிகரற்ற மாபெரும் தமிழ் மன்னரை இந்நாளில் வாழ்த்தி வணங்கி நம்மையே நாம் சிறப்பித்துக் கொள்ளவேண்டும்.

இந்தச் சதயத் திருவிழாவானது, தஞ்சைப் பெரியகோயிலில் முதன்முதலில் 15—11—1934 அன்று நடத்தப்பட்டு இடையே நின்றது. பிறகு இரண்டாவதாக 31—10—1968-ல் இவ்விழாத் தொடரப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக மிகவும் சிறப்பானமுறையில் உலகமே கொண்டாடும்படி நடந்தேறி வருகிறது.

இந்த ஆண்டும் பெருவுடையார் பெரிய நாயகியார் அருந்துணையினாலும், மன்னர் மன்னர் இராசராசரது பேருள்ளம் துணைகொண்டும் 29, 30—10—1971 வெள்ளி சனிக்கிழமைகளில் இந்தச் சதயவிழா மிகவும் விமரிசையாக நடக்கிறது. இத்துடன் பெருவுடையாருக்கு சிறப்பான நீராட்டுவிழாவும், வீதியுலாக் காட்சியும் நடக்கின்றன. இத்திருவிழாவில் நம் தமிழக அரசின் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களும், மாண்பு தங்கிய உயர்நீதி மன்ற நீதிபதி அவர்களும், மதிப்பு மிக்க அற நிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களும், மேல்சபை உறுப்பினர் உயர்திரு தவத் திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், மற்றும் அறிஞர்களும், பெருமக்களும் கலந்து சிறப்பிக்க இருக்கின்றார்கள். தனிச் சிறப்புச் சொற்பொழிவுகளும், பட்டி மன்றமும் நடைபெறுகின்றன. இத்திருவிழாவைச் சிறப்புடன் நடத்த மன்னை திரு. நாராயணசாமி, மேல்சபை உறுப்பினர், அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு செயற்குழுவின் திட்டப்படி தமிழக அரசின் அறநிலைய ஆட்சித்துறை அதிகாரி கள் பொதுமக்கள் எல்லோருடைய ஒத்துழைப்புடன் செவ்வனே இத்திருவிழாவை நடத்த முன்வந்துள்ளனர். இவ்விழாவில் முழுவதும் பங்கெடுத்து, அல்லும் பகலும் அயராது உழைத்து இத்திருவிழாவைச் சிறப்புடன் நடத்தப் பங்கெடுத்துக்கொண்ட அனைவருக்கும் அடியேனது உள்ளம் கனிந்த பணிவான நன்றி. திருவிழா நிகழ்ச்சி களின் சிறப்பினை என்றும் யாவரும் புகழ்ந்து இன்புறவும், தமிழகத்தை நன்னாடாக்கி நானிலம் புகழவைத்த மன்னர் பெருமையினைப் பொன்னேட்டில் எழுதிவைக்க வேண்டி, இத்திருவிழாக்குழுவின் சார்பில் எப்பொழுதும்போல் ஒரு சிறப்புத் தனி மலர் நூல் வெளியிடவும் திட்டமிட்டு, இந்நூல் இன்று வெளிவருகிறது. இதற்கென ஒரு மலர் வெளியீட்டுக் குழுவும் அமைக்கப்பட்டது. இம்மலர் வெளியீட்டுக் குழு வினர்களுக்கும், பல அரிய கருத்துக்கள்கொண்ட கட்டுரைகளை அன்புடன் நல்கிய அறிஞர்களுக்கும், ஆய்வுசெய்து கொடுத்தோருக்கும் அடியேனது பணிவான நன்றி.

இந்நூலை மிகவும் நல்லமுறையில் அழகாக, குறித்த நேரத்திலே அச்சிட்டு நூலாக்கி உதவிய திருவாவடுதுறை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவருளுக்கும் அடிபணிந்த வணக்கம்.

தஞ்சாவூர்,
14-10-1971.

**வி. செள. கோதண்டபாணி,**
துணைத் தலைவர், ராஜராஜன் சதயவிழாக்குழு, தஞ்சாவூர்,
(துணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்.)



தஞ்சை ஸ்ரீ பெருவுடையார்

தமிழக முதல்வர்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள்

அறநிலைய அமைச்சர்

மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள்

**கே. எஸ். நரசிம்மன்,** B. A., B. L., I. A. S.

( ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை. )

V. S. கோதண்டபாணி B. Sc., B. L.,
துணை ஆணையர்,
அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சை.

**மு. கண்ணப்பன்**
அறநிலைய அமைச்சர்

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9
2—10—1971

அன்புடையீர்

தமிழகத்து வரலாற்றில் தனிச் சிறப்பு பெற்றவனும், தஞ்சைப் பெரிய கோயில் எடுத்தவனுமான இராசராச சோழனுடைய பிறந்த நாள் விழா வரும் அக்டோபர் 29, 30 ஆகிய இருநாட்களிலும் சிறப்புற நடைபெற இருப்பதும் இப்பெருவிழாவினையொட்டி "சதய விழா மலர்" ஒன்று வெளியிட இருப்பதும் மெத்தவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

விழா சிறப்புற அமையவும் மலர் நிறைந்த மணம் பரப்பவும் என் இதயமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அன்பன்
**மு. கண்ணப்பன்**

பெறுநர் :

திரு. வி. சௌ. கோதண்டபாணி
துணைத்தலைவர்
இராசராசசோழன் சதயவிழாக்குழு, தஞ்சை.

பு. ரா. கோகுலகிருஷ்ணன்
நீதிபதி, உயர் நீதிமன்றம்

தமிழ் நாடு

# ராஜராஜ சோழன் சதயவிழா வாழ்த்து

தமிழகத்தின் பெருமைக்குரிய மாமன்னரான ராஜராஜசோழன் நினைவாக "சதய விழா" கொண்டாடுவது சாலச்சிறந்தது.

தஞ்சைத் தரணியைத் தலைநகராக, பெரியகோயிலை கலையின் சின்னமாக வைத்து பன்னெடும் காலத்திற்கு முன்பு நம்முடைய பண்புக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து மறைந்த மாமன்னன் ராஜராஜ சோழன். நிலத்தில், கடலில் தமிழர்களின் வீரத்திற்குத் தரணியில் யாரும் நிகரில்லை என்பதனை வெற்றியால் நிலைநாட்டி, வீரத்தின் உறைவிடமாய் வாழ்ந்து வந்தவன் ராஜராஜன்.

கோடாத கோலும், குடிபுறம் காத்தோம்பும் பண்பும், அடி பற்றினோரை அனுசரிக்கும் பான்மையும், சோழமண்டலத்தின் கீர்த்திச் சின்னங்களாய் அதன் சிகரமென வாழ்ந்து வந்தான் ராஜராஜசோழன். அன்னாரின் பிறந்த நட்சத்திரம் "சதய நட்சத்திரம்". தமிழரின் பண்பைவிளக்க, தமிழ்த்தரணி பெற்றெடுத்த மாமன்னனின் புகழ் விளங்க, ராஜராஜனின் பிறந்த நட்சத்திரமான சதய நட்சத்திரத்தில் இப்பெரு விழா கொண்டாடுவது சாலச்சிறந்தது.

இத்தகைய பெருவிழாவை சிறப்புற கொண்டாட, ஆக்கமும் ஊக்கமும் அளித்த சான்றோர்கள் வாழ்க என வாழ்த்துகிறேன்.

பு. ரா. கோகுலகிருஷ்ணன்

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சிபுரம்.

முகாம் : பெங்களூர் - 20 தேதி: 13—10—1971.

தஞ்சாவூரில் நம் பண்டைய கலைகளுக்கு உறைவிடமாகத் திகழும் பெருவுடையார் என்னும் ப்ருஹதீச்வரஸ்வாமியின் கோயிலைக் கட்டி சிவபாதசேகரன் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவனும், சிவபெருமான் மீது நாயன்மார்களால் பாடப்பெற்ற தேவாரத் திருப்பதிகங்களை தில்லையில் கண்டெடுத்த பெருமையுடையவனுமான முதலாம் இராஜராஜசோழன் ஞாபகார்த்தமாக இந்த விரோதக்ருத் வருஷத்திய ஐப்பசி சதயத்திருவிழாவை விமரிசையாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் எல்லோரும் இந்த விழாவில் கலந்துகொண்டு ஆண்டவன் பக்தியை அபிவிருத்தி செய்துகொண்டு அவன் அருளால் எல்லா மேன்மைகளையும் அடைவார்களாக.

உ

ஸ்ரீ-ல-ஸ்ரீ
அம்பலவாண பண்டாரச்சன்னிதி அவர்கள்
ஆதீனகர்த்தர்
திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை
(தஞ்சை மாவட்டம்)
8—10—1971

# ஆசியுரை

முதல் இராசராச சோழதேவர் வீரம், அறநெறிச் செங்கோன்மை, பொருள்துறைச் செயலாற்றல் என்பவற்றில் மட்டுமன்றி, இவற்றிற்கெல்லாம் மூலமாகிய உண்மைச் சிவபத்தியிலும் தலை சிறந்து விளங்கிய தெய்வப் பேரரசர். பண்டு தமிழகத்தே, 'மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்-தெய்வக்குடி' என நம்பியாண்டார் நம்பிகளால் சிறப்பிக்கப் பெற்ற சோழர் குலத்தில், புகழ் ஒளி பரப்பித் திகழ்ந்த திருமாவளவன், கோச்செங்கணான் என்பார்க்குப்பின் இடைக்காலத்தே தோன்றிய சோழப் பேரரசர்களுள் ஈடும் எடுப்பும் இல்லாதபடி உயர்ந்தவர் இவர். திருமுறை கண்ட சோழர், சிவபாத சேகரர் என்னும் பெயர்களாலும் இவர் குறிக்கப் பெறுவர்.

இவர் தம் ஒளிநிறைந்த உள்ளத்தைப்போல உயர்ந்தோங்கும் விமான மும், விரிவான அரணும் உள்ளதாக அமைத்துள்ள தஞ்சைப் பெருவுடையார் திருப்பெருங்கோயில், கலை, சமயம், தத்துவம் என்னும் முத்திற உறுதிகளின் ஒருங்கிணைப்பாக, தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாக நிலவி, உலகமக்கள் உள்ளங் களை வியப்பில் ஆழ்த்துவதுகண்கூடு.

இத்தகைய தெய்வத் தமிழ்ப் பேரரசரது பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதய நாள் விழா, சென்ற மூன்று ஆண்டுகளிற்போல, இவ்வாண்டும் அக்டோ பர் 29, 30 ஆம் நாட்களில் சிறப்பாக நடைபெற இருப்பது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்விழா மக்கள் உள்ளத்தில் அறநெறி, ஒருமை யுணர்வு, தெய்வக்கொள்கை என்னும் உயர்ந்த பண்புகளை வேரூன்றி வளரச் செய்க எனவும், விழா மலர் நன்கினிது மலர்ந்து மக்களுக்கு உறுதி உணர்த்தித் தூய இன்பத்தைப் பெருக்குக எனவும் வாழ்த்தி, ஸ்ரீ ஞானமா நடராசமூர்த்தி யின் பொற் கழல்களைப் போற்றிச் சிந்திக்கின்றோம்.

உ

குருபாதம்

**தருமையாதீனம்**
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம் P.O.
12—10—1971

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

"சதய நாள் விழா உதியர்மண்டிலம் தன்னில் வைத்தவன்" என்று சயங்கொண்டார் பரணியில் புகழ்ந்து போற்றும் முதல் இராசராச சோழன் பிற்காலச் சோழர் வரலாற்றில் பொற்காலம் புதுக்கிய வெற்றி வீரனாகத் திகழ்ந்தவன். உதியர் எனப்படும் சேரர்களை வென்று, காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தருளி, தன் பிறந்தநாள் பெருவிழாவைச் சதய நன்னாளில் சேர நாட்டிலேயே கொண்டாடி மகிழ்ந்த சிறப்பினை பரணித் தொடர் அழகுற விளக்கி நிற்கிறது.

அருள்மொழிவர்மன் என்று இளமைப் பெயர்கொண்ட இம்மன்னன் சைவ நலம் கனியப்பெற்ற செம்பியன் மாதேவியாலும், தஞ்சைப் பெரிய கோவிலில் மாதேவர் நம் பிராட்டியாராகிய உமா பரமேஸ்வரியாரை எழுந்தருளப் பண்ணுவித்து அளவற்ற அணிகலன்களை வழங்கிய தம் தமக்கையாகிய குந்தவைப் பிராட்டியாராலும் இளமையில் பேணி வளர்க்கப் பெற்றவன். இவர்களது அன்பு கலந்த அறிவுரைகளே இராசராசன் சைவ சமய வளர்ச்சியிலும், சிற்பம் ஓவியம் முதலான கலைகளிலும் ஈடுபடக் காரணங்களாயின.

இராசராசன் தன் ஒப்பற்ற பக்திக்கு அடையாளமாக உலகெலாம் வியக்கும் தெய்வக்கலைக் கோயிலாகத் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலைச் சமைத்தான். இம்மன்னன் சிறந்த பக்திமானாக விளங்கியதோடு மட்டுமின்றிச் சிறந்த போர் வீரனாகவும், கலைவல்லுனனாகவும், சீர்திருத்த நாட்டமுடையவனாகவும் விளங்கிய பெருமிதம் உடையவன் என்பதை வரலாறு வண்ணமுறக் காட்டுகிறது.

இராசராசன் காலத்தில் சோழநாடு முழுவதும் அளக்கப்பெற்று எல்லைக் கல்நட்டு வரையறுக்கப்பட்ட செய்தி இவனது சீர்திருத்தப் போக்கிற்கு சான்றாய் அமைகிறது. நம்பியாண்டார் நம்பிகள் துணைக்கொண்டு மூவர் கை அடையாளமிட்டுத் தில்லையில் பூட்டப்பெற்றிருந்த தேவார திருமுறைகளை இம்மன்னர் பெருந்தகையே தொகுப்பித்தவன் என வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். தான் எடுப்பித்த தஞ்சைக் கோயிலில் தேவாரத் திருப்பதிகங்களை விண்ணப்பிக்க பிடாரர்கள் (ஓதுவார்கள்) நாற்பத்தெண்மரையும், கொட்டி மத்தளம் வாசிப்போன் ஒருவனையும், உடுக்கை வாசிப்போன் ஒருவனையும் நியமித்து நிவந்தங்கள் அளித்தசெய்தி இவன் திருமுறைகள்பால் வைத்திருந்த அயராத அன்பினை

எடுத்துக் காட்டுகிறது. மேலும் அவ்வோதுவார்கள் பெயர்களை நாயன் மார்கள் இறைவன் திருப்பெயர்களாக மாற்றி வழங்கி அவற்றையும் கல் வெட்டில் பொறித்திருப்பது போற்றற்கு உரியதாய் விளங்குகின்றது.

தஞ்சைப் பெரிய கோயிலில் நாயன்மார் திருவுருவங்களை எழுந் தருளச் செய்வித்து பக்திசெய்த இவனது பேரன்பை எவ்வளவு புகழ்ந் தாலும் பொருந்தும். திருவிசைப்பாப் பதிகங்களை ஓதுவதற்குப் பணிப் பெண்களை நியமித்து அவர்கட்குத் திருவிசைப்பாவில் வரும் நல்ல சொற் றொடர்களையே பெயராக வழங்கினதைக் கல்வெட்டுக்களில் காண்கிறோம்.

இவ்வாறு சைவ உலகிற்கு மிகப் பெருந்தொண்டு செய்து சிவபாத சேகரனாய் விளங்கிய இம்மாமன்னனின் மனைவியும் மருகியும் திருவையாற் றில் வடகயிலாயம், தென்கயிலாயம் என்னும் திருக்கோயில்களை எடுப் பித்து வழிபட்டனர்.

மைவைத்த கண்டர் நெறியன்றி மற்றோர் கருதாத் தெய்வக்குடிச் சோழர் என்பதற்கேற்ப இம்மன்னனது கோவில் அமைப்பைப் பின்பற்றி இராசேந்திரசோழன் கங்கைகொண்ட சோழேச்சுரத் திருக்கோயிலையும், இராசாதிராசன் தாராசுரம் திருக்கோயிலையும் மூன்றும் குலோத்துங்கச் சோழன் நமது ஆதீனத்துக்குச்சொந்தமான திருபுவனம் திருக்கோயிலையும் எடுப்பித்துச் சமய விளக்கம் கண்டனர்.

இவ்வாறு உலகம் புகழ வாழ்ந்த சோழர்குலத்தோன்றல் ஆகிய இராசராச சோழமன்னனின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் அற நிலைய ஆட்சித்துறையினரைப் பாராட்டுகிறோம். இவ்விழாவின் சிறப்பு மலராக வெளிவரும் இந்நூல் சமயமணம் பரப்பி உலகிற்குப் பயன்படுவ தாக. செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் விழா சிறப்புறுக.

உ

சிவமயம்

மதுரை ஆதீனகர்த்தர்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

## மதுரை

தேதி: 23—9—1971

21-ம் தேதி எழுதிய கடிதம் கிடைத்தது. ஸ்ரீ சிவபாதசேகரன் இராஜராஜசோழன் சதயத்திருநாள் வருகிற அக்டோபர் 29, 30 தேதிகளில் சிறப்பாக நடத்தத் தீர்மானித் திருப்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

முன்னுள் மன்னர்கள் பக்தி சிரத்தையோடு வானளாவிய விமானங்களையும் கோபுரங்களையும்கொண்ட கோயில்களைக்கட்டுவித்து அவைகளில் நித்திய நைவேத்திய பூஜைகள் ஒழுங்காக நடைபெறுவ தற்குரிய மான்யங்களையும் ஏற்பாடுகளையும் செய்துவைத்து என்றும் அழியாத புகழை நிலைநாட்டிச் சென்றிருக்கின்றார்கள். அதனாலேயே விஞ்ஞானத்தில் சிறந்த மேல்நாட்டார்களும், தமிழனுடைய மெஞ் ஞானத்தையும், பக்தி சிரத்தையையும், ஆற்றலையும் கோயில்கள் மூலமாகக்கண்டு போற்றி வருகிறார்கள். தமிழிலுள்ள நீதிநூல்களை யும், சாத்திர தோத்திர நூல்களையும் கற்றுணர்ந்த அந்நிய நாட்டவர் களும் அந்நியமதத்தைச் சார்ந்தவர்களுமான மறைத்திரு ஜி. யு. போப், மேக்ஸ்முல்லர் போன்ற பலர் தமிழனுடைய அறிவையும் ஆற்றலையும் வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள்.

தமிழனுடைய மெஞ்ஞானத்தை உண்மையாக உணரவிரும்பும் தமிழ் இனம் நீதிநூலாகிய திருக்குறளையும், ஞான நூலாகிய சிவஞான சித்தியாரையும் படித்திருக்கவேண்டும். அவற்றைப் படித்திருந்தால் தான் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும், கடவுளுக்கும் நமக்கும் தொடர்பென்ன என்று தெரியாதவர்களும் இந்து சமயத்தின் மாண்பை அறியாத பிறமதத்தவர்களும் கேட்கிற எந்தக் கேள்விக்கும் சரியான பதில் சொல்ல முடியும்.

ஆனதால் தமிழில் ஆர்வமுள்ள எல்லோரும் அதிலும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் பணிபுரிகின்ற ஆலய நிர்வாக அதிகாரிகளும் திருக்குறளையும், சிவஞானசித்தியாரையும் கட்டாய மாகப் படித்திருத்தல் அவசியத்திலும் அவசியமாகும்.

இவ்வாண்டு நடைபெறப் போகின்ற சதய விழா, யாதொரு விக்கினமுமின்றி வெகு சிறப்பாக நடந்தேறவும், அதில் கலந்து கொள்ளுகிற பக்தர்கள் யாவரும் எல்லா நலங்களும் பெற்றுத்திகழவும் எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் அவர்கள்

திருப்பனந்தாள்

(தஞ்சாவூர் ஜில்லா)

7—10—1971

சிவபாத சேகரனை முதலாம் இராச இராச சோழனது சதயத்திருநாள் விழா தஞ்சை இராசராசேச்சரத்தில் ஆண்டுதோறும் நடைபெறுவதுஇராசராசனை நினைவுகூர்வதற்கு ஒருசிறந்தவழியாகும். சோழப் பேரரசர்களே வழிவழிச் சைவம் பெருக்கியவர் ஆவர். "முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே" அவன் குடை பணிந்தது; அவன் சென்னி 'சிறந்த நான்மறை முனிவர் ஏந்துகையெதிரே' யிறைஞ்சியது; அவன் கண்ணி 'ஒன்னார் நாடுசுடுகமழ்புகை யெறித்தலானே' வாடியது; 'வென்றி யெல்லாம் வென்று அகத்து அடக்கிய தண்டா ஈகைத் தகைமாண்' மன்னனாகத் திகழ்ந்தவன் இராசராசன். 'தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு போலவும்' அவன் புகழ் நிலைபெற அமைந்திருப்பதே தஞ்சைப்பெருவுடையார் கோயில். தஞ்சை இராசராசேச்சரத்தை நிர்மாணித்த கொற்றவன் புகழ் வாழ்க! அவன் புகழைப் பரப்பும் இந்து சமய அறநிலைய ஆணையரும், துணை ஆணையரும், மற்ற அன்பர்களும் செந்திலாண்டவன் திருவருள் பெறுக! சதயவிழாச் சிறப்பு மலர் இராசராசன் சிவப்பணியைப் பரப்பி வையகத்தை வாழ்விப்பதாகுக!!

சிவ சிவ

உ

சிவமயம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய
சுவாமிகள்

தொண்டைமண்டலாதீன மடாலயம்
59, நிபந்தகாரத்தெரு
காஞ்சிபுரம் - 2
(செங்கற்பட்டு மாவட்டம்)
7—10—1971

தஞ்சைப் பேருடையார் திருப்பெருங் கோயிலில் சிற்சில யாண்டாக நிகழும் ஐப்பசித் திருச்சதயத் திருநாள் இவ்யாண்டிலும் மிக்க சிறப்பொடு நடாத்துவது குறித்துச் சைவர் எல்லோரும் பொதுவில் ஏனையரும் மிக மகிழ்வர். நடுவரசாட்சி இசைவுபெற்று அத்திருக் கோயிலைத் தமிழகத்தரசு நல்ல விளக்கம்செய்யும் நாள் எந்நாள்? இவ் வினு நாட்டவர் எவர்க்கும் பொது.

அங்குள்ள துணையாணையர் (அறநிலய ஆட்சித்துறை) திருவாளர் வி. சௌ. கோதண்டபாணி B. Ss., B. L., அவர்கள் இயல்பாக மிக நல்லவர்கள். பலராலும் பாராட்டும் பெருந்தகைமையுடையவர்கள். அவர்கள் இத்திருவிழாக் குறித்து ஒரு மலர் வெளியிடுதல் தமிழகம் வரவேற்கத் தக்கதாகும்.

அத்திருக்கோயிலின் சிவலிங்கப் பெருமானையும் சுற்றியுள்ள நால்வர், வாராஹி, கொங்கணமுநிவர், ஆறுமுகப்பிரான், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி முதலிய எல்லாத் திருவுருவங்களையும் தூயனவாக வைத்துப் போற்றிப் பேணி வருதல் யாவரும் பாராட்டுதற்குரிய திருப்பணியாகும். பிற திருப்பணிகளும் புரிந்துகொண்டிருத்தல் திருவருளை வளர்த்துக்காக்கும் நெறியுமாகும். அந்நெறிக்காளாகும் அனைவரையும் அதற்கு முதற்காரணமான தி. மு. க. அரசையும் மிக்க மகிழ்வொடு வாழ்த்துகின்றோம். தமிழ் வளர வளர்ந்துவரும் இவ்வரசே என்றும் ஆள்க.

இராசராசசோழனின் விருப்பத்தையொத்துத் திருக்கோயில் வளர்ச்சி நிகழ்தலே நலந்தரும்.

திருப்பதிகம் விண்ணப்பித்துக்கொள்ளும் பண்டைய பெருவழக்கு மீண்டும் தோற்றிப் பண்டுபோல என்றும் நடத்திவரல் வேண்டும். திருஞானசம்பந்தர் முதலிய சிவஞானச் செல்வர்கள் தொடங்கிய தமிழ் வழிபாடு சிறக்க நடைபெற்று வருக.

தமிழக அரசு வாழ்க, அறநிலய ஆட்சித்துறை செழிக்க, அன்புருவாய, திரு. வி. சௌ. கோதண்டபாணி அவர்கள் நீடூழி வாழ்க. சைவம் பரவுக. திருக்கோயில் உலகெலாம் பரவப் பிறங்குக.

உ
குருவே துணை

**தவத்திரு. சுந்தரசுவாமிகள்**
ஆதீனகர்த்தர்
கௌமார மடாலயம்

சின்னவேடம்பட்டி அஞ்சல்
கோயம்புத்தூர் - 6.
தொலைபேசி எண்: 25029

நாள்: 4—10—71

# இராசராசசோழன் சதய விழா
# வாழ்த்து

தஞ்சைப் பெருவுடையார் தக்கதளி தானெடுத்தே
மிஞ்சு புகழ்கொண்டோன் மேதினியில் — நஞ்சை
இலகு களமீதில் இருத்திறைதாள் போற்றும்
நலராச ராசமன் னன்.

திருமுறையைக் கண்டோன் திருமுறைகள் பாட
வருமுறையைச் சீர்பெய்த மன்னன் — பெருமைச்
சிவபாத சேகரன் சீலமிகும் ஆட்சி
எவருமிக மெச்சுசிறப் பே.

செந்தமிழ்க்கும் சைவத் திருமுறைக்கும் மிக்கபணி
சந்தமுறச் செய்து தகைஆட்சி — செந்தகையாச்
செய்ராச ராசன் திருநாள் சதயவிழா
மெய்வகைசெய் வார்வாழ்க வே.

தான்குறித்த வண்ணம் தகையார் சதயவிழா
மேன்மைபெறச் செய்கின்ற மேலவர்க்கு — வான்புகழும்
தஞ்சைப் பெருவுடையார் தக்க நலம்எல்லாம்
எஞ்சலிலா தேஅளிப்பா ரே.

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

தொலைபேசி, 26479

வித்துவான்,

சாந்தலிங்க இராமசாமியடிகள்,

பேரூராதீனம்,

பேரூர், (அஞ்சல்)

கோயமுத்தூர் – 10.

நாள் 5—10—1971

# வாழ்த்துரை

செந்தமிழ் நாட்டில் கடவுள் வழிபாடு செம்மை சான்ற நெறியில் ஓங்கித் தழைத்தது. காலத்தொடு கற்பனை கடந்த கடவுள் வழிபாட்டைச் சிவவழிபாடாக ஏற்றனர் தமிழ் மக்கள். "கொடிநிலை கந்தழி வள்ளி"...... என்னும் பழந்தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியச் சூத்திரம்,சிவலிங்க வழிபாட்டைக் குறித்தது என்பர். "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" என்பர் சேக்கிழார் பெருமான். செழுமை நிறைந்த தமிழகத்தின் தென்னாடுடைய சிவனை, என்னாட்டவர்க்கும் இறைவனை வழிபடக்கோயிலெடுத்தனர். பூவொடு நீர் சுமந்தேத்திப் போற்றி வாழ்ந்தனர். தமிழகத் திருக்கோவில்கள் கலைக் கவினும் சமுதாயப்பண்பும் படைத்தவை.

அத்தகையத் திருக்கோவில்களில் தஞ்சைத் தளியும் ஒன்று. தஞ்சைத் தளிக் கோவிலை, ஈடும், எடுப்பும் உடையதாய் எல்லோரும் வியக்கும் வண்ணம் உருவாக்கிய பெரு மன்னன் இராசராசன். இராசராசன் தன் பெயருக்கேற்பக் கடல் கடந்த நாடுகளையெல்லாம் வென்றவன். தன் வெற்றித் திறத்தாலும் பத்திப் பெருமிதத்தாலும் விண்ணளவிய கற்கோவிலாகத் தஞ்சைப் பெருங் கோவிலை எடுப்பித்தான். அவன் பெண்டிரும் சுற்றத்தாரும் இவ்வருட்பணியில் ஈடுபட்டனர். குடி மக்களும் அவ்வழி நின்று வழிபட்டு வாழ்ந்தனர். திருமுறைகளில் பெரிதும் ஈடுபாடுடையவன் இராசராசன். தேவாரப் பதிகங்களைப் பாடுதற்கும் இசை நிகழ்த்துதற்கும் ஐம்பதின்மரை நியமித்தான். திருமுறைகளை வெளிக்கொணர்ந்தான். ஆதலின் திருமுறை கண்ட சோழன் எனும் பெயரும் பெற்றான்.

கூத்தப்பெருமானிடத்துப் பெரிதும் ஈடுபாடுடையவன் இவன். ஆதலின் நூற்றுக்கு மேற்பட்ட ஆடற்கலை வல்லாரைக் கொண்டு கூத்துக் கலையை வளர்த்தான் என்ற செய்திகளைக் கல்வெட்டுக்களில் அறிகிறோம். நாட்டு நலத்திலும் பண்பாட்டு நெறியிலும் செந்தமிழ் வளர்ச்சியிலும் பெரும் ஈடுபாடு கொண்ட இம்மன்னனது திருநாளைக் கொண்டாடுவது அவன் கொள்கைகளைப் போற்றும் திருவிழாவாகும். ஐப்பசிச் சதய விழாவினைத் தமிழக அரசும், ஆன்றோர் பலரும் சில ஆண்டுகளாகச் சிறப்பாகக் கொண்டாடுவது தமிழினம் பெருமைப்படத் தகுவதாகும். இது போல கங்கைகொண்டசோழன், கரிகாலன் ஆதியோர் திருநாட்களும் கொண்டாட வேண்டியன. திருவருள் இத்தகைய விழாக்களைச் சிறப்புற நடத்தத் துணைபுரிவதாகுக.

உ

சிவமயம்

மயிலம் – பொம்மபுர ஆதீனம்

## சிவத்திரு சிவஞானபாலய சுவாமிகள்

அருளிய

# ஆசியுரை

தெய்வமணங் கமழும் சோழவள நாட்டின் பெருவேந்தனாய்த் திகழ்ந்த இராச இராச சோழன் அமைத்த தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் அப்பேரரசனது சிவநேயத்தையும் கலையார்வத்தையும் விளக்கா நின்றது. அத்திருக்கோயில் இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கும் திருத்தல மட்டுமன்று. அஃதோர் கலைக்கருவூலம். பண்டைத் தமிழ்நாட்டின் சிற்பத் திறனைச் செவ்விதின் எடுத்துக் காட்டும் சிறப்போவியம். இந்நாள் பொறி வல்லுநரை விண்ணோக்கி வியப்புறச் செய்யும் வினைமாட்சி பெற்று மிளிர்வது.

இத்தகு சிறப்புமிக்க திருக்கோயிலை இன்றுங் கண்டு களிக்குமாறு அமைத்த அம்மன்னர் பெருமானை நினைவுகூர்தல் தமிழக மாந்தர் அனைவரது கடமையாம். பண்டைத் தமிழ்ப் பண்பாட்டைப் புதுப்பித்தலும் போற்றுவதுமாகவுள்ள இந்நாள் அழியாப் புகழ் பெற்ற அம்மன்னன் சிவபாதசேகரன் சதயத் திருநாளைப் போற்றிச் சிறப்புற விழா நடாத்துவதும், சிறப்புமலர் வெளியிடுவதும் சாலச் சிறந்தவாம். விழா இனிது நிறைவேறவும் சிறப்பு மலர் நானிலமெங்கும் நறுமணங் கமழ மலரவும் எம் மயிலம் முருகப்பெருமான் திருவருள் புரிவாராக வென வாழ்த்துகின்றோம்.

உ

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி
தொலைபேசி தனது (காரைக்குடி) : 361
அலுவலகம் : 215
(இராமநாதபுரம் மாவட்டம்)

நாள் : 18—10—1971

# வாழ்த்துரை

இராஜராஜன் மன்னர் மன்னன்; அரசர்களுக்கு அரசன்; அலைகடலைக் கடந்தும் ஆட்சிசெய்த அரசன்; அறநெறித் தலைவன்; அருங்கலைகளுக்கோர் கொழுகொம்பு; தேவார ஈசன் திருவடியில் தோய்ந்த நெஞ்சினன்; வெற்றி மங்கை தழுவிய தோளினன்; நீதி தழுவிய கோலேந்திய கரத்தினன்; ஞாலம் திரிதரு கதிரவனென வாழ்ந்த கொற்றவன். அவன் காலம் தமிழகத்தின் பொற்காலம். பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு புதிய தமிழகத்தைப் படைத்திடும் புதிய வரலாற்றைத் தொடங்கியிருக்கும் கலைஞர் தலைமையில் இராசராசன் விழா எடுப்பது இனியபேறே. தாம் வழிபட்ட இறைவனுக்குத் தேவாரநாதர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்த இராசராசன் விழா, தமிழகக் கோயில்களிலெல்லாம் எழுந்தருளியிருக்கின்ற இறைவனை, தமிழறிந்த நாயகனுக்கிய மாண்புமிகு அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் முன்னிலையில் நடப்பது ஏற்றமுடையதேயாகும். இராசராசன் புகழ் வளர்க, வாழ்க!

பெறுநர் :

திருமிகு. வி. சௌ. கோதண்டபாணி அவர்கள்
பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை தஞ்சாவூர்.

# வாழ்த்துச் செய்தி

கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.,
ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

சோழப் பேரரசர்களில், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி பல்லாற்றானும் சிறந்தோங்கித் திகழ்ந்திருந்தவன், 'இராச ராச சோழன்'. சுந்தர சோழன் என்னும் இரண்டாம் பராந்தக மன்னனுக்கும், வானவன்மாதேவி யார்க்கும் மைந்தனாகத் தோன்றிய இவ்வரசனின் இயற்பெயர் அருண்மொழி என்பது. திருக்கோவலூரிலுள்ள ஒரு கல்வெட்டு, இவ்வரசனைச் 'செந்திருமடந்தைமன், ஸ்ரீ ராசராசன், இந்திரசமானன், இராச சர்வஞ்ஞன் என்னும் புலி' எனப் புகழ்ந்துரைத்துப் போற்றுகின்றது. இவ்வரசனுக்குக் கேரளாந்தகன், சிங்களாந்தகன், பாண்டிய குலாசனி, தெலிங்க குலகாலன், மும்முடிச்சோழன், செயங்கொண்ட சோழன் எனப்பல சிறப்புப் பெயர்கள் உண்டு. இவற்றால், அவனுடைய வீரத்திறனும், வெற்றிப் பண்பும் விளங்கும். சிவபாதசேகரன், பண்டிதசோழன், திருமுறைகண்ட சோழன் முதலிய சிறப்புப்பெயர்கள், இவனது சிறந்த சிவபக்தியையும், செந்தமிழ்ப் புலமையினையும், திருமுறைப் பற்றையும் விளக்குவனவாகும்.

இப்பேரரசனின் ஆட்சிக் காலத்தில், தமிழகம் ஈடும் இணையும் அற்ற சிறப்பு எய்தி விளங்கியது. தமிழ் நாகரிகம் பண்பாடு கலை முதலியன கடல் கடந்த பிற நாடுகளிலும் சென்று பரவிப் பெருமையுற்றன. இப்பேரரசன் செய்த தொண்டுகளிலெல்லாம் மிகவும் சிறந்ததாய் ஓங்கித் திகழ்வது, தஞ்சை மாநகரில் இவன் எடுப்பித்த இராச ராசேச்சுவரம் என்னும் பெருவுடையார் கோயிலேயாகும். தென்னிந்தியக் கோயில் கட்டிடக்கலை வரலாற்றில், இராச ராசசோழன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஒப்புயர்வற்றுத் திகழ்கின்றது. அது நம் தமிழ்நாட்டின் தலைசிறந்த கலை நாகரிகப் பண்பாடுகளின் சின்னமாகவும் சிகரமாகவும் எழில்மிக்கு விளங்கி வருகின்றது. இப் பெருங்கோயிலைக் காணும்போது, இராசராசசோழனின் இணையற்ற பல சிறப்புக்களை நினைத்து நினைத்து எவரும் வியவாமல் இருத்தல் இயலாது.

உலக வரலாற்றிலேயே இவனுக்கு நிகராகச் சொல்லத் தகுந்த அரசர்கள், ஒரு சிலரே இருந்திருத்தல் கூடும். இப்பேரரசன் ஐப்பசித் திங்களில் சதய நாளில் தோன்றியருளினான் என்பது, திருநந்திக்கரை என்னும் இடத்திலுள்ள ஒரு கல்வெட்டால் புலனாகின்றது. தான் பிறந்த ஐப்பசிச் சதயநாளில், இறைவனுக்கு விழாக்கொண்டாட, இவ்வரசன் நிபந்தங்கள் அமைத்ததனை அக் கல்வெட்டு அறிவிக்கின்றது. சேரநாட்டை வெற்றி கொண்டபோது, அங்கும் தான் பிறந்த ஐப்பசிச் சதயநாளில் இறைவனுக்குத் திருவிழாக் கொண்டாட இவ்வரசன் ஏற்பாடுகள் செய்தருளினான் என்பது, 'சதயநாள் விழா உதியர் மண்டலம் தன்னில் வைத்தவன்' எனவரும் கலிங்கத்துப் பரணிப் பாடலால் தெளியப்படுகிறது.

இராசராசசோழனின் ஐப்பசி சதயநாள் விழா, வழக்கம்போல் இந்த ஆண்டும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், சிறப்புற நடைபெற இருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். விழா நன்கினிது நிகழவும், விழா மலர்சிறப்புற அமையவும், தஞ்சைப் பெருவுடையாரின் திருவடிகளை இறைஞ்சி, விழாவுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தஞ்சைப் பெரியகோயில்
மூலத்தானத்து உட்புறச் சுவரில் உள்ள சிற்பம்

# ஸ்ரீ பசுபதீஸ்வரர் திருக்கோயில்

## ஆவூர்

பாபநாசம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் குடந்தையிலிருந்து தென்மேற்கே ஆறு கல் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்தும் தஞ்சையிலிருந்தும் பேருந்து வசதிகள் உண்டு. மாயூரம் - தஞ்சை புகைவண்டி மார்க்கத்திலுள்ள தாராசுரம் புகை வண்டி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது.

இக்கோயில் பழமையானதும், புராதனமானதும் மூன்றும் இரா ஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்டதாகவும் தேவாரப்பாடல் பெற்ற 274 தலங்களில் காவேரிக்குத் தென்கரையிலுள்ள 127 கோயில்களில் 21 வது தலமாகவும், திரு ஆவூர் பசுபதீச்சரம் என்ற பெயருள்ளதாகவும் வரலாற்றி லிருந்து தெரிகிறது.

திருஞானசம்பந்தரால் பாடல் பெற்றது. காமதேனுவாகிய பசு வழி பட்டு பேறு பெற்றது. மேலும் பிரமன், சப்தரிஷிகள், கணங்கள், தேவர்கள், யக்ஷர், கின்னரர், கந்தர்வர், இந்திரன், ஆதித்தன், நவக்கிரகங்கள், திருமால், தசரதர் முதலியோர் வழிபட்டு பேறு பெற்ற தலம். மூலவர் சுயம்பு மூர்த்தி. இறைவர் பசுபதீஸ்வரமுடையார். மங்களாம்பிகை, பங்கஜவல்லி என இரண்டு இறைவிகளை உடையவர். ஸ்தலவிருக்ஷம்வில்வமரம். ப்ரம்மதீர்த்தம், தேனுதீர்த்தம், சந்திரபுஷ்கரணி, அக்னிதீர்த்தம், அகஸ்தியநதி என்ற பொய்கை நதி, சூரியபுஷ்கரணி என ஆறு தீர்த்தங்களை உடையது.

தர்மத்துவஜன் என்னும் அரசன் குஷ்டரோகத்திலிருந்து நீங்கப் பெற்றதாகவும், சங்கப்புலவர்கள் வாழ்ந்து வந்ததாகவும், மற்றும் பல பெருமைகளை உடையதாகவும் உள்ளது.

நிர்வாக அதிகாரி

**பி. எஸ். இராமலிங்கம்**

அறங்காவலர்கள் :

**என். சுவாமினாதன் (தலைவர்)**

**ஆர். சுந்தரராஜன், பி. நடராஜ பிள்ளை**

**வி. ராமையா கொண்ணமுண்டார், வி. தில்லைசிகாமணி**

# இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம்

## இராமநாதபுரம்

### ஆஸ்திகப்பெருமக்களுக்குத் திருப்பணி நிதிக்காக வேண்டுகோள்

திருஉத்தரகோசமங்கை ஒரு பழமையான சிவத்தலம். "மண் முந்தியோ, மங்கை முந்தியோ" என்பது தொண்டு தொட்டு வழங்கி வரும் பழஞ்சொல். திருவாசகப்பெருமை பெற்ற புண்ணிய தலமாகும். இப்பழம் பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மங்களேஸ்வரி சமேத ஸ்ரீ மங்கள நாதனையும் தனிக்கோவில் கொண்டுள்ள மரகத நடராஜ பெருமானையும் தரிசித்து இறையருள் பெற இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

சுமார் 10 லக்ஷம் ரூபாய் செலவில் இக்கோவில் திருப்பணி வேலை துவக்கப்பட்டிருக்கிறது. மெய்யன்பர்கள் நன்கொடையை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

(ஒ-ம்) எம். வி. ராகவேந்திர ராவ்
திவான் & அட்மினிஸ்டிரேடிவ் செகரட்டரி
இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம், இராமநாதபுரம்.

# இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம்

## இராமநாதபுரம்

### ஆஸ்திகப்பெருமக்களுக்குத் திருப்பணி நிதிக்காக வேண்டுகோள்

இராமரால் பூஜிக்கப்பெற்றதும் இராமாயண சம்பந்தமானதும், பாண்டிய நாட்டின் பதினெண் திருப்பதிகளில் 4-வது திவ்யதேசமாக விளங்குவதுமான தர்ப்பசயனம் என்ற திருப்புல்லாணி ஆலயத்தில் ஸ்ரீ ஆதி ஜெகந்நாதர், ஸ்ரீ பத்மாசினித்தாயார், ஸ்ரீ தர்ப்பசயனராமர் ஸ்ரீ பட்டாபி ராமர், ஸ்ரீ ஆண்டாள் எழுந்தருளியுள்ளனர்.

உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 1,82,400/-ல் இக்கோவில் திருப்பணி வேலை நடைபெற இருப்பதால் பக்தர்களிடமிருந்து பெருமளவில் நன் கொடை எதிர் பார்த்து திருப்பணி வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திகப் பெருமக்கள் அனைவரும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நன் கொடை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒ-ம்) எம். வி. ராகவேந்திர ராவ்
திவான் & அட்மினிஸ்டிரேடிவ் செகரட்டரி
இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானம், இராமநாதபுரம்.

# இராஜராஜசோழன் சதயத்திருநாள் விழாக்குழு

தஞ்சாவூர்

புரவலர் :

**ராஜஸ்ரீ ராஜாராம்ராஜாசாகேப் அவர்கள்**

(பரம்பரை அறங்காவலர், அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்)

தலைவர் :

**திருமிகு. மன்னை. ப. நாராயணசாமி M. L. C. அவர்கள்**

துணைத்தலைவர்கள் :

**திருமிகு. V. S. கோதண்டபாணி B. Sc., B. L., அவர்கள்**

(துணை ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்)

**திருமிகு. V. பழனிச்சாமி M. A., B. L., அவர்கள்**

(கோட்டாட்சித் தலைவர், தஞ்சாவூர்)

**திருமிகு. G. M. குப்பண்ணன் B. Sc., B. L., அவர்கள்**

(மேலத்தஞ்சை மாவட்ட நீதிபதி)

**திருமிகு. D, நாகராஜன் M. D. அவர்கள்**

(கண்காணிப்பாளர், தஞ்சை மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்)

செயலாளர் & பொருளாளர் :

**திருமிகு. A. N. பார்த்தசாரதி B. Sc., அவர்கள்**

(பொருளாளர் மற்றும் மேலாளர், அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்)

துணைச்செயலாளர்கள் :

**திருமிகு. V. K. கண்ணபிரான் B. A., அவர்கள்**

(நிர்வாக அதிகாரி, ஸ்ரீ பங்காருகாமாக்ஷியம்மன் ஆலயம், தஞ்சாவூர்)

**திருமிகு. M. S. முத்துசாமி அவர்கள்**

(நிர்வாக அதிகாரி, ஸ்ரீ கோடீஸ்வரர் அறக்கட்டளை, தஞ்சாவூர்)

## ஸ்ரீ மூலநாதஸ்வாமி ஸ்ரீ லெக்ஷ்மிநாராயணப்பெருமாள் திருக்கோயில்

மகாராஜபுரம் — தஞ்சை வட்டம்

இறைவர்: ஸ்ரீ மூலநாதஸ்வாமி. இறைவி: ஸ்ரீ சிவகாமசுந்தரி. விசேடங்கள்: நவராத்திரி, ஸ்கந்த சஷ்டி, அன்னுபிஷேகம், ஆருத்ரா தரிசனம், மகாசிவராத்திரி, திருக்கார்த்திகை, முதலியன.

மூலவர்: லெக்ஷ்மிநாராயணப் பெருமாள். உற்சவர்: வரதராஜப் பெருமாள். ஸ்ரீதேவி, பூதேவியுடன் இருக்கிறார். விசேடங்கள்: மாதாந்தர ஏகாதசிகள், வைகுண்ட ஏகாதசி, மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை முறையாக நடைபெற்று வருகிறது. புகைவண்டி நிலையம் பூதலூர். மூன்றரைக்கல் தொலைவில் மேற்கே திருக்காட்டுப்பள்ளியும், கிழக்கே 8 கல் தொலைவில் திருவையாறும் உள்ளன.

## ஸ்ரீ எறும்பீசுவரர் (ஸ்ரீ பிப்பிகேசுவரர்) திருக்கோயில்

திருவெறும்பூர் — திருச்சி வட்டம்

இத்தலம் சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையில் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற சிவத்தலமாகும். திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் பாதையில் 10 கிலோ மீட்டர் தூரத்திலும், திருவெறும்பூர் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. திருச்சிராப்பள்ளியில் இருந்து வர டவுன் பஸ் வசதிகள் உண்டு வைகாசியில் பெருந்திருவிழா.

கோட்டைப்போன்ற மதில்களுடன் 114 படிகள் கொண்ட நூறு அடி உயரமுள்ள சிறு மலைமேல் கோயில் அமைந்துள்ளது. இறைவன் திருநாமம் எறும்பீசர் என்பது. தேவியின் திருப்பெயர் நறுங்குழல் நாயகி. சிவலிங்கப் பெருமான் திருமுடி சிறிது சாய்ந்திருக்கிறது. இந்திரன் எறும்பு உருக்கொண்டு இறைவனை வழிபட்டான். அரிய செய்திகளை அறிய இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன் முதலிய மன்னர்கள் காலத்து பல சிறந்த தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. இந்தியத் தொல் பொருள் துறையாளரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

நிர்வாக அதிகாரி

**த. அ. முருகேசன். பி. ஏ.**

# எழுஞாயிறன்ன இராசராசன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

இராசராசசோழன் மனிதரில் உயர்ந்த மாமேதை; மன்னர் மன்னன்; குடி தழுவிய ஆட்சிமுறைக்குக் கால்கோள் செய்தவன்; பத்திமை நெறிக்குப் பகலவன்; பயிலும் கலைகளுக்கு ஓர் கொழுகொம்பு; எழிற்கலைக்கு ஏந்தல்; தமிழ்தழீஇய சாயல் உடையவன்; தமிழ் நெறிக்கு ஓர் அரண். தமிழகச் சமய நெறியில் மண்டிய ஆரியப் புல்லுருவிப் பகையினின்றும் சமயநெறியைக் காத்துத் தந்தவன். அவன் புகழ், தமிழகத்தின் புகழ்.

இராசராசன் 'மக்கட்கு' இறை யெனக் கருதப்படும் வள்ளுவத்திற்கு இலக்கியமாய் வந்தமைந்த அரசன்; வெற்றிவேந்தன்; கடலிடைக் கலம் செலுத்தித் தென்கிழக்காசிய நாடுகளை வெற்றிகொண்டவன்; தமிழ்ப் பெரும் மண்டலம் கண்டவன்; செருக்களத்தின் செம்மல். அவன் வெற்றித்திரு தமிழக வரலாற்று ஏடுகளில் ஒளிபெற்று விளங்குகின்றன.

ஆட்சியின் அதிகாரம் ஓரிடத்தில் குவிதல்கூடாது. இது இன்றைய அரசியலின் கொள்கை. ஆனால், மன்னர் மன்னனாக முடி மன்னனாக விளங்கிய இராசராசன் அன்றே அந்த அரசியல்நெறியை அறிந்து ஊராட்சி மன்ற ஆட்சி முறைகளைத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தினான். மக்கள் ஆட்சி மலர வழிவகுத்த முதல்மன்னன் இராசராச சோழன்.

இராசராசனது வாழ்க்கை 'பல' மன்னர்களைப்பற்றி படிக்கின்றோமே அத்தகையதல்ல. அவன் சோழநாட்டுக் குடிமக்கள் அனைவரது உடலிடத்தும் உயிரென இடம் பெற்றவன்; சீலத்திற் சிறந்தவனாக விளங்கினான்; எதிலும் உயர்ந்த நோக்கம் உடையவன். அதனை அவன் எடுத்த தஞ்சைப் பெருங்கோயிலே பறைசாற்றுகின்றது. தமிழகத்தின் புகழுக்குத் தஞ்சைப் பெருங்கோயில் ஓர் அணி. காலம் கருத்தை மறந்தாலும், வரலாறு இராசராசனை மறந்தாலும் தமிழகத்தின் கலையுலகம் இராசராசனை மறக்காது; மறக்கமுடியாது. ஓயாது உலகத்தை உருமாற்றும் இயல்புடைய காலதேவதைக்குக்கூட அவனுடைய கலைக்கோயிலை உருமாற்றமுடியாது. அது காலத்தை வென்று நிற்கும் கலைக்கோயில்.

தமிழர்கள் காலத்தால் தோன்றி மூத்த இனத்தினர். அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தில் தோன்றி வளர்ந்த தொன்மையான சமயநெறியுண்டு. தமிழர்களின் சமயநெறி நம்பிக்கைக்கு உரிய நன்னெறி; வாழ்க்கையோடியைந்த நெறி; அதிசயங்களுக்கும் அற்புதங்களுக்கும் அப்பாற்பட்ட நெறி; வேறுபாடுகளைக் கடந்த விழுமிய நெறி; சாதிச் சழக்குகளைக் கடந்த சன்மார்க்கநெறி. பொதுமை மணம் பூத்துக் குலுங்கும் பொதுநெறி. இந்த நெறியில் வாழ்க்கைக்கொவ்வா நெறிகளை அயலினத்தார் நுழைத்தனர். புல்லுருவிகளை மரம் எனப் புனைந்து காட்டினர். இப்பொருந்தா வழக்குகளைக் கடிந்து சமுதாயத்திலிருந்து விலக்க, அயல் வழக்கின் துறையைச் செழுந் தமிழ் வழக்கு வென்று விளங்க திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் திருவவதாரம்செய்து நாடுமுழுவதும் நடந்து வலம் வந்து இனிய கருத்துக்களால் எழிற் புரட்சியை உருவாக்கினர். திருக்கோயில்களில் எழுந்தருளியிருந்த எம்பெருமான் திருமேனிகளையெல்லாம் பாடிப்பரவி வழிபட்டு அருள் திருவோலக்கத்தை எழுப்பி அன்றும் இன்றும் நாட்டுமக்கள் வழிபட்டுய்ய வழிவகை செய்தனர். ஆரியப் பகை களத்தில் தோற்றது. ஆனால் மறைவாகச் சதிசெய்து இந்தத் திருமுறை ஏடுகளைக் கவர்ந்து தில்லையில் ஓர் அறையில் இட்டுச்சிறைப்படுத்தியது. அத்திருமுறைச் செல்வத்தை மீட்டுத் தமிழகத்தின் சமய நெறியை அரண் செய்த பெருமை இராசராச சோழனுக்கே உண்டு. இங்ஙனம் நாடு, இனம், மொழி அனைத்துத் துறையிலும் சிறந்து விளங்கிய இராசராச சோழனின் புகழ் எழுஞாயிறென விளங்குகிறது.

# ஸ்ரீ சுப்ரமணியசுவாமி
## திருக்கோயில் திருச்செந்தூர்

ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கடற்கரை கோயில் பாரீர்!
பன்னெடுங் காலமாக பக்தர்கள் வணங்கும் தலம்!
சிற்பங்கள் மலிந்த சீர்மிகு கட்டிடக்கலை!
உல்லாசமாய் வருவோர்க்கு உள்ளம் உவகை பூக்கும்!
கண்ணைக் கவரும் கடற்கரை காட்சிகள்!
தமிழ்நாடு சுற்றுலாவில் காணத் தவறாதீர்கள்!!

முருகப்பெருமான் அசுர அரசனை சூரபதுமனை வென்று, தேவர்களை விடுவித்த திருத்தலம் திருச்செந்தூர். வெற்றிவாகை சூடிய முருகன் சந்தன மலையில் அழகான கோயில் அமைத்துத் தன் தந்தையும் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனுமாகிய சிவபெருமானை வணங்கி வழிபட்ட தலமும் இதுவே. 137 அடி உயரமும், 9 அடுக்குகளும் கொண்ட சிற்பக்கலை மலிந்த சீர்மிகு கோபுரமும், கருங்கல் திருப்பணியாலான கண்கவர் மண்டபங்களும், சுற்றுப்பிரகாரங்களும் ஆழ்ந்த இறையுணர்வு கொண்ட மாபெரும் துறவிகளின் திருத்தொண்டால் அமைந்தவை.

மூலவர் சுப்ரமணியருக்கும் வள்ளி தேவசேனா சமேத சண்முகருக்கும் தினமும் 9 கால பூசைகளும், மூன்று கால அபிடேகமும் சிறப்புற நடைபெறுகின்றன. விழாக் காலங்களில் பொன்னாலும், நவரத்தினங்களாலும் செய்யப்பட்ட மிக மிக விலையுயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெறும் மூர்த்திகளைக் கண்ணுறுவோர் கண்ணும் கருத்தும் களிப்படைவதோடு உள்ளமும் உவகையுறும்; மனதில் என்றுமிலா அமைதி நின்று நிலவும்.

பெருமளவில் பக்தர்கள் கண்டு களிக்கும் திருவிழாக் காலங்கள்: மாசி மகம், வைகாசி விசாகம், ஆவணி மூலம், கந்தசஷ்டி முதலியன.

இலவச வாசகசாலையும், இலவச சித்தவைத்தியசாலையும், அனாதைச் சிறுவர் இல்லமும், பக்தர்களும் பிரயாணிகளும் தங்குவதற்கு வசதியான சத்திரங்களும் தங்குமிடங்களும் இத்திருக்கோயிலார் நடத்திவருகின்றனர்.

மேலும் விபரங்களுக்கு ஷை கோயில் நிர்வாக அதிகாரியுடன் தொடர்பு கொள்க: தொலைபேசி எண்: அலுவலகம் - 21, இல்லம் - 49.

# தஞ்சை இராசராசேச்சுரத்துத் திருப்பதிகங்கள்

## கருவூர்த் தேவர் திருவிசைப்பா

### "தஞ்சை இராசராசேச்சுரம்"

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன் றுநூ றுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் திங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (1)

**பொருள் :** காவல்கள் பல நெருங்கி (அமைந்து), பல விதமான படைகள் அமைக்கப்பட்ட நீண்ட நிலைகளையுடைய பெரிய மலைபோலும் மிக உயர்ந்த மாடங்களின் பக்கங்களில் வெள்ளிய சந்திரன் தவழப்பெற்றிருப்பதும், தழைகள் விரவப் பெற்ற மதிலுள் மேடை (பதணம்) களையுடைய மதிள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவருக்கு, உலகத்தவர்கள் வணங்கும்படியாக வந்து எழுகின்ற கிரணங்களையுடைய சூரியன் பல ஆயிரகோடி சேர்ந்தாற்போன்றிருக்கும் திருவுருவம் (அவ்வளவு ஒளியுடையது எம் பெருமான் திருமேனி) எவ்வளவு அழகு உள்ளதாயிருக்கிறது!

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக் குறவேன் மறிதிரை வடபாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (2)

**பொருள் :** மடங்கி விழுகின்ற அலைகளையுடைய வடவாற்றின் நீர் செல்லும்படியான மதகில் வாழும் முதலைகள் மோதும்படியான நீர் நிறைந்த அகழ்சூழ்ந்த மதில்கள் சுற்றி இருக்கும்படியான தஞ்சை இராசராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவருடைய நெற்றிக்கண்கள் என் கண்களைவிட்டு அகலவில்லை. ஒளி வீசுகின்ற சிலம்புகள் ஒலிக்கும்படியான பொன்போலும் அழகிய இவர் பாதங்கள், என்னுடைய குடி முழுவதையும் ஆட்கொள்ள என்னெஞ்சினுள் புகுந்தன. புகுந்த அவைகள் திரும்பவேயில்லை. (அதாவது எப்போதும் நினைத்துக்கொண்டிருத்தல்பற்றி) ஆதலின் எனக்கு வேறு இவரைத் தவிர உறவினர் எதற்கு?

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக் [போதுங்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப்
குறிப்பெ(ன்)னே கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (3)

பொருள் : கொத்துக்கொத்தாக இருக்கும் கோங்கு மலர்கள் போலும் குடைகளையுடைய அரசர்களின் முடிகள் ஒரு முடியோடு ஒரு முடி மோதுதலால் செவ்விய ஒளியினையுடைய மணிகள் சிந்தி குவிந்து ஓங்கியிருக்கும் இடங்களையுடைய மாடங்கள் நிறைந்ததும், மதில் சூழ்ந்திருக்கப் பெற்றதுமாகிய தஞ்சை இராச ராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவர், தன்னுடைய சடையிற் பொருந்திய மகுடத்தோடு குளிர்ந்த பிறைச் சந்திரனும் ஒளியை வீச, ஒளி பரப்பும் முத்துக்கள் பதிக்கப்பெற்ற குடைநிழலில் இடபத்தின் மேல் ஏறிக்கொண்டு திருவுலா வரும்படியான குறிப்பு என்ன காரணம் பற்றியோ!

வாழியம் போதத் தருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளிர்
கங்குல்வா யங்குலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (4)

எவரும்மா மறைக ளெவையும்வா னவர்கள்
ஈட்டமுந் தாள்திருக் கமலத்
தவரும்மா லவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலி னெலிசெய் யாமறுகில்
உறுகளிற் றரசின தீட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (5)

பொருள் : உவர்ப்பினையுடைய பெரிய கடலின் முழக்குப்போலும் ஒலியினையுடைய பெருமை பொருந்திய வீதிகளில், அரசனின் யானைக் கூட்டங்கள் சஞ்சரிக்கும்படியானதும், பெரிய மலைபோலும் மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்தமர்ந்த இவர் உலகிலுள்ள எல்லோரும், எல்லா வேதங்களும், தேவர்களின் கூட்டமும், அன்றலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரமனும், விஷ்ணுவும் அறிந்துகொள்ள முடியாத பெருமை வாய்ந்த வன்மை மிக்க வெம்மை வீசுகின்ற நெருப்பு உருவானவர்.

அருளுமா றருளி ஆளுமா றுள
அடிகள் தம் அழகிய விழியுங்
குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ தழகோ
தரளவான் குன்றில் தண்நிலா ஒளியுந்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாம் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (6)

பொருள் : முத்துக்களால் நிறைந்த பெரிய மலையைப்போல, குளிர்ந்த நிலவு ஒளியைத்தருகின்ற முத்துக்களின் குவியல்கள் பெருகி இருக்கின்றமையால், தெருக்களில் இருள் நீங்கி இருக்கும்படியானதும், மதிள் சூழ்ந்ததுமான தஞ்சை இராசராசேச்சுரத்தமர்ந்த எம்பெருமான் அருள் செய்யும் விதம் அருள் செய்ய, ஆட்கொள்ளும்விதம் ஆட்கொள்ள வேண்டி, அவர் தம்முடைய அழகிய விழிகளையும், மயிர்ச் சுருள்களையும், காதையும் காண்பித்து யான் பெற்ற குயில்போலும் மொழியினையுடைய பெண்ணை மயங்கச்செய்வது அழகாகுமோ?

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிரிறப் பிலைஉ திர் வென்றால்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடித் துருகுவ தென்னே
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழு
சூழன்மா ளிகைச்சுடர் வீசும் [நீர்ச்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (7)

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (8)

பொருள் : மின்னல்போலும் ஒளி வீசுகின்ற நீண்ட புருவத்தினையுடைய இள

மயிலைப்போன்ற பெண்கள், பெரிய நாடக சாலைகளில் இனிய நடனம் செய்யும்படி யானதும், மதில்கள் சூழப் பெற்றிருப்பது மாகிய தஞ்சை இராச ராசேச்சுரத்தில் அமர்ந்த இவர், நெடுங்காலமாகத் தங்க ளால் இயன்ற தொண்டுகளைச் செய்து முன்னோர்கள் பலர் எம்பெருமான் அருள் கிடைக்கப்பெறாது ஏமாறிக்கொண்டிருக்க, என்னுடைய பெரிய கோயிலாகிய நெஞ்சில் வந்து தங்கியிருக்கும் எம்பெருமானின் எளிமைத்தன்மையை யான் எப்பொழுதும் மறக்கவேமாட்டேன்.

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்
அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனில்
அலர்கதிர் அனையவா ழியரோ
பொங்கெழில் திருநீ றழிபொசி வனப்பில்
புனல்துளும் பவிர்சடை மொழுப்பர்
எங்களுக் கினியர் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (9)

**பொருள் :** மிகுந்த அழகினையுடைய திருநீறு அழிந்து காணப்படுகின்ற அழகிய திருவுடம்பையும், கங்கை நதி ஆரவாரித்து விளங்குகின்ற சடை முடியையும் உடைய வரும், எங்கட்கு இனிமையானவரும், மதில் கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்து அமர்ந்தவரும், வஞ்சகர்களுடைய நெஞ்ச கத்து ஒளிப்பவரும், அழற்சுடர் ஆனவரு மாகிய எம்பெருமானை என் நெஞ்சம், துன்பம்வந்த காலத்திலும், மற்றும் எக் காலத்திலும் நீக்கமற நினைந்து, இள வேனிற் காலத்து அலரும் சூரியன்போல பிரகாசத்துடன் வாழக் கடவதாக.

தனியரெத் தனையோ ராயிர வருமாம்
தன்மையர் என்வயத் தினராம்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டிய அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலார் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே. (10)

**பொருள் :** அனேக மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராசராசேச்சுரத்து வீற்றிருக்கும் இவர் தனிமையானவர். எவ்வளவு ஆயிரம் பேர்களினுடைய தன்மையையும் உடை யவர்! என்னிடத்து கனிந்த அன்பினை யுடையவர். இனிய தித்திப்பான கரும்பு போல்பவர். வெள்ளிய முப்புரி நூலையுடை யவர். கடைந்தெடுக்கப்பட்ட அரிய அமிர் தம் போல்பவர். தூய்மையானவர். பொன் மயமான வீரகண்டையைத் தரித்தவர். முறுக்கடங்கின சடையினையும், மகுடத் தினையும் உடையவர். புண்ணியர். பொய் பேசாத உண்மை உடையவர்கட்கே இனிய ராவார்.

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சுசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொல் மாலை ரைந்தின் [னும்
பொருள்மருந் துடையோர் சிவபதமென்
பொன்னெடுங் குன்றுடை யோரே. (11)

**பொருள் :** தேவதாரு, மந்தாரம், சண் பகம், வகுளம் (மகிழமரம்), சந்தனம் இவை கள் நிறைந்த நந்தவனத்தின் இருள் பரவி யிருக்கிற உச்சியினையுடைய மதில்கள் சூழ்ந்த தஞ்சை இராச ராசேச்சுரத்து அமர்ந்த இவரிடத்து, மனத்தைச் செலுத் துதலாகிய அரிய மருந்தை அருந்தி, துன்பம் நீங்கப்பெற்ற கருவூரன் சொல்லிய இப்பாட்டுக்கள் பத்தின் பொருளை அறிந்து தெளிதலாகிய ஓர் அரிய மருந்தை உடை யோர், சிவபெருமான் பதவி என்னும் பொன் மயமான நீண்ட குன்றினை ஏறி அதனைத் தனக்கு இருப்பிடமாகக் கொண் டவர்கள் ஆவார்கள். (அதாவது சிவ பதத்தை அடைந்து சிவபெருமானுடைய கிருபையைப் பெறுவர் என்பது கருத்து.)

திருச்சிற்றம்பலம்

# அருணகிரிநாதர்

## திருப்புகழ்

### "தஞ்சைமாநகர் ராஜகோபுரத்தமர்ந்த பெருமாள்"

தந்தன தானன தனதான
தந்தன தானன தனதான

அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலேவேனே
விஞ்சுறு மாவுன தடிசேர
விம்பம தாயருள் அருளாயோ
நஞ்சமு தாவுணும் அரனர்தம்
நன்கும ராவுமை அருள்பாலா
தஞ்சென வாமடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே.

பொருள்: ஆலகால விடத்தை அமுதாக உட்கொண்ட, சிவபெருமான் புதல்வா! உமாதேவியாரால் அருளப்பட்ட பாலனே! தம்மைச் சரணடைந்தவர்கள் வாழத் தஞ்சையில் எழுந்தருளியிருக்கும் தலைவனே! யான், மைதீட்டப் பெற்றனவும், வேல்போன்றனவுமாகிய (வேல் வருத்துமாறுபோல கண்ணும் வருத்தும்!) கண்களையுடைய மாதரின் மோகத்தில் முழுகித் திரிவேனே! யான் மேன்மை அடையும்படி உன்னுடைய அடிகளைச்சேர அருள்புரிய மாட்டாயா? (1)

தந்த தானனத் தந்த தானனத்
தந்த தானனத் தனதான

அம்பு ராசியிற் கெண்டை சேலொழித்
தஞ்ச வேமணிக் குழைவீசும்
அங்க ணாரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையினலே
எம்பி ரானுனைச் சிந்தி யாதொழித்
திந்த்ர சாலவிப் ப்ரமைதீர
இங்கு வாவெனப் பண்பி னலழைத்
தெங்கு மானமெய்ப் பொருள்தாராய்

கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல்போல் குழற் கனமேருக்
குன்று போல்முகைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா
சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா
சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
தஞ்சை மாநகர்ப் பெருமாளே.

பொருள்: பூங்கொம்பு போலும் இடையையும் கொவ்வைக் கனிபோன்ற உதடுகளையும், மேகம் போலும் கூந்தலினையும், மேருக் குன்றுபோன்ற தனங்களையும் உடையவளாகிய, குறக்குலம் புகுந்த வள்ளியைத் தலைவியாகக் கொண்ட, நற்குணங்களையுடைய வேலா! சம்பரன் என்பானைக் கொன்றவனாகிய மன்மதனை எரித்து அழித்ததாகிய நெருப்புக் கண்ணை உடைய சிவனுக்கு ஞானத்தை ஊட்டிய ஆசாரியனே! மிகப் பெரிய கோபுரங்களும், செம்பொன்னாலாகிய மாளிகைகளும் உடைய தஞ்சைமா நகரில் எழுந்தருளியிருக்கும் உயர்ச்சி பொருந்தியவனே! கடலில் உள்ள கெண்டை, சேல் முதலியவைகளை வென்று காதிற் குண்டலம் வரையில் நீண்ட அழகிய கண்களையுடைய பெண்களின் இன்பக்கடலாகிய நெருப்பிலே அழுந்தி மீளமுடியாது தவிக்கின்ற இச்சையினலே எம்பிரானாகிய உன்னை நினையாமல் ஒழிந்த இந்திர சாலம் போன்ற இந்த மயக்கந்தீர இங்கு வாவென்று உன் உயர்ந்த குணத்தினல் அழைத்து, எனக்கு மெய்யறிவைக் கொடுத்து அருள் புரிவாய்! (2)

தந்தன தனதான தானதத்த தந்த
தந்தன தனதான தானதத்த தந்த
தந்தன தனதான தானதத்த தந்த
தனதான

கந்தவார் குழல்கோதி மாலையைப்பு னைந்து
மஞ்சளா லழகாக மேனியிற் றிமிர்ந்து
கண்டமா லைகளான ஆணிமுத்த ணிந்து
தெருவூடே

கண்டபே ரையெலாம் வாயினிற்கொ ணர்ந்து
வண்பயோ தரபார மேருவைத்தி றந்து
கண்களா கியகூர வேலைவிட்டெ றிந்து
விலைகூறி

வந்தபேர் களையேகை யாலெடுத்த ணைந்து
கொண்டுதே னிதழூறு வாயைவைத்த ருந்தி
மந்தமா ருதம்வீசு பாயலிற்பு ணர்ந்து
மயல்பூணு

மங்கைமா ரநுபோக தீவினைப்ப வங்கள்
மங்கியே கிடுமாறு ஞானவித்தை தந்து
வண்டுலா வியநீப மாலைசுற்றிலங்க-வருவாயே

இந்த்ரதா ருவைஞால மீதினிற்கொ ணர்ந்த
சங்கபா ணியனாதி கேசவப்ர சங்க
னென்றுவாழ் மணிமார்பன் வீரவிக்ர மன்றன்
மருகோனே

எண்டிசா முகவேலை ஞாலமுற்று மண்டு
கந்ததா ருகசேனை நீறுபட்டொ துங்க
வென்றுபே ரொளிசேர்ப்ர காசம்விட்டி லங்கு
கதிர்வேலா

சந்த்ரசே கரிநாக பூஷணத்தி யண்ட
முண்டநா ரணியால போஜனத்தி யம்பை
தந்தபூ ரணஞான வேள்குறத்தி துஞ்சு
மணிமார்பா

சண்டநீ லகலாப வாசியிற் றிகழ்ந்து
கஞ்சன்வா சவன்மேவி வாழ்பதிக் குயர்ந்த
தஞ்சைமா நகர்ராஜ கோபுரத் தமர்ந்த
பெருமாளே.

பொருள் : கற்பக விருக்ஷத்தைப் பூமியிற் கொணர்ந்தவனும், பாஞ்சசன்யம் என்ற சங்கை உடையவனும், எல்லாப் பொருள்களுக்கும் ஆதியாகிய கேசவனும் என்று உலகோர் புகழ வாழும்படியான 'கவுத்துபம்' என்ற மணியை மார்பில் அணிந்தவனாகிய, திருவிக்ரமாவதாரம் எடுத்த திருமாலின் மருகனே! எட்டுத் திசை, பூமி இவைகள் முற்றும் நிரம்பப்பெற்ற பலம் பொருந்திய அசுரசேனை சாம்பற்பொடிபோல அழிய வென்று, மிக்க ஒளி வீசும்படியான திருமேனியை உடைய வேலனே!

சந்திரனைத் தரித்தவளும், நாகங்களை ஆபரணமாகப் பூண்டவளும், உலகத்தை உண்ட நாரணி என்ற பெயரை உடையவளும், ஆலகால விடத்தை உண்டவளும், உலகத்திற்கெல்லாம் தாயுமாகிய உமாதேவியார் பெற்ற ஞானமிக்கவனே! குறத்தியாகிய வள்ளியம்மையார் உறங்கும் அழகிய மார்பை உடையவனே! பலமிக்க நீலமயிலாகிய வாகனத்தில் விளங்கி, பிரமனும், திருமாலும் அவ்வவர் வாழ்கின்ற பதிகள் எல்லாவற்றினுக்கும் மேன்மை பொருந்தியிருக்கும்படியான தஞ்சைமா நகரின் சிறந்த கோயிலுள் அமர்ந்திருக்கும் தலைமையுடைய முருகனே! வாசனை மிக்க கூந்தலைக் கோதி, மாலை தரித்து, மஞ்சளால் மேனியில் அழகு செய்துகொண்டு, கழுத்தில் நல்ல உயர்ந்த ஆணி முத்துக்கள் பொருந்திய மாலைகளை அணிந்து, தெருவின் நடுவே கண்ட பேர்களையெல்லாம் அவர்கள்மேல் அன்புள்ளவள்போல அழைத்து வந்து, தனங்களாகிய மேருவைத் திறந்து, கண்களாகிய கூரிய வேலை விட்டெறிந்து, விலையைக் கூறி, வந்தவர்களை எல்லாம் கையினாலெடுத்து அணைத்துக்கொண்டு தேனூறும் உதடுகளையுடைய வாயை வைத்து உண்டு, மந்தமாருதம் வீசும்படியான படுக்கையிற் புணர்ந்து, மயக்கம் செய்யும் மங்கையரின் அனுபோகமாகிய தீவினைகள் ஒளிமழுங்கிக் கெடுமாறு எனக்கு அறிவைப்புகட்டி, வண்டுகள் உலாவும் கடம்பமாலை சுற்றிலங்க வந்து அருள் புரிவாய்.

# முக்குறும்பு

குகஸ்ரீ கிருபானந்தவாரியார்
சென்னை.

எண்ணில்லாத காலமாக உயிர்களாகிய நாம் இறப்பதும் பிறப்பதுமாக உழல்கின்றோம். காரணம் யாது? இப்பிறவிநோய் தொலைவதற்கு நாம் என்னசெய்யவேண்டும் என்ற சிந்தனைகூட இல்லாமல் நம்மிற் பலர் இருக்கின்றார்கள். கண்ணிருந்தும் கைவிளக்கிருந்தும் பாழுங்கிணற்றில் விழுகின்ற முழு மூடர்களாக நம்மில் பலர் இருக்கின்றனர். பரிதாபம்.

நோயாளன் தக்க மருத்துவனை நாடுவதுபோல் நாம் அறிவு சான்ற ஆன்றோர்களை நாடிச் சென்று அவர்களைத் தொழுது உய்யும் நெறிகேட்டு, அவர்கூறும் அறநெறி நின்று பிறவிப் பிணியை யாற்றிக்கொள்ள வேண்டும். அதுவே அறிவுடைமை.

பிறவி எதனால் வருகின்றது? என்று திருவள்ளுவதேவர் தெரிவிக்கின்றனர்.

"அவாவென்ப எல்லா வுயிர்க்கும் எஞ்ஞான்
தவாஅப் பிறப்பீனும் வித்து" [றும்

எத்துணை அரிய திருவாக்கு! இதனை மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

ஆசைதான் பிறவிக்கு வித்து. வித்தின்றி மரம் இல்லை; அதுபோல ஆசையின்றேல் பிறவியில்லையாம்.

கடவுளிடத்திலே நாம் வேண்டத்தக்கது ஒன்று உண்டாயின் அது பிறவாமையாம். அப்பிறவாமை வேண்டாமையை வேண்ட - அவாவின்மை யடைவதனால் எய்தும்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை;
வேண்டாமை வேண்ட வரும்" [மற்றது

அன்றியும் துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம் ஆசையே தான்; ஆசையற்றார்க்கு அணுத்துணையும் அல்லல் இல்லை.

"அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம் அஃ
தவாஅது மேன்மேல் வரும்" [துண்டேல்

என்ற திருக்குறளாலும் தெளிக.

ஆசை என்ற சங்கிலி எத்தனை நீளம் உளதோ அத்தனை நீளத்திற்கு அப்பால் கடவுள் நிற்கின்றார். அந்தச் சங்கிலி எத்தனைக்கு எத்தனை குறைகின்றதோ அத்தனைக்கு அத்தனை கடவுள் நம்பால் நெருங்கி வருகின்றார்.

ஆசை ஒரு பெரிய சங்கிலி, அதனால் நாம் ஆர்ப்புண்டு இருக்கின்றோம். அருணகிரிநாதருக்கு அந்தச் சங்கிலி அறுபடவில்லை. அறுபட்டாலும் மீளவும் ஒருசமயம் ஒட்டிக்கொள்ளும். அந்தச் சங்கிலி விபூதிபோல் பொடிபட்டுவிட்டது என்கின்றார், துகள் துகளாகி ஒழிந்தது. ஆ ஆ! என்னே அவருடைய தவவலிமை? அநுபூதியில் அவரே கூறுகின்றார்.

"....................நின தன்பருளால்
ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

நிகளம் - சங்கிலி.

நிராசையில்லையேல் அவனுக்குத் தெய்வமே இல்லை; ஆசையென்ற பெருங்காற்றில் இலவம் பஞ்சாக அலைகின்றார்கள் மாந்தர்கள்.

"ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்
செனவுமன தலையுங் காலம்
மோசம்வரும் இதனாலே கற்றதுங்கேட்
டதும்தூர்ந்து முத்திக்கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே
நிராசையின்றேல் தெய்வ முண்டோ"

என்கின்றார் தாயுமானவர்.

" ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ"
" ஆசை நிகளத்தினை நிர்த்தூளி படவுதறி "
" ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல் லாங்
ஆளினும் கடல்மீதிலே [கட்டி
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாள் இருந்த பேரும்
நிலையாக வேஇனும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவர் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதுமாக முடியும்
உள்ளதே போதும்நான் நான்எனக் குள
ஒன்றைவிட் டொன்றுபற்றிப் [றியே
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறை
பரிபூர ணனந்தமே " [கின்ற

என்றும் கூறுகின்றார் தாயுமானவர்.

ஆசைக்கு மற்றொரு பேர் காமம் என்பது. காமம் என்றால் பெண்கள்மீது வைக்கின்ற ஆசையென்று இப்போது கருதப்படுகின்றது. பொதுவாக ஒரு பொருளின்மீது வைக்கின்ற ஆசை காமம் எனப்படும்.

இந்தக் காமம் என்ற ஆசைக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் பேர் கோபம் என்பது. ஆசையின்றேல் கோபம் இராது. ஆசையின் நேர் வாரிசு கோபம்.

ஒருவன் புகைவண்டியில் போகின்றான். பக்கத்தில் பளபள என்று அழகாக ஒரு தோல்பெட்டி இருக்கின்றது, அதை ஒருவன் சும்மா உற்றுப் பார்ப்பானாயின் அவன் மீது இவன்கோபிக்கின்றான். "ஏன் எனக்கு உரிமையான இத்தோல் பெட்டியை நீர் சும்மா இமைகொட்டாமல் பார்க்கின்றீர் ?" என்று ஏசுகின்றான்.

இனி அடுத்தவனுடைய அருகில் உள்ள ஒரு தோல் பெட்டியை மற்றொருவன் பார்க்கின்றபோது இவனுக்குக் கோபம் வருவதில்லை. வேணுமாயின் இவனும் சேர்ந்து அப்பெட்டியைப் பார்த்துக் கொள்ளுகின்றான். தன்பெட்டியை அயலான் உற்றுப் பார்க்கின்றபோது சினம் மூளுகின்றது. அயலானுடைய பெட்டியை மற்றவன் பார்க்கின்றபோது சினம் வருவதில்லை. இதற்கு என்ன காரணம்? நமது தோல்பெட்டிமீது ஆசை வைத்திருக்கின்றோம், நாம் ஆசை வைத்துள்ள பொருளை அயலான்பார்க்கின்றபோது கோபம் மூளுகின்றது. ஆசையில்லாத பொருளை அடுத்தவன் பார்க்கின்றபோது கோபத்திற்கிடமே இல்லை. இங்கே தோல்பெட்டியென்று கூறினேன். உயிருள்ள தோல்பெட்டி என்றும் கருதிக் கொள்ளுங்கள்.

எங்கே ஆசை இல்லையோ அங்கே கோபம் இல்லை.

கோபத்தால் கெட்ட குடிகள் எத்தனை? இந்த ஆசையாலும் கோபத்தாலும் பல காலும் செய்த அரியபெரிய தவமும் அழிந்து போகும்.

" ...............தவஞ்செய்வோர்கள்
வெருவரச்சென் றடைகாமவெகுளியென"

என்கின்றார் கம்பநாடர்.

தவம் புரிவோர்க்குப் பரம சத்துருக்கள் காமமும் கோபமும். கோபம் வருகின்ற போது பளிச்சென்று கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். அப்போது முகம் எத்துணை அழகாக இருக்கின்றது என்று நோக்குங்கள்.

கோபத்தினும்கொடிய குணம் உலகிலே கிடையாது.

" நகையும் உவகையும் கொல்லும் சினத்தில்
பகையும் உளவோ பிற."

என்பார் பெருநாவலர்.

இனி சினத்தின் மகன் மயக்கம் என்பவன். கோபம் வந்தபோது இன்னது செய்ய வேண்டும்; இன்னது செய்தல் கூடாது; சொல்வன இவை; தவிர்வன இவை என்ற தெளிவு நிச்சயமாக இல்லாது ஒழியும். ஆதலின் கோபத்தின் செல்வக் குமாரன் மயக்கம் எனவுரைத்தேன்.

காமத்தின் மகன் கோபம்; கோபத்தின் குமாரன் மயக்கம்.

இந்த மூன்று கொடியவர்கள் நம்மைப் பிடித்து அலக்கழிக்கின்றார்கள். பன்னெடுங்

காலமாக இக்கொடியவர்களால் நாம்பெருந் துன்பமுறுகின்றோம்.

இந்த மூன்று கொடிய குணங்களை முக்குறும்பு என்று கூறுவர் பெரியோர்.

திரி - மூன்று. அ என்ற எழுத்து இன்மைப்பொருளை அறிவிக்கின்றது. திரி என்ற மூன்று கொடிய குணங்கள் இல்லாதவர் ஒருவர் இருந்தார். அவர் பேர் அத்திரி. அவர் பெரிய மாதவசீலர்.

இவரைப்பற்றிக் கம்பநாடர் கூறுகின்றபோது.

" முக்குறும்பற எரிந்தவினை வான் முனிவனை "

என்று அழகாகத் தெரிவிக்கின்றார்.

அத்திரிமுனிவரை வனவாசத்தில் ஸ்ரீராமர் அடிபணிந்து அவருடைய ஆசியைப் பெற்றனர்.

முக்குறும்பு அறுத்தவருடைய பெருமையை மொழிதல் அரிது.

இந்தக் கொடிய குணங்களாகிய காமத்தையும் கோபத்தையும் மயக்கத்தையும் நாம் விலக்க முயலுதல்வேண்டும்.

மால்-என்றால் மயக்கம். அருணகிரியார்,

" மாலாசை கோபம் ஓயா தெந்நாளும்
மாயாவிகார வழியே செல் மாபாவி "

என்றார்.

செய்யுள் ஆதலின் இறுதியில் வைக்க வேண்டிய மயக்கத்தை முதலில் வைத்து "மாலாசை கோபம்" என்றார். ஆசை கோபம் மால் என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

இந்த முக்குறும்பினை ஒழித்து; பின்னர் அது இருந்த வாசனையும் அதன் பேரும் அடியுடன் அழிந்தால் பிறவிநோய் தீரும்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். -திருக்குறள்

---


# ஸ்ரீ கண்டேசுவரசுவாமி திருக்கோயில்

பட்டுக்கோட்டை வட்டம் **தாமரங்கோட்டை** தஞ்சை மாவட்டம்

இக்கோயில் பட்டுக்கோட்டை - திருத்துறைப்பூண்டி பெருவழியில் உள்ளது மரவக்காடு புகைவண்டி நிலையத்திற்கு 3 கல் தொலைவிலுள்ளது. பட்டுக்கோட்டையிலிருந்து கிழக்கே 6 கல் தொலைவில் உள்ளது.

திருப்பாற்கடலினின்றும் அமுதம் பெறவேண்டி, மந்திர மலையை மத்தாகவும் வாசுகியை நாணாகவும்கொண்டு தேவர்கள் ஒருபுறமும், அசுரர்கள் ஒருபுறமும் பற்றிக் கடைய, வாசுகியின் வாயினின்றும் எழுந்த விஷவேகம் தாங்காது தேவர்கள் தலைவரான திருமால், காக்கவேண்டி சிவபெருமானிடம் வேண்ட, அவ்விடத்தைப் பெருமான் உண்ண, உமையம்மை அவ்விடம் உடலினுள் செல்லாதவாறு கண்டத்தைப் பிடித்திட, விடம் கண்டத்திலேயே நின்றதனால், "கண்டேசுரர்" என்னும் திருநாமம் பெற்று அருள்புரிகின்றார். இறைவி அறம்வளர்த்தநாயகி என்னும் திருநாமம் பெற்று அருள் புரிகின்றார். இங்கு வைகாசி மாதத்தில் நடைபெறும் விசாகப் பெருவிழா மிகவும் சிறப்புடையது.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

M. வீரப்பன், (தலைவர்) ஆ. விநாயகமூர்த்தி
N. வைத்திலிங்கம் C. A. N. பாலசுப்பிரமணியம் M. சின்னக்கண்ணு
R. ராஜபாக்கிய வாணதிரையர், அத்திவெட்டி.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில்

**மாயூரம்** தஞ்சை மாவட்டம்



இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி சந்திப்பிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல்பெற்றது. இறைவன் பெயர் மயூரநாதர். இறைவியின் பெயர் அபயாம்பிகை. பார்வதி மயிலுருக்கொண்டு சிவனைப் பூசித்த இடம் இத்தலம். ஆண்டவனும் மயிலுருக்கொண்டு அருளிய இடம். இங்கு துலா ஸ்நானம் செய்தல் மிகவும் விசேடமானது.

ஆண்டுதோறும் வைகாசித்திங்களில் வசந்தோற்சவமும் ஐப்பசி 30 நாட்களிலும் துலா உற்சவமும் நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின்கீழ் உள்ளது.

# சூரியனார்கோயில்

இது சூரியன் மூல மூர்த்தியாகவும், பிறகோள்கள் பரிவார தெய்வங்களாகவும் அமைந்துள்ள நவக்கிரக தலம்.

மாயூரம் - கும்பகோணம் இருப்புப் பாதையில் உள்ள ஆடுதுறையில் இருந்து வடக்கே 2 கிலோமீட்டர் தூரத்தில், திருமங்கலக்குடி என்னும் சிவத்தலத்திற்கு அருகில் உள்ளது.

சனி முதலிய கோள்களால் நேரும் இன்னல்கள் தீர மக்கள் வந்து வழி படும் பிரார்த்தனைத் தலம். கோயிலும் நவக்கிரகங்களின் வடிவங்களும் காணத்தக்கவை. கோள் தீர்த்த விநாயகர் இங்குள்ள விக்னேஸ்வரர் பெயர்.

இக்கோயில் முதற்குலோத்துங்கனல் (கி. பி. *1170—1178*)-ல் கட்டப் பெற்றது என்பர். சூரியபகவானை மார்த்தாண்டதேவன் என அழைத் துள்ளான் அவ்வரசன்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது அருளாட்சியின் கீழ் இக்கோயிலின் நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

*திருவாவடுதுறை ஆதீனம்*

# ஸ்ரீ பிராணவரதேசுவரர் திருக்கோயில்

## திருமங்கலக்குடி

**கும்பகோணம் வட்டம்** **தஞ்சை மாவட்டம்**

இத்தலம் கும்பகோணம் – திருக்கோடிக்காவல் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. ஆடுதுறைக்கு வடக்கே காவிரிக்கு வடபாலுள்ள தலம். சுவாமியின் பெயர் பிராணவரதேசுவரர். அம்பாளின் பெயர் மங்களநாயகி. அரசிறைப்பொருளை ஆலயத்திருப்பணிக்கு உபயோகித்து அரசனுக்கு அஞ்சி உயிர்விட்ட ஒரு சிவபக்தருக்கு உயிர் கொடுத்த திருத்தலம். நாவுகரசர், ஞானசம்பந்தர் பாடல்கள்பெற்றது. மாகாளி, சூரியன், பிர்மா, விஷ்ணு, அகஸ்தியர் இவர்கள் பூசித்து பேறுபெற்றது.

# அளவையும் - இராஜராஜனும்

சா. கணேசன்

அளவை எழு வகையாகும். அவை 1. எண்ணல், 2. நிறுத்தல், 3. முகத்தல், 4. பெய்தல், 5. நீட்டல், 6. தெறித்தல், 7. சார்த்தல் எனப் பெயர்பெறும்.

1. பருப்பொருள்களாய் உள்ளவற்றை ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம் என்று எண்ணிக் கணக்கிடுவது எண்ணளவை ஆகும். மற்ற ஆறுவகை அளவைக்கும் எண்ணளவை இன்றியமையாததாகும்.

2. குன்றி, மஞ்சாடி, கழஞ்சு, பலம், துலாம் என எடைகொண்டு தராசின் உதவியால் நிறுத்துக் கணக்கிடுவது நிறுத்தலளவை ஆகும். எடுத்தல் என்றும் கூறப்படும் இது.

3. நீர், பால், மோர், நெய், எண்ணெய்போன்ற நீரியல் பொருளை உழக்கு, படி போன்றவற்ருல் மொண்டு அளப்பது முகத்தல் அளவை ஆகும்.

4. நெல், வரகு போன்றவற்றைப் படி, மரக்கால் ஆகியவற்றில் சொரிந்து அளப்பது பெய்தலளவை ஆகும்.

5. நூல், விரல், சாண், முழம், குழி என அகல, நீள, உயரத்தைக் கை அல்லது கோல்களால் அளப்பது நீட்டல் அளவை ஆகும்.

6. நொடி, நாழிகை, நாள், கிழமை, திங்கள், ஆண்டு என காலத்தைக் கணித்தளப்பது தெறிப்பளவை ஆகும்.

7. ஒலி, நிறம், ஒளி, தரம், உரு முதலியவற்றைச் செப்பி அல்லது காட்டி ''இப்படி'', ''அதைப்போல'' என்று ஒப்பிட்டு அளப்பது சார்த்தலளவை ஆகும்.

இவ்வகைப்பட்ட ஏழு அளவை முறைகளையும் இராஜராஜன் மிகச் சிறப்பாகக் கையாண்டிருக்கிருன். அவனுடைய எண்ணற்ற கல்வெட்டுக்களை ஊன்றிக் கவனிப்பார் எதையும் அவன் எவ்வளவு துல்லியமாக அளவை செய்துள்ளான் என்பதை நன்கறிய முடியும்.

நூலறிவு, கலையறிவு, அறவுணர்வு, மொழிப் பற்று, தெய்வப் பற்று, செங்கோன்மை, பேராண்மை முதலான பல்லாற்ருனும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவாறு விளங்கிய மன்னர் மன்னன் இராஜராஜன். ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'', ''சிறியன சிந்தியாமை'', ''செய்வன திருந்தச்செய்தல்'' என்பனவற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டு இராஜராஜனே! அவனது ஆட்சிக் காலத்தில் அவன் ஆற்றிய பல அருமைப் பணிகளில் அளவை முறையை நெறிப்படுத்திய அழகை எத்துணைப் புகழினும் தகும்.

மேலேகண்ட எழுவகை அளவை முறைகளையும் அவன் கல்வெட்டுக்களில் காணலாம். ஆனல் நில அளவில் அவன் மேற்கொண்டுள்ள நெறி எத்துணைச் செவ்விதென்று ஒப்பிட்டுணர்வார்தாம் உணரமுடியும். அறம் செய்ததோடு அமையாது அவ்வறம் கெடாதிருக்க எவ்வளவு அக்கறை கொண்டு ஏற்பாடுகள் செய்திருந்தான் என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்திக்கொண்டிருக்கின்றன.

தெருக்களுக்குப் பெயரிட்டும், தெருக்களின் இரு சிறகுகளில் உள்ள வீடுகட்கும் தனித்தனி எண்ணிட்டும் அமைத்த அருமையை எப்படிப் பாராட்டுவது?

திருக்கோயிலில் எழுந்தருளுவித்தசெப்புத் திருமேனிகள் (தெய்வ மூர்த்திகள்)பற்றிய விளக்கக் குறிப்புகள், உயரம் முதலிய அளவைகள் இவற்றையெல்லாம் புலப்படுத்தும் அருமையை என்னென்பது?

பல்வேறு திருமேனிகட்கும் அணிவித்த மணியணிகள் (ரத்னபரணங்கள்) பொன்னணிகள் முதலியவற்றில் அடங்கிய நவ மணிகளின் வகையும், தரமும், எண்ணிக்கையும், தங்கத்தின் மாற்றும், எடையும் முதலான பல விளக்கங்களைக் காணும் போது எல்லையிலா வியப்பேற்படுகிறது.

இங்ஙனமே திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் (தேவாரம் ஓதுவார்) திருக்கோயிலில் ஆடல், பாடல், பணிபுரியும் தளிச்சேரிப் பெண்டுகள், நட்டவாசிரியம், பின்னியம் கொட்டுவார், கோயிற் பூசைசெய்வார், கணக்கெழுதுவார், நாள்கோள் கணிப்பார், மடைப்பள்ளிப் பணிபுரிவார், கோவிலையும், திருமேனிகளையும் காவல்புரிவார், விளக்கெரிப்பார், விளக்குகளுக்கு நெய்கொண்டு தருவார், வியஞ்சனம், பழம், வெற்றிலை முதலிய தருவார்போன்ற பற்பல பணியாளர்கள் பற்றியும், அவரவர் அன்றாடக் கடமைபற்றியும், அவரவர்க்குரிய காணி, அல்லது நெல், காசு முதலிய ஊதியம் பற்றியும் இன்னும் இவைபோன்ற பல்வேறு நிலை பற்றியும் வகுத்தருளிய சிறப்பை எல்லாம் எழுத ஈண்டு இடம் போதாது. ஆதலின் இவனது கல்வெட்டுக்களில் காணப்படும் அளவை முறைகளைமட்டும் ஈண்டுக் கண்டு மகிழ்வோம்.

**1. எண் அளவை :**

''உடையார் ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம்செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும், இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும்,...கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்... '' இத்தகைய எத்தனையோ கல் வெட்டுக்களில் எண்ணளவை வருவதைக்காணலாம்.

**2. நிறுத்தல் அளவை :**

''புல்லிகைக் கண்டநாண் ஒன்றிற்கட்டின வயிரம் ஐம்பத்துநாலும், மாணிக்கம் ஏழும் உட்பட நிறை எண்பத்துமுக் கழஞ்சே அரைக்கால்...''

இதைப்போல நூற்றுக் கணக்கான இடங்களில் நிறுத்தலாகிய எடுத்தலளவை மிகத் துல்லியமாகக் குறிக்கப்படுவதைக் காணலாம்.

**3. முகத்தல் அளவை :**

''மாணிக்கநல்லூர் இருக்கும் இடையன் எழுநூற்றுவன் கூத்தனுக்கு அடுத்த பசு நாற்பத்தெட்டினுல் திருவிளக்கு ஒன்றினுக்கு ... ... நிசதம் அளக்கக் கடவ நெய் உழக்கு'' இதுபோல எத்தனை எத்தனையோ?

**4. பெய்தல் அளவை :**

''திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் ......... கம்பன் திருநாவுக்கரையனன சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி'' இப்படியே பதக்கு, குறுணி, முக்குறுணி, மரக்கால், கலம் போன்ற அளவுகள் பற்பல காணப்படுகின்றன.

**5. நீட்டல் அளவை :**

''அளந்தபடி நிலம் ஐம்பதே எழுமாக் காணிக் கீழ் முக்காலே ஒரு மாவிலும் ($50\,\frac{2}{6}\frac{3}{4}\frac{3}{0}\frac{6}{0}$) ஊர் நத்தமும், குடியிருக்கையும் ஊருணி, குளமும், கன்றுமேய் பாழாகக் கிடந்த நிலமும், கண்மாணச்சேரி குடியிருக்கையும், பிடாரி கோயிலும், திருமுற்றமும், வெள்ளான் சுடுகாட்டுக்குப் போம்வழியும், வெள்ளான் சுடுகாடும், பறைச் சுடுகாடும், களமாய்க்கிடந்த நிலமும், ஐயன்கோயிலும், திருமுற்றமும், உழப்பறையர் இருக்கும் கீழைச் சேரியும் ... ... ... மேலைப்பறைச்சேரியும், இவ்வூர் நிலத்தாறே ஊடறுத்துப் போன நாட்டார் வாய்க்காலும் ஆக இறையிலி நீங்கு நிலம் இரண்டேகாலே காணிக் கீழ் ஒருமாவரை அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டுமா நீக்கி நிலம் நாற்பத்தெட்டே இரண்டுமாவின் கீழ் அரையே நான்குமாக்காணி கீழ் எட்டுமாவினல் இறை கட்டின காணிக்கடன் ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் அளக்கக் கடவ நெல் நாலாயிரத்து எழுநூற்று எண்பத்து நாற்கலனே இருதூணி அறுநாழி''

நீட்டளவைக் கோல் எத்தனையோ நுண்ணிய கூருக்கப்பெற்று நிலம் அளக்கப்பெற்றுள்ளது. பயிர் செய்யாத, செய்ய முடியாத, நிலங்களின் விவரங்களையும் அவற்றின் அளவைகளையும் கணித்து, மொத்த நிலத்தில் அவற்றைக் கழித்துக் கணக்கிட்டு வாரம் இவ்வளவு என்று நிர்ணயித்துள்ள அருமை இன்றுகூடக் காணமுடியாத சிறப்புடையதாகும். அதிலும் "இவ்வூர் நிலத்து ஆறே (வழியே) ஊடு அறுத்துப்போன நாட்டார் வாய்க்கால்" என்று ஊருக்குச் சொந்தமான நிலத்தின் குறுக்கே, ஆனால் இந்நிலத்திற்கு அல்லாமல் விலகியிருக்கும் வேறு நிலத்திற்குப் பாசனமாகச் செல்லும் நீர் வாய்க்கால் அமைந்திருப்பதைப் பிரித்துக்காட்டும் பெற்றி பேரருமையாகும். ஊர் என்பது இக்காலப் பஞ்சாயத்தைப் போன்றது. நாடு என்பது பஞ்சாயத்து யூனியனைப் போன்றது. என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். (ஊர்பலசேர்ந்தது நாடு; நாட்டின் உடமையான வாய்க்கால்' "நாட்டார் வாய்க்கால்" எனப்பெயர் பெற்றது) சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே இத்தகைய செவ்விய முறையில் நில அளவை (Land Survey) செய்யப்பெற்றதென்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது இராஜராஜன் பெருமைமட்டுமின்றித் தமிழ் நாட்டின் ஆட்சிமுறைச்சிறப்பும் புலனாகுமன்றோ!

### 6. தெறிப்பு அளவை :

"... ... ... ... ஆலயத்துப் பிள்ளையார் கணபதியார்க்கு அமுது செய்தருள நிசதம் வாழைப்பழம் நூற்றைம்பதாக, ஓராட்டைக்கு வந்த வாழைப்பழம் ஐம்பத்துநாலாயிரத்துக்கு காசு ஒன்றுக்கு வாழைப்பழம் ஆயிரத்துநூறாக வந்த காசு நாற்பத்து ஐஞ்சுக்கு காசு ஒன்றுக்கு ஆட்டைவட்டம் அரைக்காற்காசு பொலிசையூட்டாக (ஆண்டொன்றுக்கு 100-க்கு $12\frac{1}{2}$% வட்டியாக) சந்திராதித்தவத் செல்லவைத்த காசு முன்னூற்றறுபது."

நாள்தோறும் பண்டம் தர முதலீடாக ஒரு தொகையை வைத்து ஆண்டுதோறும் பொலிசையூட்டு (முதலிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம்) கணக்கிட்டு அதை ஒரு நாளுக்கு இவ்வளவு என்று கணக்கிட்டு அதன்படி கட்டளையாக (ஒரே அளவில்) நடைபெற ஏற்பாடு செய்துள்ளமை தெரிகிறது. இன்னும் இவைபோல, நாள், கிழமை, திங்கள், ஆண்டு அல்லது திதி, நட்சத்திரம் முதலியவற்றைத் தெறிப்பளவை நெறியில் கணிப்பன பலவற்றையும் இராஜராஜன் கல்வெட்டுக்களில்காணலாம்.

### 7. சார்த்தல் அளவை :

இந்த முறையை இவனுடைய கல்வெட்டுக்கள் பலவற்றுள்ளும் காணலாம்.

"திருப்பட்டிகைஒன்று தண்டவாணிக்குக் கால்மாற்றுத் தண்ணிய பொன்." (சுத்தமான பொன் மாற்றைக் காட்டும் உரையாணிக்கு கால்மாற்றுக் குறைந்தபொன்)

"தக்ஷிணமேருவிடங்கன்' என்னும் கல்லால் நிறை எடுத்து"

('தக்ஷிணமேரு விடங்கன்' என்றபெயர் கொண்ட தங்கம் நிறுக்கும் எடைக்கல்லால் நிறுத்து)

"ராஜகேசரியோடு ஒக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் ... ... ..."

(நெல் முதலிய தானியங்களை அளக்கப் பல மரக்கால் வழக்கில் இருந்திருக்கின்றன. அவற்றுள் ராஜகேஸரி மரக்கால் என்பது ஒன்றென்பதும், அதே அளவில் ஒத்த மற்றொரு மரக்கால் 'ஆடவல்லான்' என்ற பெயருடைய தென்பதும் தெரியவருகிறது. ஆலயப் பொருள்களை அளப்பதற்குள்ள எடைக்கல், மரக்கால் போன்றவற்றிற்கு தெய்வத் திருமேனிகளின் பெயரே சூட்டப் பெற்றிருக்கும் அருமை உய்த்துணரப் பாலதாகும்.

இங்ஙனமாகத் தமிழ்நாட்டில் வழங்கி வந்த எழுவகை அளவை முறைகளும் செம்மையாக இராஜராஜன் காலத்தில் கடைப்பிடித்தொழுகப் பெற்றமை நன்கு புலனாகிறது. இவற்றால் அவன் ஆட்சியின் சிறப்பையும், வளத்தையும் அறிந்து பெருமை கொள்ளலாம்.

வாழ்க இராஜராஜன் !

வளர்க அவன் புகழ் !!

# ஸ்ரீ சௌந்தரேசுவரசுவாமி

# ஆலயம்

## பேட்டை — முத்துப்பேட்டை

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - காரைக்குடி இருப்புப் பாதையில் முத்துப்பேட்டை நிலையத்தில் இருந்து தெற்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பல திவ்விய க்ஷேத்திரங்களுள் மிகச் சிறப்புற்று விளங்குகின்ற ஸ்தங்களில் ஒன்ருன முத்துப்பேட்டை ஸ்தலத்திற்கு மேற்கேயுள்ள திருவுசாத்தானமெனும் கோவிலூருக்கு ஸ்ரீ இராமனும், இலக்குவனும் வசிஷ்டரிடம் மந்திர உபதேசம் கேட்க வந்தனர். அவர்களுடன் தீரா நட்புக்கொண்டு உடன் பிறப்பாகவும் ஆகி "குன்று சூழ்வான் மகனேடும் அறுவராேனும்" என்று இராமன் வாயிலாகக் கம்பரால் பாராட்டப் பெற்ற சுக்ரீவன்தானும் சிவபூஜை செய்ய எண்ணி இத்தலத்திற்கு வந்து சிவலிங்கத்தையும், அம்மையையும் சிவாகம விதிப்படி நிறுவி வழிபட்டு, மெய்ம்மறந்து, இறைவன் அருட் குணங்களைத் தோத்தரிக்கின்றவன் "திருமேனியழகனே" என்று கூறினன். அது முதல் இறைவன் திருநாமம் திருமேனியழகர் என்றும் அம்மை திருநாமம் வடிவழகி என்றும் வழங்கப் பெற்றது.

இவ்வாலயத்தின் பூஜைகள் காமீக ஆகம விதிகளின்படி நடை பெற்று வருகின்றன. இவ்வாலயத்திற்கு நஞ்சை புஞ்சை நிலங்களும், மற்றும் தோப்புக்களும் உள்ளன. சிவநேசச்செல்வர்கள் அனைவரும் இவ்வாலயத்திற்கு வருகை தந்து, தரிசித்து இம்மை மறுமைப் பயன் களைப் பெற்றுய்யுமாறு விழைகிறோம்.

நிர்வாக அதிகாரி

இரா. கோவிந்தராஜன் B. sc.,

அறங்காவலர்கள் :

A. N. S. T. S. சோமசுந்தரத் தேவர் (தலைவர்)

K. S. சிவராமுதேவர் P. R. N. N. A. தேவராஜன் செட்டியார்

# கலைஞானக்கன்று

ந. மு. கோவிந்தராய நாட்டார்

'கலை ஞானக்கன்று' என்னும் இப் பொருள்பற்றி எழுதுவதன் முன்னர் சதய விழாவிற்கு உரியரான சோழப் பேரரசர் பெருமான் உடையார் இராசராச தேவரைப் பற்றிச் சில கூறுவது சாலப் பொருத்த முடைத்தாம். இராசராச தேவர்க்கு, திரு முறைகண்ட சோழன், இராசகேசரி, சிவ பாதசேகரன், கோராச கேசரிவர்மன்முதலிய பெயர்களும் உண்டு. இவருடைய நாளணி விழா தஞ்சையில் ஐப்பசிச் சதயத்தில் மாத் திரமன்றி ஏனைய பதினொரு திங்கள் சதய நாட்களிலும் நடைபெற்று வந்தது. இவர் ஆட்சிக்குட்பட்ட பேரரசின் ஏனைய பாகங் களில் இவ்விழா ஐப்பசிச் சதயத்தில் மாத் திரம் நடைபெற்று வந்தது.

இப்பெருமகனின் பெருமையினை ஒரு வாறு உணர்ந்து கோடற்கு 'இராசேந்திரன்' என்ற எனது நாடக நூலின் முதல் அங்கம், இரண்டாங்களம் சிறந்த அளவுகோலாகும் என்று கருதுகின்றேன். ஆகலின் அக்களத் தின் ஒரு சிறு பகுதியை ஈண்டு எடுத்தெழுது கின்றேன்; இராசேந்திரன் தன் தந்தை இராச ராசனின் மறைவு குறித்துக் கீழ்வருமாறு புலம்புகின்றான்.

இராசேந்திரன் :- மாமா, இனி எனக்கு அரச பதவியே வேண்டாம். என் இணை யற்ற தந்தை இராசகேசரி, சிவபாதசேகரன், இராசராச தேவரே போய்விட்டார். இனி என்னுலாவதென்ன? அந்தோ, அவருடைய அகன்ற மார்பும், பரந்த தோள்களும், உயர்ந்த தோற்றமும், பகைவரையும் மகிழ் விக்கும் அவருடைய தாமரைக் கண்களும், கொடியோரை ஒறுக்கும் அவரது நிமிர்ந்த நெற்றியும், ஏறிய புருவங்களும் என் கண் களைவிட்டு என்றும் அகலா. அவற்றை யான் எக்காலமும் மறவேன்.

வல்லவரையர் :- இராசேந்திர மன்னு, இன்னும் எத்தனை யாண்டு நீ இவ்வாறு உள்ளமுடைந்துருகக் கருதியிருக்கின்ருய்? நீ என்ன சிறுவனு? உலகமறியாதவனு?

இரா :- ஐயோ! அவர் எடுப்பித்த இராசராசேச்சரத்தை உலகம் என்றும் அறியும். கண்டோரைக் கருத்தழியச்செய் யும். அணுகியோரை மலைக்கச் செய்யும் வானளாவிய அதன் எடுப்பான இறுமாந்த தோற்றத்தைப் பாருங்கள்! அம்மம்ம! இது விண்ணவர் இழிவதற்கமைந்த படிகளின் வரிசையோ, அன்றி, பண்டு திருமாலும் பிர்மதேவனும் தேடிய ஞான்று இறைவன் எடுத்த தோற்றமோ, என்னென்று உரைப் பேன்! சிலர் இதனை என்னரிய தந்தை எட்டுத் திசையும் வென்றதற்குக் கட்டிய வெற்றித்தூண் எனக் கருதுகின்றனர். அற் றன்று, இது அவருடைய புகழுருவின் தோற்றம்! இறையன்பின் நிறைந்த காட்சி!

வல்ல :- இராசேந்திரா, என்னுடைய சொற்கள் நினது செவிக்கேறவில்லையே?

இரா :- விமானத்தின் உச்சியிலேறிய கருங்கல்லைப் பாருங்கள், ஒரேகல், எத்து ணைப்பெரியது, எத்துணை நிறையுள்ளது! அதனை உச்சியிலேற்றிய விந்தையே விந்தை கல்லின்மேல் நிற்கும் குடத்தைப் பாருங்கள் ஆசிரிய பெரும, தூபிக்குடத்தின் நிறை யென்ன?

சர்வசிவ பண்டிதர் – வேந்தே, இந்த ஆராய்ச்சியெல்லாம் இப்பொழுது எதற்கு? தூபித்தறியில் வைக்கப்பட்டுள்ள செப்புக் குடத்தின் நிறை 3083 பலம். அதன்மேல் போர்த்துள்ள பொற்றகட்டின் நிறை 2926½ கழஞ்சு.

இரா – பெருவுடையாரை எதிர்நோக்கி அமர்ந்துள்ள நந்தியம்பெருமானைப் பாருங்கள். அம்ம! எத்துணைப்பெரியது! ஆனாலும் ஒரேகல்! அதன் நிமிர்ந்த முகத்தினையும், எடுப்பான திமிலையும், கவருங் கண்களையும், மேல்நோக்கி மூக்கைத் தழுவும் நாவினையும், மடக்கிய கால்களையும், மேனி அழகினையும் பாருங்கள்.

வல்ல :- மன்னா, ஏன் இன்னும் இந்த மதிமயக்கம்?

இரா :- என்னரிய தந்தையின் மதியினளவை என்னென்று கூறுவேன்? அவர் எழுந்தருளுவித்த திருமேனிகளும், செய்து வைத்த அணிகலன்களும், வழிபாட்டிற்கு ஏற்படுத்தியுள்ள நிபந்தங்களும், கட்டிய கோயில்களும், வெட்டிய எழுத்துக்களும் தீட்டிய ஓவியங்களும், நெஞ்சை நெகிழ்விக்கும் தேவாரத் திருமுறைகளை வகுத்த பான்மையும், தேவாரத் திருப்பதிகங்களை விண்ணப்பம் செய்ய செய்துள்ள ஏற்பாடும் ஐயகோ, எனது நெஞ்சை விட்டு என்றும் நீங்கா.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய தேவாரத் திருப்பதிகங்களில், செல்லுக்கிரையாகியன போக எஞ்சியவற்றை, இராசராசன் நம்பியாண்டார் நம்பியின் உதவிகொண்டு ஏழு திருமுறைகளாக வகுத்தான். ஈண்டு சேக்கிழார் பெருமானால், 'கலைஞானக் கன்று' என்று சிறப்பிக்கப்பெற்ற திருஞான சம்பந்தர் அருளியுள்ள திருவாரூர்ப் பதிகம் ஒன்றின் முதற் பாசுரத்திற்குப் பொருள் விரிக்கும் முகத்தான் சிவஞானக் குழந்தையின் வரலாறு குறித்து இக்காலத்துச் சிலருக்கு எழக்கூடிய ஐயங்களைத் தெளிவிப்பதற்கென இக்கட்டுரையினை எழுதுகின்றேன்.

கோயிற் குளத்தின் கரையில் அழுது நின்ற மானுடக் குழந்தைக்கு இறைவன் இறைவியுடன் எழுந்தருளிப் பாலூட்டிச் சென்றனரா? அந்தக்குழந்தை பாடிற்று? இன்னிசையுடன் பாடிற்று? இலக்கிய இலக்கணங்களைக் கல்லாமல், பொருள் பொதிந்த, வியத்தகும் இயற்கை வருணனைகள் நிறைந்த பாடல்களை ஒரு குழந்தை பாடுதல் யாங்ஙனம்? இசையாசிரியரிடம் முறையாகக் கற்றுத் தெளியாமல் அப்பாடல்களைப் பண்ணிசைக்குப் பொருந்தப் பாடுதல் இயலுவதொன்றோ? ஆகிய ஐய வினாக்கள் யாவருக்கும் எழக்கூடியவையே. ஆகலின் இவ்வைய வினாக்களுக்கு முதற்கண் விடையிறுப்பாம்.

திருக்கழுமலப் பதிகமொன்றின் இரண்டாம் பாசுரத்தில், திருஞானக்குழந்தை,

> "போதையார் பொற்கிண்ணத்
> அடிசில்பொல் லாதெனத்
> தாதையார் முனிவுறத்
> தானெனை யாண்டவன்"

எனக் கூறியிருத்தலின் இறைவனால் பாலருளப்பெற்ற செய்திக்கு அகச்சான்று உளதாகின்றது. பாண்டியன் அவையில் கொதித்தெழுந்த சமண முனிவர்களால் குழந்தைக்கு யாது நேருமோ என அஞ்சிய மங்கையர்க்கரசியார் மனங்குளிர்ந்து ஆறுதல்பெற ஞானப்பிள்ளையார் தாம் அருளிய திருப்பதிகத்தின் முதற் பாசுரத்தில் அரசியாரை விளித்து,

> "மானினேர் விழிமாதராய்
> வழுதிக்குமாபெருந் தேவிகேள்
> பால்நல் வாயொரு பாலன் ஈங்கிவன்
> என்றுநீ பரிவெய்திடேல்"

எனக் கூறுவதாலும், திருஆலவாய்ப்பதிகம் ஒன்றில்

> "கோலமாய நீள்மதிற்
> கூடல்ஆல வாயிலாய்
> பாலனாய தொண்டுசெய்து
> பண்டுமின்றும் உன்னையே"

எனக் கூறியிருத்தலானும் தாம் பாலனாந் தன்மையினைப் புலப்படுத்தியுள்ளார். சிவஞானக் குழந்தையின் காலத்திற்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டின் பின்னர்த் தோன்றிய ஆதிசங்கரர் 'சௌந்தரியலகரி' என்ற தமது நூலின் எழுபத்தைந்தாம் சுலோகத்தில் அம்மை திருமுலைப்பாலின் பெருமையினை

“ தவஸ்தந்யம் மந்யே
தரணிதரகன்யே ஹிருதயத:
பய: பாராவார:
பரிவஹதி சாரஸ்வதமிவ
தயாவத்யாதத்தம் திரவிடசிசு
ராஸ்வாத்ய தவயத்
கவீநாம் ப்ரௌடாநாம்
அஜனி கமநீய: கவயிதா:”

என விளக்கியிருக்கின்றார். இதன்பொருள்: “இமவானின் புத்திரியே உன்னுடைய தனங்களிலிருந்து பெருகும் பாலானது உன்னுடைய இருதயத்தின் வெளித்தோற்றமாகிய பாற்கடலோ. அன்றி, கலைமகளின் வாக்கின் சக்தியைப்பெற்ற வெள்ளமோ என யான் எண்ணும்படியாக உள்ளது. ஏனெனில் உன்னால் அருளப்பெற்ற அப்பாலை அருந்திய திராவிடசிசு, (திருஞான சம்பந்தர்) மிகப் பெரும் புலவர்களின் மனதைக் கவரும்படியான பெரும்புலவர் ஆகிவிட்டாரே.”

இச் சான்றினால் ஞான போனகரின் குழந்தையாம் தன்மையினையும் இறைவியால் பாலருளப்பெற்ற செய்தியையும் அறிகின்றோம்.

திருஞான சம்பந்தரின் காலத்திற்குச் சுமார் எழுபதாண்டுகள் பின்னர்த் தோன்றிய சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டர் புராணத்திற்கு மூலமாகிய திருத்தொண்டத் தொகை பாடியதுடன் திருஞான சம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் சில பாடல்களில் பெருகார்வத்துடன் குறிப்பிட்டுச் செல்கின்றார். திருக்கோலக்கா திருப்பதிகத்தில்,

“ நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளமீந்து அவன் பாடலுக்கிரங்கும்
தன்மையாளனை ”

எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வடிகளிலிருந்து யாம் அறியக்கிடக்கும் உண்மைகள் பல. ‘ஞானசம்பந்தன்’ என்று குறிப்பிடுவதால், உமையின் பாலுண்டமையின் முத்தமிழ் விரகர் ஞானசம்பந்தன் என்னும் அருட்டிருநாமம் பெற்றது அறியக்கிடக்கின்றது. ‘இன்னிசையால்’ ‘தாளமீந்து’ என்றமையால் தவக்குழந்தை தாள இலயத்துடன் பண்ணிசை பொருந்த பாடினமை புலனாகின்றது. இவற்றுடன் ‘உலகவர்முன்’ என்றதனால் உலக மக்கள் அறியும்படியாக இறைவன் தாளம் அருளினன் என்ற உண்மையும், ‘பாடலுக்கிரங்கும்’ என்பதனால் இறைவன் குழந்தையின் இன்னிசைப் பாடலைச் செவிமடுத் துருகினன் என்ற உண்மையும், ‘தமிழ் பரப்பும்’ என்றமையால் அக்காலத்தில் தமிழகமெங்கணும் குழந்தையின் பண்ணிசையுடன் கூடிய தமிழ்ப் பாடல் பரந்துசென்று ஒளி வீசிற்று என்ற உண்மையும் புலனாகின்றன. திருநீலகண்ட யாழ்ப்பாணர் சிவஞானக் குழந்தையைச் சந்தித்த பிறகு நல்லூர்ப் பெருமணச்சோதியில் அவருடன் மறையும் வரையில் அவர் பாடிய பாசுரங்களுக்கெல்லாம் பக்க வாத்தியமாக யாழிசை கூட்டி வாசித்தார் என்பதும், ‘மாதர் மடப்பிடியும்’ என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் தருமபுரத்தில் குழந்தை பாடியபோது அதனைப் பாணனார் யாழிலிசைத்து வாசிக்க முடியாமல் யாழை முறிக்க முற்பட்டார் என்பதும் யாமெல்லாம் திருத்தொண்டர் புராணத்திலிருந்து அறியும் உண்மைகளாம். இவ்வாறே ஆளுடைய பிள்ளையார் நிகழ்த்திய அற்புதச் செயல்கள் பலவற்றிற்கு அவருடைய பாசுரங்களில் அகச்சான்றுகள் காணலாகும். ஐய வினாக்கட்கு விடையை இத்துடன் நிறுத்தி ‘பவனமாய்’ என்று தொடங்கும் திருவாரூர்த் திருப்பதிகம் ஒன்றின் முதற் பாசுரத்தின் உரை விரிப்பாம். இப்பதிகம் நெஞ்சறிவுறுஉவாக அமைந்துள்ளது.

பாசுரம் :-

“ பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்டவுண்டு, சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போல நீ வெள்கினாயே, கவனமாய்ப் பாய்வதோர் ஏறுகந் தேறிய காளகண்டன், அவனதா ரூர்தொழு துய்யலாம் மையல் கொண் டஞ்சல்நெஞ்சே ”

பொருள் :-

பவனம் மாய்ச்சு ஐ ஒடு ஆய் – மூச்சு ஒய்ந்துபோய் கபம் மேலிடப் பெறுவதால்

நாவெழாப் பஞ்சு தோய்ச்சு அட்ட உண்டு - (உட்கொள்வதற்கு) நாவெழாமை யால் பாலைப் பஞ்சில் தோய்த்துப் பிழிந்து வாயில்விட அதனை அருந்தும்போதும்

நெஞ்சே சிவனது தாள் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கினுயே - சிவ பெருமானது திருவடிகளைச் சிந்திக்காத அறி விலிகளைப்போல ஏ, நெஞ்சே, நீ வெட்கிக் கிடக்கின்றுயே

(இருப்பினும் நான் சொல்வதனைக் கேள்)

கவனமாய் பாய்வதோர் ஏறு உகந்து ஏறிய காளகண்டன் - வேகமாய்ப் பாய்ந்து செல்லும் காளையின்மீது விரும்பி ஏறிய கறுப்புக் கண்டத்தினை உடையவனுகிய

அவனது ஆரூர் தொழுது உய்யலாம் - அவனுடைய திருவாரூரைத் தொழுது பிழைக்கலாம்

மையல்கொண்டு அஞ்சல் - மயக்கங் கொண்டு அஞ்சாதிரு.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரச ரும் சேர்ந்து சீகாழிப்பதியின் திருக்கோயி லுட் சென்றதனை சேக்கிழார்பெருமான் அவருக்கென்றே அமைந்த உன்னதமான உவமைகளுடன் கூடிய அருட்பாடலில் வருணிக்கின்றுர். இப்பாடலிற்றுன், சேக் கிழார் சிவஞானம் கைவரப்பெற்ற குழந் தையை 'கலைஞானக்கன்று' என்று அழைக் கின்றுர்.

“ அருட்பெருகு தனிக்கடலும்
உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமா
மெனவும் ஓங்கும்

பொருட்சமய முதற்சைவ
நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும்
புவன முய்ய

இருட்கடவுண் டவரருளு
முலக மெல்லா
மீன்றுள்தன் திருவருளு
மெனவுங் கூடித்

தெருட்கலைஞா னக்கன்றும்
அரசுஞ் சென்று
செஞ்சடைவா னவர்கோயில்
சேர்ந்தா ரன்றே ”

---


## ஸ்ரீ வீரகோதண்டராமர் கோயில்

திருத்துறைப்பூண்டி வட்டம் **தில்லைவிளாகம்** தஞ்சை மாவட்டம்

சிறப்பாகத் திருப்பணி நடைபெற்று அண்மையில் பெருஞ்சாந்தி விழாவும் நடைபெற்ற இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அழகுத்தெய்வத்தை தரிசித்துவிட்டீர்களா? இன்றேல் உடனே தரிசியுங்கள். திருமண மண்டபம் ஒன்று நிறுவ ஏற்பாடாகிவருகிறது.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!!

பரம்பரை அறங்காவலர்
**வெ. கோதண்டபாணி தேவர்**

இறைபணியாளர்
**கோவிந்தராசன்**

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ ஆத்மநாதசுவாமி திருக்கோயில்

## திருப்பெருந்துறை

## (ஆவுடையார்கோயில்)

பாண்டிய நாட்டு முதலமைச்சராயிருந்த திருவாதவூரரை சிவபெருமான் குருமணியாக எழுந்தருளி வந்து மூவகை தீட்சையும் முறையே புரிந்து ஆட்கொண்டருளி மாணிக்கவாசகப் பெருமானுக்கிய திருத்தலம் திருப்பெருந்துறை எனும் திருத்தலமேயாம்.

சைவ சமய பரமாச்சாரியர்கள் நால்வரில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகளாகிய மூவரும் கோயில் கட்டியதாகத் தெரியவில்லை. மணிவாசகப் பெருமான் ஒருவர்தாம் சமயமும் கலையும் மிளிர ஒரு கோயிலை நிர்மாணித்தார்கள். அத்திருக்கோயில் திருப்பெருந்துறை எனும் ஆவுடையார்கோயிலேயாம்.

இத்திருக்கோயிலைப் பராமரித்துவரும் திருவாவடுதுறை ஆதீனத்தில் தற்போது குருமணியாகத் திகழும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் திருவுள்ளப்படி, பன்னூறு ஆண்டுகளான மையால் காலகதியில் ஏற்பட்ட பழுதகற்றி குறை களைந்து, திருச்சுற்றுக்கள், மண்டபங்கள், தளங்கள், விமானங்கள், கோபுரங்கள் ஆகிய அனைத்தையும், அழகுபொலிய முறைப்படி திருத்தியும், திருவாசகம் முழுவதையும் திருச்சுற்றுச் சுவர்களில் மிளிரச்செய்தும் திருப்பணியாற்றி நிறைவேற்ற வேண்டுமென எண்ணி திருக்கோயில் திருப்பணி நடைபெற்றுவருகிறது.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ நீலகண்டேசுரர் திருக்கோயில்

## இலுப்பப்பட்டு

மாயூரம் வட்டம் ... தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் – பந்தநல்லூர் சாலையில் மணல் மேட்டிலிருந்து 1 கல் தொலைவிலும், வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்து 6-கல் தொலைவிலும் உள்ளது. சுந்தரரால் பாடல் பெற்றது.

ஆண்டுதோறும் இங்கு சித்திராபௌர்ணமி திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. புராணங்களில் இத்தலம் திருமண்ணிப் படிக்கரை எனக் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தில் பஞ்சபாண்டவர்கள் சிவபெருமானைப் பூசித்ததாக வரலாறு. நளன் விஷக்கடியால் மாறிய நிறம், மாறித் தன்னுருப்பெற்ற இடம். சிவபெருமான் கண்டத்தில், விஷமருந்திய கறையைக் காட்டியருளிய தலமாகும்.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருள் ஆட்சியின் கீழ் உள்ளது.

# சுனையும் இல்லை தோலும் இல்லை

கவிஞர் கோவை இளஞ்சேரன்

"இதனை ரட்சித்தாரடி என் முடிமேலின"
— இத்தொடர் கல்வெட்டு ஒன்றின் ஈற்றில் அமைந்த தொடர்.

சென்னை - திருவல்லிக்கேணிப் பார்த்த சாரதி கோவில் இறைவனுக்கு இரவு அமுது படைப்பில் முட்டுப்பாடு ஏற்பட்டது. அதற்குத் தந்திவர்மன் என்னும் பல்லவ மன்னன் ஆட்சியில் அலுவலனாக இருந்த புகழ்த்துணை விசயரையன் என்பான் நெல்லும் பொன்னும் வழங்கி ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்தினன். அதைக் குறிக்கும் கல்வெட்டின் ஈற்றுத்தொடரே மேலே குறிக்கப்பட்டுள்ளது.

அதன் பொருள்: "இந்த அறத்தைக் காலமெல்லாம் பேணிக் காத்துச் செய்து வருவோரது அடிகளை என் தலைமேல் கொண்டு வணங்குகின்றேன்" என்பது. இறைவன் திருவடியை முடிமேல் கொள்ளும் ஓர் அலுவலன் மனிதன் காலைத் தலையில் கொண்டு வணங்க முன்வந்தான். தான் வகுத்த நல்லறமானது தொடர்ந்து நிகழ வேண்டும் என்னும் பேரார்வம் அவனை அவ்வளவு பணிய வைத்தது. அவ்வறம் என்ன ஆயிற்று?

விசயரையனது வேண்டுகோள் மாற்று முறை ஒன்றால் நடைமுறை ஆகியுள்ளது. அக்கல்வெட்டு அமைந்த கல் அக்கோயில் கருவறை வழியில் தளவரிசைக் கல்லாகக் கிடக்கிறது. போவோர் வருவோர் அடி அதன் முடிமேல் செல்லலாம்.

இவ்வறக்கட்டளையின் பொருட்செல்வம் என்ன ஆயிற்று என்பதற்குத் தடங்களைக் கூடக் காண முடியவில்லை. அறக்கட்டளை கல்லெழுத்தாய் உள்ளது. அறம் நீரெழுத்தாய்ப் போயிற்று. கல்வெட்டு இருக்கிறது; அறப்பொருள் இல்லை. தோல் சிதையாமல் இருக்கிறது; சுளை இல்லை. விழுங்கியவர் எவரோ?

இதுபோன்று இறைவனுக்கு என்றும் மக்களுக்கு என்றும் வழங்கப்பட்ட எத்துணையோ விளைநிலங்கள், பொன்னணிகள், முத்துமணிகள், தட்டுமுட்டுப் பொருள்கள் பெரும் மதிப்புடையன சென்ற சுவடு தெரியாமல் போயின.

மன்னரோ மற்றவரோ அறஞ்செய்ய எண்ணினர். நிலத்தை, பொருளை ஒதுக்கினர். அறத்தைக் கட்டளையாக்கினர். அவையில் ஆணையிட்டனர். ஆணையைக் கேட்டு எழுதும் தலைமை ஓலை எழுத்தர் ஏட்டில் எழுதினர். ஏட்டெழுத்து அழியுமே என்று செப்புத் தகட்டில் பொறித்தனர். செப்புப் பட்டயமும் தப்பித் தவறுமே என்றும், கைப்படுகயவரால் காணாமற்போகுமே என்றும் கருதினர். அழியாமல் கல்லில் வெட்டினர். பலரும் காணும் பாங்கில் கோவில் சுற்றுச் சுவர்களில் பதித்தனர்.

இவ்வாறு பொறிக்கும் நோக்கம் மன்னனது வீரமும் வெற்றியும், அறமும் கொடையும், பெயரும் புகழும், காலமெல்லாம் தெரிய வேண்டும் என்பது மட்டும் அன்று. அவ்வறம் தொடர்ந்து நிகழவேண்டும்; அவ்வாறு ஓர் அறம் உளது என்பதை இறை

யன்பர்கள் காலமெல்லாம் அறியவேண்டும்; அதன் அறக்காப்பை மேற்கொண்டோர் அஃதுணர்ந்து தொடர்ந்து பேண வேண்டும்; 'இந்தக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அறத்தை நாம் செய்கின்ருேம்' என்று செய்பவர் மகிழவேண்டும்; இவற்றுடன், இவ்வறத்தைச் செய்யாமற் போனல் பழிநேரும்; பொதுமக்கள் தூற்றுவர் எனும் அச்சமும் இருக்க வேண்டும் என்னும் கருத்துக்களையும் உள்ளடக்கியதே கல்வெட்டு அமைப்பு.

முற்காலத்தில் எழும்பிய இதுபோன்ற அறச் செயல்களை ஆறு முனைகளைக் கொண்டதாகக் கொள்ளலாம்.

ஒன்று, அறங்கொள்ளும் அறக்களம். இக்களம் கோவிலாகவோ பொது அறநிலையங்களாகவோ அமைந்தன.

இரண்டு, 'அறக்கொடையாளர்' இவர் மன்னராகவோ, ஆட்சி அலுவலராகவோ, செல்வராகவோ, குழுவினராகவோ இருந்தனர்.

மூன்று, 'அறப்பொருள்' இது நிலமாகவோ, பொன்னகவோ அணிமணியாகவோ, தட்டுமுட்டுப் பொருள்களாகவோ வழங்கப்பட்டவை.

நான்கு, 'அற ஆவணம்' இஃது ஆவண ஓலை, செப்புப்பட்டயம், கல்வெட்டு என விரிந்தது.

ஐந்து, அறத்தைச் செயற்படுத்தும் 'அறங்காவலர்' இவர் கொடையாளரால் ஒப்படைக்கப்பட்டவரோ, ஆட்சிக் குழுவினரோ ஆயினர்.

ஆறு, இவ்வைந்தின் அடிப்படையில் நிகழ்ந்த 'அறச்செயல்' இது இறைவனுக்குரிய வழிபாட்டுப் படைப்புகள், ஒப்பனைப் படைப்புகள், நாளீடு தொடங்கிய பூசனை, விழா நிகழ்ச்சிகள், மக்களுக்குரிய பொது நலன்கள் என நிகழ்ந்தவை.

இவ்வாறும் இக்காலம் நம்மிடையே எந்நிலையின ?

இவ்வாறனுள், அறக்கொடையாளர் முற்காலத்தவர். அவர் எவரும் தற்காலத்தில் இலர். கல்வெட்டில் அறச்செயல்கள் பெரும்பாலும் யாவுமே அவற்றிற்கு உரிய பொருள்களைக் கொண்ட நடைமுறையில் இல்லை என்பது முடிவான ஒன்று. அறங்காப்பாளராக அறிவிக்கப்பட்டோரும் இக்காலத்தில் இலர், அப்பதவிகளும் மாறிவிட்டன.

எனவே, தற்காலத்தில் பொருத்திக் காணுதற்கு இவை மூன்றும் இயைந்து வாராதவை.

ஏனைய அறக்களம், அற ஆவணம், அறப்பொருள் ஆகிய மூன்றின் தற்கால நிலை எண்ணற்பாலது. இவ்வெண்ணம் பெரும் வியப்பையும், ஏமாற்றத்தையும், மன உளைச்சலையும் தரும் முடிவுரையைக் கொண்டதுதான். எனினும் அம்முடிவுரையிலும் ஒவ்வொன்ருக இழந்து நிற்கும் படிகளைக் காணமுடிகிறது.

தொடக்கத்தில் குறிக்கப்பட்ட திருவல்லிக்கேணி அறச்செயலுக்கு உரிய அறக்களமாம் பார்த்தசாரதிக் கோவில் இக்காலத்திலும் இருக்கிறது. அற ஆவணமாம் கல்வெட்டு கிடக்கிறது. நெல்லும் பொன்னுமாகிய அறப்பொருள் போன சுவடும் இல்லை.

இஃது ஒன்று போனதற்கு எடுத்துக் காட்டாகிறது.

மற்றென்றும் போன ஒன்றைக் காண முனைந்தால் நம்பெருமன்னன் இராசராசன் நினைவிற்கு வருகின்ருன்.

சோழ மாமன்னன் இராசராசன் வீரத்தின் விளைநிலம்; வெற்றியின் கொள்கலம்; ஆட்சியின் அணிகலம்; அறச்செயலின் அடித்தளம். இப்பெருமகனது பல்வகைத் திறனையும் கண்டு வியந்தோர் பலர். அவன் காலத்திலேயே அவனுக்குச் சிலை வடிக்கப்பட்டது.

அச்சிலை செம்பால்உள்ளே கூடாக இல்லாமல் கட்டியாகச் செய்யப்பட்டது. ஏழரை அங்குலம் நீளம் ஏழரை அங்குலம் அகலம் 4 அங்குலம் உயரமுடைய அடிப்பீடம். அதன்மேல் 3 அங்குலம் உயரமுடைய தாமரை வடிவம். அதன்மேல் அடி முதல் முடிவரை 21 அங்குலம் உயரமுடைய இராசராசனது முழு உருவம் அமைந்தது.

இச்சிலையைச் செய்தவன் இராசராச னது அரசு அலுவலனுகயிருந்தவன். இராச ராசப் பெருவுடையார் கோவில் தஞ்சையில் நிறைவேறியதும் அக்கோயில் நிறைவேற்று அலுவலனுக (                    ) இராச ராசனுல் அமர்த்தப்பட்டவன். அவன்பெயர் பொய்கைநாட்டுக் கிழான் ஆதித்த சூரியன் என்பது.

இவன் இராசராசனைச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய தேவார மூவருடன் ஒப்ப வைத்து நோக்கியவன். எனவே, அம் மூவருடைய சிலையையும் செய்தான். உடன் பரவை நாச்சியார் சிலைசெய்தான். இராச ராசனின் பட்டத்தரசி உலகமாதேவியார் சிலையையும் செய்தான். பெருவுடையார் சிலையையும் செய்து இணைத்தான். இந்தப் படிமங்களுக்கு அணிகலன்களாக இவனும் கோவில்வெண்ணி நகரத்தாரும், குடிவா ணிக்குடி நகரத்தாருமாக ஏறத்தாழ 28 பவுன் அளவில் வழங்கினர். அவ்வணிகள் பொன்மணி இடையிட்ட அக்கமணிமாலை, சுரி, காறை, பட்டிகை, மோதிரம், பொற்பூ, குதம்பை, தாழ்வடம், கம்பி முதலியன.

நிலையமைப்பு, சிலைகளின் அளவுகள், வழங்கிய பொன் பொருள்கள் முதலிய யாவற்றையும் விவரமாகக் குறிக்கும் கல் வெட்டு பெருவுடையார் கோவில் மேற்குப் புற வாயிலில் உள்ள ஒரு மாடத்தில் கலை யாமல் குலையாமல் காட்சி அளிக்கின்றது. ஆனுல் இதிற் குறிக்கப்பட்டுள்ள சுளையான பொருள்கள் பொன்னணிகள் 'எவர் அறி வார்' என்னும் நிலையில் ஆயின.

அணிகலன்கள் போகட்டும், அவற்றை அணியவேண்டிய பெருமன்னன் இராச ராசனது திருவுருவச் சிலைபற்றி உசாவிய தில் அப்படியொரு படிமம் பெருவுடையார் கோவிலில் இல்லாதது தெரிய வந்தது. தொடர்ந்து உசாவியதில் அச்சிலை செர் மனிநாட்டுப் பொருட்காட்சி ஒன்றில் உள தாகத் தெரிகின்றது. முடிவாக அறத்தின் களமாகிய சிலையே நம்நாட்டில் இல்லாது போயிற்று.

இவ்வறத்தைப் பொறுத்தவரை அற ஆவணக் கல்வெட்டு ஒன்றே உள்ளது. அறக்களமாம் படிமச்சிலை இல்லை. அறப் பொருளாம் அணிகலன்களும் இல்லை, எந் தக்காலத்தில் எவர் ஏப்பம் விட்டனரோ?

இரண்டு வகையான அறக்கட்டளைச் சிதைவுகளைக் கண்டோம். இவற்றை மீறிய தாய், எத்தடமும் அற்று, எம்முனையும் தெரியாத அறம் ஒன்றைக் காண்பாம்.

தஞ்சையை விட்டு நாகர்பட்டினமாம் நாகைக்கு வருவோம். தஞ்சைப் பெருமன் னன் இராசராசன் தொடர்பிலேயே நாகை யைக் காணலாம்.

சோழநாட்டுத் தலைநகராகவும் துறை முகப் பட்டினமாகவும் திகழ்ந்த பூம்புகார் நகரம் கடல் கொந்தளிப்பில் அழுந்தியது. இது கி. பி. 2-ஆம் நூற்ருண்டளவில் நிகழ்ந்தது. இதற்குப் பின்னர் நாகர்பட் டினம் சோழநாட்டுத் துறைமுக நகராயிற்று. உலகத்து வாணிகக் களமாக வளர்ந்தது. குறிப்பாகச்சீன நாட்டாரும், கீழ்த்திசை நாட் டாரும் நாகையில் தங்கியும், வந்துசென்றும் வாணிகம் செய்தனர். அவர்கள் யாவரும் புத்தமதக் கோட்பாட்டினர். நாகர்பட்டினம் ஒரு நகராக உருவாவதற்கு முன் இவ்விடம் புத்தமதத் துறவிகளின் பெருந்தளமாக இருந்தது. 7 ஆம் நூற்ருண்டளவில் சீன மன்னன் ஒருவன் தன் நாட்டு வாணிகர் வழி பாட்டிற்கென ஒரு புத்தக் கோவிலை நாகை யில் கட்டினுன். அது காலப்போக்கில் காப்பற்றுப் போயிற்று.

கி. பி. பத்தாம் நூற்ருண்டில் கடாரம் என்னும் பர்மா நாட்டினை ஆண்ட சைலேந் திர குலத்தைச்சேர்ந்த சூளாமணி வர்மன் என்னும் மன்னன் நாகர்பட்டினத்தில் தன் நாட்டு வாணிகர்களது வழிபாட்டிற்கென ஒரு புத்த விகாரையை - புத்தக்கோவிலைக் கட்ட விரும்பினுன்.

அந்நாளில் சோழநாட்டை ஆண்டு வந்த பெருமன்னன் இராசராசனுக்குத் திரு முகம் அனுப்பி அவனது இசைவை வேண் டினுன். பரந்த உளப்பாங்குடைய சைவப் பெருமன்னனுகிய இராசராசன் பெருந்தக வுடன் இசைவளித்தான்.

கி. பி. 1005-இல் சூளாமணிவர்மன் தக்காரை அனுப்பி நாகையில் இசைவு வழங் கப்பட்ட இடத்தில் புத்தக் கோவில் கட்டும்

பணியைத் துவக்கினன். பணி நிகழும் போதே நாகையில் உறைந்த புத்தத் துறவிகள் இருவர் தஞ்சை சென்று இராசராசனைக் காண விழைந்தனர். இராசராசன் தஞ்சைப் புறநகர்ப் பகுதியில் இருந்த இராசசிரய மண்டபத்தில் வீற்றிருந்து இருவரையும் வரவேற்று உரையாடினன். அவர்கள் நாகையில் புத்தக் கோவில் உருவாவதை அறிவித்தனர். அவர்களது உரையாடலின் குறிப்பை அறிந்து அவர்களைத் தக்க முறையில் வழியனுப்பினன்.

பின்னர் தன் அலுவலருடன் கூடிக் கலந்து நாகையில் உருவாகும் புத்தக் கோவிலின் தொடர்பிலும் பின்னர் அங்கு தொடர்ந்து அக்கோவிலின் நடைமுறைக் காகும் வகையிலும் அறக்கட்டளை ஒன்றை அமைக்க முடிவுசெய்தான். அக்காலத்துச் சத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துள் (பட்டினம் = நாகர்பட்டினம்) அடங்கியதாய் ஆனைமங்கலம் எனும் ஊர் இருந்தது. அவ்வூர் 9 வேலி 18 மா நன்செய் நிலத்தைக் கொண்டது. செப்பேட்டில் கண்டபடி 8943 கலம் 5 மரக்கால் 1 படி நெல் ஆண்டுவருவாயாக அளக்கப்பட்டது. அவ்வூரை நாகைப் பள்ளிக்கு வரியில்லாத நன்கொடையாக பள்ளிச் சந்தமாக வழங்க முன்வந்தான். அவன் எண்ணம் அறக் கட்டளையாக உருவான முறை நோக்கத் தக்கது. ஓர் அறக்கட்டளை எத்துணை ஆய்வுக்குப்பின் எத்துணை கண்காணிப்புடனும் பொறுப்புடனும் - பரவலானதும் நுணுக்கம் உள்ளதுமான ஏற்பாட்டில் அமைந்தது என்பதை உணரலாம்.

மாமன்னன் ஆனைமங்கலத்தை நாகைப் புத்தக்கோவிலுக்கு வரியில்லா நன்கொடையாக வழங்க ஆணையிட்டான். அவ்வாணையை ஓலையெழுதும் அமுதன் தீர்த்தகரன், ஓலை மேலான் மும்முடிச்சோழப் பிரமராயன், மும்முடிச்சோழப் போசன், மதுராந்தக மூவேந்த வேளான் ஆகிய நால்வர் கூர்ந்து நோக்கி எழுதினர். இவர்கள் இந்தக் காலத்துச் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் போன்றோர். அவர்கள் அதனைப் பராக்கிரம சோழ மூவேந்த வேளான், மீனவன் மூவேந்த வேளான் ஆகிய இருவினைப் பாட்டு ஆய்வாளர்களிடம் கொடுத்தனர். அவர்கள் புறவுவரித்திணைக் களத்தராம் என்னும் வரிவிதிக்கும் அலுவலாளர்பால் தந்தனர். அவர்கள் ஒப்புநோக்கி வரியேட்டுக் கணக்கர்களாகிய குமரன் அரங்கன், சிங்கன் வெண்காடன் ஆகிய இருவரிடம் தந்தனர். ஒப்புநோக்கு முடிந்து அறக் கட்டளை உருவாகியது. உடன் ஆனைமங்கலப்பகுதியை எல்லைகட்டி எல்லைக்கல் நாட்டும் பணிக்கு ஏற்பாடு நடந்தது. அதற்குரிய அலுவலர் நல்லூர் தம்மடிப்பட்டன், தூப்பில் சீதரப்பட்டனுகியோரை அழைத்து ஆனைமங்கலத்தில் இவ்வறக் கட்டளைக்குரிய நிலப்பகுதி எல்லையிட ஆணையிடப்பட்டது.

அவர்கள் சென்று ஊரார் சூழ ஆனைமங்கலமுடையான் கோன் புத்தவேளான் யானைமேல் ஏறிவர எல்லையை வலம் வந்து சுட்டி - எல்லை கட்டிக் கல்லை நாட்டினர். நாட்டார் யாவரும் கைச்சான்றிட்டனர். பின்னர் அவ்வோலை இராசராச மன்னன் அவைக்கு வந்தது. அரசுத் தலைமை அலுவலர்கள் இறுதியாக ஒப்புநோக்கினர். இராசராசன் ஆட்சி ஆண்டு 25, நாள் 163ல் கைச்சான்றிடப்பட்டு அறக்கட்டளை உறுதியாயிற்று.

இந்நாளில் ஆவணம் உறுதியாயினும் முன்கூட்டியபயன்கொள்ளும்படி (Retrospect Effect) அவனது ஆட்சியாண்டு 21, நாள் 96 முதல் அறப்பயன் கொள்ளும் முறையில் எழுதப்பட்டது.

இவ்வறக்கட்டளைச் செய்தி சூளாமணி வர்மனுக்கு அறிவிக்கப்பட்டது. அவன் கேட்டுப்பூரித்தான். ஆயினும், அக்கோவில் கட்டி முடிவதற்குள் அவன் இயற்கை எய்தினன். அவன் மகன் மாற விசயோத்துங்க வர்மன் பணியைத் தொடர்ந்து செய்து நிறைவேற்றினன். தன் தந்தையின் நினைவாக அதற்குச் "சூளாமணி விகாரை" எனப் பெயரிட்டான். அத்துடன் அக்கோவிலின் ஒரு பகுதிக்கு இராசராசப் பெரும்பள்ளி என்று பெயரிட்டுத் தன் நன்றியுணர்வைப் பதித்தான்.

இவ்வறக்கட்டளை இராசராசனல் நிறைவேற்றப்பட்டதாயினும் முறையாக உறுதி முறி வாயிலாகச் 'சூளாமணி விகாரைக்கு' அது உரிமைசெய்யப்பட்டது இராசராசன்

மகன் இராசேந்திரன் ஆட்சியிலாகும். இராசேந்திரன் உரிமையாக்கியதற்கு நன்றியாய் அவ்விகாரையின் ஒரு பகுதிக்கு இராசேந்திரப் பெரும்பள்ளி எனப் பெயரிடப்பட்டது.

இதற்குப்பின் இங்கே குறிக்க நேர்வது என்னவெனில், அக்காலத்திலேயே தோலிருக்கச் சுளை விழுங்கிகள் இருந்தார்கள் என்பதே.

'சூளாமணிக் கோவில்' கட்டப்பட்டு நிறைவேறிய அடுத்த நூற்றுண்டிலேயே இராசராசன் அமைத்த அறம் நிகழவில்லை. ஊர்க் கங்காணியாளர்கள் கோயில் பெருச்சாளிகள் ஆயினர். சூளாமணிக் கோயிலுக்குரிய நிலங்களைக்கவர்ந்து தம் உடைமையாக்கிக்கொண்டனர். கோவிலின் அறச்செயல்களும் நடைமுறைகளும் இடையீடுபட்டன. அதுபோது ஆண்ட கடாரத்தரசனுக்கு இதனைப் புத்தத் துறவிகள் அறிவித்தனர். அவன் உடன் இராசவித்தியாதர சாமந்தன் அபிமானதுங்க சாமந்தன் ஆகிய இருவரையும் சோழநாட்டிற்கு அனுப்பினன். அந்நாளில் முதற் குலோத்துங்கன் சோழநாட்டை ஆண்டு வந்தனன். கடாரத்துத் தூதுவர்கள் முறையிட்ட வேண்டுகோளை அவன் ஏற்று உடன் நடவடிக்கை எடுத்தான். உரிய அலுவலரை நாகைக்கு அனுப்பி நிலங்களைக் கைப்பற்றி மீட்டு, மீண்டும் செப்புப்பட்டயம் மூலமாக உறுதி செய்து வழங்கினன்.

தற்கால நிலையில் இவ்வறம்பற்றி நினைக்கின் ஒன்றைக் குறிக்கலாம். அது 'ஆனைமங்கலம் என்ற ஊர் இருக்கிறது' என்பதே.

சூளாமணிக் கோவிலுக்கென பள்ளிச் சந்தமாக விடப்பட்ட நிலங்கள் இடம் பெயர்ந்து போய்விடவில்லை; போகவும் முடியாது.

ஆனல், அந்நில உரிமையானது எந்நாளிலோ எக்கயவராலோ இடம் பெயர்க்கப்பட்டு எவரெவரிடமோ உள்ளது. இவ்வாறு நிலம் கவரப்படாமல் கோவிலுக்கே உரிமையாக இருப்பினும் அவ்வறம் நடைமுறைப்பட வழியில்லை. ஏனெனில், பயன் கொள்ளவேண்டிய 'சூளாமணிவிகாரை'யே இல்லையே. கோவில் இல்லை என்பதுமட்டுமன்று அக்கோவில் இருந்த சுவட்டைக்கூட அறிய முடியவில்லை. நாகை மக்களிடம் சூளாமணி விகாரை என்று சொன்னல் ஏதோ மணி விகாரமாக இருக்கும்போலும் என்று புரிந்துகொள்ளும் நிலையில் அதன் நினைவு அற்றுவிட்டது. இவ்வாறு இருந்த இடமும் தெரிய இயலாமல் பெயர்ந்து போனது வியப்பிற்குரியது அன்று.

அக்கோவிலினது பெருமையை ஆனைமங்கலம் செப்பேடு பின்வருமாறு குறிக்கிறது:

"சத்திரிய சிகாமணி வளநாட்டில், பட்டினக் கூற்றத்தில் உள்ள, உலகத்தின் திலகம் போன்ற நாகப்பட்டினத்தில் தன் உயரத்தினல் பொன்னுலாகிய மலையையும் சிறியதாகச் செய்து தன் அழகினில் வியப்படையச் செய்கின்ற சூளாமணி விகாரை"

கோயில் மலையைவிடப் பெரிதாய்ப் 'பொன்னல்' போர்க்கப்பட்டிருந்தது என்ருல் நல்லவர் விட்டுவைப்பர். இந்த விட்டுவைக்காத பணியைச் சுரண்டிகள் தொடங்கினர். வைணவ சமயத்தினர் தொடர்ந்தனர். இடையிடையே கயவர்கள் வளர்த்தனர். ஆலந்து நாட்டவராய் வந்திரங்கியோர் பெருக்கினர். ஆங்கிலேயர் முடித்தனர்.

புத்தக் கோவில் அழிந்தது. அந்த அழிவோடு அதில் அமைக்கப்பட்டிருந்த கல்வெட்டு அழிவது இயற்கை. போகட்டும். அக்கல்வெட்டின் மூலமாம் செப்புப்பட்டயத்தின் கதை என்ன?

இந்த ஆனைமங்கலம் செப்பேடு என்ற பெயருடைய செப்பேடு இருவகையினது. ஒவ்வொன்றும் 21, 21 தகடுகளைக் கொண்டது. 14 அங்குல நீளமும் 5 அங்குல அகலமும் கொண்டது. இவை இரண்டும் பறிபோயின, ஏடுகள் மட்டும் பறிபோகவில்லை. 'ஆனைமங்கலம் செப்பேடு' என இராசராசப் பெருமன்னனல் - பின்னர் இராசேந்திரப் பெருமன்னனல் பெயரிடப்பட்ட அவ்வேடு இன்று "இலெய்டன் செப்பேடு"

என்று கல்வெட்டு அறிஞர்களால் குறிக்கப்படும் அளவில் அதன் பெயரும் பறிபோனது நம் பெருங் குறைபாட்டின் அறிகுறியே.

சென்ற நூற்றுண்டில் அஃது ஆலந்து நாட்டுத் தலைநகராம் இலெய்டன் நகர்ப் பொருட்காட்சி மன்றில் இருப்பதாக அறிய நேர்ந்தது. வித்தையும் விற்றுத்தின்னும் கயவர்கள் வரலாற்றுக்கலையின் வித்தையோ விட்டு வைப்பர்?

"அந்தோ தமிழர்களே'' என ஓலமிடுவதைவிட வேறு மொழியில்லை.

இறுதியாகக் குறிக்கப்பட்ட சூளாமணிக் கோவில் அறக்கட்டளை யாவும் அற்றுப்போன வகைக்குச் சான்றுகிறது,

அறக்களமாம் சூளாமணிக் கோவில் இல்லை,
அறஆவணமாம் கல்வெட்டு இல்லை.
அதன் மூலமாம் செப்புப் பட்டயம் இல்லை;
— அதன் இயற்பெயரும் இல்லை,

அறப்பொருளும் அதன் உரிமையாய் இல்லை.
அறத்தின் நடைமுறையும் இல்லை.
எந்தச் சுவடுமே இல்லை.

ஆனாலும், அவ்வறத்தை வழங்கிய இராசராசப்பெருமன்னன் நினைவாம் மணம் நம்மிடையே கமழத் தொடங்கியுள்ளமை ஆறுதல் பெறுதற்கு உரியது. இந்த ஆறுதல் மகிழ்ச்சியாக மலர அப்பெருமன்னனது பழைய படிமத்தை நாம் மீட்டுப் பெற வேண்டும்.

வாழ்க இராசராசப் பெருமன்னன்
புகழ்ப்பெயர்!


# ஸ்ரீ கற்பகநாதசுவாமி திருக்கோயில்

## கற்பகநாதர்குளம் (திருக்கடிக்குளம்)

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

பாண்டி புகைவண்டி நிலயத்திலிருந்து தென்கிழக்கில் 4-மைல் தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. திருஞானசம்பந்தரின் பாடல் பெற்றது. இறைவன் பெயர்: கற்பகநாதர், இறைவியின் பெயர்: பாலசுந்தரி, தீர்த்தம்: விநாயகதீர்த்தம். தல விருட்சம்: பலா. சகல தேவாதி முனிவர்களும் வழிபட்ட ஸ்தலம் விநாயகருக்கு மாங்கனி அருளிய இடம், விநாயக தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபட சகல தோஷங்களும் நீங்கும்.

அறங்காவலர் குழு: நிர்வாக அதிகாரி

R. சற்குணநாதன் (தலைவர்) R. குப்புசாமி

V. குஞ்சிதபாதம் V. கந்தையன் வாய்காரர்

# ஸ்ரீ பவஔடதீசுவரசுவாமி

# திருக்கோயில்

## திருத்துறைப்பூண்டி

தஞ்சை மாவட்டம் தொலைபேசி எண்: 92

திரு பெரியநாயகியம்மையுடன் கூடிய திருபிறவிமருந்தீஸ்வரர் சுயம்புலிங்கமாக இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். இத்திருக்கோயிலில் உள்ள ஸ்ரீ கஜசம்கார மூர்த்தி ஓர் சிறப்பு அம்சமாகும். இந்த ஆலயத்திலுள்ள பஞ்சமுக வாத்தியம் பிர்மோற்சவத்தில் வசந்தனன்றும், நிறைபணி உற்சவத்தன்றும் ஸ்ரீ தியாகராஜாவுக்கு வாசிக்கப்பெறுகிறது. இத்தலம் சப்தவிடங்கத்தில் இடம் பெருவிட்டாலும், ஸ்ரீ தியாகராஜாவும், விடங்கரும் (மரகதலிங்கமும்) உள்ளன. பொது மக்களது நன்மைக்கு குடிநீர்த்தொட்டி கட்டப்பெற்றுள்ளது.

இவ் ஆலயத்தில் திருமணமண்டபம் ஒன்று சிறந்த முறையில் கட்டப்பெற்று குறைந்த வாடகைக்கு பொது மக்களுக்கு விடப்பட்டு வருகிறது.

நிர்வாக அதிகாரி

**எம். பழனியப்பன்**

அறங்காவலர்கள் :

என். வெங்கடாசலராஜா (தலைவர்)

என். குப்புசாமி B. A., B. L., டி. எஸ். கல்யாணசுந்தரம்

ஆர். தர்மலிங்கம் என். தர்மலிங்கம்

# ஸ்ரீ தாந்தோனீஸ்வரர் ஆலயம்

## சோழம்பேட்டை மாயூரம் வட்டம்

இத்தலம் காவிரியாற்றின் வடபுறத்தில் திருஇந்தளூருக்கும் திருவேள்விக்குடிக்கும் நடுவில் அழகிய சோலைக்குள் அமைந்துள்ள தொன்மையான சிவத்தலமாகும். கரிகால் பெருவளத்தான் வழிபட்ட தலங்களில் இதுவும் ஒன்றாகும். முன்னர் இது ஒரு வியாபாரத் தல மாக விளங்கிற்று. இத்தலத்தின் மூர்த்தி தானே தோன்றிய காரணத் தால் தான்தோன்றீசர் எனவும், அம்மன் அபிராமி எனவும் பெயர் வழங்குகிறது. குட்ட நோயுற்ற சோழன் ஒருவன் நீராடி நோய் நீங்கப் பெற்ற சோழகங்க தீர்த்தம் இப்பதியிலுள்ளது. ஸ்ரீ அழகநாதர், ஸ்ரீ திருமேனி அழகர், ஸ்ரீநிவாசப்பெருமாள் ஆகிய ஆலயங்கள் இத் தலத்தைச் சூழ்ந்துள்ளன. இத்தலம் மூவலூருக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது.

நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்: வி. கனகராசன் பி. ஏ.,

எம். ஏ. கோவிந்தராசன் (தலைவர்) எம். சின்னசாமி

# ஸ்ரீ வீரட்டேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## திருவிற்குடி

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் அட்டவீரட்டத்தலங்களில் ஒன்றாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியமூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை உடைய தலம். மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச் செய்த திருவாசகத் திருச் சாழலில் இத்தலம் பற்றிய பதிகம் ஒன்றும், அருணகிரிநாதரின் திருப்புகழ் ஒன்றும் இத்தலத்திற்கு உள்ளன, திருவிற்குடி எனும் இத்தலம் திருவாரூர்-திருப்பயத்தங்குடி பேருந்து மார்க்கத்தில் உள்ளது.

அறங்காவலர் :

M. S. M. மெய்யப்ப செட்டியார்

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ வடவாரண்யேசுவரர்

# திருக்கோயில்

## திருவாலங்காடு

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் — கும்பகோணம் பெருவழியில் மாயூரத்திலிருந்து 10 கல் தொலைவிலும், மாயூரம் – கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் நரசிங்கன்பேட்டை நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவிலும் உள்ளது.

திருநாவுக்கரசு சுவாமிகள் இத்தலத்தை வைப்புத்தலமாக வைத்துப் பாடியுள்ளார். ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சிக்கு உட்பட்டது.

இக்கோயில் சிறியதாயினும் மிகுந்த இயற்கை எழிலோடு பொருந்தி அடியார்களைக் கவர்ந்து ஈடுபடுத்தக்கூடிய சிறப்பு வாய்ந்ததாகும்.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ வீழிநாதசுவாமி திருக்கோயில்

## திருவீழிமிழலை

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்



இத்தலம் சிவபெருமான் விண்ணிழி விமானத்தில் திருமணக்கோலத்தில் வீற்றிருக்கும் சிறப்புள்ளது. திருமால் ஆயிரந்தாமரைகளுள் ஒருநாள் ஒரு பூ குறையத் தம் கண் மலரால் அருச்சித்துச் சக்கரம் பெற்றது. பூந்தோட்டம் - நாச்சியார்கோவில் பெருவழியில் சுமார் 9 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

சம்பந்தர் பதிகம் பதினன்கு, அப்பர் பதிகம் எட்டு, சுந்தரர் பதிகம் ஒன்று ஆக 23 தேவாரத்திருப்பதிகம் பெற்றது. சேந்தனர் திருவிசைப்பாவும் உள்ளது. கி. பி. 7-ம் நூற்றுண்டில் பஞ்சத்தீர்விற்குச் சுவாமியே சம்பந்தருக்கும் அப்பருக்கும் நாடோறும் படிக்காசுகள் கொடுக்க இருபோதும் பறைசாற்றி அன்னம் அளித்து வறுமை போக்கிய தலம். சுவாமி திருமணக்கோலத்தில் இருந்து இரதிக்கு மன்மதனை உயிர்ப்பித்து அளித்தது.

இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்களது அருளாட்சியின்கீழ் உள்ளது.

# குந்தவையார் கனவு

புலவர் அ. அறிவொளி எம். ஏ.,
பூம்புகார்க்கல்லூரி

'பழந்தமிழ் அரச குடும்பங்களில் பெண்கள் எவ்வாறு சிறப்படைந்தனர்' என்பதை ஆராய்வோர்கள் ஓர் உண்மையை அறியக் கூடும். அதாவது அந்தப் பெண்கள், தங்களின் கற்புத் திறத்தினலோ, அல்லது அறச் செயல்கள் செய்ததாலோ, அல்லது பெருமைக்குரிய பேரரசன் ஒருவனைப் பெற்றுக் கொடுத்ததாலோதான் சிறப்பு அடைந்திருப்பார்கள்.

மேற்கூறிய காரணங்களைத் தவிர அரசியலில் இன்றியமையாத சிறப்பிடங்களைப் பெற்ற பெண்களை வரலாற்றின் அடிப்படையில் காண்பது அரிதாகும். ஆனல் அந்த அரிய சிறப்புக்களைத் தாங்கியதோடு, ஒரு பொற்காலத்தைத் தனது நெஞ்சில் கருவாக வளர்த்து நேரில் நடக்கச் செய்துவிட்டாள் ஒரு பெண் என்பது விந்தையல்லவா ?

''ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்' என்றும், 'பெரிய குந்தவையார்' என்றும் கல்வெட்டுக்களிலும் வரலாற்றுப் பொன் ஏடுகளிலும் சிறப்பிக்கப்படுபவள்தான் அவ் விந்தைக்குரிய பெண்ணுகும்.

அரசியல் என்னும் சுழற்சியில் அடிபட்டு மறையும் மலைகளும், கோபுரங்களும் ஏராளம்! ஏராளமன்றே? ஒரு பேரரசனுக்குப் பல ஆண்மக்கள் பிறந்தால் வாய்ப்புள்ள ஒருவனைத் தவிர மற்றவர்கள் யாவரும் வரலாற்று ஏடுகளின் புயல் வேகத்தில் மறைக்கப்படுவது மிக இயற்கை! மேலும் அவனுக்கே ஆடவரும் பெண்டிருமாகப் பல பிள்ளைகள் பிறந்தாலோ அந்த அப்பாவிப் பெண்களை அரண்மனைப் பண்பாடுகள் வரலாற்றில் இருட்டடிப்புச் செய்வதுதான் பழக்கம்! இதற்கும் மேலாக, ஓர் அரசகுமாரி தான் பிறந்த அரசவழிக்குத் தொடர்பில்லாத வேற்று அரச குடும்பத்தின் மணமகளாகப் போய்விட்டால் போதும். அப்படி ஒருத்தி பிறந்ததையே நினைவு வைத்துக் கொள்வதும் கடினமாகும்.

இவ்வளவு தடைகளையும் தன் வாழ்நாளில் பெற்றுலும்; கீழைச் சாளுக்கிய அரச குடும்பத்துள் " வல்லவரையருக்கு " வாழ்க்கைப்பட்டு விட்டாலும்கூட இந்தப் பிராட்டியார் குந்தவையார் சோழ குடும்பத்தின் நீங்காத சிறப்புக்கு உரிய இடத்தைப் பெற்றுவிட்டார்.

முதலாம் இராசராசப் பெருவேந்தன் தன் மகளுக்கு இவர் பெயராகிய 'குந்தவை' என்ற பெயரையே இட்டு வழங்கினுன் என்ருல் இவர்மேல் அவன்கொண்ட மதிப்புக்கு அளவுகோல் வேறென்றும் வேண்டுமோ? அப்பேரசன் தான் எடுப்பித்த பெரியகோயில் விமானத்தில் குந்தவையார் அளித்துள்ள கொடைப்பொருள் பற்றிக் கல்வெட்டில் எழுதச்சொல்லிக் கட்டளை பிறப்பித்தான் எனின் இவன் இவர்மேல்கொண்ட அன்பும் நன்றி உணர்ச்சியும் எண்ணி முடிக்கும் திறமுடையனவல்ல.

இக்குந்தவையார் அரசியலின் விறுவிறுப்பான பக்கங்களில் ஈடுகொடுத்துச் சிறப்பு அடைந்ததற்கான காரணமாய் அமைந்த இயற்கை நிகழ்ச்சிகள் சோகமென்னும் சுவையில் தீட்டிய ஓவியமாயினும் அறியத் தக்கனவாம்.

இரண்டாம் பராந்தக சோழனுகிய சுந்தர சோழனுக்கு (கி. பி. 950—970) வானவன் மாதேவி வயிற்றில் பிறந்த சோழ மாமணிகள் மூன்று. ஆதித்த கரிகாலன், குந்தவை, அருண்மொழித்தேவன் என்னும் இராசராசன் ஆகிய மூன்று தூண்களே அவை.

சுந்தரசோழன் ஆண்டபோது சோழ நாடு பரப்பளவில் பெரிதாகத் தானிருந்தது. இருப்பினும் தெற்கே பாண்டியர்களும் வடக்கே சில சிற்றரசர்களும், பெரிய சோழ மண்டலத்துக்கு உள்ளே பல மன அமைதியிழந்த குறுநில மன்னர்களும் சோழப் பேரரசுக்கு ஓயாத் தலைவலி தந்துகொண்டே இருந்தனர்.

சுந்தரசோழன் இளமைத் துடிப்பு அடங்கிப்போன காலமது! சோழப் பேரரசு வலிய படைபலம் பெற்றிருந்தாலும், வற்ருத பொருள்வளம் படைத்திருந்தாலும் பொறுப்புக்களைச் சரிவரக் காக்கும் அடுத்த இளந்தலைவனைப் பெருத நேரம்.

தேவை மிகுந்த இந்த நேரத்தில்தான் சுந்தரசோழனின் மூத்த மகன் ஆதித்தகரிகாலன் என்பவன் மடை பிளந்த வெள்ளத்தை எதிர்த்து நீந்தி இன்பம் அடையும் இளங்கெண்டை மீனைப்போலப் போர்க்களத்தையே தன் மாளிகையாகக்கொண்டு போர் வடுக்களையே புகழ் விருதுகளாக மதிக்கத்தக்க காளையாக வளர்ந்து வந்தான்.

சோழ குடும்பத்தில் ஓர் அரச குமாரனின் தலையைக்கொண்ட பெருமை உடையவனை வீரபாண்டியன் சுந்தரசோழனுல் தோற்கடிக்கப் பட்டபோதும் தொல்லை தரும் புரட்சிக்காரனுகவே பாண்டியநாட்டில் எழுந்து நின்றுன். அவனை அடக்கவும் பழிக்குப் பழியாக அவனுடைய தலையைக் கொண்டுவரவும் வேண்டுமென்று குறிக்கொண்ட ஆதித்தகரிகாலன் அதைச்செய்து முடித்து ''வீரபாண்டியன் தலைக்கொண்ட கோப்பரகேசரி'' என்று கல்வெட்டுக்களிலும் புகழ்கொண்டான்.

மிக இளமையிலேயே புகழ் மடந்தையின் பொன்னரி மாலையைப் பூணுக ஏற்ற இப்புலிநிகர் மறவன்மட்டும் காலதேவனின் கைப்பட்டுக் கசங்காமல் போயிருந்தால் நாம் இராசராசனைக்கூட பேரரசனுகப் பார்க்க வாய்ப்பின்றிப் போயிருக்கலாம். அதுமட்டுமன்று. இராசராசதேவன் நிறுவியதைவிடவும் பரப்பளவு மிக்க பெரிய பேரரசை இக் கரிகாலன் நிறுவி இருந்தாலும் எதிர்பார்க்கத்தக்கதே.

ஆனுல் காலம் அப்படியே இருந்துவிடவில்லையே? சோழ குடும்பத்திலே அப்போது நடந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் நெஞ்சு பொசுங்கிப் போகும் பொல்லாத நிகழ்ச்சியாக அல்லவா இருந்துவிட்டது.

வேதம் ஓதும் அந்தணர் குடும்பத்தில் பிறந்து, சோழநாட்டு அரசியல் பொறுப்புக்களில் தலைமை கொண்டிருந்த உடன்பிறந்தோர் நால்வர்கூடி இந்த ஆதித்த கரிகாலனுகிய தங்கள் இளவரசைக் கொலைசெய்துவிட்டனர் என்பர்.

தன் மகன்மேல் கொண்டிருந்த பற்றுலும், பேரரசின் பெருஞ் சிக்கல்களுக்கெல்லாம் மருந்தாகிய அவன் வீரத்தின்மேல் கொண்டிருந்த நம்பிக்கையாலும் ஒரு சில திங்களுக்குப் பிறகு சுந்தரசோழனும் இறந்தான். ஆம்! இக்கொடிய கொலைச்செய்தி எனும் கூர்வாள்தான் அவனையும் கொன்றுவிட்டது.

சுந்தரசோழன்பால் பேரன்பு கொண்டவளும், ஆதித்த கரிகாலனையும், குந்தவையையும், இராசராசனையும் ஈன்ற அன்னையுமாகிய கற்புக்கரசி வானவன் மாதேவியார் தன் கணவன் இறந்ததும் தானும் உடன் கட்டை ஏறினுர்.

இந்தக் குலவிளக்கு கொண்ட புகழ் விளக்குப்பற்றிய திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் செய்தி, படிப்போர் நெஞ்சைச் சோகமென்னும் வாள்கொண்டு மெல்ல அறுக்கும் வலிமை கொண்டதாகும்.

அரசைக்காக்க வேண்டியவர்கள் அரசகுமாரனைக் கொன்றதும், அதுவே யமனுய் அரசன் மாண்டதும், இந்தப் பெண்ணரசியால் பொறுத்துக்கொள்ள முடியாமல் போனவை; தன் மகன் இராசராசன் இளையவனுய் இருந்ததையும் இவர் பொருட்படுத்தவில்லை; மூண்டு எரிகின்ற தீயையும் பொருட்படுத்தவில்லை; தன்னைத் தழுவிய கணவனுடைய உடலைத் தழுவும் கொடிய தணலைத் தாமரைப் பொய்கையாய் எண்ணி அன்னப் பறவைபோல் அத்தீயில், தாவி இறந்தார். இந்த நிகழ்ச்சிபற்றி,

"... ... ... ... ... ... ... ... சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகன் பிரியாத் தையல் ... ..."

என்று கூறித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்ந்து புகழ்ந்து முடிவடையாமையால் அன்று தொடங்கி இன்றும் அழுது கொண்டே இருக்கின்றன.

இந்த இரண்டு பெரிய, கொடிய; நிகழ்ச்சிகள் தாம், திக்கறியாமலும் ஆறுதல் உணராமலும்கிடந்த குந்தவையாரின் கையில் இராசராசனை வளர்க்கவேண்டிக் கொடுத்தன.

பால்சுரந்த முலைமகவாகிய இராசராசனைப் பிரிந்து அவன் தாய் உடன்கட்டை ஏறினுள் என்று தெரிய வருவதால் அப்போது நம் இராசராசனுக்கு எப்படியும் 5 வயதுக்கு மேல் உறுதியாக இல்லை என்று கூறிவிடலாம். அந்த வயதுமுதல் உத்தம சோழன் ஆண்ட 15 ஆண்டுகள் வரையிலும் இராசராசனை வளர்த்த பொறுப்பு பெரிய குந்தவையாருக்கே சாரும்.

எந்தச் சோழமண்டலம் பேரரசாக மலர்வதை மாய்க்க இளவரசனைக் கொன்ருர்களோ அந்தச் சோழமண்டலம் இந்த இராசராசனுல் செழிக்கவேண்டும்?

ஆதித்த கரிகாலனைக் கொன்றுவிட்டால் ஆற்றலையும் வீரத்தையும் சோழ குடும்பத்திலிருந்து மறைத்துவிடலாம் எனக்கொண்ட நினைவைமாற்றி இந்த இராசராசனுல் ஆதித்த கரிகாலனுக்கும் மேலான புகழைச் சேர்த்தே ஆகவேண்டும்.

கண்டராதித்த சோழதேவரின் சைவ நெஞ்சத்தின் எழுச்சிகளை எல்லாம் இந்தச் சிறு பிள்ளையைக்கொண்டே சோழநாட்டைச் சைவ மணங்கமழும் கலைக்கோயில் ஆக்கவேண்டும் என்று இவ்வாறெல்லாம் கனவு கண்டு அதற்கான திட்டங்களைச் செயல்படுத்தத்தொடங்கினுர் குந்தவையார்.

பகைவராகிய கொடும் பாம்புகள் குலக் கொழுந்தைக் கொத்திவிடக்கூடாதே என்பதற்கு, குந்தவையார் மேற்கொண்ட கவனம் இவ்வளவு என்று அறுதியிட்டுக் கூறுந் தரமாமோ?

கண்டராதித்திய சோழனுக்கு மனைவியாகிக் கணவனை இழந்த நாள்தொட்டுக் கடுந்தவம் மேவி, அரிஞ்சயசோழன், சுந்தர சோழன், ஆதித்த கரிகாலன், தனது மகன் உத்தமசோழன், இராசராசன் ஆகிய பெருமக்களின் புகழ் மிக்க வாழ்நாட்களையும் கண்டவர் மாதேவடிகளான செம்பியன் மாதேவியார். ஏறத்தாழ 52 ஆண்டுகளுக்கு மேலாகச் சோழர் அரண்மனையையே சிவன் கோயில்போலாக்கிச் சீலம் செய்தவர் இவர் என்று கூறலாம். இவராலும், இவர் வளர்த்த குந்தவையாராலுந்தான் நந்தமது இராசராச சோழதேவன் "சிவபாத சேகரனுக"வும், "திருமுறைகண்ட சோழனுக" வும், பெரியகோயில் கண்ட கலைக்காவலனுகவும் வளர்ந்தான் என்பது உண்மை.

இப்பெரிய குந்தவையார் கோயில்கள் பலவற்றுக்கு, கொடுத்த கொடைப்பொருள்களாலும், தன் தந்தை பெயரால் தஞ்சையில் நிறுவிய மருத்துவ மனையாலும் இந்த அம்மையாரின் பரந்த அறிவும், பொறுப்பும், அறமும் புலனுகின்றன.

உத்தமசோழன் ஆண்டுகொண்டிருக்கும்போதே குடிமக்கள் பெரும்பாலோர் இராசராசனை ஆளுமாறு வேண்டிக்கொண்டனர் என்பதும்; உத்தம சோழற்கு ஆள்வதில் விருப்பம் உள்ளமட்டும் தான் காத்துக் கொண்டிருக்கப் போவதாக இராசராசன் விடை கூறியதாகவும் கல்வெட்டுக்களால் உணரலாம்.

இத்தகைய பொறுமையும், பண்பும், சிறப்பும் இராசராசனுக்கு வரக் காரணம் செம்பியன் மாதேவியார்பால் மதிப்பும் குந்தவைப் பிராட்டியாரின் வளர்ப்புமுறையும் அல்லாமல் பிறிதென்ன?

குந்தவையார் தாம் கண்ட கனவுகளை இராசராசனைப் பெருவேந்தனாகக் கண்டதனுல் நினைவாக நிறைவேற்றிக்கொண்டார்.

வானவன் மாதேவியாரின் வயிற்றில் பிறந்த மூன்று மாணிக்கங்களும் குலமாணிக்கம் என்பது ஐயமற்றது. பெண்ணுயினும் பெரிய குந்தவையார் பெற்ற பெரும் சிறப்பைச் சில சோழ அரசர்கள் கூடப் பெறவில்லை என்பது உறுதி.


# ஸ்ரீ கல்யாணரெங்கநாதசுவாமி திருக்கோயில்

சீர்காழி வட்டம் திருநகரி தஞ்சை மாவட்டம்

108 வைணவ திருத்தலங்களில் இதுவும் சிறப்பு மிக்கதாகும். சீர்காழியில் இருந்து பெருந்தோட்டம் செல்லும் பஸ் மார்க்கத்தில் உள்ளது. ஸ்ரீ உடையவர் காலத்திற்கு முற்பட்டது. ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது. பஞ்சநரசிம்ம தலங்களில் ஒன்ருகும். திருமங்கை ஆழ்வாருக்குத் தனி சந்நிதியும் அமைக்கப்பெற்றுள்ளது.

கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அவதாரதிருவிழாவும், தைமாத அமாவாசையில் மங்களாசாசனமும், 12 கருடசேவை திருவிழாவும், பங்குனி மாதத்தில் ஸ்ரீ பெருமாள் பிரம்மோத்சவமும் இங்கு நடைபெறும் முக்கிய திருவிழாவாகும்.

திருமங்கை மன்னனுக்கு ஸ்ரீ பெருமாள் மந்திர உபதேசம் செய்த இடம் இவ்வூரின் அருகில் உள்ளது.

அறங்காவலர்கள்:
S. கோவிந்தசாமி பிள்ளை (தலைவர்)
Dr. R. சாரங்கபாணி M.B.B.S.
T. ராமலிங்கம் பிள்ளை

நிர்வாக அதிகாரி
A. தனபாலன் B.A.,

தொலைபேசி : 73

# ஸ்ரீ வாழைத்தோட்டத்து அய்யன்கோயில்

## அய்யம்பாளையம் - மங்கலம் அஞ்சல்

பல்லடம் வட்டம் கோவை மாவட்டம்

" நற் குணங்கள் செழித்தோங்க நலிந்தவர்கள் துயர்நீங்க
புற்று மண்நீறளித்து புவியிலுள்ளோர் புண்துடைத்து
கற்பிதமாம் வையமிதில் கருணைமிகு மன்பிலொரு
வெற்பென்னத் துலங்குநல் லய்யனடி வாழத்துவமே "

அஞ்செழுத்து மந்திரத்தால் நஞ்சகற்றும் நாதன் ஆகிய ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன்கோவில் பலமகிமைகளுடன் தீராத பிணிகளையும், ஆறுத புண்களையும் சகல விஷக்கடிகளையும் போக்கி அருளும் திருத்தல மாய் ஒரு நூற்றுண்டுக்கு மேலாக விளங்கிவருகிறது. இத்தலத்தை சோமனூரிலிருந்தும் திருப்பூரிலிருந்தும் வரும் டவுன் பஸ்கள் இதர பஸ்கள் மூலமாக அடையலாம். இத்திருக்கோயிலில் தற்சமயம் கர்ப்பகிரஹ அர்த்த மண்டப கருங்கற் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக்கோயிலின் சார்பில் சாமளாபுரத்தில் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் அனுதை இல்லம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது. பக்தர் கள் தங்க விடுதிகளும் குடிநீர், மின்சாரம் முதலான வசதிகளும் உண்டு. எனவே பக்தர்கள் அனைவரும் இத்திருத்தலத்திற்கு வருகைதந்து அருட் செல்வமும், பொருட்செல்வமும்பெற்று விளங்க வேண்டிக்கொள்கிறோம்.

அறங்காவலர்கள்:
சோ. கு. பழனிச்சாமி (தலைவர்)
கே. என். பழனிச்சாமிக்கவுண்டர்
கே. எம். ராமசாமி
எம். சின்னமாரப்ப கவுண்டர், எஸ். ஏ. பி. சுந்தரம்

நிர்வாக அதிகாரி
பி. ஆர். கோவிந்தராஜுலு
பி. ஏ., பி.காம்.,

## ஸ்ரீ பல்லவனேசுவரசுவாமி திருக்கோயில்

காவிரிப்பூம்பட்டினம் (அ. நி.) பல்லவனம் சீர்காழி வட்டம்

சீர்காழியிலிருந்தும் மாயூரத்திலிருந்தும் பன்னிருகல் தொலைவில் உள்ள இத் தலம் திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றது. இறைவன் திருநாமம் பல்லவன நாதர். இறைவி திருநாமம் சௌந்திர நாயகி. திருக்குளம்: ஜான்னவி தீர்த்தம். அகத்திய முனிவரால் தோண்டப்பட்டதாக வரலாறு. காலவரிஷி பூசித்ததலம். திரு பட்டினத்தாருக்காகத் தனி சன்னதி இங்குள்ளது. ஆடித்திங்களில் அவருக் கெடுக்கப்படும் விழா மிக்க சிறப்புடையது.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

சு. சம்பந்தம்பிள்ளை [தலைவர்) கி. கஸ்தூரிரங்கன்

கை. கனகசபைபிள்ளை சோம. கருப்பஞ்செட்டியார்

---

## திரு சற்குணேஸ்வரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் சற்குணேஸ்வரம் தஞ்சை மாவட்டம்

சைவசமய குரவர்களில் ஒருவரான அப்பர் சுவாமிகளால் பாடப்பெற்ற தலமாகும். சற்குணன் என்ற அரசன் பூசித்து அருள்பெற்றதலமும், உருத்திர கணங்களும் இந்திர னும் தேவர்களும் பூசித்து அருள் பெற்றதலமுமாகும்.

இத்தலம் நாச்சியார்கோவில் - பூந்தோட்டம் சாலையில் நாச்சியார் கோவிலிலிருந்து 9கிலோமீட்டர் கிழக்கே அரசலாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இத்தலம் விரைவில் பெருஞ்சாந்தி விழா நடைபெற உள்ளது.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

காசிநாதன் (தலைவர்) கு. கல்யாணம் M. A.,

S. நடேசபடையாச்சி S. இராமசாமிதேவர்

R. அடைக்கலம் பிள்ளை S. கோவிந்தராசு

---

## திருச்சாய்க்காடுடையார் திருக்கோயில்

காவிரிப்பூம்பட்டினம் (அ. நி.) சாயாவனம் சீர்காழி வட்டம்

மாயூரத்திலிருந்தும், சீர்காழியிலிருந்தும் பன்னிருகல் தொலைவில் உள்ள இத் தலம் புகழ்பெற்ற பூம்புகாரின் ஒரு பகுதி. காசிக்கிணையானது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோர் பாடியது. அறுபத்து மூவருள் ஒருவரான இயற்பகை நாயனுர் வீடு பேறடைந்த தலம். இங்கு எழிலுடன் வீற்றிருக்கும் வில்லேந்திய வேலவரை வாழ்வில் ஒருமுறையேனும் அனைவரும் வந்து வணங்கி வழி பட பிறவிப்பயன் எய்தலாம்.

சிலம்பும் மேகலையும் சிறப்புடன் போற்றும் காவல் தெய்வமான ஸ்ரீ சம்பாதி அம்மன் திருக்கோயில் இத்தலத்தின் தென்பாலுள்ளது.

இறைவன் திருநாமம்: ரத்னச்சாயாவன நாதர், இறைவி திருநாமம்: கோஷாம்பாள்.

கி. கஸ்தூரிரங்கன்

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

கை. கனகசபை பிள்ளை (தலைவர்) சு. சம்பந்தம் பிள்ளை

டி. பி. சுப்பிரமணிய பிள்ளை எம். இராமசாமி அ. செங்குட்டுவன்

# ஸ்ரீ சத்குணநாதசுவாமி

## திருக்கோயில்

## இடும்பாவனம்

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

சமய குரவர்களில் திருஞானசம்பந்தரால் 'மனமார்தரு மடவாரொடு' என்று திருமணக்கோலத்தோடு காட்சி தருவதை சிறப்பித்தும், சீலம் மிகு சித்தத்தவர் சிந்தித்தெழும் எந்தை என்றும், இடுக்கண்களைவானிடம் இடும்பாவனமிதுவே என்றும் சிறப்பித்துப்பாடப் பெற்றது. திருப்பதிகைக் கோவையிலும் திருவிடும்பாவனத்தோடு சேர்ந்த கடிகுளமே என்றும் பாடியுள்ளார். திருநாவுக்கரசர் பாடிய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகத்தில் இடும்பாவனம் எழுமூர் ஏமூர் தோமூர் என்றும் பாடியுள்ளார். இத்திருக்கோயிலில் உள்ள பிர்மதீர்த்தத்தில் மூழ்கினால் மரணபயம் தீரும். நான்முகன், இன்றியமையாத பிர்மகர்ப்பசக்தியை இறைவனை வேண்டிப் பெற்றதும் இத்தலத்தில்தான். இத்திருப்பதியின் பெயராகத் திகழும் இடும்பாவனம் என்பது இங்கு இடும்பன் இடும்பி என்ற அரக்கர்கள் வழிபட்டு பண்டை வினை நீங்கி முத்தி அடைந்தார்கள்.

அகஸ்தியருக்கு இத்தலத்தில் இறைவன் இறைவியுடன் திருமணக் கோலக்காட்சி கொடுத்த விசேடத்தினால் இத்திருக்கோயிலில் மூலவருக்குப் பின் மணக்கோலநாதர் அம்மையுடன் எழுந்தருளியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தலம் பாண்டி புகைவண்டி நிலையத்திலிருந்து 6 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து 25 கி. மீட்டர் தொலைவிலும் முத்துப்பேட்டையிலிருந்து 15 கி. மீட்டர் தொலைவிலும் இத்தலம் உள்ளது.

நிர்வாக அதிகாரி
கி. பொன்னப்பன் B.com.B.L.

அறங்காவலர்கள் :

AN. ST. S. ரெத்தினசாமித்தேவர் N. தருமலிங்கம்
V. K. கந்தவேல் செட்டியார் P. தியாகுவாய்க்காரர்
V. S. M. வேம்பையா

# ஸ்ரீ கிருபாசமுத்திரப்பெருமாள்

## திருக்கோயில்

**சிறுபுலியூர்** கொல்லுமாங்குடி அஞ்சல்

**நன்னிலம் வட்டம்** **தஞ்சை மாவட்டம்**

இத்திருக்கோயில் மாயவரம் - திருவாரூர் புகைவண்டிப்பாதையில் கொல்லுமாங்குடி புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவிலும், மாயவரம் - திருவாரூர் பேருந்துப்பாதையில் கொல்லுமாங்குடி நிலையத்திலிருந்து கிழக்கே குடந்தை - காரை ரஸ்தாவில் (நெடுங்காடு வழி) முக்கால் கல் தொலைவிலும் உள்ளது. தெற்கு நோக்கியுள்ள ஆலயத்தின் நுழைவாயில் 75 அடி உயரம் உள்ள இராசகோபுரம் உள்ளது. புலிக்கால் முனிவர் வழிபட்டதாலும், முனிவருக்கு எம்பெருமான் பாலசயனமாய் சேவை அளித்ததாலும் இத்தலம் சிறுபுலியூர் என வழங்கலாயிற்று.

108 வைணவத்திருப்பதிகளுள் இத்தலம் 11வது பதியாக உள்ளது. திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.

இங்கு ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ மணவாளமாமுனிகளது பத்து நாள் திருவிழாவும், 10வது நாள் சாற்றுமுறை திருவிழாவும், மார்கழிமாதத்தில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி திருவிழாவும், மாசி மாதம் வளர் பிறை ஏகாதசியில் அனந்தாழ்வாருக்கு பெருமாள் சேவை தரும் திருவிழாவும், வைகாசி மாதம் பிர்மோற்சவத்திருநாளும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்தலம் இயற்கை காட்சிகள் நிறைந்த குளிர்ந்த சோலைகளுடையது. சூரியன், அனந்தன், துர்வாசர், மணவாளமாமுனிகள் முதலியோர் வழிபட்டு பேறு பெற்றது. சமயபேதமின்றி சிவனடியார்களும் வைணவ அடியார்களும் வழிபட்டஸ்தலம் என்பது குறிப்பிடத்தக்கது. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் பெருமை உடையது. இத்திருக்கோயிலின் திருப்பணி நடைபெற்று வருகிறது. வருகிற தைமாதம் குடமுழுக்கு விழா நடைபெற இருக்கிறது.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

கே. எம். குருசாமி பிள்ளை (தலைவர்) **து. சம்பந்தம்**

கே. ஜெகநாத அய்யங்கார் வரதராஜப் பிள்ளை

# ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

## திருவிடைக்கழி

மாயூரம் வட்டம் -: :- தஞ்சை மாவட்டம்

சரித்திர புகழ் பெற்ற வள்ளியம்மை நகருக்கு அருகில் இவ்வூர் உள்ளது. திருவிடைக்கழி என்றும் மகிழாரண்யம் என்றும் திருப்பெயர் பூண்டது. இவ்வூர் குமரக்கடவுள் வீற்றிருக்கும் தலங்கள் பலவற்றுள் சிறப்புடைய ஒன்ருகும். பன்னிருதிருமுறைகளில் 9-ம் திருமுறையாகிய திருவிசைப்பாவும், இத்தலம் வாழும் முருகன் பெருமையைப்பற்றி அருணகிரிநாதர் 8 திருப் புகழும், மீனுட்சிசுந்தரம்பிள்ளை இயற்றிய பிள்ளைத் தமிழில் 100 பாக்களும் பாடப்பெற்றுள்ளன.

நிர்வாக அதிகாரி

**K. M. சுப்பிரமணியம்**

அறங்காவலர்கள் :

கை. கனகசபை பிள்ளை

தெ. முத்துராமலிங்கம் செட்டியார்

## ஸ்ரீ அபயவரதேஸ்வரசுவாமி கோயில்

### அதிராம்பட்டினம்

பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் காரைக்குடி – மாயூரம் புகைவண்டி மார்க்கத்தில் உள்ளது. தஞ்சை, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, இராமநாதபுரம், நாகபட்டினம். சென்னை ஆகிய இடங்களிலிருந்தும் இவ்வூருக்குப் பேருந்து வசதிகள் உண்டு.

முஸ்லீம் மக்கள் நிறைந்த இந்த நகரத்தில் ஆண்டாண்டு காலமாக வளமொடு சிறப்புக்குன்றாது இயங்குவது இத்தலத்திற்கு அமைந்த பெருமையாகும். இத்தலத்தில் பங்குனி உத்திரத்தில் நடைபெறும் திருவிழா மிகச் சிறப்புடையதாகும். இறைவன் பெயர்: அபயவரதேஸ்வரசுவாமி. இறைவி பெயர்: சுந்தரநாயகி அம்பாள்.

A. இளையபெருமாள் B. Com.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர் குழு:

V. சரவணன் பி.ஏ.,பி.எல்., (தலைவர்)
C. மறவன் பிள்ளை பி.ஏ.,பி.எல்., உறுப்பினர்
C. N. தங்கையாத்தேவர் ,,

---

## ஸ்ரீ விருத்தபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

### தினப்புனவாயில்

அறந்தாங்கி வட்டம் — தஞ்சை மாவட்டம்

சமயகுரவர்களில் இருவரான சம்பந்தர், சுந்தரர் ஆகியவர்களால் பாடல்பெற்ற இத்தலம், பாண்டிநாட்டிலே வழிபடுவோர்க்கு நலனருளும் முறையாகத் தேவாரத் திருப்பதிகம் பெற்றுள்ள தலங்கள் பதினான்கினுள் இரண்டாவதாக விளங்குவது. பாடல்பெற்ற தலங்களில் உள்ள லிங்கங்களில் இங்குள்ள லிங்கமே பெரிதெனப் போற்றப்படுகிறது. இத்தலம் பாண்டியநாட்டின் உட்பிரிவாகிய மிழலை நாட்டின்கண் உள்ளது என தமிழ்ப் புராணங்கள் கூறுகின்றன.

இத்தலம் ஆவுடையார்கோவிலிலிருந்து தெற்கே 30 கி. மீ. தொலைவிலும், திருவாடானையிலிருந்து வடகிழக்கே 20 கி. மீ. தொலைவிலுமுள்ளது.

கரு. இராமலிங்கம் M. A.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

S. இராமநாதன் B.A., (தலைவர்)
M. துரைராஜ் அம்பலம்
AL. SP. PL. ST. PL. சுப்பிரமணியம் செட்டியார்

# ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில்

## திருவாரூர்

தென்னாட்டிலே தொன்மை வாய்ந்த பதிகளில் திருவாரூர் மிகப் பழமையுற்ற ஊராகும். அதை பிருதிவித் (மண்) தலம் என்பர். இப்பெயருக்கு ஏற்ப இவ்வூரில் கோயில் கொண்டுள்ள அருவுருவத் திருமேனி தாங்கிய இறைவர் வன்மீக நாதராக (புற்றிடங்கொண்டார்) உள்ளார். இப்பெருமான் அமர்ந்துள்ள கருவறையே பூங்கோவில் எனப்படுகின்றது. "பூங்கோவில் உள்ளிருந்து போகாதிருந்தாரே" என்பது அப்பர் சுவாமிகளின் அருள்வாக்கு.

தேவாரம் பாடிய மூவரும் மாணிக்கவாசகரும் குமரகுரு பரரும் சேரமான்பெருமாள் நாயனாரும் அருணகிரியாரும் இத் தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

இக்கோயிலின் பரப்பு ஐந்து வேலியாகும். இக்கோயில் சிற்பக்கலையிலும், ஓவியக்கலையிலும், தலைசிறந்து விளங்குவது. இத்தலத்துக்கு மேலும் பெருமைதருவன ஐவேலி பரப்பினை யுடைய கமலாலயம் என்னும் திருக்குளமும், திருத்தேருமாகும்.

இக்கோயிலில் ஸ்ரீ கமலாம்பாள் ஆடிப்பூர உத்ஸவமும், மார்கழியில் திருவாதிரையும், பங்குனியில் உத்திரவிழாவும், அதையொட்டிய மூன்று நாட்களும் தெப்போத்ஸவமும் மிகச் சிறப்புடைய நிகழ்ச்சிகள் ஆகும்.

நிர்வாக அதிகாரி

**திரு. B. கிருஷ்ணசுவாமி**

# ஸ்ரீ வில்வாரண்யேசுவரர் திருக்கோயில்

## திருக்கொள்ளம்பூதூர்

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருக்குடந்தை - கொரடாச்சேரி நெடுஞ்சாலையில் செல்லூரிலிருந்து மேற்கே ஒரு கி. மீட்டர் தொலைவில் உள்ளது. தஞ்சை - திருவாரூர் புகைவண்டிப் பாதையிலுள்ள கொரடாச்சேரி புகைவண்டி நிலையத்தி லிருந்து வடக்கே 4 கல் தொலைவிலுள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் தன் அடியார்கள் சூழ வேல்நாவலமே கோலாகக் கொண்டு பதிகம் ஓதி ஓடம் செலுத்தி ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்து எம்பெருமானைத் தரிசிக்கவர, ஏறுதாங்கிய இறைவன் தேவியுடன் காட்சிதந்த அற்புதம் நிகழ்த்திய திருத் தலம் இது. தேவாரப் பாடல்பெற்ற தலங்களில் காவிரித் தென்பாலமர்ந்த 113 ஆவது திருத்தலம் திருக்கொள்ளம் பூதூர். மெய்யன்பர்கள் தங்குவதற்கு விடுதியும் உள்ளது.

திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற திருவிடவாயில் ஸ்ரீ புண்ணியநாதசுவாமி ஆலயம் இந்த ஆலயத்தின் ஓர் உபஆலயம். இத்தலம் கொரடாச்சேரிக்குக் கிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

நிர்வாக அதிகாரி

**R. கோவிந்தராசன்**

அறங்காவலர்கள் :

லெ. அ. வபி. அண்ணாமலைச்செட்டியார்

க. ரெத்தினசாமி வாண்டையார்

சி. கிருட்டிணமூர்த்தி

P. R. M, RM. ST. ராமன்செட்டியார்

A. நடராசன்

# திருநெல்லிவனநாதர்

## திருக்கோயில்

## திருநெல்லிக்காவல்

### மன்னார்குடி வட்டம் - தஞ்சை மாவட்டம்

தேவலோகத்திலுள்ள கற்பகதரு முதலிய ஐந்து தருக்களும் இத்தலத்தில் நெல்லி மரங்களாக அமைந் திருக்கின்றன. கற்பகத்தரு நினைத்ததைக் கொடுக்கும் தன்மையுடையது. கோயில்கொண்டுள்ள திருநெல்லி வனநாதரும் அடியார்கள் வேண்டுவதை அளிக்கவல்ல அருளாளர். பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோனும் ஆழிமிசை கல் மிதப்பில் அணைந்த அடியாரும் திருநாவலூர் வன்றெண்டரும் திருநெல்லிவனநாதரை பாடி வழிபட்டுள்ளார்கள்.

பெண்சுமந்தப் பாகப் பெருமானுக்கு பெருந் திருவிழா சித்திரைத் திங்களில் சிறப்புற நடைபெறும்.

இவ்வூர் மாயூரம் – காரைக்குடி புகைவண்டிப் பாதையில் அமைந்துள்ளது.

நிர்வாக அதிகாரி

**பி. திருநாவுக்கரசு, பி. ஏ.,**

அறங்காவலர்கள்:

எம். சுவாமிநாத முதலியார் (தலைவர்)
எஸ். மருதவாணன் பி. ஏ., பி. எல்.,
டி. எஸ். கல்யாணசுந்தரம்

# ஸ்ரீ பரிமளரெங்கநாதர் திருக்கோயில்

## திருஇந்தளூர், மாயூரம்

தஞ்சை மாவட்டம் — தொலைபேசி எண் 330.

இத்திருக்கோயில் காவிரி நதிக்கு வடக்கே மாயூரம் - மணல்மேடு பேருந்து நிலயத்தில் இருந்து 1 கி. மீட்டர் தொலைவில் இருக்கிறது. இக்கோயிலுக்கு அருகில் நீடூர் புகைவண்டிநிலயம் (சுமார் 2 கி. மீ.) உள்ளது. இந்தக் கோயிலுக்கு மாயூரம் பேருந்து நிலயத்தில் இருந்து நெ. 1 டவுன் பஸ் வசதியும் உண்டு.

108 திவ்ய தலங்களில் ஒன்றுவதும், திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்டதுமான இக்கோயிலை வந்து தரிசியுங்கள் என்று அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ். ராமசாமி (நிர்வாக அதிகாரி)

அறங்காவலர்கள் :

ஆர். பழனிச்சாமி (தலைவர்) — பி. கிருஷ்ணமூர்த்தி

எஸ். என். குருமூர்த்தி — கே. எஸ். ராஜகோபாலன்

இ. எஸ். கணபதி

# ஸ்ரீ துர்க்கையம்மன் திருக்கோயில்

பட்டுக்கோட்டை வட்டம் ] பாலத்தளி [ தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் பட்டுக்கோட்டை - அறந்தாங்கி பெருவழியில் சீதாம்பாள் புரத்திற்கு தெற்கே 2-கல் தொலைவில் உள்ளது. பட்டுக்கோட்டை - பேராவூரணி புகைவண்டிவழியில் திருச்சிற்றம்பலத்திலிருந்து வடக்கே 3 கல் தொலைவிலுள்ளது.

கங்கை மதியுடையான் அங்கமதினுறுமுடையாள் துங்கமுறு தனமுடையவளாய் ஆன்மகோடிகளுக்கு இடர்தீர்த்து சகல மங்கலங்களையும் கொடுக்கும் பராசத்தியாயும், சங்கம், சக்கரம், அபயம், அனுக்கிரகமுடைய நான்கு திருக்கரங்களையுடைய சர்வலோக மாதாவாயும் வீற்றிருந்து அருள்புரிகின்றார்.

இங்கு வைகாசியில் நடைபெறும் வைகாசி விசாகப் பெருவிழாவும், ஆடியில் நடைபெறும் சந்தனக்காப்பு வைபவமும், புரட்டாசியில் நடைபெறும் நவராத்திரி உற்சவமும் மிகவும் சிறப்புடையன.

அறங்காவலர்கள்: — நிர்வாக அதிகாரி

R. சுப்பையா வேளார் (தலைவர்) — ஆ. விநாயகமூர்த்தி

N. வீரப்ப தேவர் M. காசிநாத தேவர்

# திரு நவநீதேசுவரர் ஆலயம்

## சிக்கல் தஞ்சை மாவட்டம்

இறைவன்: திரு. நவநீதேசுவரர் (பால்வெண்ணைநாதர்)

இறைவி: திரு சத்தியாதாட்சி (வேல்நெடுங்கண்ணி)

சிறப்பு மிக்கவர்: திரு. சிங்காரவேலவர் தலவிருட்சம்: மல்லிகை

தீர்த்தம்: க்ஷீரபுஷ்கரணி (பாற்குளம்)

இத்திருக்கோயில் திருவாரூர் - நாகபட்டினம் பெருவழியிலுள்ளது. கோச்செங்கட்சோழனால் 4-ம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற மாடக்கோயில். அருணகிரிநாதர், சம்பந்தர், சுந்தரர் இவர்களால் பாடல் பெற்றது இத்தலம்.

தில்லைத்தலம்போல் இக்கோயிலின் வடக்குப்பிரகாரத்தில் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. பெருமாளின் பெயர்: திரு கோலவாமனப் பெருமாள். பிரகாரம் வலம் வருவோர் சிவன் விஷ்ணு இரு சந்நிதிகளையும் கண்டு தரிசித்துவர ஏதுவாய் அமைந்துள்ளது ஒரு சிறப்பு.

இத்தலத்தில் ஐப்பசி மாதத்தில் சிறப்பு உற்சவம் கந்தர் சஷ்டி விழாவும், சித்திரையில் பிர்மோற்சவமும், வைகாசி விசாகத்தில் தெப்பத் திருவிழாவும், பெருமாளுக்கு மார்கழியில் 'பகல் பத்து இராப் பத்து', வைகுண்ட ஏகாதசி உற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சஷ்டி விழாவில் வேல்வாங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாம். இவ்விழாவில் வேலவருக்கு முகத்தில் வியர்வை அரும்பும் காட்சியைக் காண வருவோர் பல்லாயிரம்; அவரருள் பெறுவோர் பல்லாயிரம்.

குறிப்பு: யாத்திரீகர்கள் தங்கி வழிபடுவதற்கு சகல வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள் குறைந்த வாடகையில் உள்ளன.

நிர்வாக அதிகாரி

**டி. பி. வெங்கடாசலம், பி. ஏ.,**

அறங்காவலர்கள்:

**டி. ஆர். அருணாசலம் (தலைவர்) அழ. மாணிக்கஞ்செட்டியார்**

**கே. ஏ. அம்பலவாணன் கே. காளிமுத்து, எம். ஏ., பி. எல்.,**

## ஸ்ரீ புஷ்பவனேஸ்வரசுவாமி திருக்கோயில்

பூண்டி — தஞ்சை மாவட்டம்

மக்கள் பிறவிப் பெருங்கடல் கடந்து உய்யும்பொருட்டு திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் பலஸ்தலங்களில் புஷ்பவநபுரம் என்னும் பூண்டி ஸ்ரீ புஷ்ப வனேஸ்வரர் ஆலயம் ஒன்ருகும். குலோத்துங்க சோழனல் ஸ்தாபிக்கப்பட்டது என்று கல்வெட்டின் மூலம் அறியக்கிடக்கின்றது. ஷ கோவில் 1967-ம் வருஷம் புனருத்தாரணம் செய்யப்பட்டு ராஜகோபுரம் முன் மண்டபங்களுடன் நித்தியபடி ஆறு காலங்கள் நல்ல நிலையில் நடத்தப்பட்டு வருவது கண்கூடு.

ஆண்டுதோறும் வைகாசி விசாகநக்ஷத்திரத்தில் 12 நாள் விழா சிறப்பாக நடை பெற்று வருகிறது. ஒன்பது தலைமுறையாக பூண்டி ஸ்ரீ வாண்டையார் குடும்ப முன்னேர்களால் சொந்த சொத்துக்களை ஷ கோவிலுக்கு எழுதிவைக்கப்பட்டு அதன் வருமானத்தைக்கொண்டு அதற்கென் நியமிக்கப்பட்ட பரம்பரை அறங்காவலரின் கீழ் நிர்வாகம் நடந்துவருகிறது.

பாடல்பெருத ஸ்தலமாயினும் ஸ்வாமியின் பெயரைத்தாங்கி ஸ்ரீ புஷ்பம் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அன்பர்களின் துயர் துடைத்து உள் ஒளி பெருக்கி மெய் அருள் வழங்கும் பாங்கினை எடுத்து இயம்ப இயலாது.

**V. அப்பாவுவாண்டையார் B. A.,**
பரம்பரை அறங்காவலர்

---

## ஸ்ரீ சுந்தரேஸ்வரஸ்வாமி திருக்கோயில்

**தம்பிக்கோட்டை — மேலக்காடு B. O.**

பட்டுக்கோட்டை வட்டம் — தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ அகண்டாகார பரிபூரண சச்சிதானந்த சொரூபராயுள்ள ஸ்ரீ சிவ பெருமான் ஆன்மகோடிகளுக்குப் பந்தம் நீக்கி முத்தி கொடுக்கும் பொருட்டு இப்பூவுலகின் கண் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பல தலங்களுள் ஒன்ருயும், முன்னம் இலக்குமணப்பெருமானல் விநாயகர் பிரதிஷ்டைசெய்து பூசிக்கப் பெற்றதால் தம்பிக்கு நல்லவன்கோட்டை என்று காரணப்பெயர் உள்ளதுமான திருத்தலம் இது.

சுவாமி : ஸ்ரீ சுந்தரேஸ்வரஸ்வாமி — அம்பாள் : ஸ்ரீ சுந்தராம்பிகா

இத்தலம் தம்பிக்கோட்டை புகைவண்டி நிலயத்திற்கு மேற்கில் சுமார் 1 பர்லாங்தொலைவில் அமையப்பெற்றுள்ளது. தம்பிக்கோட்டை புகைவண்டி நிலயம் மாயூரம் — காரைக்குடி இருப்புப்பாதையில் உள்ளது. இக் கோயில் சந்நிதிவரை பெருவழித் துறையினரால் அமைக்கப்பட்ட நல்ல தார்ப் பாதையும் உண்டு.

**V. பூரணலிங்கம்**
நிர்வாக அதிகாரி

**N. ராமசாமி**
பரம்பரை டிரஸ்டி

# ஸ்ரீ பாலைவன நாதசுவாமி திருக்கோயில்

## திருப்பாலைத்துறை

### பாபநாசம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் தஞ்சை மாவட்டம் பாபநாசம் பிரிவைச் சார்ந்தது. கும்பகோணம் தஞ்சை கற்சாலையையொட்டி எழிலுடன் விளங்குகின்றது. கும்பகோணம் தஞ்சாவூர் இருப்புப் பாதையில் பாபநாசம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கில் அரைக்கல் தொலைவில் உள்ளது.

தலப்பெயர் திருப்பாலைத்துறை. இப்பெயரை கேட்ட அளவில் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளுள் பாலை என்ற திணையில் உள்ள தலம் என்று எண்ணலாம். பாலை என்பது ஒருவகை படர்செடி. அது இத்தல மரமுமாகும்.

" பாலைவனநாதர் " என்பது இறைவனின் திருப்பெயர். " தவள வெண்ணகைமங்கை " என்பது இறைவியாரின் திருப்பெயர். இவ்வூரார் அம்மையைத் " தவளாம்பாள் " என்றும், இக்கோயிலை " தவளாம்பாள் கோயில் " என்றும் வழங்குவர்.

அட்டதிக்கு பாலகர்கள் நீராடி வழிபட்ட எட்டு குளங்களும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அவற்றில் தற்போது வசிட்ட தீர்த்தம், இந்திர தீர்த்தம், இமய தீர்த்தம், காவிரி தீர்த்தங்கள்தான் உள்ளது.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் மூவராலும் பாடல்பெற்ற தலம்.

நிர்வாக அதிகாரி

**கே. ஜெயராமன்**

# ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்

## வீரசிங்கம்பேட்டை

### தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் தஞ்சையை ஆண்ட சோழ மன்னன் திரு. ராஜேந்திரனல் கட்டப்பட்டது. இது குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் ஏகாந்தமான இடத்தில் அமைந் துள்ளது. மேலும் சப்தஸ்தலம் என்று புகழ்பெற்ற ஏழு ஊர்களின் இடையில் அமைந்துள்ளது. இதன் கிழக்கே நால்வரில் மூவரால் பாடப்பெற்ற சப்த ஸ்தலங்களில் சிறப்பான ஸ்தலமாகிய திருச்சோற்றுத்துறையும், மேற்கே அட்டவீரட்டத்தில் ஒன்றுனதும் சப்தஸ்தலத்தில் ஐந்தா வது இடத்தை பெற்றதுமான கண்டியூரும் அமைந்துள்ளது. இது திருவையாறு பாபநசம் பஸ்மார்க்கத்தில் மூன்றுவது மைல் தொலேவில் உள்ளது. தஞ்சையிலிருந்து டவுன் பஸ் வசதியும் உண்டு.

இது ஒரு பிரார்த்தனே ஸ்தலமாகும். இதற்கு மார்கழி மாதம் மூன்று நாட்கள் தனி உற்சவமும் பங்குனிமாதம் பத்து தினங்கள் சிறப்பான உற்சவமும் நடத்தப்பெறும். ஆவணிமாதம் ஞாயிற்றுக்கிழமைகள் விசேஷ நாட்களாகும். பக்தகோடிகள் எப்பொழுதும் வந்து சென்று அம்பாளின் அருளேப் பெற்றவண்ணமிருப்பார்கள்.

நிர்வாக அதிகாரி

K. கந்தசாமி B. A.

# தஞ்சை இராசராசேச்சரமும் திருவிசைப்பாவும்

T. V. கோபாலய்யர், திருவையாறு.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்ற தன் சிறப்புப் பெயரைத் தொடர்ந்து காப்பாற்ற இன்றும் அரிதின் முயன்று வரும் தஞ்சைமாவட்டத்தின் தலைநகராய்ப் பண்டு இங்கிருந்த தஞ்சன் என்பான் பெயரால் அமைந்து உள்ளதாகக் கூறப்பட்டு வரும் தஞ்சாவூர் என்ற தஞ்சை, இடைக்காலச் சோழ மன்னருள் விசயாலயன் காலம்முதல், பெருங்கோயில் கண்ட முதல் இராசராசன் காலம்முடிய ஒப்பற்ற கோநகராய், சோணாட்டுக்கு அணிசெய்து, தன் கங்கை வெற்றியின் அறிகுறியாகக் கங்கைகொண்ட சோழபுரம் கண்ட முதல் இராசேந்திரன் காலம் தொட்டுச் சோணாட்டுக் கோநகரங்களுள் ஒன்றாகி, மூன்றாம் இராசேந்திரன் காலத்துத் தஞ்சைச் சோழர் வீழ்ச்சிக்குப் பின்னர் சில நூற்றாண்டுகள் தன் பண்டைச் சிறப்பு ஓரளவு குன்றிப் பின் நாயக்கர், மராட்டியர் ஆட்சியில் மீண்டும் சிறப்புறப் புதுப்பிக்கப்பட்டு இக்காலத்து பழைமையும் புதுமையும் சிவணிப் பன்னலங்களும் பொதுளும் நிலையில், சோழர்காலப் பழைமைக்குச் சான்றாய் இராசராசேச்சரப் பெருங் கோயிலையும், நாயக்க மராட்டியர் காலப் பழைமைக்குச் சான்றாய் அரண்மனையையும், காமாட்சியம்மன் கோயில் முதலாகிய பல கோயில்களையும், சிதைவுற்ற புறமதில் அகழிக் கூறுகளையும், உடல் நலன் பேணும் சிவகங்கைக் குளத்தினையும், அரசியல் அலுவலர் பலர் வாழ்ந்த மாளிகைகளையும், கழிவு நீர் போகக் கூடிய வாயில்கள் நன்கமைந்த அரச வீதிகளையும், இடையிடையே மிடைந்த பலப்பல சந்துகளையும் உள்ளடக்கிப் புதுமைக்கு உறைவிடமாம் பல தொடக்கப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும், கலைக் கல்லூரிகளையும், மருத்துவக்கல்லூரியையும், தமிழகத்திலேயே தலை சிறந்த பேருந்து நிலையத்தினையும், அழகிய புகைவண்டி நிலையத்தினையும், நலன்பல பொதுளும் உண்டிச் சாலைகளையும், தங்குமிடங்களையும், பஃறாறைப் பொருள்களும் விற்கப்படும் அங்காடி மறுகுகளையும், பலவகையான அரசியல் அலுவலகக் கட்டிடங்கள் முதலியவற்றையும் கொண்டு விளங்கும் பேரூர்களில் ஒன்றாக இயங்குகிறது.

சரபோசி மன்னன் காலத்தில் தஞ்சைப் பேரூர், திருமகள் உறைவிடமாம் செந்தாமரையாகவும், கலைமகள் வீற்றிருக்கும் வெண்டாமரையாகவும், செல்வ வளத்தால் அளகாபுரியாகவும், மகிழ்ச்சிச் சிறப்பால் சுவர்க்கமாகவும், வேதமும் வேள்வியும் மிகுதலால் அயனுலகாகவும், சிவபெருமான் வீற்றிருத்தலின் கயிலையாகவும், திருமால் உறைதலில் வைகுந்தமாகவும், தக்கோர் பலரும் உறைதலின் சிவபுரியாகவும் விளங்கியது, வானளாவிய மதிலும், பாதலங்கண்ட அகழியும், நாற்குல மக்கள் தெருக்களும், மாட மாளிகைகளும் நிலா முற்றங்களும், யானைகளும், குதிரைகளும் தங்கும் இடங்களும், கடைத்தெருக்களும் ஆகியவற்றால் அழகுறத் திகழ்ந்தது என்ற செய்திகளைச் சிவக்கொழுந்து தேசிகர்

'பார்கொண்ட தென்திசைப் பரதகண் டத்தில்
சீர்கொண்ட சோழத் திருநா டதனில்
திருமகள் இருக்கும் செந்தா மறையாய்
விரவுபா ரதிக்கு வெண்டா மறையாய்
அளவில்செல் வத்தால் அளகைமா நகராய்
உளமகிழ் சிறப்பின் உம்பர்நா டாகி
வேதமும் வேள்வியும் மிகுந்துஅயன் உலகாய்
மாதவன் உறைதலின் வளர் அவன் பதியாய்ச்
சேஉயர் கொடியோன் திகழ்தலின் கயிலையாய்
யாவரும் உறைதலின் எழிற்சிவ புரியாய்
மீதலத்து ஓங்கிய விறல்மிகு மதிலும்
பாதலத்து அணுகிய பரவுசீர் அகழியும்
வேதியர் நியமமும் வேந்தர்தம் வீதியும்
பேதம்இல் வணிகர் பின்னவர் தெருக்களும்
மாடம்மா ளிகைகளும் மகிழ்அர மியங்களும்
நீடுகைத் தந்திகள் நிலவிடும் பந்தியும்
வளர்பரிக் குலங்கள் மருவிடு சாலையும்
அளவில்பல் பண்டத்து ஆவண நிறையும்
விளங்குஎழில் தஞ்சை வியன்பதி யிடத்து'

சரபேந்திர பூபால குறவஞ்சி - 9

என்ற பாடலடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

சோழமன்னர் காலத்து அரண்மனையின் சுவடுகூட அறிய வாய்ப்பற்ற இக்காலத்தும் சோழமன்னன் முதல் இராசராசன் எடுப்பித்த இராசராசேச்சரத்தினது வீறுற்ற தோற்றத்தினை நோக்குழி, பண்டைய தமிழ் மன்னர்கள் தாம் உறையும் இடத்தினைவிட மக்கள் பலருக்கும் பொதுவான வழிபாட்டிடமாய் மக்களின் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் பல்லாற்றானும் உதவும் கோயில்களே நிலைபேறு உடையனவாய் அமைதல் வேண்டும் என்ற கொள்கையினராய் வாழ்ந்தாராதல் தெளியப்பெறும்,

இனி, தஞ்சையில் அமைந்துள்ள இராசராசேச்சரம்பற்றிக் கருவூர்த்தேவர் இயற்றியுள்ள திருவிசைப்பாவினை நோக்குவோம். சைவத் திருமுறைகள் 12 என்பதனையும், அவற்றுள் முதல் ஏழு திருமுறைகளாகிய மூவர் தேவாரமும் இராசராசன் காலத்து வெளிப்போந்து தொகுக்கப்பட்டன என்பதனையும், பின்னர் திருவாசகம் முதல் பெரிய புராணம் ஈறாக அமைந்த நூல்களினுடைய தொகுப்பே ஏனைய ஐந்து திருமுறைகள் என்பதனையும் தமிழ்ச் சான்றோர் பலரும் அறிவர். அத்திருமுறைகளுள் ஒன்பதாவதாக அமைந்தது திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்பவற்றின் தொகுப்பாகும்.

இறைமையின் புகழ்பற்றியமைந்த பாக்களாகிய திருவிசைப்பா 301 செய்யுட்களைக் கொண்ட 29 பதிகங்களாகச் சைவ நன்மக்கள் ஒன்பதின்மரால் அருளிச் செய்யப்பட்டதாக, அவ்வொன்பதின்மருள் ஒருவராகிய சேந்தனாருளிய 13 பாடல்களைக்கொண்ட திருப்பல்லாண்டும் அந்தத் திருவிசைப்பாவோடு ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றது.

தஞ்சை இராசராசேச்சரம்பற்றிய திருவிசைப்பாப் பதிகம் அருளியவர் கருவூர்த் தேவராவார்.

பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கருவூரில் அந்தணர் மரபில் தோன்றி மறை ஓதிப் பல கலைகளும் ஆய்ந்து, போகநாதரிடம் உபதேசம் பெற்று, ஞான நூல்கள் பலவற்றில் திளைத்து, சிவயோகம் கைவரப் பெற்று, 'உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்து உருகி, மத்த மனத்தொடு மால் இவன் என்ன மனநிலையில், ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர்' திரிந்து, பொதியிலில் அகத்தியரை வழிபட்டுச் சில யாண்டுகள் தங்கி, தஞ்சையில் இராசராசேச்சரம் உடையாரைப் பிரதிட்டிப்பதற்கு உதவி, இராசராசேச்சரம், கங்கைகொண்டசோழேச்சரம் உள்ளிட்ட கோயில்கள் பத்தனுக்கு முறையே ஒவ்வொன்றாகத் திருவிசைப்பாப் பாடிப் பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கருவூர்த் திருவானிலை மாதேவரோடு இரண்டறக் கலந்து, கருவூர்த் திருவானிலையிலும் தஞ்சை இராசராசேச்சரத்திலும் அர்ச்சனைமூர்த்தியாய் அமர்ந்து நமக்கு அருள்பாலித்து வரும் கருவூர்த்தேவர் அருளிய இராசராசேச்சரத்துத் திருவிசைப்பா பதினொரு செய்யுட்களாக அமைந்துள்ளது.

தஞ்சை இராசராசேச்சரத்துப் புறமதிலகத்து அமைந்த நந்தனவனத்தில் தேவதாரு, மந்தாரம், சண்பகம், மகிழ், சந்தனம் ஆகிய மரங்கள் செறிந்திருக்கையினாலே இருள் சூழ்ந்திருந்தது. (10) அப்புற மதிற் சுவர்களில் பலவாக அமைக்கப்பட்ட இடங்களில் பதிக்கப்பெற்ற பளிங்குக் கற்களில் நந்தனவனத்து மலர்களின் ஒளி பாய்கையினாலே அவை பன்னிற ஒளிகளைக்கான்றன (4) தஞ்சை நகரத்துப் புறமதில் ஏப்புழை ஞாயில்முதலிய பதிலுறுப்புக்களோடு காட்சி

வழங்கியது. (1) ஊரகத்து வானளாவிய ஒன்பது நிலை மாடங்கள் பல காணப்பட்டன. (1) தெருக்களில் கடல் ஒலிபோல ஒலி செய்தவாறு அரசுவாக்கள் உலவின. (5) அப்பரந்த தெருக்களிலிருந்த வெண்ணிற மாளிகைகள் காந்த ஒளியால் இரவும் பகலாகக் காட்சி அளித்தது. (6) மாளிகைகள் இரவில் அகில்மணம் கமழ்ந்தன. அவற்றில் வாழ்ந்த நற்குல மகளிர் யாழ்எழீஇ இன்னிசையால் இறைவன் புகழ்பாடினர். (4) மயில் சாயல், மகளிர் நடனமாடும் நாடக சாலைகள்பல வானளாவி ஓங்கின. (8) குடை நிழற்கீழ்த் திறையிடவந்த மன்னர் தமது முடிகள் ஒன்றோடொன்று பட்டு உராய்ந்த தனால் சிதறிய மணிகள் குவியல்களாக உயர்ந்த இடங்களையுடையதாக அரண்மனை இருந்தது, (3) நிலம் நெளி மருங்கில் ஊற்றுள்ள இடங்களில் பாய்கால் வடிகால்களோடு அமைந்த தடாகங்களில் மலர்ந்த கழுநீர்ப் பூக்களின் நறுமணம் ஊர்முழுதும் கமழ்ந்தது. (7) புறமதிலின் புறத்தே அமைந்த அகழியில் வடவாற்றின் நீரானது விரைந்துபாய்கையாலே அதன்கண் உள்ள முதலைகளும் உந்தித் தள்ளப்பட்ட அகழி நீர் அலைமோதும் காட்சி வழங்கியது. (2)

இனி, இராசராசேச்சரத்துப் பெருமானார் தாம் பிறப்பு இறப்பு இலராய் நம்மிடையே கலந்திருந்தும் நமக்கு அவற்றை அருளுகையினாலே இப்பிறப்பில் அவரை அடைதல் இயலாதுபோயினும் இனி எடுக்கும் பிறப்பிலாதல் அவர் திருவடிகளை எய்தலாம். (7) இவர் பிரமனும், திருமாலும், தேவர்களும், வேறு எத்தகையவரும் வேதங்களும் தம்மை உள்ளவாறு உணர இயலாத தழற்பிழம்பு ஆகியவர். (5) ஒருவராய்ப் பல வடிவங்களும் கொள்ளும் ஆற்றலராய், அடியார் வசத்தினராய், கனியும், கரும்பும், அமிர்தும் போன்ற சுவையினராய், வெண்புரி நூலினராய், தூயராய், கழலைக்கட்டியவராய், முறுக்கிய சடைமுடியினராய், புண்ணிய வடிவினராய்க் காலைக் கதிரவன் போன்று பொய்யருக்குத் தோன்றாதவராய், இளவேனிற் காலைக்கதிரவன் போன்று அடியார்க்குக் காட்சி வழங்குபவராம் இனியர். (9, 10) இவர் மேனியில் அணியப்பெற்ற திருநீறு சடையிலுள்ள கங்கையின் நீர்க் கசிவினால் மறைகிறது. (9) இவர் கோடி சூரியப் பிரகாசமுடைய அழகியர். (1) இவர் தம் நெற்றிக்கண் அழகு அடியவருக்குப் பெருவிருந்தாகும். இவர் தம் சிலம்பு ஒலிக்கும் திருவடிகள் அடியவர் நெஞ்சினுள் நீங்காது இடம்பெற்று அவர் குடிமுழுதும் ஆட்கொள்ளும். (2) இவர் தம் சடையில் உள்ள பிறை நிலா விரிக்க முத்துக்குடை நிழலிலே விடைமீது ஏறித் திருவுலா வரும் போது, அருளுமாறு அருளி ஆளுமாறு ஆளும் இவர் தம் கண்கள், புன்சடை, காதுகள் இவற்றின் அழகில் ஈடுபட்டு இம்முக்கணான் முயக்கம்வேட்ட மக்கள் பெண்டிர் பலராவர். (3. 6) பலகாலமாகச் சிவத்தொண்டில் ஈடுபட்ட அடியவர் பலர் இருக்கவும், கருவூர்த்தேவராகிய தம் மனத்தையும் விருப்பிற்கு உரிய பெரிய கோயிலாகக்கொண்டு அதன்கண் வந்து வீற்றிருக்கும் எளிவந்த திறம் தம்மால் ஒருநாளும் மறக்கற் பாலதன்று. (8) ஆதலின் தஞ்சை இராசராசேச்சரம் உடையாரைப்பற்றி அவன் அருளாகிய அருமருந்தினை அருந்திப் பிறவிப் பிணியாகிய அல்லல் நீங்கப்பெற்ற கருவூர்த் தேவர். (11) இத்திருவிசைப்பாவினை ஏனோரும் ஓதிச் சிவபதம் அடைதல்வேண்டும் என்ற அருளுள்ளத்தால் அருளிச் செய்துள்ளார். (11)

கருவூர்த்தேவரை ஈர்த்து ஆட்கொண்டு தம்மைப் பாடுவித்ததனோடு தஞ்சைநகர் பற்றிய கற்பனைவளம் செறிந்த செய்திகளையும் இறைவரும் அறிய வாய்ப்பு அருளிய தஞ்சை இராசராசேச்சரமுடையார் பொன்னடி வாழ்க.

# 108 சிவாலய தேவஸ்தானம்

பாபநாசம்

பாபநாசம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருத்தலம் பாபநாசம் புகைவண்டி நிலையத்தில் இருந்து வட மேற்கில் சுமார் 1 மைல் தொலைவில் உள்ளது. மிகவும் பழமையான கோயில். இராமர், ஹனுமான் முதலியோர் வழிபட்டது.

இத்திருக்கோயில் 108 சிவலிங்கங்களையுடைய புதுமையான கோயில். (தஞ்சாவூர் மேற்குச் சுவற்றில் இதுபோன்று 108 சிவலிங்க வரிசைகளைக் காணலாம்). இத்தலத்தில் உள்ள திருக்குளத்தில் நீராடிச் சிவலிங்கங்களை வழிபட்டால் பல பாவங்களும் நீங்கி, வேண்டும் சித்திகளைப் பெறுவர். இத்தலத்திற்கு கீழ இராமேச்சுரம், திருமால்புரம் எனும் பெயர்களும், பெருமானுக்குப் பல பெயர்களும் வழங்குகின்றன.

நிர்வாக அதிகாரி

K. G. ஜெயராமன்



# தேவபுரீச்சுரசுவாமி திருக்கோயில்

தேவூர்

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயிலானது கோச்செங்கட்சோழனால் கட்டப்பட்டுள்ள மாடக் கோயில்களுள் ஒன்றாகும். திருவாரூர்-நாகூர் புகைவண்டிப்பாதையில் கீழ்வேளூர் நிலையத்திலிருந்து தெற்கே 2 கல் தொலைவிலுள்ளது. இறைவனின் பெயர் தேவபுரீச்சுவரர். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை தேவர்கள் பூஜித்து வந்ததால் தேவகுருநாதர் என்ற பெயரும் வழங்கி வருகின்றது. இறைவியின் பெயர் தேன்மொழியாள். சமயக்குரவர்களாகிய திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோரும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் இராமலிங்க அடிகளாரும் இத்தேவூர் இறைவனடி போற்றி, வாழ்த்தி வழி பட்டுள்ளார்கள். இத்தலமானது வாழையை தலவிருட்சமாகக் கொண்டுள்ளதால் கதலீவனம் என்ற பெயரும் வழங்கப்பட்டு வருகின்றது. ஷை வாழை கல் மலையில் வளர்ந்து வருவது இத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.

அறங்காவலர் நிர்வாக அதிகாரி

T. S. விஸ்வலிங்கமுதலியார் N. சிவலிங்கம்

# ஸ்ரீ உத்திராபதீஸ்வரர் திருக்கோயில்

## திருச்செங்காட்டங்குடி

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

சைவ சமய குரவர்களில் அப்பர், சம்பந்தர் ஆகிய இருவராலும் பாடல்பெற்ற இத்தலம் நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து 9 - கிலோமீட்டர் தூரத்திலும், நன்னிலம் - நாகபட்டினம் பெருவழிப் பாதையில் திருப்புகலூரிலிருந்து 3 - கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது.

ஸ்ரீவிநாயகர், கஜமுகாசுரனைக் கொன்ற இரத்தம் பெருகி ஓடியதால் செங்காடு என்றும், வழிபட்ட காரணத்தால் கணபதீச்சரம் என்றும் அழைக்கப்படுகிறது. சிறுத்தொண்டர் (பரஞ்சோதியார்) வாதாபி மன்னர் புலிகேசியை வென்று கணபதியை எடுத்துவந்து பிரதிஷ்டை செய்துள்ளார். பேரன்பை உலகம் அறிந்து உய்யும் வண்ணம் "ஒரு குடிக்கு சிறுவனொரு மகனை தாதை அரியத் தாய்பிடிக்கும் பொழுதில் தம்மின் மனமுவந்தே பேதமின்றிச் சமைத்த கறி யாம் இட்டுண்பது" என சிவனர் வேண்ட, அவ்வாறே அமுது படைத்த சிறுத்தொண்டருக்கு அருள் புரிந்த தலம். பல்லவ அரசன் ஐயடிகள் காடவர்கோன் மகாராசாவுக்கு காட்சியளித்த தலமும் இதுவே.

சித்திரை பரணியன்று அமுதுபடையலும், திருவோணத்தில் செண்பகப்பூக்காட்சி திருவிழாவும் மிகச் சிறப்புடையன. இத்திருக்கோயிலின் இராசகோபுரம் புதிதாகநிர்மாணிக்கப்பெற்று வருகின்றது.

பரம்பரை அறங்காவலர்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டாரசந்நிதிகள்**

நிர்வாக அதிகாரி

**இரா. செயசந்திரன்**

# ஸ்ரீ காயாரோகணசுவாமி திருக்கோயில்

**நாகபட்டினம் தஞ்சை மாவட்டம்**

சரித்திரப் புகழ்பெற்ற இவ்வாலயம் மூவராலும் பாடப் பெற்றது. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்ருகும். புண்டரீக முனிவர், பெருமானைக் காயத்தோடு ஆரோகணித்து முத்தி பெற்றதால் காயாரோகணம் என்ற காரணப்பெயர் பெறுவ தாயிற்று. அம்மை கருந்தடங்கண்ணி என அப்பர் தேவாரத்தில் குறிக்கப்பெறுகிருள்.

அறுபத்திநான்கு சக்திபீடங்களில் இத்திருக்கோயிலும் ஒன்று. அம்பாளுக்கு ஆண்டுதோறும் ஆடிப்பூரத் திருவிழா பத்து நாட்களுக்குச் சிறப்பாக நடைபெறுகிறது. முத்தித் தலங்கள் மூன்றனுள் ஒன்ருகும். வள்ளலார் இத்திருக்கோயி லுக்கு வருகைதந்து கால் பதித்துச் சென்றுள்ளார். இத்திருக் கோயிலில் உள்ள ஸ்ரீ நாகாபரண விநாயகர்சிலை மிகவும் வனப் புடையது. அருணகிரிநாதராலும் பாடல் பெற்ற தலமாகும். பெரும் புலவர் திரு மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய காரோணப்புராணம் இவ்வாலயத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

நிர்வாக அதிகாரி

**கே. எஸ். கோவிந்தராசன்**

அறங்காவலர்கள் :

**ஏ. ராஜமாணிக்கம்** பி. ஏ., பி. எல்., (தலைவர்)

**ஏ. ராமசுவாமி, ஆர். தம்பையா** பி. ஏ., பி. எல்.,

# ஸ்ரீ ராஜகோபாலசுவாமி தேவஸ்தானம்

## மன்னார்குடி

தஞ்சை மாவட்டம்

சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கனால் கட்டப்பட்ட இத்திருக்கோயில் ஏழு பிரகாரங்களை யும் பதினாறு கோபுரங்களையும் தன்னகத்தே கொண்ட சிறப்பு மிக்க வைணவத் தலமாகும். இறைவன் (மூலவர்) திருநாமம் ஸ்ரீ வாசுதேவப் பெருமாளாகும். இறைவி (தாயார்) திருநாமம் ஹேமாப்ஜநாயகி.

தினமும் பெருமானின் சேவை திவ்ய உற்சவமாகும். ஆண்டின் பன்னிரண்டு மாதங் களிலும் திருவிழா நிகழ்ந்துவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

நம் உள்ளங்கவர் எம்பெருமானைக் கண்டு வழிபட்டு இருமைப் பயன்களையும் எய்த வேண்டுகிறோம்.

நிர்வாக அதிகாரி

கே. வைத்தியநாதன்

அறங்காவலர்கள் :

கே. ஆர். ராஜகோபாலய்யங்கார் (தலைவர்)
வி. பி. கோவிந்தராசு பிள்ளை
எஸ். சிவசுப்பிரமணியம், முருகையா கோனார்
எம். மாகாளி வாய்க்காரர்

# ஸ்ரீ வீரமாகாளி அம்மன் திருக்கோயில்

## ஆத்தாளூர்

### பேராவூருணி அஞ்சல் — தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயில் பேராவூருணியில் இருந்து பட்டுக்கோட்டை செல்லும் பேருந்து வழியில் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கிழக்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும், காரைக்குடியிலிருந்து மாயூரம் செல்லும் புகைவண்டிப் பாதையில், பேராவூருணி புகை வண்டி நிலயத்திற்கு வடகிழக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

ஸ்ரீ திருக்காள நாதேசுவரர் மற்றும் ஸ்ரீ குட்டியப்பர் ஆலயங்கள் இதன் பராமரிப்பில் இருந்து வருகின்ற உபகோவில்களாகும். வேலால் புலியொன்றைக் குத்தி நிற்கும் நிலையிலுள்ள ஸ்ரீ குட்டியப்பர் காவல் தெய்வமாய்க் கோயிலின் தென்புறத்தில் எழுந்தருளியுள்ளார். இந்த திருக்கோயிலுக்கு ஏறக்குறைய 350 ஏக்கர்கள் நன்செய் புன்செய் நிலங்கள் நாட்டாணிக் கோட்டை, ஆத்தாளூர் மாவடுகுறிச்சி மற்றும் தொந்துப்புலிக் காடு ஆகிய கிராமங்களில் உள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதத்தில் வருடாந்திரத் திருவிழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகிறது. களத்தூர், தென்னங்குடி, முடப்புளிக்காடு, கழனிவாசல் ஆகிய நான்கு கிராமத்தார்களும், 'மது' எடுத்துவர நடைபெறும் ஒன்பதாம் நாள் விழா அடியார்க்கு அழகானதோர் காட்சியாகும்.

புதிதாக ரூ. 68,000 மதிப்பீட்டில் திருமண மண்டபம் ஒன்று நல்ல முறையில் கட்டப்பெறுகின்றது. இப்பகுதியில் நடைபெறும் திருமணங்களில் பெரும்பாலானவை இக்கோயிலிலேயே நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்வாக அதிகாரி
கி. வயிரவன் பி. ஏ.,

அறங்காவலர்கள் :

மு. கிருட்டினமூர்த்தி, Ex. M. L. A. (தலைவர்)
மு. குஞ்சிதம், சு. சொக்கலிங்கம்

# ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில்

## வழுவூர்

மாயூரம் வட்டம் :: தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் –திருவாரூர் புகைவண்டிப் பாதையில் இலந்தங்குடி நிலையத்திலிருந்து 1 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. தேவாரம் பாடிய மூவராலும் பதிகங்களில் பெயர்மட்டும் குறிக்கப்பெற்றவை. வைப்புத் தலங்கள் எனப்படும். இப்பகுதிகளில் 249 தலங்கள் உள்ளன. இவைகளில் வழுவூர் ஒன்று.

இத்தலம் அட்ட வீரட்டானங்களில் யானையை உரித்த தலமாகும். அமாவாசைதோறும் தீர்த்தவாரி நடைபெறுகின்றது. மாசிமாதம் மகநாளில் பௌர்ணமியன்று உதய காலத்தில் பெருமான் யானையை சம்ஹாரம்செய்து நடனக் காட்சி தருகிறார். மார்கழி மாதத்திலும் திருவாதிரை நாளில் உதய காலத்தில் கோயிலுக்குள் யானை உரித்த பெருமான் நடனம் நடைபெறும். திருவாதிரைக்கு முன் தினம் இரவில் யானை உரித்த பெருமான் வெண்மை அலங்காரத்துடன் காட்சி தருவார். இதர விழாக்களில் ஆனித்திருமஞ்சனம், ஆடிப்பூரம், நவராத்திரி ஆகிய விழாக்கள் சிறப்புடையன. இந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கப்படுகிறது.

நிர்வாக அதிகாரி

எஸ். சுப்ரமணியம்

அறங்காவலர்கள்:

எம். பழனிவேலு (தலைவர்)

எம். மாணிக்கம் பி. ஏ., பி. எல்.,

சி. இராசகோபாலன் பி. எஸ்ஸி., பி. எல்.,

# திரு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்

## சுவாமிமலை (திருவேரகம்)

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய இத்தலம் தஞ்சை - கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் சுவாமிமலை புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் வருமானமுள்ள இவ்வாலயத்திற்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் மாதக்கார்த்திகை மற்றும் திருவிழாக்களுக்கு மக்கள் திரளாக வருகின்றனர்.

இத்தலத்து முருகவேள் தந்தைக்கு உபதேசித்த ஞான தேசிகன். இவரை மெய்யன்புடன் வழிபட்டோர் உண்மை ஞானத்தைப் பெறுவர். அருணகிரிநாதரால் நாற்பது திருப்புகழ் பாடல்கள் உள்ளன. நக்கீரரால் திருமுருகாற்றுப்படையில் போற்றி வந்தித்து சிறப்புத்தோத்திரம் செய்யப்பட்டுள்ளது.

சித்திரையில் சைத்ரோற்சவமும், ஐப்பசியில் ஸ்கந்த சஷ்டியும், கார்த்திகையில் திருக்கார்த்திகை பெருவிழாவும், தைப்பூசத்தில் பிர்மோற்சவமும், பங்குனியில் ஸ்ரீ வள்ளிநாயகியார் திருக்கல்யாண உற்சவமும் மிகவும் சிறப்புடைய திருவிழாக்களாகும்.

வழிபடுவோர் வசதிக்காக தங்கும் அறைகளும், திருமண மண்டபமும உள்ளன. திருப்பணிகள் பூர்த்திசெய்து மகாகும்பாபிஷேகம் விரிவாக சென்ற 2–9–71 அன்று நிறைவுபெற்றது. ஆறுபடை வீடுகளில் நான்காவதாக விளங்கும் இத்திருத்தலத்திற்கு பக்தர்கள் திரளாக வந்து அவனருள் பெறவேண்டுகிறோம்.

நிர்வாக அதிகாரி

**எஸ். மகாலிங்கம் பி. எஸ்ஸி.**

அறங்காவலர்கள்:

டி. எஸ். சுவாமிநாத உடையார் (தலைவர்)

பி. ராமசாமி தேவர் ஜி. சுந்தரராஜ வன்னியர்

ஆர். எஸ். முத்து எஸ். கோவிந்தசாமி பிள்ளை

# அறம் காத்த அண்ணல்

நா. நாகராசன் B. A., H. R. P.
நிர்வாக அதிகாரி
திரு நாகநாதசுவாமி தேவஸ்தானம்
திருநாகேச்சுரம்

சினவேல் எடுத்து செருக்களம் செல்ல உடலில் வலிமையுடையவர் எல்லாம்வருவர், ஆனல் செங்கோல் பிடித்துச் சிம்மாசனத்தில் அமருதல் உள்ளத்தில் வலிமையுடைய ஒரு சிலரால்தான் முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டிய பெருமகன் இராசராச சோழன். அவனுடைய் வாழ்வு மனித வரலாற்றுக் காவியத்தில் ஒரு பொன்னேடு. 'ஆளும் அரசனும் ஆளப்படும் மக்களும் அகிலத்தையெல்லாம் ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவரத்தக்க ஆண்மை படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் அறத்தினை உணர்ந்த அளவிற்குத்தான் நாட்டில் அமைதி நிலவும். அறநெறிக்கு ஒரே ஊன்றுகோல் சமயநெறி, இதுவே உயர்ந்த அரசியல் நெறி' என்பது இராசராசனுடைய வீர வாழ்வு தரும் வெற்றிப் பாடம். தெய்வப் புலவர் திருவள்ளுவர் கருத்துப்படி முறைசெய்து காப்பாற்றும் மன்னவனுக அவன் விளங்கினன்; அதனுல் தான் அவன் என்றென்றும் 'மக்கட்கு இறை' யென்று கருதப்படுகிருன்.

மறவர் குலத்தின் மறவா தமிழ் இலக்கியமாம் புறநானூறு நம் முன்னேர்கள் புரிந்த போர்களின் வரலாற்றினையே அதிகமாகக் கூறினுலும், அதனுள் உருத்தெரியாத உயிர்போல் நிற்கும் பெருங்கருத்து, அதன் 55-ஆவது பாடலான மதுரை மருதன் இளநாகனுர் பாடியுள்ள 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்னும் ஒரே ஒரு அடியிலேயே அமைந்துள்ளது. இராசராசனின் புறவாழ்வை நோக்க அவன் செய்த போர்களும், அவற்றில் அவன் பெற்ற வெற்றிகளும், அதனுல் எதிரிகளின் அழிவுகளுமே கண்ணிற்குப் புலப்பட்டாலும், அவனுடைய அகவாழ்வினை நோக்க எல்லாமே அறம்... என்பது போதரும். அவன்புரிந்த போர்கள் ஒரு புறநானூறு என்ருல் அவன் கட்டிய அறச்சாலைகளோ ஆயிரம்.

ஐப்பசி மாதம் சதயத் திருநாளாம் இன்று அவன் பிறந்த பெருநாள்மட்டும் இல்லை. இன்று செல்வத்தமிழின் சமய இலக்கியங்கள் எல்லாம் பிறந்தநாள்; ஆடற்கலை அழகு மேடையில் கால்வைத்தநாள்; பாடற்கலை திருவாய் மலர்ந்தநாள்; சுருங்கச்சொல்லின் திருமகளும், கலைகளும், மலைமகளும் அரியணை ஏறும் நாள்.

அவனுடைய வெற்றி வரலாற்றினை மாத்திரம் நோக்கினுல், மற்ற எல்லாப் பேரரசர்களின் வரலாற்றைப்போல 'சென்றேன் வென்றேன்' என்பதுதான் போதரும். ஆனல் அவனுடைய புகழ்மட்டும் மற்ற பேரரசர்களின் புகழைப்போல் பெயருக்காக நில்லாமல் 'சென்றேன் ... வென்றேன் ... நிலைத்து நின்றேன்' என்று நின்ற நிலை நடுங்காது நிற்பதற்குக் காரணம் அவனுடைய அசையா அறக்கொள்கையும், அவன்

கட்டிய தஞ்சைப் பெருங்கோயிலுமேயாகும். அன்று வானளாவும் கற்கோயிலை அவன் கட்டியதால்தான் இன்று நாம் அவனுக்கு வானளாவ சொற்கோயில் கட்டுகின்றோம். அவன் கைப்பட்டதினாலே அன்று இந்தக் கோயில் விமானம் மட்டும் தலைநிமிர்ந்து நிற்கவில்லை. இந்த விமானத்தைக் கண்டு அவன் கால்பட்ட தமிழகமே தலைநிமிர்ந்து நிற்கிறது. அன்று அவன் அரசியலை ஒரு அறச்செயலாகக் கருதினான். அதனால்தான் அவனுடைய பெயரும் புகழும் என்றென்றும் அழியா அந்த அறத்தினைப்போல் நிலைத்து நிற்கின்றன. அவன் தன் தந்தைக்குப் பின்னர் சோழநாட்டின் ஆட்சியைப் பெறும் முறைமையும், தகுதியும் இருந்தும் தன் சிற்றப்பன் உத்தமசோழன் விரும்பியதால் தன் பேரரசையே விட்டுக்கொடுத்த உத்தமன் ஆவன்.

ஊன் மறந்து கான் சென்று கனியொடு கிழங்குகளை உண்டு அக்கானிலேயே வாழ்வதை ஒரு அறமாக்கித் 'துறவறம்' என்று பெயர் கொடுக்கும் வள்ளுவரின் வாய்மொழி இன்னொருவர் இல்லத்தில் இருந்தபடி தன் மனைவியொடு வாழ்ந்து மக்களைப் பெற்று உலகியல் வழிச் செல்வதையும் ஓர் அறமாக்கி 'இல்லறம்' என்கின்றது. ஒருவனுக்கு மங்கலம் ஆகி நன்மையினைத் தரக்கூடிய பெரும்பொருள் அவனுடைய மனைவியே; மற்றும் அதற்கு நன்கலமோ நல்மக்கட்பேறு. அறநாயகன் இராசராசன் மங்கலமாகிய மனைவியோடு நன்கலமாகிய நன்மக்களையும் பெற்றவன். இவனுக்கு உலகமே அடங்கி நடக்கும் என்பதால்தான் 'உலகமாதேவியார்' என்னும் பட்டத்தரசியார் கிடைத்தார்போலும். திருவிசலூர் கோயிலில் இவ்வரசன் தன் எடைக்கு எடை பொன் அளித்துத் துலாபாரதானம் செய்தபொழுது, இவனுடைய பெருந்தேவியாம் பட்டத்தரசியோ, இரணிய கருப்பம் தானம்செய்தார். அந்தப் பேரரசி திருவையாற்றில் தனது பெயரால் 'உலகமாதேவீச்சுரம்' என்னும் கோவில் எடுப்பிக்கப்பட அதன் வழிபாட்டிற்கு அவர் நிவந்தம் அளித்துள்ளார். தம் கணவர் இராசராச மன்னர் தஞ்சையில் இராசராசேச்சுரம் அமைத்தபொழுது அங்குள்ள படிவங்கட்குத் தம் அணிகலன்களைக் கொடுத்த சிறப்புடையவர் இத்தேவியாராவார். இவர் அருஞ்செயல்களை எண்ணித்தான் இராசராசனுடைய அரசியல் தலைவர்களுள் ஒருவனும், தஞ்சைப் பெரியகோயிலில் ஸ்ரீ காரியம் செய்து வந்தவனுமாகிய பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பான் இராசராசன், உலகமாதேவியார் ஆகிய இருவருடைய திருவுருவங்களையும் கோவிலில் செய்து வைத்து வழிபாடு நடத்தியுள்ளான். இராசராசனின் வழித் தோன்றலாகப் பிறந்த பல பெண்களும் சிவ வழிபாட்டிலே சிறந்து விளங்கியமை நோக்க அவன் இல்லறத்தில் இருந்துகொண்டே ஒரு தெய்வீக வாழ்வு வாழ்ந்து இருக்கின்றான் என்றே நமக்குத் தோன்றுகிறது.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் கால் நடையாகவே சென்று கண்ணில்கண்ட ஒவ்வொரு ஊரையும் தம் பாட்டால் ஒவ்வொரு திருக்கோயிலாக்கித் தமிழ் மணத்தினால் தெய்வமணம் பரப்பிய புண்ணியபூமி நம் தமிழகம். இப்படிப்பட்ட அருளாளர்களைப் பெற்றதனால்தான் தமிழகத்தைப்பற்றி பாடுகிறபோது, சேக்கிழார்பெருமான், 'மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திட' என்று தமிழகம் இருக்கும் தென்திசைக்கே ஒரு வாழ்த்துக் கூறுகிறார். கி. பி. 2ஆம் நூற்றாண்டு வரையுள்ள சங்ககாலத்தில் கரையேறி மீன் விளையாடும் காவிரி நாடாம் சோழநாட்டில் கொடியேறிப் புலி விளையாட, குன்றேறிப் புகழ் விளையாடியது. அதன் பின்பு இடைக் காலத்தில் மாற்றாரின் வலிமை கூடவே வாழ்ந்த இனம் வாடிவிட்டது.

நிலைபெயராப் புகழோடு வாழ்ந்த இனம் நாளும் நாளும் நசித்துக்கொண்டிருந்தாலும் நம்பிக்கைக் குறையாத அதன் கனவுகள் எல்லாம் நனவாகப் பிறந்தவன்தான் இராசராசசோழன். அவன் தன் முன்னோர்களின் கனவுகள் விரிந்த அளவிற்குச் சோழ நாட்டை விரிவாக்கினான். அவர்களின் அழியாத ஆசைகளின் உயரத்திற்கு வான் புகும் தலைகொண்ட கோயில்கட்டி 'இறைவா! நீ விண்ணில் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் என் ஆற்றல் உள்ள அவ்வளவு உயரத்திற்கு விமானம் எழுப்பி, நின்றன் திருவடியைத் தொழுவேன்' என்ற அன்பு வேட்கையில் விமானம் எழுப்ப, அந்த இறை

வனே அவன்மேல்கொண்ட அருள் வேட்கையில் விரைந்து வந்து அவனுடைய பெருமையை உலகெல்லாம் உணர்ந்திட 'பெருவுடையார்' ஆக வீற்றிருக்கின்றான். அவன் தன் உள்ளத்தைப் பெருங்கோயிலாக்கினான். அவ்விறைவனே தான் அமர்ந்திருக்கும் அந்தத் தஞ்சைக் கோயிலையே 'இராசராசேச்சுரம்' என்று தன் அன்பனது திருப்பெயரால்கொண்டான். என்னே! அன்புடை மன்னனின் பக்தி வேட்கை! என்னே! ஆண்டவனின் அருள் நெஞ்சம்.

'நாட்டில் அறம் தோற்பின் அங்கே அரசனுக்கு வேலையே இல்லை' என்று வாழ்ந்த கண்ணகி காலத்து பாண்டியனைப் போல வாழ்ந்தவன் இவன். இவனுடைய பார்வைசென்ற திசையெல்லாம் அஞ்சி அடி பணியும் வெற்றி வீரனாக விளங்கினாலும் கண்ணில் பட்டதையெல்லாம் கொன்று விடும் புலியாக அவன் திரியவில்லை. தன்னால் அனுப்பப்பட்ட தூதன் அவமதிக்கப்பட்டானென்ற சினத்தினாலே அவன் சேரநாட்டு அரசன்மீது போர் தொடுத்தான். அத்தீயவனுக்கு உதவிய பாண்டியர்களையும் வென்றான். வேங்கிநாட்டை வென்ற நிலையில் அந்நாட்டு இளவரசன் விமலாதித்தனின் வீரத்தைப் போற்றிப் புகழ்ந்து, வெற்றி பெற்ற வீரர்களுக்குப் போர்க்களத்திலே அளிக்கப்படும் 'பொற்பூ' ஆகத் தனது மகளைப் பரிசளித்தான். தன்னிடம் தோற்றாலும் மாற்றானின் வீரத்தை மறைக்காது புகழ்ந்த அலெக்ஸாண்டரைப் போலப் போர்க்களத்தில் எதிரியினுடைய வீரத்தைப் புரிந்துகொண்டு புகழ்வதும் அதற்கான பரிசிலைத் தந்துவிடுவதும் ஓர் அறம்தானே!

'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்'

என்னும் திருக்குறளுக்குத் தெய்விக விளக்கம் வேண்டுமென்றால் அங்கே இராசராசனின் வீர வரலாறுதான் நம் முன்வந்து நிற்கும். இவன் புரிந்த போர்களில் எல்லாம் எத்தனையோ வெற்றிகளைத் தொடர்ந்து வாகைமாலைகள் தோள்களில் தாமாகவந்து விழுந்தாலும், மனத்துக்கண் மாசிலனாகி, அறத்தான் வருவதே இன்பம் என்று கொண்ட கொள்கையில் வாழ்ந்தான்.

தன் தெய்வமாம் தஞ்சைப் பெருவுடையாரை மறவாதநிலையில் தான் வென்ற ஊர்கள் பலவற்றைத் தானமாகத் தன் பெரிய கோயிலுக்கு விட்டு மைவைத்த பத்தி நெறியன்றி வேறோர் நெறி கருதாத் தெய்வச் சோழனாக விளங்குகின்றான். நம்பியாண்டார் நம்பிகளைக்கொண்டு திருமுறைகளைத் தொகுக்கச்செய்தது தமிழ் இலக்கியத்திற்கும் சைவ சமயத்திற்கும் இவன் செய்த பெருந்தொண்டு ஆகும்.

ஆய கலைகள் பல வாயிலாக இவன் மக்களிடையே சமய அறிவினைப் பெருக்கினான். அதனால் மக்கள் அறத்தினுடைய அருமையை அறிந்து களவும் கொலையும் பொய்யும் வஞ்சனையும் இன்றி வாழ்ந்தனர். நெல் அளக்கும் மரக்காலுக்குக்கூட இவன் தன் பெருங்கோயிலில் ஆடல்வல்லான் என்னும் பெயரைக்கொடுத்தான். பாண்டியகுல அசனி, மும்முடிச்சோழன், கேரள அந்தகன் இன்னும் இவைபோன்ற பல பெயர்கள் அவனைச் சூழ்ந்தாலும் 'சிவபாதசேகரன்' என்னும் புகழ்ப்பெயரையே நல்ல நாமமாகக் கொண்டான். உலகையெல்லாம் தன் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவந்ததைக் கூட எண்ணி மகிழாமல், 'திருமுறை கண்ட சோழன்' என்று தெருவெல்லாம் தம் பெயர் ஒலிப்பதைக் கேட்டே மெய்ம்மறந்து மகிழ்ந்தான். இதே நேரத்தில் அவன் வைணவம், பௌத்தம் ஆகிய சமயங்களை வெறுக்கவில்லை. மைசூரிலுள்ள வைணவக் கோயில்களைக் காத்து நின்றதோடு, நாகபட்டினத்தில் கட்டப்பட்ட பௌத்த கோயிலுக்கு ஓர் ஊரையே தானமாக விட்டிருந்தான். இவ்வாறு சமயக் கொள்கையிலும் எல்லோரையும் அணைத்து நிற்கும் அறத்தினைப் போற்றினான். தஞ்சைப் பெரிய கோயிலுக்காக அவன் அளித்துள்ள 41559 கழஞ்சு எடையுள்ள பொற்கலங்கள் 50650 கழஞ்சு எடையுள்ள வெள்ளிக் கலங்கள் 10200 காசு மதிப்புடைய அணிகலன்கள் மற்றும் பல கிராமங்கள் 1,16,000 கலம் நெல் ஆண்டு வருவாய்தரும் விளைநிலங்கள் ஆகியவற்றை நினைத்துப் பார்த்தால் அன்னை "அறம் வளர்த்த அண்ணல்" என்று புகழ்வதோடு அவனுக்காக ஒரு தனிக் கோவிலையே கட்டி வைக்கத் தோன்றுகின்றது அன்றோ!

# ஸ்ரீ சம்பந்த சுவாமி ஆலயம்

மாயூரம் வட்டம் சித்தர்க்காடு தஞ்சை மாவட்டம்

"பொன்னி நதி" என்னும் காவிரி தென்கரையில் மும்மூர்த்திகள் வழிபட்ட மூவலூருக்குக் கிழக்கே, கௌரி மாயூரம் என்னும் திருமயிலாடுதுறைக்கு மேற்கே அமைந்து உள்ளது. திருஞானசம்பந்தர் 'திருத்துருத்தி' என்னும் குத்தாலத்தில் இறைவனை வழுத்தி காவிரி வடகரை வழியே வந்தவர் மும்மூர்த்தி வழிபட்ட தலம் வெண்மணலே லிங்கமாகத் தெரிய, தென்கரை கிழ எல்லைவந்து சிவவழிபாடு செய்தார். அவர் அமைத்த ஆலயம் இதுவே. இறைவன் ஸ்ரீ பிர்மபுரீசர்; இறைவி திரிபுரசுந்தரி. தீர்த்தம் சம்பந்தர் தீர்த்தம். ஞானப்பாலுண்ட விழா சம்பந்தர் ஐக்கியம் சிறப்பு விழாக்கள் ஆகும்.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

S. இராதாகிருஷ்ணன் B. com. (தலைவர்) C. R. குஞ்சிதபாதம்

R. ராமலிங்கம் பிள்ளை, M. இராமநாதநயினர்

# ஸ்ரீ ஹரசாபவிமோசனப்பெருமாள் திருக்கோயில்

## கண்டியூர் - தஞ்சாவூர் வட்டம்

சிவன் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் பிரமன் கோயிலை அடுத்துத் தஞ்சை திருவையாறு பெருஞ்சாலையை ஒட்டிக் கிழக்குப் பார்த்த சந்நிதியையுடைய இத்திருக்கோயில் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. பிண்டியார் மண்டை ஏந்திப் பிறர் மனை திரிதந்து உண்ணும் உண்டியான் சாபம் தீர்த்து ஹர சாப விமோசனப் பெருமாளாகத் திருமால் காட்சி வழங்குகிறார். சிவன் கோயிலுக்கு வெகு பிற்பட்ட காலத்திலேயே எடுக்கப்பட்ட இக்கற்றளி செய்யப்பட வேண்டிய திருப்பணிகள் சிலவற்றை எதிர்நோக்கியுள்ளது. பாடல் பெற்ற விண்ணகரமும் சிவாலயமும் பிரமன் கோயிலை இடையே கொண்டு அருகு அருகே இருத்தல் கண்டியூரின் தனிச்சிறப்பாகும்.

நிர்வாக அதிகாரி

கே. நடராஜன்

# ஸ்ரீ வாகீஸ்வரசுவாமி திருக்கோயில்

## பெருஞ்சேரி

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் மாயூரம் – திருவாரூர் புகைவண்டிப் பாதையில் மங்கைநல்லூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடகிழக்கில் ஒரு கல் தொலைவிலுள்ளது. மாயூரத்திலிருந்து வடக்கில் 6 கல் தொலைவில் அமைந் திருக்கின்ற சிவத்தலமுமாகும்.

நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்கள் இங்கு வசித்ததால், இவ்வூருக்கு பெருஞ்சேரி எனப் பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. தேவதாருவனம், தாருவனம், பிருஹத்சிரேணி என்ற மறு பெயர்களும் உண்டு.

இறைவர் திருநாமம் :- வாகீஸ்வரர்.
இறைவியின் திருநாமம் :- சுவாந்தரநாயகி.

பிரமதேவன் மனைவி சரஸ்வதி இந்த இறைவனை பூசித்து, தக்கனது யாகத்தில் அறுபட்ட மூக்கினை மீண்டும் பெற்றாள். வியாழபகவான் இந்த இறைவனை நோக்கி பூஜைசெய்து வேண்டிய வரங்களைப் பெற்றார். மற்றும் தேவி பக்தனுகிய தத்தசோழன், வியாழன் மனைவி தாரை, சந்திரன் ஆகியோ ரும் வழிபட்டு வேண்டிய வரங்களைப் பெற்றனர்.

மாசிமகத் திருவிழா பிர்மோற்சவமாக 10 தினங்கள் கொண்டாடப் படுகின்றது.

அறங்காவலர்கள்; நிர்வாக அதிகாரி

R. கிருஷ்ணமூர்த்தி (தலைவர்) சி. தெட்சணமூர்த்தி B.A.,
S. ராஜாங்கம் P. சுப்பிரமணியம்

# வாரீர்! இராமேச்சுரம் பாரீர்!!

முன்னைப் பரம்பொருள் இராமநாதர்
அன்னை பெரும்புகழ் மலைவளர் காதலி
அழகு மிளிரும் பிரகாரச் சிறப்பு
பழம் பெருகாவியம் இராமாயண இலக்கு
**வாரீர்! இராமேச்சுரம் பாரீர்!!**

வசதி மிகு ஓய்வில்லங்கள், சிற்றில்கள்
அருள் நலம் பெருக்கி அமைதி காக்கும் தலம்
ஆன்றோர் சான்றோர் சமயக்குரவர்
நன்மொழிப் பாடல்கள் ஆயிரமாயிரம்
**வாரீர்! இராமேச்சுரம் பாரீர்!!**

கோடி அர்ச்சனை குறையாது நடைபெற
தேடி ரூபாய் பத்து அனுப்பி
நாடி வெள்ளிக் காசும் பெறுவீர்
கடிதே வாரீர் இத்தல மகிமை பாரீர்
**வாரீர்! இராமேச்சுரம் பாரீர்!!**

திருக்கோயில் இங்கு சிறப்புற இயங்க
திருப்பணி பலவும் நடப்பதாம் இங்கே
வருமான வரி விலக்குடன் நன்கொடை ஈய
வாரீர் பொற்குவியல் தாரீர்
**பெருத்த பாருளீர்! வந்து பாருமே!!**

குறிப்பு: இராமேஸ்வரத்தில் வசதியுடன் தங்குவதற்கும் மன நிறைவுடன் தரிசனம் செய்வதற்கும் கோடி அர்ச்சனை, திருப்பணி நன்கொடை நல்குவதற்கும் இராமேஸ்வரம் தேவஸ்தான நிர்வாக அதிகாரியுடன் தொலைபேசி எண் 23 மூலமோ, அஞ்சல் மூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

**செயற்பணியர்**
இராமேச்சுரம் தெய்வ நிலையம்
இராமேஸ்வரம் அஞ்சல்
தமிழ் நாடு

## ஸ்ரீ கோதண்டராமசுவாமி தேவஸ்தானம்

குடந்தை வட்டம் பட்டீச்சரம் தஞ்சை மாவட்டம்

திருக்குடந்தையை அடுத்த பட்டீச்சரம் என்ற கிராமத்தில் தாராசுரம் புகைவண்டி நிலயத்திற்கு தென்மேற்கே 2 கல் தொலைவில் உள்ள ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயத்திற்கு மேற்கே அமைந்துள்ள இவ்வபிமான ஸ்தலம் மிகப் பழமையானது.

வாலியைக் கொன்றதனுல் ஏற்பட்ட சாயஹத்தி தோஷம் நீங்கப் பெற தன் வில்லின் முனையால் கோடி தீர்த்தத்தை ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் ஆலயத்தில் தோற்றுவித்து இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ளார். இந்தத் தலத்தை அடைய நகரப் பேருந்து எண் 8-ம் 11-ம் உள்ளன.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

R. நாகசுந்தரம் (தலைவர்) K. அய்யாதுரை

V. S. ராஜகோபால் நாயுடு V. R வரதராசன்.

## ஸ்ரீ பிலாசவனேஸ்வரசுவாமி ஆலயம்

### திருநாலூர்மயானம்

திருச்சேறை அஞ்சல் கும்பகோணம் வட்டம்

சைவசமய குறவர்களில் ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகளால் பாடப்பெற்ற பெருமை பெற்றதும், கல்பமுடிவில் மோக்ஷமடைய விரும்பிய பிரமதேவனுல் பூசிக்கப் பெற்றவரும், ஆபஸ்தம்ப மகரிஷி பூசித்து அருள்பெற்றதும், பிரமமுத்தீசுவரர், பலாசனனநாதர், ஞானப்பிரதர், ஸ்வயம்புநாதர் என்ற சிறப்புப் பெயர் பெற்றவரும், கெஜப்பிருஷ்டம் என்ற விசேஷ கர்ப்ப விமானத்தில் பரிவாரங்களுடன் வீற்றிருக்கும் பெருமை வாய்ந்த இத்தலம் சோழவளநாட்டுக் காவிரித்தென்பால் 96 ஆவது தலமாகித் 'திகழ்கின்றது.

ஸ்தல விருக்ஷம் :- பலா

தீர்த்தம் :- சந்திர தீர்த்தம்.

S. ரெத்தினசாமி வன்னியர்

அறங்காவலர்

# ஸ்ரீ எழுத்தரிநாதர் ஆலயம்

## திருஇன்னம்பூர்

குடந்தை வட்டம் — தஞ்சை மாவட்டம்

திருவைகாவூர், திருவிசையமங்கை, சுவாமிமலை, திருப்புறம்பியம். திருக்குடமூக்கு, கொட்டையூர், பட்டீச்சுவரம், பழையாறை, வட.தளி முதலிய தலங்களுக்கு நடுநாயகமாகத் திகழ்வது திருஇன்னம்பூர். அகத்தியமுனிவர் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு இலக்கணம் வகுத்ததால் எழுத்தறிநாதர் என்று இறைவனுக்குப் பெயர். இவ்வாலயத்தில் திருநாவுக்கரசர் 4 திருப் பதிகங்களும், திருஞானசம்பந்தர் ஒரு திருப்பதிகமும் பாடி இறைவனை ஏத்தியுள்ளனர். ஐராவதம், சூரியபகவான் ஆகியோர் வழிபட்டு பேறுபெற்ற தலம் இது. இங்கு இறைவிக்கு இரண்டு கோயில்கள், விமானம் கஜபிரஷ்ட விமானம்.

**ச. இராமசாமி**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

**D. விசயராகவன் (தலைவர்)**
**சி. அண்ணுசாமி**
**R. வெங்கடேசன்**

# திரு கொழுந்தீஸ்வரர் ஆலயம்

**மன்னார்குடி வட்டம் — கோட்டூர் — தஞ்சை மாவட்டம்**

இந்த ஆலயம் மன்னார்குடி திருத்துறைப்பூண்டி கற்சாலையில் 14 கிலோ மீட்ட ரில் உள்ளது. சுவாமி பெயர்: திருகொழுந்தீச்வரர். அம்பாள் பெயர்: தேனம்பிகை. ஸ்தல விருட்சம்: வன்னிமரம். சந்நிதி: ஆலயமும், சிவதீர்த்தமும்மேற்கு நோக்கியும் அம்பாள் கிழக்கு நோக்கியும் உள்ளது. தீர்த்தமும், மூர்த்தமும் சிறப்புடையது. தேவாரப் பதிகம்: திருஞானசம்பந்தர் அருளியது. ஊர்த்தொகை: ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், உமாபதிசிவாச்சாரியார், சேக்கிழார் முதலியோர்களால் ஊர்த்தொகையில் பாடப்பெற்றுள்ளது.

சிறப்பு: சித்திமுத்திகளில் சிறந்தஇடம் வன்னிவனம் (கோட்டூர்) என்று காசிப முனிவர், உரோமேசர், நாரதர் முதலியோர் கூறியுள்ளனர். பிரம்மா, இந்திரன், ஐராவதம், அரம்பை முதலியோர்கள் தெரிசித்து அருள்பெற்ற இடம்.

அறங்காவலர்கள் : — நிர்வாக அதிகாரி

**கு. பாலகிருட்டினன் M. L. A. (தலைவர்)** — **A. சுவாமிநாதன்**
**T. B. சிங்காரவேலு உடையார்** — **V. நடராஜன்**
**மா. அண்ணாமலை** — **இரா. கிருட்டினமூர்த்தி**

# ஸ்ரீ மாரியம்மன் கோயில்

## வரதராஜம்பேட்டை

## வலங்கைமான்

பாபநாசம் வட்டம் தஞ்சை மாவட்டம்

'தேடி உனைச் சரணடைந்தேன் தேசமுத்து மாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்ட வரம் தருவாய்'

எம்மதத்தவராயினும் தம் மத வேறுபாடுகளை விடுத்து மெய்யன்போடும் புறத் தூய்மையோடும் சுற்றம் புடைசூழ வந்து வழிபடும் தெய்வம் மாரியம்மன். மருத்துவத்துறை வாய்ப்புகள் பலவும் பல்கிவரும் இந்நாளிலும் அம்மை நோயினால் வரும் நலிவுகள் பலவும் நீங்குதற்கு மருத்துவ வசதிகள் எதனையும் நாடாமல் மாரியம்மனின் அருளையே உறுதுணையாகக் கொண்டு வழிபட்டு முழுப்பயனும் பெற்றுவருபவர் நம் நாட்டுமக்கள். இயற்கை மரண வாய்ப்பு அன்றி நோய்களினால் மரணம் நேர்தல் கூடாது என்பதற்காகப் பாடை நிலையில் காவடிக் காணிக்கை செலுத்தும் மெய்யன்பர் கூட்டங்களின் கண்கொள்ளாக் காட்சியை காண ஆண்டுதோறும் பங்குனித் திங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் இம்மாரியம்மன் கோயிலுக்கு மக்கள் திரளாக வந்து அம்மனைத் தரிசித்து அரிய வரங்கள் பலவும் பெற்று வாழவேண்டுகிறோம்.

K. நடராஜன் (தக்கார்)

# ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் திருக்கோயில்

## கும்பகோணம்

தெய்வ மணங்கமழும் திருநாடாம் தென்னாட்டில் திருக்குடமூக்கு என்னும் தேவாரப் பெயர்கொண்ட இத்திருக்கோயில் தொன்மையானதும் முதன்மை பெற்றதுமான கோயிலாகும். சோழமன்னர்களும், நாயக்க மன்னர்களும் இத்திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளனர். வான் அளாவிய கோபுரத்தைக்கொண்ட இந்த ஆலயத்திற்கு மூன்று பிரகாரங்கள். நான்காவது பிரகாரம் தேரோடும் வீதி. இத்திருக்கோயிலை,

"அரவிரி கோடனீட லணிகா விரியாற் றயலே
மரவிரி பொதுமௌவல் மணமல் லிகைகள் ளவிழும்
குரவிரி சோலை சூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தா னவனெம் மிறையே"

எனத் திருஞானசம்பந்தரும்,

"பூவணத் தவன் புண்ணிய னண்ணியங்
காவணத் துடை யானடி யார்களைத்
தீவணத் திரு நீறுமெய் பூசியோர்
கோவணத் துடை யான்குட மூக்கிலே"

என்று திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர்.

இந்த ஆலயத்திலுள்ள மூலத்தான லிங்கம், பிரளயத்தில் மிதந்து வந்த அமுத கும்பத்தை இறைவன் வேட வடிவங்கொண்டு அம்பு எய்து உடைத்து, சிதறிய பாகத்தைத் தன் கரங்களால் ஒன்று சேர்த்துக் கும்பம் போன்ற லிங்க வடிவமாக்கித் தானே அதைப் பூசைசெய்து லிங்கத்தில் ஒன்றிவிட்டதாகக் கூறப்படுகிறது. இறைவனுக்கு அமுத கும்பேசுவரர் என்றும் தேவிக்கு மங்கள நாயகி என்றும் பெயர். இவ்வாலயத்தில் பசுமடம் ஒன்று உள்ளது.

இத்திருக்கோயிலில் நடைபெறும் கீழ்க்கண்ட உற்சவத் திருவிழாக்கள் சிறப்புடையன. புரட்டாசி மாதம் நவராத்திரி விழா, மாசிமாதம் மாசிமக விழா, பங்குனி மாதம் தெப்பத்திருவிழா, சித்திரை மாதம் சப்தஸ்தானம், வைகாசி மாதம் திருக்கல்யாணம்.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்குடந்தையில் நடைபெறும் "மகாமகப் பெருவிழா" இத்தலத்தை முக்கியமாகக்கொண்டது. 12 ஆண்டுகட்கு ஒருமுறை குரு சிம்மராசியிலும், சந்திரன் கும்பராசியிலும் வரும் மாசிமக நட்சத்திரத்தில் முழுமதி நன்னாளில் மாசிமகத் தீர்த்தம் நடைபெறும்.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

சு. பத்மநாபன் (தலைவர்) நா. ஈஸ்வரமுத்து M.A.

ஜி. கே. சுந்தரம் பிள்ளை சி. திருவேங்கடம்

# திரு பிரமபுரீசுவரசுவாமி ஆலயம்

## அம்பல்

நன்னிலம் வட்டம் :: தஞ்சை மாவட்டம்

முன்பொருசமயம் "யானே பிரமம்" எனப்பிரமனும் விட்டுணுவும் ஒருவரோடொருவர் வாதிட்டுக்கொண்டனர். இவர்கள் செருக்கை அடக்க சிவபெருமான் "நீவிர் என் அடி முடிகளைக்கண்டு வருவீராயின் பூசனைக் குரியவர்களே" எனப் பகர்ந்தார். விட்டுணு பன்றியுருக்கொண்டு பாதாள உலகம் சென்று அடிகாணுது நாணித்திரும்பினர். பிர்மா அன்னப்பறவை உருவெடுத்து முடிகாண வானத்தில் பலகாலம் பறந்து சிவன் சென்னி காணுது உபாயத்தால் வெல்லக்கருதி, திரும்பி வந்து "உம்முடியைக் கண்டேன்" எனக்கூறி சிவன் தலையினின்று நழுவி கீழ்நோக்கி வந்து கொண்டிருந்த தாழம் பூவை பொய் சாட்சியம் சொல்லச்செய்தார். உண்மை உணர்ந்த அரன், பிரமன் கொண்ட அன்னவுரு நீங்காதிருக்கச் சபித்தார். அதனுல் நான்முகன் அகந்தை நீங்கி அரனைத்துதித்து சாப விமோசனம் வேண்டினர். மனமுருகி எம்பெருமான் பிரமனிடம் புவியின் கண் அமைந்த புன்னுகவனத்தை (திரு அம்பர்) அடைந்து தவம் செய்ய அருளினர். அதன் படி அயனும் புன்னுகவனம் அடைந்து பதினுயிரம் தேவவருடம் தவம்செய்ய சிவபெருமானும் காட்சி தந்தார். அன்ன வடிவம் கொண்ட பிரமன் பொய்கை ஒன்றை ஏற்படுத்தி நீராடி பரிவாரங்களோடு கூடிய இறைவனையும், இறைவியையும் பூசித்து வணங்கி அன்ன வடிவம் நீங்கி பழைய வடிவம் பெற்று மகிழ்ந்தார். இது தலவரலாறு.

திருஞானசம்பந்தப் பெருமானின் பாமாலை கொண்டதும், சோமாசி மாற நாயனர் அவதரித்ததுமான இத்தலம் திருமுறையில் 55 வது திருத்தல மாக வைக்கப்பெற்றிருக்கிறது.

கோச்செங்கட்சோழன் இங்கு இறைவனுக்கு மாடக்கோயில் அமைத் தான். மாயூரம் - திருவாரூர் புகைவண்டி வழியில் பூந்தோட்டம் நிலையத்தி னின்று கிழக்கே 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அழகிய சூழலில் அமைந்துள்ள ஆலயத்திற்கு வந்து வம்புவனப் பூங்குழலாளுடன் இயைந்து அருள்புரியும் பிரமபுரீசனை வணங்குவோர் என்றும் மன அமைதியும் பிறவிப்பயனும் பெறுவர்.

| அறங்காவலர் | நிர்வாக அதிகாரி |
|---|---|
| **து. கனகசபைப்பிள்ளை** | **சுவாமி வேங்கடாசலம்** |

## ஸ்ரீ ஆமருவிப்பெருமாள் ஆலயம்

### தேரழுந்தூர் (திரு அழுந்தூர்)

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வார் அவதார தலமும் திருமங்கையாழ்வாரால் நாற்பது பாசுரங்களால் பாடல் பெற்றதும் பன்னிரு ஆழ்வார்களால் பாடல் பெற்றதுமான இத்தலம் 108 திருப்பதிகளில் ஒன்ருகும். இத்தலத்தின்கண்ணே கோயில்கொண்டுள்ள ஸ்ரீ ஆமருவியப்பனுக்கு 'கோஸகன்' 'தேவாதிராஜன்' என்னும் திருநாமங்களும் உள. உபரிசரவசு மகாராஜாவிற்கு தை அமாவாசையன்று பிரத்தியட்சமாய் கருடாரூடராய் சேவைசாதித்து, கருட விமானம் சமர்ப்பித்ததால் கருடனும், அகஸ்தியரும், காவேரித்தாயாரும் சாபம் தீர்ந்தபடியால் அவர்களும் பக்கலில் எழுந்தருளியிருப்பதும், இவ்வூர் கம்பர் அவதாரத்தலமாகையால் கம்பர்சிலை கோயிலில் எழுந்தருளியிருப்பதும் புராண வரலாருகும்.

இத்தலம் மாயூரம் - கும்பகோணம் பெருஞ்சாலையில் தேரழுந்தூர் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரை கல் தொலைவில் உள்ளது.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

T. S. அழகப்பன் (தலைவர்) S. சுப்பையா

G. ராமச்சந்திரன் S. ராமமூர்த்தி

---

## ஸ்ரீ மத்தியபுரீசுவரசுவாமி திருக்கோயில்

### பட்டுக்கோட்டை வட்டம்] பரக்கலக்கோட்டை [தஞ்சை மாவட்டம்

இத்தேவஸ்தானத்தின் பிரதான ஆலயம் ஸ்ரீ பொது ஆவிடையார் சுவாமி என்கிற ஸ்ரீ மத்தியபுரீசுவரசுவாமி ஆலயமாகும், தொகுதி ஆலயங்கள் 1. ஸ்ரீ நாகநாதசுவாமி ஆலயம் 2. ஸ்ரீ பாலடிகாத்தவராயசுவாமி ஆலயம்.

இவ்வாலயங்கள் பட்டுக்கோட்டை - திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் பட்டுக்கோட்டையிலிருந்து கிழக்கே 8-கல் தொலைவில் உள்ளன ஸ்ரீ மத்தியபுரீசுவரசுவாமி ஆலயத்தில் கார்த்திகை மாத சோமவாரங்களில் ஆண்டு உற்சவம் வெகு விமரிசையாக நடைபெறும். கார்த்திகை மாத இறுதி சோமவாரத்தன்று மிக அதிகமான சேவார்த்திகளும் பொதுமக்களும் காணிக்கைகளை செலுத்தி வழிபடுவர். ஸ்ரீ பாலடிகாத்தவராயசுவாமி ஆலயத்தில் ஆடி மாதத்தில் உற்சவம் நடைபெறும். இவ்வாலயங்களின் திருப்பணி வேலைகள் துவங்கப்பெறவிருக்கின்றன.

பரம்பரை அறங்காவலர்

எஸ். சடகோபராமானுஜம்

# திரு சிவலோகநாதசுவாமி

## திருக்கோயில்

### திருப்புன்கூர்

**சீர்காழி வட்டம் :: தஞ்சை மாவட்டம்**

இத்திருக்கோயில் சென்னை - மாயூரம் புகைவண்டிப் பாதையில் வைத்தீஸ்வரன்கோயில் நிலையத்திற்கு மேற்கே 1½ கல் தொலைவில் உள்ளது. நந்தனுருக்காக நந்தி விலகி காட்சி கொடுத்த தலம். சம்பந்தர் அப்பர், சுந்தரர், ஆகிய மூவராலும் பாடல் பெற்றது. மழை பெய்யவும், நிற்கவும் வேண்டிப் பிரார்த்தனை செய்யும் விசேட முள்ள தலம். பிரசித்திப்பெற்ற இத்திருக்கோயிலை சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்து, புதுப்பித்து, மகா கும்பாபிடேகம் செய்ய திட்டமிடப்பட்டு, அதற்காக திருப்பணிக்குழுவும் அமைக்கப் பெற்றுள்ளது. சென்ற 25—8—1971ல் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களால் திருப்பணியையும் தொடங்கி வைக்கப்பெற்றது. இத்திருக்கோயிலை புதுப்பிக்கும் திருப் பணியில் அன்பர்கள் கலந்துகொண்டு நிறைந்த பொருளுதவி செய்து திருப்பணி — கும்பாபிடேகத்தை சிறந்த முறையில் செய்து முடித்து திரு சிவலோகநாதரின் பேரருளுக்குப்பாத்திரராகி, நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்வும், பெறத்தக்க எல்லாச்செல்வமும் நிறைய பெற்று சிவபுண்ணியச்செல்வர்களாக வாழ இறைவன் அருள் புரிய வேண்டிக்கொள்கிறோம்.

அறங்காவலர்கள் :

P **கல்யாணசுந்தரம் பிள்ளை** (தலைவர்)

L. **சிதம்பரம்** B.E., R. **தங்கவேலு** B. A., B. L.,

**திருப்பணிக் குழுவினர் :**

S. **கோவிந்தசாமி பிள்ளை** (தலைவர்)
(சீர்காழி ப. யூனியன் தலைவர், ஸ்ரீ ஷண்முகம் பஸ் சர்வீஸ் உரிமையாளர்)

E. N. **சோமசுந்தரம் பிள்ளை**, இளந்தோப்பு

S. N. **சீனிவாச ரெட்டியார்**, வைத்தீஸ்வரன்கோயில்

R. **ஷண்முகம் பிள்ளை**, கன்னியாகுடி

R. **சிவபுண்ணியம்** B. A., B. L., மாயூரம்

நிர்வாக அதிகாரி

K. **கிருஷ்ணமூர்த்தி முதலியார்** செயலாளர் & பொருளாளர்

# ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

நன்னிலம் வட்டம் | எண்கண் | தஞ்சை மாவட்டம்

சிக்கலில் கட்டை விரலையும் எட்டுக்குடியில் கண்ணையும் இழந்த சிற்பி கண்ணில்லாது இருப்பினும் கட்டை விரலில்லாது இருப்பினும் மயில்மேல் ஏறும் வேலவனுக்கு மயில்காலே ஆதாரமாகக்கொண்டு எண்ணமே கண் ஆகக்கொண்டு முருகனுக்கு சிலை வடித்ததால், எண் கண் என்ற திருப்பெயர்பெற்றது. (எண்ணமே - கண் : எண் - கண் = எண்கண்.) மேலும் அச்சிற்பி வேலவனுக்கு சிலை அமைத்து முடியும் தருவாயில் அருகில் உதவிசெய்த பெண் மணியின் கையில் உளிபட்டு ரத்தம் பீறிட்டது. பீறிட்ட ரத்தம் சிற்பியின் கண்களில்பட்டு பளீரெனத் திறந்து பார்க்கும் சக்தியைப்பெற்றது. உடனே 'எண்கண் கொடுத்த வேலனே' எனச் சிற்பி பாடினன். இதனுலும் எண்கண் எனப் பெயர் பெற்றது.

M. கிருஷ்ணசாமி,
நிர்வாக அதிகாரி.

---

# ஸ்ரீ தாளபுரீஸ்வரசுவாமி ஆலயம்

சீர்காழி வட்டம் | திருக்கோலக்கா | தஞ்சை மாவட்டம்

இறைவன் பெயர் : தாளபுரீஸ்வரர்
இறைவி பெயர் : ஓசைநாயகி

இத்திருத்தலம் சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கி. மீட்டர் தென்கிழக்கில் உள்ளது. திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்ருளம் அளித்தும் அந்த தாளத்திற்கு இறைவியார் ஓசை உண்டாக்கியும் தந்தருளிய தலம். மூவராலும் பாடல் பெற்றது.

சித. இராமநாதன் செட்டியார், M.A., B.Com.
அறங்காவலர்.

---

# ஸ்ரீ மத்தியார்ச்சுனசுவாமி ஆலயம்

மாயூரம் வட்டம் | இலுப்பூர் | தஞ்சை மாவட்டம்

இத்தலம் செம்பனர்கோவில் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஏழுமைல் தொலைவில் உள்ளது. சுவாமிபெயர் மத்தியார்ச்சுனர். அம்பாள்பெயர் மரகதவல்லி. ஷ ஆலயத்திற்கு மேற்கே ஒருகல் தொலைவில் கொல்புலித்தோல் நல்லாடை என வழங்கும் ஆலயமும், கிழக்கே அரை மைலில் முனிவனங்குடி என்ற ஊரில் ஓர் சிவாலயமும் ஹரிஹரன் கூடல் என்ற ஊரில் சிவவைணவ கோவில்கள் இரண்டு எதிர் எதிராகவும் உள்ளன. மத்தியார்ச்சுனஸ்வாமி கோவில் மத்தியில் உள்ளதால் ஷ பெயர் இருக்கலாம் என்று முன்னேர்கள் கூறுகிருர்கள்.

M. கணபதிசுப்பு பிள்ளை,
தர்மகர்த்தா.

# திரு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில்

## வடரெங்கம்

சீர்காழி வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்

இத்தலம் திருஞானசம்பந்த சுவாமிகள் அவதரித்த சீர்காழிக்கு மேற்கே எட்டு மைல் தொலைவில் உள்ளது. பெருமாளுக்குரிய திருக்கோலங்கொண்டு விளங்கும் திருவரங்கம் எனும் தென்னரங்கத்தைப்போல் விளங்குவதும், உத்திர காவேரி என்னும் கொள்ளிடத்திற்கும், தென்ராஜ நதிக்கும் இடையில் அமர்ந்துள்ளதும், நாகமரத்தை தலவிருட்சமாக கொண்டதும், சங்க தீர்த்தத்தால் மகிமை பெற்றதும், வசிஷ்ட முனிவருக்கு அருள்புரிந்ததும் திரு. ஜெம்புநாதர் ஆலயத்தைத் தன்னருகே பெற்றதுமாகிய பஞ்ச அரங்கங்களிலே ஒன்றாகியது.

இவ்வளவு சிறப்பும் ஒருங்கே பெற்ற இவ்வாலயத்தில் மஹாமண்டபமும் திருமதிற்சுவரும் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணிக்கு உதவ அன்பர்களை கேட்டுக்கொள்கிறோம்.

K. கிருஷ்ணமூர்த்தி முதலியார்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
C. சிவலோக முதலியார் (தலைவர்)
S. கல்யாணம் அய்யர் T. S. சிவலிங்கம்

# ஸ்ரீ வேதாரண்யேஸ்வரஸ்வாமி திருக்கோயில்

## வேதாரண்யம் (திருமறைக்காடு)

திருத்துறைப்பூண்டி வட்டம் (தொலைபேசி எண் 38) தஞ்சை மாவட்டம்

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் ஆகிய மூன்று சமயக்குரவர்களாலும் பாடப்பெற்ற புராதன புண்ணியஸ்தலம். இங்கு ஆடி, தை மாத அமாவாசைகளிலும் அர்த்தோதயம், மகோதயம் முதலிய புண்ணிய காலங்களிலும் சமுத்திர ஸ்நானம் செய்வது விசேஷ பலனை அளிக்கும். வேதங்களால் பூஜித்து பூட்டப்பெற்ற கதவுகளை, அப்பர் சுவாமிகள் பதிகம் பாடி திறந்ததும், அகஸ்தியமாமுனிவருக்கு பார்வதியும் பரமேஸ்வரனும் திருமணக்கோலத்தில் காட்சி அளித்ததும் இந்த ஸ்தலத்தின் முக்கிய அம்சங்களாகும். இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ துர்க்காபரமேஸ்வரி அம்மன் மிகவும் சக்தியுள்ள தெய்வம். வேண்டுவோருக்கு வேண்டுவன அளிக்கும் வரப்பிரசாதி. ஒவ்வொருவருடமும் நவராத்திரியின்போது ஸ்ரீ துர்க்காபரமேஸ்வரிக்கு லட்சார்ச்சனை செய்விக்கப்படுகிறது. மாசிமகத்தின் போது திருமறைக்காடருக்கு பிர்மோத்சவமும், ஸ்ரீ வேதநாயகி அம்மனுக்கு ஆடிப்பூரத்தின் போது உற்சவமும் இனிது நடக்கிறது.

ஸ்ரீ இராமபிரானுக்கு இராவணவதம் செய்தபின் ஏற்பட்ட வீரகத்தி தோஷம் நிவர்த்தியாவதன் பொருட்டு இங்குள்ள மணிகர்ணிகை தீர்த்தத்தில் மதியத்தில் நீராடி மூலவருக்கு தென்புரம் ஸ்ரீ இராமநாதரை பிரதிஷ்டை செய்து, வழிபட்டு, மேலக்கோபுரவாயிலிலுள்ள ஸ்ரீ இராம வீரகத்திவிநாயகர், வீரகத்தியை காலால் உதைத்து, இராமனுக்கு ஏற்பட்ட வீரகத்திதோஷத்தை நிவர்த்தி செய்ததாக வரலாறு கூறுகிறது.

இங்கிருந்து தெற்கே 7-மைல் தொலைவில் கோடியக்காட்டில் குழகமுனிவரால் பூசிக்கப்பட்ட அமிர்தகடேஸ்வரசுவாமி திருக்கோவில் உள்ளது. அங்குள்ள ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமிக்கு அமிர்தகரசுப்பிரமணியர் என்று பெயர். ஒரு முகமும் ஆறு கரங்களும் உள்ளது. ஒரு கையில் அமிர்தமும், ஒரு கையில் நீலோத்பல புஷ்பமும், விசேஷமாக தரித்துள்ள திருக்கோலம். இங்கு வைகாசி மாத விசாகத்தின் போது தேர்திருவிழா நடக்கிறது.

இயாழ்ப்பாணம் வரணி ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ ச. கதிர்காமபண்டாரசந்நதி
பரம்பரை தர்மகர்த்தா.

நிர்வாக அதிகாரி
சோ. ரெங்கசாமி

## ஸ்ரீ நாகநாதசுவாமி திருக்கோயில்

திருநாகேச்சுரம் — தஞ்சை மாவட்டம்

இறைவன் ஸ்ரீ நாகநாதர் இறைவி கிரிகுஜாம்பாள் ஆண்டுதோறும் கார்த்திகை ஞாயிறு தீர்த்தவாரியும், கடைஞாயிறு பெருவிழாவும் இத்தலத் தனிச் சிறப்பு. வைகாசி பூசத்தில் இவ்வாலயத்தில் கொண்டாடப்பெறும் 'சேக்கிழார் திருநாள்' தமிழகம் போற்றும் தனித்திருநாளாகும்.

நாகராசன் வழிபட்டதால் திருநாகேச்சுரம் என்னும் பெயர் பெற்ற இத் திருக்கோயிலில் ஸ்ரீ நாகநாதர் திருத்தொண்டர் சேர்ப்புப்பணியின்படி ரூ 5 - 00 செலுத்துபவருக்கு, அவருடைய பெயரில் ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும் அர்ச்சனை செய்து திருநீறு குங்குமப்பிரசாதம் அனுப்பப்படுகின்றது. பெரிய புராணத்தில் உள்ள எல்லா பாடல்களையும் சலவைக்கல்லில் பதிக்கும் பணி நடைபெறுகின்றது. ரூபாய் ஐந்து லட்சம் செலவில் நடைபெறும் திருப்பணிக்கு தாராளமாக உதவ வேண்டுகிறோம்.

**நா. நாகராசன்** பி.ஏ.,
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

S. சிங்காரவேலு (தலைவர்)
M. S. S. சம்பந்தன்
S. ராமலிங்கம் பி. ஏ.,

## ஸ்ரீ வேதபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

நேமம் எழிலூர் அஞ்சல்

திருத்துறைப்பூண்டி வட்டம் — தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ வேதநாயகி உடன் கூடிய ஸ்ரீ வேதபுரீஸ்வரர் திருச்சிற்றேமம் எனும் நேமத்தில் எழுந்தருளியுள்ளார். திருஞானசம்பந்தமூர்த்தி களால் பாடப்பெற்ற இத்திருத்தலத்தில் ஸ்ரீ வேதபுரீஸ்வரரையும் ஸ்ரீ வேதநாயகியையும் விதிப்படி வணங்குவோர் இம்மையில் சகல செல்வத்தையும் மறுமையில் மோட்ச இன்பத்தையும் அடைவர். இத் திருக்கோயிலுக்கு மேற்பாலுள்ள தீர்த்தத்தில் முழுகுவோர் சொர்ண மயமாவார்கள்.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

**A. வரதராச ராயர் S. மாணிக்கம்பிள்ளை** **ஆர். ராஜாராம்**
**N. S. ராமச்சந்திரன்**

# ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்

நன்னிலம் வட்டம் **கீரந்தங்குடி** தஞ்சை மாவட்டம்

திருக்குடவாயில் - கொரடாச்சேரி நெடுஞ்சாலையில் செல்லூர் என்னும் சிற்றூருக்குக் கிழக்கே 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இத்தலம் ஒரு பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது. ஸ்ரீ மாரியம்மன் மிக்க அதிசயிக்கத்தக்க வரப்ரசாதி. ஞாயிறுதோறும் பக்தர்கள் ஸ்ரீ அம்பாளை தரிசிக்க இத்திருக்கோயிலை நாடிக் கூடுவார்கள். பெருவிழாவின்போது பக்தர்களால் அநேகவிதமான பிரார்த்தனைகளும் காவடிகளும் பகல் பூராவும் உணர்ச்சி வசப்பட்டு நடைபெறும். அதில் பாடைக்காவடி என்பது தனி. அதில் பக்தர்களை படுக்கவைத்து தூக்கிவந்து காணிக்கை செலுத்துவார்கள். பக்தர்களிடம் நேரில் பேசும் தெய்வமாக விளங்குவது அதிசயிக்கத்தக்கது. இத்தேவாலய டிரஸ்டிகளில் ஒருவராகிய P. வரதராஜ பிள்ளை என்பவர் நீண்டநாள் டிரஸ்டியாவர். அவர் தனக்குச்சொந்தமான ஷை திருக்கோவிலுக்கு எதிரில் உள்ள நாற்றங்கால் 4 மாவில் குளம் வெட்டி பக்தர்கள் சௌகரியங்களுக்கு வைக்க வேணுமென்று தோன்றி சுமார்ரூபாய் 8000 பொருமானமுள்ள நஞ்சையில் குளம் வெட்டு முகூர்த்தம் செய்து கரூர் ஓட்டன்மார்களைக்கொண்டு வெட்ட ஆரம்பிக்க. ஷை ஆட்கள் ஒருவேளை வெட்டிப்பார்த்து தங்களால் முடியாது என்று சொல்லிப்போக, இப்படி பலதடவை வெட்டச் சொல்லியும் யாவரும் முடியாது என்று சொல்லிப் போய்விட்டார்கள், ஸ்ரீ பிள்ளை அவர்கள் மனக் கலக்கத்துடன் இரவு படுத்துறங்க நடு நிசியில் ஒரு பெண் குழந்தை கனவில் தோன்றி நாளைக் காலையில் சிலர் வருவர் அவர்களைக் கொண்டு குளம்வெட்ட ஏற்பாடு செய்வீராக! எனச் சொல்ல. திடுக்கிட்டு ஸ்ரீ பிள்ளை அவர்கள் எழுந்து மிக்க பரவசத்தோடு தூக்கமின்றி இருக்க அதேபோல் காலையில் 25 ஆட்கள் பிள்ளை அவர்களைத் தேடிவந்து தங்களிடம் குளம்வெட்டும் வேலை இருப்பதாகநேற்று ஒரு வயதான அம்மா எங்கள் இருப்பிடம் வந்து சொல்லி போகும்படி அனுப்பினார்கள். வந்தோம் எனக் கூற, ஸ்ரீ பிள்ளை அவர்கள் திடுக்கிட்டு ஸ்ரீ அம்பாளின் அனுக்ரஹம்போலும் என நினைந்து, மகிழ்ந்து ஷை ஆட்களை அழைத்துப்போய் குளம் வெட்ட இருக்கும் இடத்தைக்காட்ட ஆண் பெண் 50 ஆட்கள் 25 நாட்களில் ஷை குளத்தை ரூபாய் 4000 வரை மேற்படியார் சொந்தச்செலவில் வெட்டி அமைத்தார்கள். அன்று இரவு ஒரு பெண் குழந்தை என் கனவில் தோன்றி நீயும் சிலகாலம் பணிபுரியலாம் எனக்கூற, மறுதினமே முழுமுயற்சி எடுத்து இன்று நான் டிரஸ்டிகள் தலைவனாக பணிபுரிந்து வருகிறேன். இப்பெற்றி வாய்ந்த ஸ்ரீ மாரியம்மனுக்கு திருப்பணி நடந்து முடிவுறும் சமயமாகவும் பெருஞ்சாந்திவிழா நடைபெற ஏற்பாடாகியும் வருகிறது. அன்பர்கள் திருப்பணிக்கு உதவக் கோரப்படுகிறார்கள்.

---

குறிப்பு :— நன்கொடை அனுப்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

---

**P. சம்பந்தம்**

ஸ்ரீ மாரியம்மன் ஆலயப், தலைமை அறங்காவலர்

கீரந்தங்குடி, — செல்லூர் P. O.

கொரடாச்சேரி (வழி) தஞ்சை மாவட்டம்.

# ஸ்ரீ ஏகாம்பரேசுவரர்

## திருக்கோயில்

## வெள்ளாம்பெரம்பூர்

### தஞ்சை வட்டம்

தஞ்சை மாவட்டம் திருவையாற்றுக்கருகில், கண்டியூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி செல்லும் பெருவழிப் பாதையில் மேட்டுச்சாலை என்னுமிடத்திலிருந்து தெற்கே 1 கல் தொலைவில் அமையப்பெற்றுள்ள இத்திருக்கோயில் பாடல் பெற்ற சிறப்புடையது. தொன்மை மிக்க இத்திருக்கோயில் காலத்தின் தட்ப வெட்ப நிலைகளால் பாதிக்கப்பெற்று சீர்கேடுற்றமையால் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருமதில்கள் புதுப்பித்தல் முடிவடைந்துள்ளது. விமானங்கள் புதுப்பிக்கப் பெற்று வருகின்றன. இராசகோபுரம் முதலியன புதுப்பித்தும், பிரகாரங்கள் தளம் அமைத்தும், மின்விளக்கு வசதி ஏற்படுத்தியும் திருப்பணி வேலைகளை செம்மையுற முடித்து விரைவில் குடமுழுக்கு செய்யப்பட வேண்டியுள்ளது. இத்திருக்கோயிலின் நிதிநிலை நெருக்கடியிலுள்ளதால், அறவழிச் செல்ல விழையும் அன்பர்கள் நிதி அளித்து உதவி செய்து எம்பெருமானின் அருளாசிக்கு உடன்படுமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறது.

நிர்வாக அதிகாரி

V. K. மறைமணி

# ஸ்ரீ தேனுபுரீஸ்வரசுவாமி ஆலயம்

## பட்டீச்சரம்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

வரலாற்றுச் சிறப்பும், ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரியின் பேரருளும் சிறந்து விளங்கும் இத்திருத்தலம் குடந்தையை அடுத்த தாராசுரம் புகைவண்டி நிலையத்திற்குத் தென்மேற்கே இரண்டு கல் தொலைவில் உள்ளது. காவிரிக்குத் தென்கரையில் உள்ள திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற தலங்களில் இது 23 ஆவது ஆகும்.

சோழப் பேரரசர்கள் முடிசூடும் பெருநகரங்களில் ஒன்றான பழையாறையைச் சார்ந்த மழபாடி என்னும் தலமே இப்பட்டீச்சரம். இத்தலத்துக்குத் திருஞானசம்பந்தர், ஈஸ்வரனால் பூதகணங்கள் மூலம் அனுப்பப்பட்ட முத்துப்பந்தலின் நிழலில் எழுந்தருளும் காட்சியைக் காணவும், தம்மை திருஞானசம்பந்தர் வழிபடவும் பெருமான் நந்தி தேவரை விலகி இருக்கும்படி கட்டளை இட்டு கீழ கோபுரத்திலிருந்து சந்நிதி வரையிலுமுள்ள நந்திகள் விலகி இருக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். இவ்விழா ஆண்டுதோறும் ஆனிமாதம் முதல் தேதி காலை முத்துப்பல்லக்கு, மதியம் முத்துப்பந்தல், இரவு முத்துவிமானம் ஜோடனைகளுடன் வீதி உலா காட்சி அதிசிறப்புடன் நடந்துவருகிறது. வடக்குக் கோபுரவாயிலில் குடிகொண்டு அருளாட்சி புரியும் ஸ்ரீ துர்க்கையை தரிசித்து இன்புறுவது ஒவ்வொரு மானுடரின் கடமையாகும்.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

N. கிருஷ்ணசாமி அய்யர் K. அய்யாதுரை

R. குப்புசாமி பிள்ளை

# ஸ்ரீ பக்தவத்ஸலப்பெருமாள்

# திருக்கோயில்

## திருக்கண்ணமங்கை

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

108 திவ்யத் தலங்களில் இத்திருத்தலமும் ஒன்றாகும். இத்தலம் ஆரூர் - குடந்தை நெடுஞ்சாலையில் திருவாரூரில் இருந்து மேற்கே 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வாலயத்தின்கண் உள்ள பட்சிராஜன் மிகுந்த வரப் பிரசாதி. திருமங்கையாழ்வார் இவ் வாலயத்தின் எம் பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார். பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் என்பவரும் இவ்விறைவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இங்கு கோயில்கொண்டு கிழக்குநோக்கி நின்ற திருக் கோலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பிரானின் மூலத் தானத்திற்குப் பெரும்புறக்கடல் என்பதும் உற்சவ மூர்த்திக்கு பக்தர் — ஆவி, பக்தவத்ஸலன் என்பதும் திருநாமங்களாகும்.

நிர்வாக அதிகாரி

**எம். ஆர். சங்கரன் பி. ஏ.,**

அறங்காவலர்கள் :

இ. வி. ராஜரெத்தினம் (தலைவர்)

— ஆர். கோவிந்தபிச்சை பி. சண்முகம்

# ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்

## ஒழுகமங்கலம்

எருக்கட்டாஞ்சேரி மாயூரம் வட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - தரங்கம்பாடி நெடுஞ்சாலையில் திருக்கடையூருக்குத் தெற்கே 4 கல் தொலைவிலுள்ளது. இக்கோயில் மிகத் தொன்மையானது. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் இத் திருக்கோயிலும் ஒன்று. தலவிருட்சமான வேப்பமரத்திலிருந்து பால் ஒழுகியிருந்தமையால் அந்த இடத்தில் 'சக்தி' வழங்கியதால் ஒழுகைமங்கலம் என்னும் பெயர் வழங்கியதாக பெரியோர்கள் கூறுகின்றனர்.

அம்பாளுக்கு ஆண்டு தோறும் பங்குனித் திங்களில் ஒருமாத காலம் பெருந்திருவிழா நடைபெற்று வருகிறது. ஷ திருவிழாவில் தேர், உதிரவாய், மஞ்சள்நீர் உற்சவம் ஆகிய நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால் காவடிகளும், பாடைகாவடிகளும் எடுத்து அம்பாளை வழிபட்டு அருள் பெறுகின்றார்கள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரார்த்தனைக்காக பக்தர்கள் பலரும் வந்து ஸ்ரீ அம்பாளின் சந்நிதியில் இரவு தங்கி செல்கின்றனர்.

ஒழுகைமங்கல பேசுந்தெய்வம் பெருவுடையாள். பத்திசெய் பக்தர்கள் எஞ்ஞான்றும் இடர்வாராமே ஏத்தித்தொழுது இன்பங்காண அன்னை தன்னையே அடைவர். இறைவன் என்ற சொல்தன்னைக் கடவுள் என்பர்.

எல்லையற்ற தன்மையுடையன் என்பதனையே இச்சொல் குறிக்கும். எல்லாவல்லமையையும் எல்லையற்று வழங்குகிற அன்னையும் அருங்கடவுளேயாவள். ஒழுகைமங்கலத்தில் எழுந்தருளி தன்னடைந்தார்க்கு இனியளாய், அருள் வெள்ளத்தைப் பாலித்து வருகின்றாள். பூ நாளும் தலைசுமப்ப புகழ் நாமம் செவி கேட்ப நாநாளும் நவின்றேத்த வரும் அடியவர்கட்கு தன் கடைக்கண் வெள்ளத்தைப் பாலிப்பதனால் பக்தர்கள் தம் மூவினைத் துன்பத்தையும் போக்கியவர்கள் ஆகின்றனர்.

இத்திருக்கோயில் ரூ 1,25,000 செலவில் கருங்கல் திருப்பணி நடைபெற இருக்கிறது.

மேலாளர்

சி. தங்கையா

பரம்பரை தர்மகர்த்தர்கள்:

V. N. S. ராமசாமிநாயுடு

V. N, S. ரெங்கராஜ்நாயுடு

V. N. கோதண்டராம்நாயுடு

# திரு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயில்

## திருவாஞ்சியம்

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாகும். திருமகளை வாஞ்சித்து (அடைய விரும்பி) திருமால் பூசித்த தலமாதலால் இத்தலம் 'திருவாஞ்சியம்' எனப் பெயர் பெற்றது. நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 6கல் தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து மேற்கே 4 கல் தொலைவிலும் இத்தலம் உள்ளது.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் பாடல்பெற்றது இத்திருக்கோயில். இத்தலத்து முருகனை அருணகிரியார் பாடியுள்ளார். இறைவன் பெயர் வாஞ்சிநாதர்; இறைவியின் பெயர்; வாழ வந்தமங்களநாயகி. இங்கு 27 கல் வெட்டுகள் உள்ளன. காலனுக்கு (எமன்) தனிச்சந்நிதி இங்கு பார்க்கவேண்டியது.

ஆண்டுதோறும் புரட்டாசி மாதத்தில் 6ந்தேதிமுதல் 9ந்தேதி முடியவும் பங்குனி மாதத்தில் 6ந்தேதி முதல் 9ந்தேதி முடியவும் இறைவன் திருமேனியில் காலைக்கதிரவன் ஒளிவிழுவது குறிப்பிடத்தக்கது. கார்த்திகை ஞாயிறு (ஒவ்வொரு ஞாயிறும்) பக்தகோடிகள் குப்தகங்கையில் நீராடி இறைவனை வழிபட்டுச் செல்வது மிகவும் சிறப்பானதொன்று.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

இர. மாசிலாமணி கு. கல்யாணம் M.A.,

E. G. பாலசுப்பிரமணியம்

N. சாம்பசிவசர்மா பொ. கிருஷ்ணமூர்த்தி

# ஸ்ரீ மார்க்கசகாயசுவாமி திருக்கோயில்

## மூவலூர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே சுமார் 1½ கி. மீட்டர் தொலைவில் கும்பகோணம் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. திருநாவுக்கரசர் திருநெய்த்தானம் திருத்தாண்டகத்தில் இத்திருக்கோயிலைப் போற்றுகிறார். இத் தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று விசேடமும் பெற்றது. இத்தலம் பிரமன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரால் பூஜிக்கப் பெற்றதால் 'மூவரூர்' எனப் பெயர்பெற்று, பின்னர் 'மூவலூர்' என திரிந்து வழங்கிவருகிறது. சுவாமி கோயிலின் உட்பிரகாரத் தில் பிரமன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரும் வணங்கும் கல்வெட்டுச் சிற்பம் அமைந்துள்ளது. அம்பாள்களின் பெயர் கள் மங்களாம்பிகை, சௌந்தரநாயகி. மகிஷாசுரவர்த்தினி தன் கோரரூபத்தை இத்தலத்தின் தீர்த்தத்தில் போக்கி, சௌந்தர நாயகியாக காட்சி அளிக்கிறாள்.

திருஞானசம்பந்தர், இத் திருக்கோயிலின் கீழ்ப்புறத்தில் அமைந்துள்ள சித்தர்க்காடு ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்தி லிருந்து வழித்துணை நாதரை (மார்க்கசகாயர்) நோக்கி கை கூப்பி வணங்குவது விசேடமாகும்.

நிர்வாக அதிகாரி

**டி. பாஸ்கரசேதுராஜ் பி. காம்.,**

அறங்காவலர்கள் :

**ஆர். சேதுராமன் (தலைவர்)** **எம். சண்முகம்**

**எஸ். ராதாகிருஷ்ணன் பி. காம்.** **சி. சண்முகம்**

# திரு இராசகோபாலப்பெருமாள் ஆலயம்

**தன்னிலப்பாடி** நாகபட்டினம் வட்டம்

இவ்வூரானது தஞ்சாவூர் மாவட்டம் நாகபட்டினம் வட்டத்தில் கீழ் வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே 7 கல் தொலைவில் உள்ளது. பலாவை தல விருட்சமாகக் கொண்டுள்ள இவ்வாலயத்தில் நான்கு கால பூஜைகளும் மற்றும் வைணவ சம்பிரதாயப்படி உள்ள இதர திருவிழாக்களும் விமரிசையாக நடைபெற்று வருகிறது. பெருமாளின் பெயராலேயே இவ்வூருக்கு இராசகோபாலபுரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமம் இராச கோபாலப்பெருமாள், நாச்சியார்களின் திருநாமம் ருக்மணி, சத்யபாமா என்பதாகும். இவ்வட்டத்திலேயே மிக கம்பீரமான தோற்றம் கொண்டது இப்பெருமாள். இவ்வாலயத்தில் திருப்பணி வேலைகள் செய்யப் பெற்று 1968ம் ஆண்டு சம்ரோட்சணமும் செய்யப்பட்டுள்ளது. கீழ்வேளூருக்கு அருகாமையில் உள்ள திருக்கண்ணங்குடி என்ற வைணவத் தலத்தின் அபிமானம் பெற்றது இக்கோயில்.

நிர்வாக அதிகாரி

**A. குப்புசாமி B. A. B. L.,**

# திரு கைலாசநாதசுவாமி ஆலயம்

## செம்பியன்மாதேவி

திருவாரூரிலிருந்து நாகபட்டினத்துக்கு செல்லும் இருப்புப் பாதையில் கீழ் வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே இரண்டு மைல் சென்று தேவூர் என்ற சிவத்தலத்தை அடைந்து அவ்வூரிலிருந்து தென் கிழக்கே போகும் பெருவழியில் நான்கு மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

இக்கோயிலின் பரப்பு ஏறத்தாழ 79,566 சதுர அடிகள் உள்ளன. இத்திருக்கோயில் கி. பி. 981 ஆண்டிற்கு முன்னர் கண்டராதித்த சோழனது மனைவி செம்பியன் மாதேவியாரால் கட்டப் பட்டது. இத் திருக்கோயில் தல விருட்சம் அரசமரமாகும். இத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானின் திருநாமம் ஸ்ரீகைலாசநாதர் என்றும் அம்பிகையின் திருநாமம் பிருகத்நாயகி (பெரியநாயகி) என்றும் வழங்கப்பெறும்.

நிர்வாக அதிகாரி

**A. குப்புசாமி B. A. B. L.,**

மதுரை ஆதீனத்தைச் சேர்ந்த

## ஸ்ரீ பன்னகா பரமேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்

பன்னதெரு

திருமுகத்தலை எனும் பெயரோடு கருவூர் தேவரால் திருவிசைப்பா என்ற பாடலில் பாடப்பெற்றதும், ஆதிசேடன் தனது குன்ம நோயை இத்தலத்தில் இறைவனருளால் போக்கிக் கொண்டதாகப் புகழ் பெற்றதும், சூரியன் அம்பாள் ஆகியோரால் வழிபடப் பெற்று சிறப்புப் பெற்றதுமான இத்தலம் திருத்துறைப்பூண்டி தாலுகா பன்னதெரு கிராமத்தில் உள்ளது. இத்தலம் திருத்துறைப்பூண்டி சந்திப்பிலிருந்து 3 கல் தொலைவில் உள்ளது.

சுவாமி பெயர் : **ஸ்ரீ பன்னகாபரமேஸ்வர ஸ்வாமி,** அம்பாள் பெயர்: **ஸ்ரீ சாந்தநாயகி,** தலவிருட்சம்: **பின்னை மரம்.**

மதுரை ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

பரம்பரை அறங்காவலர்

---

## ஸ்ரீ அண்ணன்பெருமாள் தேவஸ்தானம்

சீர்காழி வட்டம் | அண்ணன்கோவில் | தஞ்சைமாவட்டம்

தென்திருப்பதி எனவும் திருவெள்ளக்குளம் எனவும் வழங்கப்பெறுவது. திருப்பதிக்கு இணையான பிரார்த்தனைஸ்தலம். திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செயப்பட்டது. திருமணம் முடிஇறக்கல் காதுகுத்தி உபநயனம் முதலிய சுபகாரியங்கள் செய்துகொள்ள சிறப்புமிக்க இடம், புரட்டாசி மாதத்தில் பிரம்மோத்சவமும், தைமாத அமாவாசை கருட சேவையும் சிறப்புத் திருவிழாக்கள் ஆகும். சீர்காழி to ஆக்கூர் பஸ் மார்க்கத்தில் உள்ளது.

அறங்காவலர்கள்:

**திரு. நாராயணசாமி** (தலைவர்)

**திரு. சேதுராமன்**

நிர்வாக அதிகாரி

**A. தனபாலன் B. A.,**

---

## ஸ்ரீ யோகநாதசுவாமி திருக்கோயில்

மங்கைமடம் அஞ்சல் | யோகீஸ்வரம் | சீர்காழிவட்டம்

திருவெண்காட்டிற்குச் சற்று வடக்கில் உள்ள குருஸ்தலமாகும். யோக தட்சிணாமூர்த்தி ஸ்தலமாகும், சந்நிதி மேற்குப்புறமாக அமைந்துள்ளது. மூலவர் சுயம்புவாக அமைந்துள்ளது. கார்த்திகை மாதத்தில் கடைசி குருவாரத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு உற்சவம் நடைபெறுகின்றது. குருஸ்தலங்களில் சிறப்புமிக்கதாகும்.

அறங்காவலர்கள்:

**T. K. கோபாலகிருஷ்ணன் M. A.,** (தலைவர்)

**R. கிருஷ்ணமாச்சாரியார்**

**நாராயணசாமி**

நிர்வாக அதிகாரி

**A. தனபாலன் B. A.,**

**V. சீனுவாசன்**

**T. D. சுப்பிரமணியப்பிள்ளை.**

# ஸ்ரீ ஆலந்துறையப்பர்சுவாமி

## தேவஸ்தானம்

### சித்தர்க்காடு

மாயூரம் அஞ்சல் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் புகைவண்டி நிலையத்திலிருந்து 3 பர்லாங் தொலைவில் கும்பகோணம் செல்லும் பெருவழியில் இருக்கிறது. காவிரியின் தென்பால் உள்ள சித்தர் வனத்தில் சித்தர்கள் பலர் தங்கி யோகம் புரிந்த இடமாதலால் இவ்வூருக்கு "சித்தர்க்காடு" எனப் பெயர் வந்தது. இத்தலத்திற்கு "வடவாரண்யம்" என்ற பெயரும் உண்டு. இத்தலத்திலுள்ள கருணாமூர்த்தி பட்ட ஆலமரம் துளிர்ந்து எழுந்தருளியதால் "ஸ்ரீ ஆலந்துறையப்பர்" எனப் பெயர் பெற்றார். சித்தர்க்காடு சந்தை இவ்வாலயத்திற்கு சொந்தமானது. இது தஞ்சை மாவட்டத்தில் மிகச் சிறந்தது.

நிர்வாக அதிகாரி
C. R. குஞ்சிதபாதம்

அறங்காவலர்கள் :

ஆர். ராமலிங்கம் (தலைவர்)
எஸ். ராதாகிருஷ்ணன் பி. காம்.
கே. எஸ். ராஜகோபால் நாயுடு

# கொளஞ்சியப்பர் திருக்கோயில்

## மணவாளநல்லூர்

விருத்தாசலம் வட்டம் தென்னாற்காடு மாவட்டம்

இத்திருக்கோயில் தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப் பிரசித்திபெற்ற ஓர் பிரார்த்தனை (முருகன்) தலம். இது விருத்தாசலம் டவுன் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கில் 1 கி. மீட்டர் தொலைவிலுள்ளது. உண்டியல், கோழி, கால்நடை, முடி இவற்றின்மூலம் வருடம் சுமார் மூன்று லட்ச ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. தங்கள் குறைகள் நிவர்த்தியாக பிராது எழுதிக் கட்டுதல் என்பது இங்குள்ள ஒரு விசேடமாகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காவடி எடுத்தல், முடி இறக்குதல், அமுது படைத்தல் முதலியன குறிப்பிடத் தக்கதாகும். திருமணங்கள், காது குத்துதல் முதலியவைகளும் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. புதிய அலுவலக கட்டிடம், விருந்தினர் விடுதி, யாத்திரீகர்கள் விடுதி, உற்சவ மண்டபம், குளியலறைகள், முடி கொட்டகை முதலியன கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருமண மண்டபம் மேல்நிலை நீர்த் தேக்கம் முதலிய திருப்பணி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. காணிக்கை செலுத்துபவர்கள் நிர்வாக அதிகாரியின் முகவரிக்கு அனுப்பக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

விருத்தாசலத்திலுள்ள கொளஞ்சியப்பர் அரசினர் கலைக் கல்லூரிக்கு இத் திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் 2 லட்சம் நன்கொடை. கொடுக்கப்பட் டுள்ளது. ஓர் இலவச சித்த வைத்தியசாலையும் நடத்தப்பட்டுவருகின்றது. இக் கோவிலின் பங்குனி உத்திர விழாக்கள் முக்கிய விழாவாகும். பத்து நாட்கள் நடைபெறும் இவ்விழாவிற்கு சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடுவர்.

இத்தலத்திற்கு ஒருமுறை வந்து முருகனுடைய அருளுக்குப் பாத்திரம் ஆகும்படிக் கோருகிறோம்.

நிர்வாக அதிகாரி

*எஸ். சோமசுந்தரம்* பி. ஏ., பி. எல்.,

அறங்காவலர்கள் :

*க. ராமதாஸ் (தலைவர்)* *தி. ச. முருகேசன்* எம். ஏ., பி. எல்.,

*கி. நாராயணசாமிபிள்ளை* பி. ஏ., பி. எல்.. *ப. கலியன்*

*ந. உலகநாதன்* (தொலைபேசி எண்: 122)

# ஸ்ரீ அருணசலேசுவரர் தேவஸ்தானம்
## திருவண்ணமலை

வட ஆர்க்காடு மாவட்டம் தொலைபேசி எண் 138

புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் மிகுந்த இத்தலம் சைவசமயாசாரியர்களான ஸ்ரீ திருநாவுக்கரசர், ஸ்ரீ திருஞானசம்பந்தர், ஸ்ரீ மாணிக்கவாசகர் ஆகியோர்களின் பாடல் பெற்றது ஆகும். இது பஞ்ச பூதங்களில் நடுநாயகமான "அக்நித்தலம்" "நினைக்கமுத்தி" நல்கும் நிகரில்லாத் தலமுமாகும். இத்திருத்தலத்தில் நடைபெறும் திருக்கார்த்திகைத் தீபப் பெருவிழா எங்கும் காணுத் தனிச் சிறப்புடையது.

மதி நிறைந்த திருக்கார்த்திகைத் திருநாளில் இங்கு நடைபெறும் "மலைத்தீபக் காட்சி" உள்ளம் உருக்கும் உலப்பிலாக் காட்சியாகும். இப்பேரொளியின் சுடராகத் தமிழகமெங்கும் திருக்கார்த்திகை நன்னுளில் இல்லங்கள் தோறும் திருவிளக்கேற்றி விழாக்கொண்டாடுவது மரபு. இத்திருவண்ணமலை ஆலயத்தின் இராஜகோபுரம் தென்னாட்டிலேயே மிக உயரமானதாகும். (இதன் உயரம் 217 அடி) இதே போன்று இவ்வாலயத்திலுள்ள மூர்த்தங்களும் வாகனங்களும் மிகமிகப் பெரியவையாகும்.

இத்தலம் விழுப்புரம் - காட்பாடி மார்க்கத்தில் விழுப்புரத்திலிருந்து 69 கி. மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இத்திருக்கோயில் திருவண்ணமலை புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 1½ கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கிறது. இவ்வாலயத்தில் சுமார் நாற்பது இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்விக்கத் திட்டமிடப்பெற்று தனியாக திருப்பணிக்குழு அமைக்கப்பெற்றுள்ளது.

அன்பர்கள் எல்லோரும் ஏற்ற வகையில் பங்குகொண்டு நமது ஆன்மீகச் செல்வங்களும் கலைச்செல்வங்களும் அழியாமல் காக்க உதவிபுரிய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

**ஆலய நிர்வாகிகளும், திருப்பணிக்குழுவினரும்.**

# ஸ்ரீ பாஸ்கரேசுவரசுவாமி ஆலயம்

## பரிதியப்பர்கோயில் (திரு பரிதிநியமம்)

ஒரத்தநாடு வட்டம் தஞ்சை மாவட்டம்

தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் பஸ்மார்க்கத்தில் மேலஉளூரிலிருந்து 2 கிலோ மீட்டர் கிழக்கே உள்ளது. இத்தலம் தஞ்சை-கீழ்வேங்கை நாட்டைச் சேர்ந்தது. தஞ்சையிலிருந்து பொன்னாப்பூர் செல்லும் 9ம் நெ. டவுன் பஸ்மூலம் இத்தலத்தை அடையலாம்.

மூலவர்: ஸ்ரீ பாஸ்கரேஸ்வரர் (பரிதியப்பர், பரிதீசர்) அம்பாள்: ஸ்ரீ மங்கள நாயகி (பரிதிவனசுந்தரி) தீர்த்தம்: சூரிய புஷ்கரணி, சந்திரபுஷ்கரணி, தேவதீர்த்தம் அல்லது கருங்குழி. தலவிருட்சம்: அரசமரம். இத்தலத்தில் பரிதி (சூரியன்) வயிற்று வலி நீங்க இலிங்கம் அமைத்து இறைவனை வழிபட்டு நோய் நீங்கப்பெற்றார்.

இத்தலம் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் கோயில் புக்க திருத்தாண்டகத்திலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளால் ஊர்த்தொகையிலும் பாடல்பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் மேன்மையுற்று திகழ்கின்றது.

உற்சவம்: பங்குனி உத்திர பிர்மோற்சவம் (ஸ்ரீ முருகனுக்கு கலப்பூால் அபிஷேகம்) சித்திரை உற்சவம், பிரதி மாத கிருத்திகை, மற்றும் ஆடிக்கிருத்திகையில் ஆண்டு விழா உற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அறங்காவலர்: நிர்வாக அதிகாரி

பெ. வீரய்யா கடம்புரூர் T. சுப்பிரமணியம்

# திருவாசகத்தின் சிறப்பு

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்.,

பழமையான வடமொழிமறைகள் நான்கும் இந்துக்களின் வேதம். அவற்றில் பின்வந்த உபநிடதங்கள் அவ்வேதத்தின் சாரம் அல்லது சிகரம்.

பழமையான விவிலிய நூல் (Old testament) கிறிஸ்துவரின் வேதம். அதன் பின் வந்த ஏசுவின் விவிலிய நூல் (New testament) அவ்வேதத்தின் சாரம் அல்லது சிகரம்.

அவற்றைப் போலவே, 'அடங்கன் முறை' என்ற மூவர் தேவாரம் சைவ வேதம். அதன் பின் வந்த திருவாசகம் அவ் வேதத்தின் சாரம் அல்லது சிகரம் ஆகி மிளிர்கின்றது.

'ஓம்' என்னும் பிரணவம் இந்து மறைகளுக்கும் கடவுளுக்கும் ஒப்பற்ற உறைவிடம்; உவமையிலா உயிர் நாடி.

"வேதங்களின் இலட்சியம் 'ஓம்' என்பது தான். இதுவே தான் பிரமம் என்பதும்" என்று கதோபநிட்தம் கூறுகின்றது.

எனவே, வடமொழி வேதத்திற்கும் தென் தமிழ் வேதத்திற்கும் உயிர்நாடியாக முறையே இந்த ஓம் என்னும் சமஷ்டிப் பிரணவமும், அ, உ. ம். என்னும் வியஷ்டிப் பிரணவமும் ஊடுருவியும் உலவியும் நிற்பதனை நாம் காணலாம்.

வடமொழி வேதத்தில், முதல் வேதமாகிய இருக்கு வேதத்தின் முதல் எழுத்து 'அ' (அக்னிமிலே புரோகிதம்); நடு வேதமாகிய எஜுர் வேதத்தின் நடு எழுத்து 'உ' (யோனி ஸமுத்ரோபந்து); இறுதி வேதமாகிய சாம வேதத்தின் இறுதி எழுத்து 'ம்' (ஸமானம் வரம்). அதர்வ வேதம் நீக்கப் பட்டுள்ளது நல்ல சில காரணங்களுக்காக. இஃது வியஷ்டிப் பிரணவம்.

தமிழ்மறை அல்லது சைவத் திருமறையாகிய பன்னிரு திருமுறைகளை ஆராயின், முதல் திருமுறையின் முதல் எழுத்து 'ஓ' (த்+ஓ=தோடுடைய) இறுதித் திருமுறையாகிய பன்னிரண்டாம் திருமுறையின் (திருத்தொண்டர் புராணத்தின்) இறுதி எழுத்து 'ம்' (உலகெலாம்).

இவ்விரு வகை மறைகளிற் காணப்படுவதுபோலவே, திருவாசகத்தின் 51 அதிகாரங்களில் முதலாவது அதிகாரமாகிய சிவபுராணத்தில் 'ஓ' (ஓம்காரமாய் நின்ற ஐயா) இருக்கின்றதைப் போலவே அதன் இறுதி அதிகாரமாகிய அச்சோப் பதிகத்திலும் 'ஓம்' (ஓம்காரத்துட் பொருளை)என்று திகழ்கின்றது. தேவார திருவாசகத்தில் காணப்படுவது சமஷ்டிப்பிரணவம்.

'ஓம்' என்னும் பிரணவத்தின் விரிவாகவும், நாதனுகிய பெருமானின் நாமமாகவும், "முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும் முதலானதாகவும் திகழ்கின்ற எழுத்தைந்தாகிய 'நமசிவாய' என்பது மேற்கண்ட மூவகை நூல்களிலும் முறையே காணப் பெறும் சிறப்பினை ஆராய்வோம்.

ஆரிய வேதத்தின் நடு வேதமாகிய எஜுர் வேதத்தின் நடுவிலுள்ள தைத்திரீய ஸம்ஹிதையின் நடுவில் (S. IV, 5, 1-41 of Yajur Veda).

''நமசிவாயச; சிவதராயச'' என்பதில் 'நமசிவாய' என்னும் பஞ்சாட்சரம் கோஹினூர் வைரம் போல் குதூகலமாய் ஒளிர்கின்றது. இதனைக் குறித்துத் தான்

''வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே''

என்று நம் ஞானசம்பந்த வள்ளல் பாடியுள்ளார்.

அதே போல, ஏழு திருமுறைகளைக் கொண்டு அடங்கன் முறை என்று வழங்கப் பட்டுவரும் தேவாரத்தை ஆராயின் அதன் நடுவில் உள்ளதாகிய நான்காம் திருமுறையில், அதாவது தேவாரத்தின் நட்டநடுவே, அப்பர் பெருமான் அருளிச் செய்துள்ள ''சொற்றுணை வேதியன்'' என்ற பதிகத்தில் ''நமசிவாய'' என்னும் பஞ்சாட்சரத்தைப் பார்க்கிறோம்.

திருவாசக நூலின் ஏறக்குறைய நடு அதிகாரமாகிய 'செத்திலாப்பத்து' என்னும் இருபத்து மூன்றும் அதிகாரத்தில் ''நமச்சிவாய என்றுன்னடி பணியா'' என்ற அடியில் பஞ்சாட்சரம் அமையப்பெற்றிருப்பதும் கண்கூடு. நான்கு அகவல்களையும் நீக்கி விட்டுச் செய்யுட்களை மட்டும் கொண்ட நாற்பத்தேழு அதிகாரங்களை நோக்கின் இருபத்து மூன்றாவது அதிகாரம் சரியான மத்தியில் இருக்கும் பொருத்தத்தினை நாம் காண்கிறோம்.

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல் வேய்த் தோளிடத்தவனே''

என்ற சிவப்பிரகாச சுவாமிகள் வாக்கின் படிக்குத் திருவாசகம் என்ற நூல் சொல் ஆகும்; சிவபெருமான் அச் சொல்லின் பொருளாவர் என்பது பெறப்படுகிறது. Tiruvachakam is the word and Lord Siva is its meaning or import. ஆதலால் இரண்டும் அபேதம். அதைப்போலவே தான் மணிவாசகரும், அறிவாற் சிவமாகவே அமர்ந்திருக்கின்றார். எனவே திருவாசக நூலுக்கும் திருச்சிற்றம்பலம் உடையார்க்கும் உள்ள ஒற்றுமையையும் பொதுவான அம்சங்கள் ஒருசிலவற்றையும் இனிக் காண்போம்.

தில்லைச் சிற்றம்பலவரே திருவாசகத்தின் உட்பொருள் என்று திருவாதவூரரே சுட்டிக் காட்டியதோடு நில்லாமல் அப் பொன்னம் பலத்தில் தோன்றிய சிவ சோதியில் தமது சீவ ஜோதியைப் பாய்ச்சியும் அவர் சிந்தை தெளிந்து சிவம் ஆனார்.

## உண்மை விளக்கம்

திருவாசியும் அதனுள் நின்றாடும் நடராஜரும் முறையே ஓம்காரமாகவும் பஞ்சாட்சரமாகவும் காட்சி தந்திடல் கண்கூடு என்கின்றது ''உண்மை விளக்கம்'' என்றதோர் உயரிய சித்தாந்த சாத்திரம்.

'' ஓம்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் – ஆங்காரம்
அற்றார் அறிவர்அணி அம்பலத்தான்
பெற்றார் பிறப்பற்றார் பின்'' [ஆடலிது

எனவே, திருவாசி முழுதுமே ஓம் ஆக நிற்கின்றது. அதுபோலவே திருவாசகத்தின் முதல், நடு, இறுதியாகிய மூவிடங்களிலும் ஓம் என்பது நிற்பதோடு அந்நூல் முழுவதுமே முகிழ்த்து நிலவுகின்றது.

1. முதலில்:

'' என் உள்ளத்தினுள்ளே
ஓம்காரமாய் நின்ற மெய்யா''

2. இடையில்:

'' என்னை ஓர் வார்த்தையுட் படுத்துப்
[பற்றினாய்''

3. இறுதியில்:

'' உய்யுநெறி காட்டுவித்திட்டு
ஓம்காரத்துட்பொருளை
ஐயன் எனக் கருளியவாறு ஆர்பெறுவர்
அச்சோவே ?''

இதன்மூலம் திருவாசிக்கும் திருவாசகத்துக்கும் உள்ள அபேதம் கண்கூடு.

திருவாசி ஓங்காரமாயின், திருநடம் புரியும் சிவபெருமான் பஞ்சாட்சரமாகிறார் என்கிறது 'உண்மை விளக்கம். அந்தப் பஞ்சாட்சரம் தானும் ஸ்தூலம் என்றும் சூட்சுமமென்றும் இருவகைத்தாகலின் நடராசப் பெருமானின் நடனத்தில் இவ்விரு பஞ்சாட்

சரங்களையும் காண்டல் ஆகும் என்கிறது அந்நூல்.

### ஸ்தூல பஞ்சாட்சரம்

" நற்றவத்தோர் தாம்காண நாதாந்தத்
தஞ்செழுத்தால்
உற்றுருவாய் நின்றுடல் உள்ளபடி......"

இது குறிப்பிடும் ஸ்தூல பஞ்சாட்சர மாகிய நமசிவய என்னும் ஐந்து எழுத்துக் களையும் பாதாதி கேசம் நடனசபாபதியின் நற்றிருவுருவில் நாம் காண்டல் ஆகும்.

" ஆடும் படிகேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் - கூடும்
மகரம் உதரம்; வளர்தோள் சிகரம்;
பகருமுகம் வா; முடியப் பார்"

### சூட்சும பஞ்சாட்சரம்

" எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்
சிவாய நமவென்னும் திருஎழுத் தஞ்சாலே
அவாயமற நின்றுடு வான்"

இவ்வெண்பா குறிப்பிடும் சூட்சும பஞ் சாட்சரமாகிய சிவயநம என்னும் ஐந்து எழுத்துக்களையும் கேசாதிபாதம் நடராஜர் திருவுருவில் நனி காண்டல் ஆகும்.

" சேர்க்கும் துடி சிகரம்; சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்-பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம்; அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான் "

இதுவரை நாம் கண்டது நடராஜர் திரு வடிவம் பஞ்சாட்சர மயமானது என்பதொரு பேருண்மையாகும், அதேபோன்று நடராஜ ரைத் தனது உட்பொருளாக அடக்கிக் கொண்டும், அவருக்கு ஏற்ற சிவபூஜையைத் தானும் ஏற்றுக்கொண்டும் அப்பெருமா னுக்கு இருந்துவரும் ஒரு வாசகமாகிய திருவாசகம் எனும் நூலிலும் பஞ்சாட்சரம் எவ்வாறு பரவிக் கிடக்கின்றது என்பதே இனி நாம் காணக்கிடப்பதாகும்.

1. திருவாசகத்தின் முதற் கூற்றே 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்தாகும்.

2. மேலும் திருச்சதகத்தின் 62 எண் ணுடைய பாடலில்

" போற்றியோ நமச்சிவாய" என்ற வாறே பஞ்சாட்சரம் நான்கு முறைகள் ஓதப் பெறுகின்றது.

3. அதற்கடுத்தபடி நாம் மேலே கண்ட வாறு செத்திலாப்பத்து என்னும் இருபத்து மூன்றுவது அதிகாரத்தின் ஏழாவது எண் ணுடைய பாடலிலும் 'நமசிவாய' அமைந் துள்ளது. இஃது தூல பஞ்சாட்சரம்.

4. ஆனால் நடராஜரது திருவுருவில் இருவிதப் பஞ்சாட்சரங்களும் காணப்பெறு வதனைப் போலவே, அவருக்கு நிகரான திருவாசகத்திலும் இதுவரை நாம் கண்ட 'நமசிவாய' என்னும் ஸ்தூல பஞ்சாட்சரத் துடன் 'சிவாயநம' என்னும் சூட்சும பஞ் சாட்சரமும் காணக் கிடக்கின்றது.

திருவாசகத்தின் முப்பத்தெட்டாவது பதிகமாகிய 'திரு ஏசறவின்' இறுதிப் பாட லின் முதல் அடியிலேயே இந்த சூட்சும பஞ்சாட்சரத்தை நாம் காண்கிறோம்.

" நானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப் பெற்றேன் "

ஆகவே, ஓம் வடிவினதாகவும், ஐந் தெழுத்து வடிவினதாகவும் முறையே அமை யப் பெற்றுள்ள திருவாசி, நடராஜர் போலவே திருவாசகம் ஆகிய நூலும் ஓம் காரமும் ஐந்தெழுத்து வடிவும் உடையதாக ஒளிர்வதை நாம் இதுவரை கண்டோம். இந்தத் தெய்வீகத் தத்துவத்தைத் தான் 'உண்மை விளக்கம்' என்ற நூலின் வெண்பா ஒன்று சுட்டிக் காட்டுகின்றது.

" அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல்
அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும் -
அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆறுருக் கப்பாலாம்
ஆனந்த மாமுத்தியும் "

இந்த வெண்பாவிலிருந்து பிறிதொரு பேருண்மையும் நமக்குப் புலப்படுகின்றது. அதாவது, அஞ்செழுத்து ஒன்றே திருவாசக மாகிய அருமறையாகின்றது; இறைவனின் ஆனந்தத்தைத் தரும் ஆடலாகவும் அமை கின்றது என்ற பேருண்மையாகும்.

இனி நாம் அடுத்தபடியாகக் காணக் கிடப்பது என்னவென்றால், ஐந்தெழுத்

தாகிய திருவாசகமும், ஐந்தெழுத்தாகிய ஐயன் திருக்கூத்தும் எவ்வாறு ஒரேவித ஆனந்தத்தை ஆன்மாக்களுக்கு அருளும் நிலைக்களனாக முறையே அமைந்திலங்கு கின்றன என்ற உண்மையேயாகும்.

மீண்டும், திருக்கூத்தின் ஆனந்தத் தினைப்பற்றி 'உண்மை விளக்கம்' தான் பாடுகின்றது.

" மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கியருள் தானெடுத்து-நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத
தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான்.

இத்தகைய பேரானந்தத்தைத் தான் நமது ஆரூரர் தில்லையில் அனுபவித்தாராம்.

" ......................
......................

இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தில்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்".

இதனையேதான் மாணிக்கவாசகரும் இனிது மடுத்தார்.

" தானந்த மில்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான்
காணேடி "

பாசக்ஷயம், சிவப்பேறு என்னும் ஆன் மாவின் இருவித அனுபவங்கள்பற்றிச் சைவ சித்தாந்த சாஸ்திரம் பேசும். மேலே நாம் கண்ட வெண்பாவில் முற்பகுதியில் உள்ள 'மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டு' என்ற அடி பாசக்ஷயத்தையும், பிற்பகுதியில் உள்ள 'ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்' என்ற அடி, சிவப் பேற்றினை யும் முறையே குறிப்பனவாகும்.

நடராஜரது நடனத்தைப் போலவே, திருவாசகமாகிய தேன் ஆனது அதனைப் படிக்கும்ஆன்மாக்களின் பிறவித்துயரையும் பிற பல துன்பங்களையும் அகற்றி அவர் கட்கு ஆனந்தத்தை அளிக்கும் தன்மையது என்ற உண்மையை வலியுறுத்தும் பழைய தொரு வெண்பாவும் பழக்கத்தில் இருக் கிறது. அதிலும் பாசக்ஷயமும் சிவப்பேறும் உள்ளன.

" தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னுந் தேன் "

'உண்மை விளக்கத்தில்' உள்ளதொரு வெண்பாவில் நடனத் தத்துவத்தின் பிறி தோர் அம்சம் பேசப்படுகின்றது.

" பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா ஒருவன் -
வரைமகள்தான்
காணும் படியே கருணைஉருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு ? "

பரையாகிய பராசத்தி என்னும் ஞான அம்பலத்தில் நின்று அதன் விளைவாகிய ஆனந்த நடனம் புரிகின்றார் இறைவர் என்பது இதன்கருத்து. திருஞானசம்பந்தப் பெருமான் தில்லைக் கூத்தரைத் தரிசித்த பொழுது அவருக்கு நிகழ்ந்த ஆனந்த நுகர்வை வருணிக்கப் போந்த தெய்வப் புலமைச் சேக்கிழார்பெருமான் இதே உயரிய கருத்தினைத்தான் விளக்குகின்றார்.

" அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே
யானஅம் பலமும்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த
ஒருபெரும் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழும்
களிப்பொடும் கடற்காழிப்
புண்ணியக்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதரா டியபொற்பு "

ஆனந்த நடனம் என்பதற்கு இரு வகைப் பொருள்கள் கொள்ளுதல் தகும். ஆனந்தமாகிய நடனம் என்பது ஒன்று. ஆனந்தத்தை விளைக்கும் நடனம் என்பது மற்றொன்று. இவ் இரு பொருள்களுமே முறையே நடராஜப் பெருமானுக்கும் நற்ற மிழ்த் திருவாசகத்திற்கும் நன்றாகப் பொருந் தும் நல்லியல்பின ஆகும். இவ்வுண்மையை இப்போது காண்பாம். பராசக்தி ஞானத் தைக் குறிப்பதாகும்.

1. பராசக்தியாகிய அம்பலத்தில் சிவ பெருமான் ஆடுகின்றார் - அது ஆனந்த நடனம்.

2. திருஞானசம்பந்தரின் உள்ளத்தில் நிறைந்த ஞானம் ஆகிய அம்பலத்தில் பூரித்துப் பொங்கி எழும் ஆனந்தம் நடராஜாவாகக் காட்சி அளிக்கின்றது.

3. மாணிக்கவாசகரின் மாண்புறும் உள்ளத்தே மாதேவன் நிறைவித்த மகிமை சேர் ஞானம் என்னும் அம்பலத்தினின்று பொங்கி எழுந்து பூரணமாய் ஆரணமாய்ப் பொலிவுற்று நடமாடும் பாவெனப்படுவதாகிய திருவாசகம் என்பதே ஓர் ஆனந்த நூல், அதனை ஓதலின் விளைவும் சிவானந்தம் ஆகும்.

இந்த ஆனந்தத்தின் நுகர்ச்சி மெய்ப்பாட்டினை இருபெரும் அருட் கவிஞர்கள் முறையே இனிது வருணித்துப் பாடியுள்ளனர்.

> "திருவா சகமிங் கொருகா லோதில்
> கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
> தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
> மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
> அன்பர் ஆகுந ரன்றி
> மன்பதை யுலகில் மற்றையர் இலரே"

என்பர் சிவப்பிரகாச சுவாமிகள்.

வள்ளல் இராமலிங்கர் பாடுகின்றார்.

> "வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
> நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
> தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
> ஊன்கலந்தென் உயிர்கலந்துள் உவட்டாமல் இனிப்பதுவே"

ஸ்ரீ நடராஜப் பெருமான் உலக உற்பவத்திற்கு முன் தமது வலது கரம் ஏந்தும் துடியினை முதல் முதலாக ஒலிக்கின்றார். அப்பொழுது அதனின்றும் 'ஓம்' என்னும் பிரணவ ஒலி தோன்றுகிறது. அவ்வொலி அதே விநாடியில் 51 எழுத்துக்களாகப் பிரிந்து வீழ்கின்றது. இந்த 51 அட்சரங்களை 'வர்ணம்' என்றும் இவற்றாலாகிய வார்த்தைகளைப் 'பதம்' என்றும், அந்த வார்த்தைகள் அல்லது பல பதங்களால் ஆகிய அடிகளை 'மந்திரங்கள்' என்றும் சைவசித்தாந்தம் கூறும். திருவாசகம் முழுதுமே மந்திரம்தான். அதனுடைய 'ஒரு மொழியே என்றனையும் என் உடையனையும் ஒன்றுவித்துத் தருமொழியாம்' என்பர் வள்ளலார். எனவே, பொதுவான மந்திரங்கள் அனைத்துக்குமே இன்றியமையாத 51 அட்சரங்களால்தான் இந்தத் திருவாசக மந்திரமும் அமைந்துள்ளது என்னும் உண்மையை விளக்கத்தான் இஞ்ஞானப் பனுவல் 51 அதிகாரங்களுடன் இலங்குகின்றது.

திருஞான சம்பந்தர் ஞானத்தில் கிரியைக்குரியவர். அக்கிரியை உலகப் பிரவர்த்தியைக் குறிக்கிறது. முதல் திருமுறையில் 'ஓம்' காரத்தில் தொடங்கிய அவரது தேவாரப் பாடல்கள் மூன்றும் திருமுறையில் ஸ்தூல பஞ்சாட்சரமாகிய நமசிவாயப் பதிகத்தில் முடிவுறுகின்றது. (Evolution) ஆதலால் தான அவர் "தொல்வினைதீர்தல் எளிது" என்றும் "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்" என்றும் பாடினர்.

ஆனல், மாணிக்கவாசகப் பெருமான் ஞானத்தில் ஞானத்திற்குரியவர். அவரது ஞானம் உலக நிவர்த்தியைக் குறிக்கிறது. இவரது ஞானப்பனுவலாகிய திருவாசகம் ஸ்தூல பஞ்சாட்சரமாகிய நமசிவாயத்தில் தொடங்கி அச்சோப்பதிகத்தில் ஓம்காரத்தில்முடிவுறுகின்றது. (Involution) ஆதலால் தான் அவர்,

> "வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
> வருகஎன் றருள்புரி யாயே

என்று பாடியுள்ளார்.

இன்னும் பல எண்ணிறந்த நுண்ணிய தத்துவச் சிறப்புக்கள் திருவாசகத்தில் உள்ளன. எனினும் அவையனைத்தையும் இவ்வொரு கட்டுரையிலேயே கூறுதல் இயலாத தொன்றும்.

எனவே, 'வாச்சியம்' ஆகிய நடராஜர் இயற்றும் பஞ்சகிருத்தியங்கள் அனைத்தும் அவரது ஒரே திருமேனியின் அவயவங்களால் குறிக்கப்படுதல் போன்றே அப்பஞ்சகிருத்தியங்கள் அனைத்தும், "வாக்கியம்" ஆகிய திருவாசகத்திலும் ஒரே பாடலிற் குறிக்கப் பெற்றிருத்தலைக் கண்டு, இந்தக் கட்டுரையை இத்துடன் முடிப்பாம்.

### நடராஜரில் ஐந்தொழில்

" தோற்றம் துடியதினில்;
தோயும் திதிஅமைப்பில்;
சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம்;—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில்
உற்றதிரோ தம்; முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்கிறது உண்மை விளக்கம்.

### திருவாசகத்தில் ஐந்தெழுத்து

போற்றி! அருளுக, நின் ஆதியாம் பாதமலர்
போற்றி! அருளுக, நின் அந்தமாம் செந்தளிர்
[கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றமாம்
பொற்பாதம்
போற்றி! எல்லா உயிர்க்கும் போகமாம்
பூங்கழல்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறு ஆம்
இணையடிகள்
போற்றி! மால் நான் முகனும் காணாத
புண்டரிகம்
போற்றி! யாம் உய்ய ஆட்கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழி நீர் ஆடேல் ஓர்
எம் பாவாய்!

என்கிறது திருஎம்பாவை.


# ஸ்ரீ கண்ணாயிரமுடையார் தேவஸ்தானம்

## திருக்கண்ணார் கோயில் என்ற குருமானக்குடி

இத்தலம் மாயூரம் - சீர்காழி பேருந்து மார்க்கத்தில் கதிராமங்கலம் பஸ் ஸ்டாப் புக்கு கிழக்கே ஒரு மைல் தொலைவிலுள்ளது. சம்பந்தர், சேக்கிழார், இராமலிங்க அடிகள் ஆகியோரால் பாடல் பெற்ற திருத்தலம். இறைவன் கண் ஆயிரம் உடையார் என்னும் திருநாமம் பெற்றுள்ளார்.

இந்திரத்தீர்த்தத்தில் நீராடி திருக்கண்ணாயிரநாதருக்கு அர்ச்சனை செய்தால் தோஷங்கள் நிவர்த்தியாகி திருமணம் நடைபெறும். பள்ளியறையில் பால் பழம் நிவேதனம் செய்து விநியோகித்து தம்பதிகள் அருந்தினால் மறு ஆண்டு புத்திர சந்தானம் ஏற்படும்.

அறங்காவலர்

தெ. அரு. சித. கரு. ராம. ராமநாதன் செட்டியார் (தலைவர்)

# தஞ்சை புகழ் குறவஞ்சி

தஞ்சை என். எஸ். தாத்தாச்சாரியார்

தஞ்சைப் பெருமன்னன் முதல் இராசராசன் எடுப்பித்த இராசரா சேச்சரத்து ஆட்டைப் பெருவிழாவில் அஷ்டகொடி (எட்டுக்கொடி) என்ற சிறப்புடைய நன்னாளில் நந்தியெம்பெருமான் மண்டபத்துக்குக் கீழே மேற்புறத்து அமைத்த மேடையில் நன்கு பழக்கப்பட்ட பெண்களைக்கொண்டு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக நடிக்கப்பட்டுவந்த குறவஞ்சி நாடகம் கடந்த சில ஆண்டுகளாக நடைமுறையில் இடம்பெறாமை காணப் படுகிறது.

பண்டைச் சோழர் காலத்து இராசராச நாடகத்தின் இடத்தினைச் சென்ற நூற்றாண்டில் தோன்றிய சரபேந்திர பூபாலர் குறவஞ்சி ஏற்றுச் சிறப்புறுத்தி வந்தது.

தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய கலம்பகத்தில்குறத்தி குறிசொல்லும் செயலை விளக்கிக் கூறும் குறம் என்பதோர் உறுப்பு உளது. அவ்வுறுப்பில் ஒரே பாடலில் கூறப்படும் செய்தியைச் சற்று விரித்துக் குறம் என்ற சிறு பிரபந்தம் தோன்றிற்று. குமர குருபர அடிகளார் இயற்றியதாகக் கூறப்படும் மீனாட்சியம்மைக் குறம் முதலியன இவ்வகையில் தோன்றியனவே. இக்குறம் - குறத்திப் பாட்டு எனவும் பெயர் பெறுகிறது.

குறத்திப் பாட்டின் விரிவே குறவஞ்சிப் பிரபந்தமாயிற்று. இந்தப் பிரபந்தம் ஆசிரியம், வெண்பா, தரவுக்கொச்சகம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் முதலிய இயற்றமிழ்ச் செய்யுட்களும், சிந்து, கீர்த்தனை, கண்ணிகள் முதலிய இசைத்தமிழ்ச் செய்யுட்களும் இடையிடையே நாடகமாகப் பாடி நடிக்கும் இயல்பில் அமைந்ததாகும். இது கடவுள் வாழ்த்து, கட்டியக்காரன் வருகை, தலைவன் பவனி, தலைவி தலைவனைக் கண்ணுற்று மையலுறுதல், தலைவியின் விரகதாபம், தலைவி பாங்கியைத் தூதுவிடல், குறத்தி வருகை, குறத்தி தன் மலைநாடு ஊர் ஆற்றல் இவைகளைப்பற்றிப் பேசுதல், தலைவிக்குக் குறி சொல்லிப் பரிசு பெறுதல், குறத்தியைப் பிரிந்த குறவன் வேட்டையாடுதல், குறத்தியைக் காணும் வேட்கையால் அவளைத் தேடிவரல், குறத்தியைக்கண்டு இன்புறல் பாட்டுடைத் தலைவனை இருவரும் வாழ்த்துதல் என்ற கருத்துக்களைக் கோவையாக அமைத்து இயற்றப்பட்டதாகும்.

குறவஞ்சி நாடகங்களுள் திருக்குற்றாலக் குறவஞ்சியை அடுத்துப் பிரசித்திப் பெற்று விளங்குவது சரபேந்திர பூபாலர் குறவஞ்சியாகும். அதனை இயற்றிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் சரபோசி மன்னனின் (கி. பி. 1798—1832) அரசவைப் புலவராவர். இவரே கோடீச்சுவரக் கோவை, தஞ்சைப் பெருவுடையார் உலா என்ற பிரபந்தங்களையும் இயற்றியவர்.

இனி, இக்குறவஞ்சி கூறும் செய்திகள் சிலவற்றை நிரலே காண்போம்.

காப்புச் செய்யுட்களில் விநாயகர், பெருவுடையார், பெரியநாயகி, கந்தவேள், கலைமகள் என்பவர் வணங்கப்படுகிறார்கள்.

> 'சரபோசி மன்னன்மீது...குறவஞ்சி கூறக்...
> கணபதி காப்பாமே'

> "கொற்றவன் என்னும் சரபோசி மன்னன்மேல் குறவஞ்சிகூற...
> பிரகதீசர்தம் மலர்ப்பதம் துணையே
> பெரியநாயகி உபயபதம் துணையே
> கந்தவேள் இரு கமலபதம் துணையே
> வாணிதன் எழில் திருவடி மலர் துணையே."

> "நிலமதி விசாலருக்கு நீடுஉறு செங்கோலருக்குத்
> தலம்அதனில் மேலருக்குச் சரபோசி மன்னருக்கு
> ஜயமங்களம்"

என்று நூல் தொடங்குகிறது.

கட்டியக்காரன் விநாயகர் நாடகத்தைக் காக்க வருமாற்றைப் பாடுகிறான்.

அடுத்து,

> "விளங்குஎழில் தஞ்சை வியன்பதி யிடத்து
> வளங்கொள் போசகுல வரோதயன் ஆகிய
> மருவுசீர்த் துளசி மன்னவன் புதல்வன்
> சரபோசி என்னத் தரும்இயற் பெயரினேன்
> பொன்னெடுந் தேர்களும் பொருந்துகுஞ் சரங்களும்
> பன்உயர் பரிகளும் பதாதியும் சூழ
> மன்னவர் குழுவும் மந்திரத் தலைவரும்
> தானா பதிகளும் தன்புடை நெருங்கத்
> தூரியம் முழங்கத் துலங்குபொன் தொடிக்கை
> நாரியர் அளவிலர் நடனம் செய்யப்
> பண்புறு யானைமேல் பவனிவருதல் கூறப்படுகிறது.

அப்பொழுது

தஞ்சைச் சரபோசி நரபாலர் கருணை தனக்
கேற்ற வயனத்தாளாம் மதனவல்லி யாழ்எழி இப்
பந்தாடி முடித்து வாய்ந்தநெடுவீதி உற்றுளாய்ச்
சரப நரேந்திரன் பவனிவரக் கண்டாள்."

மன்னவன்தன் எழிலைநோக்கித் துங்க மனத்திடைக் காதல் கொண்டாள். அவளை மன்மதன் மலர் அம்புகளோடு சந்திரனும், தென்றலும், மாலை நேரமும் வருத்தவே, தன் துயரைக் குயில் முதலியவற்றிடம் கூறிப் புலம்புகிறாள். அப்பொழுது தன்னைக் காணவந்த தன் தோழியிடம்

"சரபோசி மகராசர் பவனிதன்னைக் கண்டேன்
மருவநான் அவர்மேல் மால்கொண்டேன் சகியே
பருவ மடந்தையர் பலர்நின்றார் எனைப்போல்
ஒருவரும் மயல்கொள்ளக் காணேனே சகியே"

என்றுகூறி அவளை மன்னனிடம் தூதுசென்று, அவனைக் காணவேண்டிய நேரத்தையும் குறிப்பிட்டு அவளை அனுப்பியபின், அவள் மீண்டு வருவதற்குக் காலம் தாழ்க்கவே,

சகிஎன்றேன் சற்றுச் சகியே என்றாள் அவள்
வஞ்சகியே இப்படி என்னைத் தவிக்கவிட்டுச் சென்றாள்
மகிபாலன் சரபோசி மன்னன் தனக்கு இசைந்தால்
வருவான் வரச்சொல்வான் மாலையாகிலும் கொடுப்பான்
இன்னம் வரக் காணேனே சகியை
இன்னம் வரக் காணேனே

என்று வருந்தி இருக்கும் நேரத்தில்,

| | | | |
|---|---|---|---|
| மைப்படி | விழியள்ஓர் | மலைக்குற | மடந்தை |
| வெம்முலைத் | தடத்தின் | மேல்கச்சு | அணிந்து |
| விதம்உறும் | சித்திர | மெல்துகில் | உடுத்து |
| குன்றிமா | மணியும் | குலச்சங்கு | மணியும் |
| துன்றிடு | கவடியும் | தொகுத்திடு | மணிகளும் |
| புலிப்பல் | தாலியும் | புனைந்துமாத் | திரைக்கோல் |
| வலக்கையில் | ஏந்தி | மணிக்குறக் | கூடை |
| மருங்கினில் | இடுக்கி | வசிகரத் | திலகம் |
| இருங்கதிர் | நெற்றி | யிடைத்தரித் | தனளாய் |
| சரபோசி | மன்னர் | தமைஎதிர் | போற்றி |
| அன்னவர் | உதவிய | அளவில்பொற் | பணிகளும் |
| மேவி அங்கு | இருக்கும் | மின்னனர் | எவர்க்கும் |
| கையினில் | காலில் | கலந்திடு | ரேகையும் |
| மெய்யுறு | மறுவொடு | விளங்கிடும் | தழும்பும் |
| சுழிகளும் | இன்னும் | தோற்றுசில் | குறிகளும் |

| | | | |
|---|---|---|---|
| விழியினுல் | நோக்கி | மெய்ப்பயன் | உரைத்திட்டு |
| அவரவர் | உதவிடும் | அணிகளும் | கலைகளும் |
| குவிதரு | நிதியம் | கொடுவந்து | அன்னுள் |
| மன்னிவீற் | றிருக்கும் | மதன | வல்லிதன் |
| மன்னிடு | மறுகினில் | வந்துஅணுங் | தனளே. |

குறத்தியின் குரல்கேட்ட பாங்கிமார் சிலர் அவளை மதனவல்லியிடம் இசைவு கேட்டு அவள் இல்லத்துக்கு அழைத்துவரக் குறத்தி,

'நன்னயம்சேர் தஞ்சைதனில் நலம்பெருகும் வாசல்இது
மன்னுசர போசிமன்னன் மகிழ்ந்திருக்கும் வாசல்இது'

எனப் பாடிக்கொண்டேவர மதனவல்லி அவளை வரவேற்று

மருவிநின் பேரொடு வளர்தேசப் பேரும்
மலைவளத் துடன்உங்கள் சாதிச் சீரும்
திருவும்நீ அறிந்திடு நதிகளும் ஊரும்
திரமும் நீபெறு வரமும் மேலதன்
உரமும் நான்எதிர் அறிய ஓதிடு

என்று குறிப்பிடவே,

குறத்தி,

செந்திருமால் என்தனக்கு மைத்துனன்காண் அம்மே
திங்கள்அணி சிவன்எனக்குத் தமையன்முறை அம்மே
அந்தமிகும் கந்தன் எங்கள் மருமகன்காண் அம்மே
அன்னநடை வள்ளி எங்கள் கன்னிகைகாண் அம்மே

எனவும், நான் அறிந்த மலைவளம் சொல்வேன் கேள் அம்மே,

கனமாம் பொதியமலைச் சித்தர்
கருத்தினில் வெகுபரி சுத்தர்
கறைக்கண்டன் தமக்குஅவர் பத்தர்
காலங்கள் பலகண்ட நித்தர் எனவும்
தராதலம்போல் திடம்மேவும் தஞ்சையில் எந்நாளும்
தங்குசர போசிமன்னர் சிந்தைமகிழ்ந்து ஆளும்
நேரிமலை மேல்குடிசை நிலைக்கவைத்தோம் அம்மே
நீடும்அது எங்கள்குடி தழைக்கவைத்தது அம்மே எனவும்
ஐயாறும் சிரகிரியும் திருவரங்க நகரும்
ஆனைக்கா வுடன்மதுரைப் பெரும்பதியும் அறிவேன் எனவும்
சங்கநதி கபிலநதி சரசுவதி கிருஷ்ணையே
கங்காநதி ஆதிநதி கண்டறிவேன் அம்மே எனவும்
தேசங்கள் மருவிய பேரும் வளமையும்
தெரியக் கூறுவன் மின்னே எனவும்
சோழநாட்டின் வளமை உனக்குநான்

சொல்லுவேன் கேளடி மானே எனவும்
சொன்ன குறிகளும் பெற்ற வரிசையும்
சொல்லுகி றேனடி கண்ணே எனவும்
மன்னர் சரபேசர் மகராசர் எனக்கு ஈந்த
வரிசையைக் கேளடி மானே எனவும்

பலவாறு விரித்துக்கூறிய செய்திகளைக் கேட்டு வியந்த மதனவல்லி தனக்கும் கைபார்த்துக் குறிசொல்லுமாறு குறத்தியை வேண்டக் குறத்தியும் மதனவல்லி கையிலுள்ள வச்சிரரேகை, மகுடரேகை, சூலரேகை, சக்கரரேகை, வெற்றிரேகை, கமலரேகை, உடுக்கைரேகை, வித்தைரேகை முதலிய ரேகைகளையும், வலஞ்சுழி, தழும்பு, மறு முதலியவற்றையும் நோக்கி அவள் பெருஞ்சிறப்புடன் வாழ்வாள் என்று குறி கூறுகிறாள். பின் அவள் உளக்குறிப்பை வெளிப்படுத்த,

தலம்இது புரந்திடும் சரபோசி மன்னர்
நலனுறு மதிகொடு நாளும் பணிந்திடச்
சுத்தமார் தஞ்சைத் தொல்பெரும் பதியில்
உத்தம ஆலயத்து உறைபெரு வுடையாய்!
பிறைநுதல் சிற்றிடைப் பெரியநா யகியே!
நிறைமலர்க் கோதை நிமலி காமாட்சி!
தென்திரு வீதியில் திகழுந்திடும் காளி!
வென்றிகொள் குணபால் வெள்ளைப் பிள்ளையே!
ஆனந்த வல்லி அருட்கு அனுகூலா!
ஈனம் தவிர்த்திடும் இரட்டைப் பிள்ளையீர்!
சரவண பவனே! சத்த கன்னிகாள்!
வரம்மிக உதவும் வள்ளிநா யகியே!
எக்கலா தேவியே இறைஞ்சினேன் உங்களை

எனத் தெய்வங்களை அழைத்து வழிபட்டு, மதனவல்லியிடம்

தஞ்சைநகர் தனில்வாழ்வோன் உலகத்தை ஆள்வோன்
சரபோசி மன்னவனும் மன்னன்பேர் அம்மே
நிறைசெல்வத்து அன்னவன்மேல் ஆசைகொள்ள நோற்று
நீமுன்பு செய்ததொரு புண்ணியம்காண் பாயே
பெருவுடையார் அருளதனல் அவனைச்சேர் வாயே

என்று உளக்குறி கூறி, அவள் அளித்த பல பரிசுப் பொருள்களுடன் வெளியே புறப்படுகிறாள் குறத்தி.

குறத்தியின் கணவனான சிங்கன், குறி சொல்லி வருவதற்காகக் குறத்தி தன்னைப் பிரிந்து சென்ற பிறகு, தன் நண்பன் குளுவனுடன் பறவை வேட்டையாடி, தன் கண்ணியில் அகப்படும் பறவைகளை,

செந்தமிழ் இலக்கணம் தெரியார் கவிசொல்லிச்
சேரும் அதன்குற்றம் தெரிந்தோர் வினவுங்கால்
சிந்தை மயங்கி விழித்தல்போல் கண்ணியில்
சிக்கிக்கொண்டு இங்குஒரு பக்கி விழிக்குது.

என்றாற்போலப் பாடிக்கொண்டே அகப்படுத்திக் காலங்கழிக்கையில், சிங்கியை நினைத்து, அவள் அணியும் அணிகலன்களில் ஒன்றாகப் பிறந்திருந்தால் அவளைப் பிரியாது வாழ்ந்திருப்பேனே என்று வருந்தி,

வஞ்சியைக் காணேனே — ஐய! குற
வஞ்சியைக் காணேனே

எனப் புலம்பியவாறு அவளுடைய அடையாளமாகத் தன் நண்பன் குளுவனிடம்

'கன்னமதிலே இரண்டு சின்னவடு உண்டு
கள்குடித்த வெறியினால் நான்கடித்த துண்டு பண்டு'

என்று குறிப்பிட்டுத் தஞ்சைநகரில் தேடி வருகையிலே, வழிப்போக்கன் ஒருவன் சிங்கனிடம்,

'கரியமலர்க் கோதைஅதோ நிற்கின் றாள்பார்
கருதுவரைக் குறமகளே அணுகித் தானே'

என்று கூறினானாகச் சிங்கன் சிங்கியைக்கண்டு, அவள் பெற்ற பல பரிசுப் பொருள்களையும் பார்த்துப் பரவசமுற்றுப் பலவாறு வினவிப் பின்,

"காமவேள் தன்கையில் காட்டிக் கொடுக்காதே சிங்கி" என்று வேண்ட, அவளும் "என்றும், நாம் இருவரும் கூடி நயந்து வாழ்வோமடா சிங்கா" என்று ஆறுதல்கூறப் பின் சிங்கன், "குலவும் சரபோசி மகராசர் தமைவாழ்த்திக் கொண்டு இங்கு இருப்பமடி சிங்கி" என அவள் இங்கு, "நல்லது இப்படியே நாம் செய்தால் அவர்தயை நமக்குக் கிடைக்குமடா சிங்கா" என்று கூற, சிங்கன் "அவர் சுகமாக இருக்கப் பிரகதீசர் அருட்பதம் போற்றுவோம் சிங்கி" எனவே, அவள் "அவனியில் எவர்களும் சுகமே இருக்கணும் அவர் பதம் போற்றுவோம் சிங்கா" என உரையாடலை முடிக்கிறாள்.

புகழ்சோழ தேசருக்கு போசலகு லேசருக்கு
சகலருக்கும், நேசருக்கு தஞ்சைநகர் வாசருக்கு ஜயமங்களம்

என்று இந்நூல் நிறைவு பெறுகிறது.

இக்குறவஞ்சி நாடகம் தொடர்ந்து நடைபெற இராசராசேச்சரமுடையார் திருவருள் பாலிக்க.

———

# கோடீஸ்வரர்

## அறக்கட்டளை

இந்தக் கோடீஸ்வரர் அறக்கட்டளை, ஸ்ரீ கோடீஸ்வர அய்யர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டு தினந்தோறும் 10 சேவார்த்திகளுக்கு இரவில் அன்னதானம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அறக்கட்டளை தஞ்சாவூர் மேல வீதியில் கோடீஸ்வரர் சந்தில் உள்ளது. ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் ஸ்ரீ கோடீஸ்வரர் ஆராதனை மிக்க விமரிசையாகக் கொண்டாடப் பட்டு ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப் பட்டு வருகிறது.

நிர்வாக அதிகாரி

M. முத்துசாமி

# ஸ்ரீ சார்ந்தாரைக்காத்த சுவாமி

## திருக்கோயில்

## தில்லையாடி — வள்ளியம்மை நகர்

இவ்வூர் மாயூரம் — தரங்கம்பாடி இருப்புப் பாதையில் உள்ளது. விக்கிரம சோழமன்னனின் முதலமைச்சர் இளங்கார முனிவரால் இக்கோயில் எடுப்பிக்கப் பெற்றது. இறைவன் பெயர் சார்ந் தாரைக்காத்த சுவாமி. இறைவியின் பெயர் பெரிய நாயகி. திருமால் இரணியனைக்கொன்றபழி நீங்கு தற்காக சிவனை வழிபட்டு பேறு பெற்ற தலம்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளின் போராட்டத்தில் பங்குகொண்டு உயிர்நீத்து அமரத் துவம் எய்திய தியாகி வள்ளியம்மை தோன்றிய பெருமையும் இவ்வூருக்கு உண்டு.

நிர்வாக அதிகாரி

**கே. நடராஜன் எம். ஏ.**

அறங்காவலர்கள் :

கே. கனகசபைபிள்ளை (தலைவர்)

கே. முத்துராமலிங்க செட்டியார்

ஆர். தினதயாளு நாயுடு

# திரு காளகஸ்தீஸ்வரர் ஆலயம்

## கத்தர் நத்தம்

பாபநாசம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் ஸ்ரீ மாரியம்மன் கோயில் புகை வண்டி நிலையத்தில் இருந்து 2 பர்லாங் தொலைவில் உள்ளது. இந்தக் கோயிலில் தைப்பூச விழாவும் பங்குனி உத்திர திருவிழாவும் அதி விமரிசையாகக் கொண்டாடப்படும்.

நிர்வாக அதிகாரி

M. S. முத்துசாமி

# ஸ்ரீ ராமஸ்வாமி திருக்கோயில்

## கும்பகோணம்

தஞ்சையை ஆண்ட ரெகுநாத நாயக்கரால் கட்டப் பெற்றது. கலைப்பொக்கிஷங்கள் நிறைந்த சித்திரங்களால் ஆன ராமாயணம் பார்க்கத்தகுந்தவை.

அறங்காவலர்கள் :

K.M.P. கோதண்டராமன் (தலைவர்)
G. சிவசுப்பிரமணிய பிள்ளை, P.R. தியாகராஜன்
P. கோபாலகிருஷ்ண செட்டியார்
R. சந்தானகிருஷ்ண செட்டியார்

நிர்வாக அதிகாரி

S. சுப்பிரமணியன்

# ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## ஸ்ரீ ஸ்கந்தபுரம் (என்கிற) வடிவேல்குடி

எங்கும் தங்கி சர்வ வியாபகமாக நிரம்பிய பரம்பொருள் ஆன்ம கோடிகள் உய்யும்விதம் கருணைபாலித்து, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மும்முறையில் ஆங்காங்கு திருவுருவங்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் சோழநாட்டில்பல. அவற்றுள் தென்கைலாயம் என்னும் திருவையாறு முதலிய ஸ்தலங்களுக்கு மேல்திசையில் காவிரியாற்றின்வடபால் மேற்குத்திசையை நோக்கி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயம். அதற்கு வருஷாவருஷம் ஸ்கந்தஸஷ்டி மஹோத்ஸவம் சிறப்புற நடைபெறும்.

தர்மகர்த்தா - தலைவர்

**K. தியாகராசன்**

# ஸ்ரீ வைரவநாதசுவாமி ஆலயம்

## தகட்டூர்

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்த வைப்புத்தலம் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடல்பெற்றது. தமிழ் நாட்டில் வைரவருக்கு இங்குதான் தனி ஆலயம் உள்ளது. ஒவ்வொரு திங்கள், வெள்ளிக்கிழமைகளில் இங்கு மக்கள் வந்து பேய், பில்லி, உடல் நலக்குறைவு முதலியவைகளிலிருந்து நீங்க வழிபட்டு பிணி நீங்கப் பெறுகிறார்கள்.

இத்தலம் திருத்துறைப்பூண்டி - வேதாரணியம் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. மேலமருதூர் ரயில் நிலையத்திலிருந்து (5கிலோ மீட்டர்) தெற்கில் உள்ளது. சித்திரை மாதத்தில் பௌர்ணமியில் மூன்று தினங்கள் திருவிழா சிறப்புடன் நிகழும்.

அறங்காவலர்கள் :

எம். எஸ். சம்பந்தன்
தா. வைரப்பன், அ. சிங்காரவேலு
அ. ராமன்

நிர்வாக அறங்காவலர்

**N. V. கிருஷ்ணதேவர்**

# ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி திருக்கோயில்

கும்பகோணம் —:: — தஞ்சை மாவட்டம்

சோழமன்னர்களால் கட்டப்பட்ட இத்திருக்கோயில் மிக வனப்புடையது, வைணவத் திருத்தலங்களான 108 திருக்கோயில்களில் இக்கோயிலும் ஒன்றாகும். பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய எழுவரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் திருமழிசையாழ்வார், வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி உத்தானசயனத்தில் சேவை சாதிக்கிறார்.

சித்திரை மாதத்தில் சைத்ரோத்சவம், வைகாசி மாதத்தில் வசந்த உற்சவம், ஆடி மாதத்தில் ஜேஷ்டாபிடேகம், மார்கழி மாதத்தில் திரு அத்யாயன உத்சவம், மாசிமாதம் மக உத்ஸவமும் தெப்பத்திருநாளும், பங்குனிமாதம் ஸ்ரீ கோமளவல்லித் தாயார் பிரமோத்சவமும் சிறப்புற நடைபெறுகின்றன, ஆலய நிதியில் இருந்து ஏழைகளுக்கு தயிரன்னம் வினியோகம் உண்டு, கோயிலின் சார்பில் ஒரு பிரபந்த பாடசாலையும் நடைபெறுகிறது.

*அறங்காவலர்கள்:* *நிர்வாக அதிகாரி*

கே. ராகவச்சாரியார் (தலைவர்) M. செல்லப்பெருமாள் B.COM., F.S.A.A. (India.)

கே. சுவாமிநாதய்யர் நவநீதகிருஷ்ணன் B.A., B.L.,

## திரு இரத்னபுரீசுவரசுவாமி திருக்கோயில்

### திருநாட்டியத்தான்குடி

மன்னார்குடி வட்டம் : : தஞ்சை மாவட்டம்

சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற இத்தலம் மாயூரம் - காரைக்குடி புகைவண்டிச்சாலையில் "மாவூர் ரோடு" புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே அரை மைல் தொலைவிலுள்ளது. அறுபத்து மூவரில் ஒருவரான கோட்புலிநாயனார் தோன்றிய ஊர்.

அம்மையும், அப்பனும் ஆடித்திங்களில் 'நடவு உற்சவத்தின்' போது நாற்று நடும் காட்சி மெய்ஞ்ஞான நாட்டமுடையோருக்கு உவட்டாமல் இனிப்பது வாகும். கண்களால் உண்ண வருக.

நிர்வாக அதிகாரி

பி. திருநாவுக்கரசு பி. ஏ.,

---

## ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில்

மாயூரம் வட்டம் **விளநகர் — ஆறுபாதி** தஞ்சை மாவட்டம்

விளநகர் மாயூரத்திலிருந்து பேருந்து மார்க்கத்தில் 5 மைல். தவம்புரிந்த ஜயஷவ்ய முனிவருக்கு தண்ணருள் தந்திட தென்காசி என்ற இத் திவ்ய தலத்தில் நீள்புகழ் கொண்ட நெடுமால் நின்ற கோலமாய் எழுந்தருளியுள்ளார். வைகாசி விசாகத்தைக் கடைசியாகக்கொண்ட வசந்த திருவிழா வனப்புடையது. அகழ்ந்து எடுக்கப்பெற்ற அழகார் இராமர் சீதை திருவுருவங்கள் அற்புதமாய் காட்சியளிக்கின்றன.

சி. சோதி பி. ஏ.,

நிர்வாக அதிகாரி.

---

## ஸ்ரீ சுந்தரேசுவரஸ்வாமி ஆலயம்

நன்னிலம் வட்டம் **காட்டூர்** தஞ்சை மாவட்டம்

ஆரூர் - குடந்தை நெடுஞ்சாலையில் திருவாரூரிலிந்து மேற்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மேற்கே நோக்கி அமைந்துள்ள இவ்வாலயத்திலுறையும் ஆண்டவனின்பெயர் சுந்தரேசுவரர், இறைவி அபிராமி அம்மன். ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் திருவாதிரைவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாலயத்திற்கு மேற்கே ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஆலயமும் ஸ்ரீ விஸ்வநாதஸ்வாமி ஆலயமும் அமைந்துள்ளன. இக்கோயில் திருப்பணிசெய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் திருமண மண்டபம் ஒன்று நிறுவ ஏற்பாடாகி வருகிறது.

அறங்காவலர் : **எம். சாமிஅய்யா**

நிர்வாக அதிகாரி **M. R. சங்கரன், B. A.,**

★

# திரு பூலோகநாதசுவாமி

## திருக்கோயில்

### கீழக் கோயில்பத்து

பாபநாசம் வட்டம்

| | |
|---|---|
| பூதநாயகன் | வேதநாயகன் |
| ஆதிநாயகன் | அமரர்நாயகன் |
| ஜோதிநாயகன் | தீபநகர்வாழ் |
| பாதிநாயகன் | பரமநாயகன் |
| புவிநாயகன் | பூலோகநாதன் |

வாழ் அம்மாப்பேட்டையில் மேற்றிசையில் கீழக் கோயில்பத்தில் கோயில்கொண்டுள்ள திருவார் திரு. பூலோகநாயகியுடனுறையும், திருவார் திரு. பூலோக நாதர் குடதிசை நோக்கி கோயில்கொண்டுள்ளார்.

நிர்வாக அதிகாரி

**A. வெங்கடேசன்**

அறங்காவலர்கள்:

T. சோமசுந்தர வாண்டையார் (தலைவர்)

A. செல்வராசன்  P. குப்புராமி

# ஸ்ரீ காளகஸ்தீஸ்வரசுவாமி திருக்கோயில்

## சாலியமங்கலம்

பாபநாசம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்த ஆலயம் தஞ்சாவூரிலிருந்து நாகை செல்லும் இருப்புப் பாதையில் தஞ்சைக்குக் கிழக்கே 16வது கி. மீட்டரில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள மூர்த்திகள் யாவும் நல்ல வேலைப்பாடு அமைந்தன வாகக் காட்சி தருகின்றன. மனிதப்பிறவி வழிபாடு ஒன்றினுல்தான் சிறப்புறுமென உணர்ந்த இவ்வூர் மக்கள் வழிபாட்டிற்கு விழாக்காலங் களில் இங்குக்கூடி திருமுறைகளேஓ துவார்கள். யாவரும் வணங்க வேண்டிய தலம்.

அறங்காவலர்:

**வி. கிருஷ்ணசாமி**

# ஸ்ரீ வன்மீகநாதசுவாமி திருக்கோயில்

அம்மாபேட்டை அ. நி. தீபாம்பாள்புரம் பாபநாசம் வட்டம்

புற்றினடியில் லிங்கம் ஒன்றுக்குப் பசு ஒன்று பால் சுரக்கக் கண்டு சோழ அரசர் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதும், தஞ்சையை ஆண்ட முதல் சரபோஜியின் தாயாரான தீபாபாய் அம்மையாரால் திருப்பணிகள் செய்யப்பட்டதுமாகிய இந்த ஆலயம் அம்மாப்பேட்டையிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருவார் மங்களநாயகியின் அருட்சிறப்பிற்கு உறைவிடமான இந்த ஆலயத்திற்கு வருகை தருமாறு பக்தர்களே அழைக்கின்றோம்.

அறங்காவலர்கள்:

K. S. நாகராஜன் (தலைவர்)
G. ராமச்சந்திர தேவர்
S. R. மணித்தேவர், S. சாமிஐயாசேனைநாட்டார், K. சின்னையன்

A. பட்டாபிசுப்பிரமணியன் B.sc.,
நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ சௌந்திரராசப்பெருமாள் திருக்கோயில்

நாகபட்டினம் தஞ்சை மாவட்டம்

நாகை நகரின் நடுவில் அமைந்துள்ள இத் திருக்கோயில் சோழர் காலத்தில் கட்டப் பட்டது. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 108 திவ்ய தலங்களுள் ஒன்றுகும்.

இக்கோயில் அண்மையில் திருப்பணி முடிவு பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்று பொலிவுறும் அழகை வந்து தரிசியுங்கள்.

"அன்னமும் கேழலும் மீனு மாய
ஆதியை நாகை யழகி யாரை
கன்னிநன் மாமதின் மங்கை வேந்தன்
காமரு சீர்கலிக் கன்றி குன்ரு
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல் மாலை
ஏழுமி ரண்டுமோ ரொன்றும் வல்லார்
மன்னவ ராய்உல காண்டு மீண்டும்
வானவ ராய்மகிழ் வெய்து வாரே"

நிர்வாக அதிகாரி

**எஸ். பன்னீர்ச்செல்வம்**

அறங்காவலர்கள்:

ஆர். ஆர். வரதராஜலு (தலைவர்)

வி. சுப்பிரமணியய்யர், ஐ. குமரசாமி

## ஸ்ரீ சுவர்னபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

மாயூரம் வட்டம் செம்பொன்னார்கோயில் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - தரங்கம்பாடி புகைவண்டி பாதையில் செம்பொன்னார்கோயில் நிலயத்திலிருந்து கிழக்கே 1 கி. மீ. தொலைவில் உள்ளது, சமயக்குரவர்களில் இருவரான சம்பந்தரும் நாவுக்கரசரும் இத் தலத்தைப்பாடியுள்ளார்கள். ஒவ்வொருவருடமும் சித்திரை மாதம் 7-ந்தேதி முதல் 18-ந்தேதி முடிய 12 நாட்கள் கதிரவனின் கிரணங்கள் மூலத்தான மூர்த்தியின் மேல் விழுவதால் அந்நாட்களில் விசேட பூசைகள் செய்து பெருந்திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

சொ. ராமமூர்த்தி (தலைவர்) இரா. பாண்டுரெங்கன் மு. தங்கராாசன்

ச. சந்திரசேகரன் க. திருஞான சம்பந்தம் வி. சோமசுந்தரம்

## ஸ்ரீ மேகநாதசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் **திருமீயச்சூர்** தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் – திருவாரூர் புகைவண்டிப்பாதையில் உள்ள பேரளம் நிலயத்திலிருந்து முக்கால் கல் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடல்பெற்றது. சூரிய பூஜை இங்கு சிறப்பாக நடைபெற்றுவருகிறது. தைமாதம் இங்கு நடைபெறும் ரதசப்தமி திருவிழா சிறப்புடையது.

ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டாரசந்நிதி
வேளாக்குரிச்சி ஆதீனகர்த்தர்
(பரம்பரை அறங்காவலர்)

பி. இராமச்சந்திரன் B.sc.,
நிர்வாக அதிகாரி
(பொருளாளர்)

# திரு மெய்கண்டமூர்த்தி

## திருக்கோயில்

குமரகோவில் **நாகபட்டினம்**

"நாகை நகரின் மையத்தில் அமைந்துள்ள இந்த ஆலயம் அருணகிரிநாதரால் பாடல் பெற்றது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னுல் திரு ஆனந்தரங்கம் பிள்ளை என்பவரால் கட்டப்பட்டுள்ளது. திரு அழகமுத்துப் புலவர் முருகனை நேரில் கண்டு தனது பிறவி நோயை தீர்த்துக்கொண்ட வரலாற்றுச் சிறப்புடைய ஆலயம். இத்திருக்கோயிலுக்கு பின்புறம் ஓர் திருமண மண்டபம் நவீன முறையில் கட்டப்பட்டுவருகிறது.

இந்தத் திருமுருகனைக் காண வாரீர்! வாரீர் என அழைக்கிறோம்!

நிர்வாக அதிகாரி

சு. பன்னீர்ச்செல்வம்

# திரு பிர்மபுரீசுவரசுவாமி திருக்கோயில்

**(திருச்சாத்தமங்கை) கோயில் சீயாத்தமங்கை**

நன்னிலம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மேற்குப்பார்த்த ஆலயம். அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரான திருநீலநக்கநாயனுர் பிறந்த தலம் இது. திருஞானசம்பந்தரால் பாடல்பெற்றபதி, நான்கு காலபூசைகள் நடைபெறுகின்றன. இத்தலம், நன்னிலம் - நாகபட்டினம் பஸ் மார்க்கத்தில் சீயாத்தமங்கையில் இருந்து வடக்கில் 2 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது.

அறங்காவலர்கள்:

P. அமிர்தலிங்கம்பிள்ளை (தலைவர்) — கி. தியாகராஜசன், நிர்வாக அதிகாரி

சி. சுந்தரமுதலியார் — A. R. சௌந்தரராசன்

ப. ராசகோபால் பிள்ளை — K. R. இராமச்சந்திரநாயுடு

---

# ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள் கோயில்

**சித்தாய்மூர் (திருச்சிற்றேமம்)**

சித்தாய்மூர் ஸ்ரீ சுவர்ணஸ்தாபனேஸ்வர சுவாமி திருக்கோவிலுக்கு அண்மையிலேயே இந்த ஆலயம் அமைந்துள்ளது. ஸ்ரீ ரெங்கநாதர் - அன்பர்களுக்கு வேண்டியவரம் கொடுக்கும் தெய்வமாகும்.

M. பசுபதி, நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

S. சிவவடிவேல் (தலைவர்)
P. சுந்தரமூர்த்தி
வெ. நாகராஜன்

---

# ஸ்ரீ ரேணுகாதேவி அம்மன் திருக்கோயில்

**விசயபுரம் - திருவாரூர்.**

நாகை வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயிலின் திரு அம்பாளுடைய சிரசுபாகமட்டும் மூலஸ்தானத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் திருவாரூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து ½ கிலோ மீட்டர் வடதிசையில் கடைவீதியின் நடுவில் அமைந்துள்ளது. திருஆரூர் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான திரு முத்துசாமி தீட்சதர் அவர்களால் பாடப்பெற்ற திருத்தலம் ஆண்டு தோறும் ஆடிப்பூர பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

S. T. K. சுந்தரேச பத்தர், நிர்வாக அறங்காவலர் — சி. கலியபெருமாள், நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ சாட்சிநாதசுவாமி

## திருக்கோயில்

## அவளிவணல்லூர்

பாபநாசம் வட்டம்

சிவவேதியர் ஒருவர், வைசூரி நோயால் உரு மாறிய தம்முடைய மனைவியை அடையாளம் காண முடியாது, மனைவியின் சகோதரியை தன் மனைவி என நினைத்து மயங்கிய பொழுது இறைவன் விண்மிசைத் தோன்றி, நீ அந்நாள் மணங்கொண்ட அவள் இவள் எனக் காட்டி சாட்சியாக நின்று அருள் பாலித்ததால் ஸ்ரீ சாட்சிநாதர் எனப் பெயர் கொண்டு இறைவன் வீற்றிருக்கும் ஆலயம் இது. அப்பர் சுவாமிகளாலும் திருஞானசம்பந்த சுவாமிகளாலும் பாடல் பெற்ற இத்தலம் அம்மாப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

நிர்வாக அதிகாரி

**A. K.** எழிலரசு பி. ஏ.,

அறங்காவலர்கள் :

T. கைலாசத்தேவர் (தலைவர்)

A. சீனிவாசத்தேவர் K. V. கலியபெருமாள்

# ஸ்ரீ அக்னீஸ்வரஸ்வாமி கோயில்

திருக்காட்டுப்பள்ளி　　　　　　　　　　தஞ்சை மாவட்டம்

இத்தலம் பூதலூர் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவராலும் பாடல் பெற்ற ஸ்தலம். இவ்வட்டாரத்தில் சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மக்களால் பெரிய கோவில் என அழைக்கப்பட்டு வருகிறது. இவ்வாலயத்தில் ராஜகோபுர திருப்பணிவேலை சமீபத்தில் நடைபெற இருக்கிறது. இத்திருப்பணிக்கு பொது மக்கள் இயன்ற பொருளுதவி அளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

அறங்காவலர்கள் :　　　　　　　　　　நிர்வாக அதிகாரி

ச. தங்கவேல் (தலைவர்)　　　　　　　　C. ரெங்காச்சாரி

K. பீமராவ்　　P. கலியபெருமாள்

G. ராமமூர்த்தி　　V, முனுசாமி செட்டியார்

# ஸ்ரீ பிரசன்ன மாரியம்மன் ஆலயம்

பஸ் ஸ்டாண்டு சமீபம்　　　　　　　　நெ. 2 ரோடு மாயூரம்

நகரமத்தியில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் கோயில் கொண்டுள்ள அம்மன் வரப்பிரசாதி. சாதி மத வேறுபாடின்றி சேவார்த்திகள் பிரார்த்தனை செலுத்தும் ஆலயங்களில் இதுவும் ஒன்று. இவ்வாலயத்தில் கல்யாண மண்டபம் கட்ட பக்தர்கள் தாராளமாக நன்கொடை உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்,

அறங்காவலர்கள்;　　　　　　　　　　நிர்வாக அறங்காவலர்

P. S. குமார்　　　　　　　　　　K. சுப்பிரமணியம்

R. சொக்கலிங்கம்

# கீழத்தஞ்சை பிரிவில் குடமுழுக்கு நடைபெற்ற

## ஆலயங்களின் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பழனியாண்டவர் ஆலயம் | தலைக்காடு |
| 2 | ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள் ஆலயம் | இஞ்சிக்குடி |
| 3 | ஸ்ரீ பள்ளிகொண்டரெங்கநாதர்ஆலயம் | தேரழுந்தூர் |
| 4 | ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் ஆலயம் | கோவிலூர் |
| 5 | ஸ்ரீ வெங்கடாசலபதி ஆலயம் | இலுப்பூர் |
| 6 | ஸ்ரீ சௌந்தரராஜப்பெருமாள் ஆலயம் | நாகபட்டினம் |
| 7 | ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலயம் ஸ்ரீ லட்சுமி நாராயணப்பெருமாள் கோயில் | கொருக்கை |
| 8 | ஸ்ரீ திருமேனியழகர் ஆலயம் | மணிக்கிராமம் |
| 9 | ஸ்ரீ தாந்தோணீஸ்வரர் ஆலயம் | திருஇந்தளூர் |
| 10 | ஸ்ரீ பரமசுந்தரி அம்பிகாசமேத [பார்வதீஸ்வரசுவாமி ஆலயம் | பாலையூர் |
| 11 | ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயம் | வைத்தீஸ்வரன்கோயில் |
| 12 | ஸ்ரீ ரெங்கநாதப்பெருமாள் ஆலயம் | ஆதிரெங்கம் |
| 13 | ஸ்ரீ சொர்ணஸ்தாபனேஸ்வரர் ஆலயம் | சித்தாய்மூர் |
| 14 | ஸ்ரீ அழகியநாதசுவாமி ஆலயம் | நாகபட்டினம் |
| 15 | ஸ்ரீ அனுமார் ஆலயம் | மூவலூர் |
| 16 | ஸ்ரீ அபிராமியம்மன் ஆலயம் | திருப்பெருமங்கலம் |
| 17 | ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் | பெரியசிங்களாந்தி |
| 18 | ஸ்ரீ அபிமுக்தீஸ்வரர் ஆலயம் | திருப்பெருவேளூர் |
| 19 | ஸ்ரீ அங்காளம்மன் ஆலயம் | திருக்குவளை |
| 20 | ஸ்ரீ அக்கினிபுரீஸ்வரசுவாமி ஆலயத்தைச் சேர்ந்த ஹரிஹரபுத்திரசுவாமி ஆலயம் | அரும்பூர் |
| 21 | ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் | குற்றம்பொறுத்தானிருப்பு |
| 22 | ஸ்ரீ விடங்கேசுவரர் ஆலயம் | தில்லைவிடங்கன் |
| 23 | ஸ்ரீ அய்யனுர் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் | பன்னத்தெரு - திருத்துறைப்பூண்டி |
| 24 | ஸ்ரீ உத்வாகநாதசுவாமி ஆலயம் | திருமணஞ்சேரி |
| 25 | ஸ்ரீ ரஜதகிரீஸ்வரர் ஆலயம் | வேளாங்கண்ணி |
| 26 | ஸ்ரீ வீரகோதண்டராமசுவாமி ஆலயம் | தில்லைவிளாகம் |
| 27 | ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமி ஆலயம் | திருப்பணிப்பேட்டை |
| 28 | ஸ்ரீ அகத்தீஸ்வரசுவாமி ஆலயம் | அகரவல்லம் |
| 29 | ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் ஆலயம் | குடவாசல் |
| 30 | ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் | மேலராதாநல்லூர் |
| 31 | ஸ்ரீ கோனேஸ்வரசுவாமி ஆலயம் | குடவாசல் |
| 32 | ஸ்ரீ அகத்தீஸ்வரசுவாமி ஆலயம் | கிள்ளியூர் |
| 33 | ஸ்ரீ ராமசாமிப்பெருமாள் ஆலயம் | கிள்ளியூர் |
| 34 | ஸ்ரீ ஞானதீர்த்தவிநாயகர் ஆலயம் | பெருஞ்சேரி |

| | | |
|---|---|---|
| 35 | ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம் | பெரம்பூர் |
| 36 | ஸ்ரீ கோதண்டராமசாமி ஆலயம் | தலைஞாயிறு |
| 37 | ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் | எரவக்காடு |
| 38 | ஸ்ரீ குந்தளநாகேஸ்வரசுவாமி ஆலயம் | திருக்குறக்குக்கா |
| 39 | ஸ்ரீ காசிவிஸ்வநாதசுவாமி ஆலயம் | மாயூரம் |
| 40 | ஸ்ரீ ஆலந்துறையப்பர் ஆலயம் | நலத்துக்குடி |
| 41 | ஸ்ரீ நர்த்தனபுரீஸ்வரர் ஆலயம் | தலையாலங்காடு |
| 42 | ஸ்ரீ திருவிக்ரமநாராயணர் ஆலயம் | தாடாளன்கோயில் |
| 43 | ஸ்ரீ கோகர்ணேஸ்வரசுவாமி ஆலயம் | திருக்கொளம்பியம் |
| 44 | ஸ்ரீ ஐயனார் அறமுடியப்பர் ஆலயம் | ஆத்துக்குடி |
| 45 | ஸ்ரீ கோதண்டராமர் ரங்கநாதப் [பெருமாள் ஆலயம் | முடிகொண்டான் |
| 46 | ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலயம் | புளியஞ்சேரி |
| 47 | ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயம் | அத்திப்புலியூர் |
| 48 | ஸ்ரீ நல்துணையப்பர் ஆலயம் | புஞ்சை |
| 49 | ஸ்ரீ தனுஸ்கோடீஸ்வரர் ஆலயம் | பஞ்சநதிக்குளம் |
| 50 | ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம் | கொடவிளாகம் |
| 51 | ஸ்ரீ சிவலோகநாதசுவாமி ஆலயம் | வேட்டைக்காரனிருப்பு |
| 52 | ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஆலயம் | காட்டூர் |
| 53 | ஸ்ரீ பிர்மபுரீசுவரசாமி ஆலயம் | திருவலஞ்சுழி |
| 54 | ஸ்ரீ ஆபத்சகாயசாமி ஆலயம் | கொரடாச்சேரி |
| 55 | ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் | மருதூர் தெற்குச்சேத்தி |
| 56 | ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம் | பெரும்பன்றியூர் |
| 57 | ஸ்ரீ வீரசத்தி விநாயகர் ஆலயம் | காரியாங்குடி |
| 58 | ஸ்ரீ சுகந்திவனேஸ்வரசாமி ஆலயம் | புஷ்பவனம் |
| 59 | ஸ்ரீ லட்சுமி நாராயணப்பெருமாள் என்கிற ஸ்ரீ நான்மதியப்பெருமாள் ஆலயம் | தலைச்சங்காடு |
| 60 | ஸ்ரீ ரெங்கநாதப்பெருமாள் ஆலயம் | கீழையூர் |
| 61 | ஸ்ரீ கோவிந்தராஜப்பெருமாள் ஆலயம் | தேரழுந்தூர் |
| 62 | ஸ்ரீ பிரசன்ன மாரியம்மன் ஆலயம் | வண்டிக்காரத்தெரு மாயூரம் |
| 63 | ஸ்ரீ வீரபத்ரசாமி ஆலயம் | நாகை |
| 64 | ஸ்ரீ லெட்சுமி நாராயணப்பெருமாள் ஆலயம் | மாப்படுகை |
| 65 | ஸ்ரீ ஆலந்துறையப்பர்சாமி ஆலயத்தின் உபகோயிலான குயவர் தெரு ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம் | சித்தக்காடு |
| 66 | ஸ்ரீ நாகநாதசாமி ஆலயம் ஸ்ரீ தேரடிப் பிள்ளையார் ஆலயம் | நாகூர் |
| 67 | ஸ்ரீ சிதம்பரேசுவரசாமி ஆலயம் | இலுப்பூர் |
| 68 | ஸ்ரீ விசுவநாதசாமி ஆலயம் | கடனம் |
| 69 | ஸ்ரீ சாபந்தீர்த்த விநாயகர் ஆலயம் ஸ்ரீ சட்டநாதசாமி ஆலயத்தின் உபகோயில் | நாகை |

| | | |
|---|---|---|
| 70 | ஸ்ரீ ஏகாம்பரேசுவரசாமி ஆலயம் | பழையகூடலூர் |
| 71 | ஸ்ரீ நாலாயிரப்பிள்ளையார் ஆலயம் | நாங்கூர் |
| 72 | ஸ்ரீ புருஷோத்தமபெருமாள் ஆலயம் (மணவாளமாமுனிவர் கோயில்) | திருநாங்கூர் |
| 73 | ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம் | திருக்குவளை |

## சப்தவிடங்கத் தலங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் | வீதிவிடங்கர் | அசபா நடனம் |
| 2. | திருக்குவளை | அவனிவிடங்கர் | பிரமர நடனம் |
| 3. | நாகபட்டினம் | சுந்தரவிடங்கர் | பாராவார தரங்க நடனம் |
| 4. | திருக்காரவாசல் | ஆதிவிடங்கர் | குக்குட நடனம் |
| 5. | திருவாய்மூர் | நீலவிடங்கர் | கமல நடனம் |
| 6. | வேதாரண்யம் | புவனிவிடங்கர் | கம்சபாத நடனம் |

## ஐம்பூதங்கட்கு அறிகுறியாக விளங்கும் தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | காஞ்சி | மண் |
| 2. | திருவானைக்கா | நீர் |
| 3. | நெருப்பு | திருவண்ணாமலை |
| 4. | காற்று | திருக்காளத்தி |
| 5. | வெளி | தில்லை |

## அம்பலங்கள் ஐந்து

| | | |
|---|---|---|
| 1. | இரத்தின அம்பலம் | திருவாலங்காடு |
| 2. | பொன் அம்பலம் | தில்லை |
| 3. | வெள்ளி அம்பலம் | திருவாலவாய் |
| 4. | தாமிரசபை | திருநெல்வேலி |
| 5. | சித்திரசபை | குற்றாலம் |

## ஆறுபடை வீடுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருத்தணி | 2. | சுவாமிமலை | 3. | அழகர்மலை |
| 4. | திருவாவினன்குடி | 5. | திருப்பரங்குன்றம் | 6. | திருச்செந்தூர் |

## சிறப்பிற்குரிய தேவி தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருவாரூர் | கமலாம்பிகை |
| 2. | நாகபட்டினம் | நீலாயதாட்சி |
| 3. | வைத்தீஸ்வரன்கோயில் | தையல்நாயகி |
| 4. | திருவெண்காடு | பிரம்மவித்தியாம்பிகை |
| 5. | வேதாரண்யம் | யாழைப் பழித்த மொழியம்மை |
| 6. | திருக்கடவூர் | அபிராமி |

## பிரசித்தி பெற்ற முருகத்தலங்கள்

| | | |
|---|---|---|
| 1. | வைத்தீஸ்வரன்கோயில் | செல்வ முத்துக்குமாரசாமி |
| 2. | திருமயிலாடி | பாலசுப்பிரமணியர் |
| 3. | திருவிடைக்கழி | சுப்பிரமணியசாமி |
| 4. | மாயவரம் | குமரக்கடவுள் (மாயூரநாதசாமி கோயில்) |
| 5. | கோயில்கந்தன்குடி | சுப்பிரமணியசாமி |
| 6. | சாயாவனம் | வில்லேந்திய வேலவன் |
| 7. | கூந்தலூர் | முருகப்பிரான் |
| 8. | திருவாஞ்சியம் | முருகன் |
| 9. | சிக்கல் | சிங்காரவேலவர் |
| 10. | நாகபட்டினம் | குமரர்கோயில் |
| 11. | எட்டுக்குடி | சுப்பிரமணியர் |
| 12. | எண்கண் | சுப்பிரமணியர் |
| 13. | பொறவச்சேரி | சுப்பிரமணியர் |

## சிறப்பு மிக்க தனிக்கோயில்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கூத்தனூர் | நன்னிலம் வட்டம் | சரசுவதி அம்மன் |
| 2. | தகட்டூர் | திருத்துறைப்பூண்டி வட்டம் | பைரவநாதர் |
| 3. | திருவாரூர் | பிரம்மா கோயில் | |
| 4. | திருவாஞ்சியம் | இயமன் | |

## காசிக்குச் சமமான தலங்கள்

1. திருவெண்காடு
2. மாயூரம்
3. சாயாவனம்
4. திருவாஞ்சியம்
5. திருவிடைமருதூர்
6. திருவையாறு

## அழகுத் தெய்வங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கோனேரிராஜபுரம் | நடராசர் |
| 2. | தில்லைவிளாகம் | கோதண்டராமர் |
| 3. | திருவலம்பரம் | பிச்சாடனர் |
| 4. | வழுவூர் | பிச்சாடனர் |
| 5. | திருக்கடையூர் | காலசம்காரமூர்த்தி |
| 6. | முடிகொண்டான் | கோதண்டராமர் |
| 7. | அதம்பார் | கோதண்டராமர் |
| 8. | சாயாவனம் | வில்லேந்தியவேலர் |

## அறநிலையத்துறை

1. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ... ... அமைச்சர்
2. திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ. ஏ. எஸ். ... ... ஆணையர்

## துணை ஆணையர்கள்

1. திரு. கே. ராசா பி. ஏ., பி. எல்.
2. திரு. ஏ. வெங்கிடாசலம் பி. எஸ்சி., பி. எல்.
3. திரு. முருகேசன் பி. ஏ., பி. எல்.
4. திரு. ஜி. ஆதிமூலம் பி. ஏ., பி. எல்.
5. திரு. எம். சூர்யராஜ் பி. ஏ., பி. எல்.
6. திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்சி., பி. எல்.
7. திரு. டி. எஸ். சங்கரநாராயணன் பி. ஏ.

## உதவி ஆணையர்கள்

1. திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் பி. எஸ்சி.
2. திரு. ஆர். தண்டபாணி பி. எஸ்சி., பி. எல்.
3. திரு. பி. எம். முத்துவேல் பி. ஏ., பி. எல்.
4. திரு. சி. எஸ். தீனதயாளு பி. எஸ்சி., பி. எல்.
5. திரு. ஆர். அர்ச்சுனர் பி. ஏ.
6. திரு. ஒ. ஆறுமுகம் பி. ஏ., பி. எல்.
7. திரு. கே. சிதம்பரம் பி. ஏ.
8. திரு. பி, எஸ். கோபாலசாமி பி. ஏ., பி. எல்.
9. திரு. டி. வேணுகோபால் பி. ஏ.
10. திரு. பி. சீனிவாசன்
11. திரு. எஸ். சீனிவாசன் பி. ஏ., பி. எல்.
12. திரு. பெ. புலியூர் உடையான்
13. திரு. எ. நாராயணசாமி பி. ஏ.
14. திரு. வி. முருகன்
15. திரு. பி. ராமதுரை பி. ஏ.
16. திரு. ஆர். திருவேங்கடசாமி
17. திரு. எஸ். ரெத்தினம்
18. திரு. எஸ். பி. முனுசாமி
19. திரு. வி. கே. வேலுச்சாமி
20. திரு. டி. நாகராசன்.


## திருக்கோயில்

*அறநிலையத் துறையினால் வெளியிடப்படும் மாத வெளியீடு. ஆண்டுச்சந்தா ரூபாய் 10 அண்மையில் உள்ள உதவி ஆணையர் அலுவலகத்தில் செலுத்தி சந்தாதாரராகச் சேருங்கள்.*

# தியாகராஜசுவாமி ஆலயம்

## திருவாய்மூர் அஞ்சல்

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு தியாக ராஜசுவாமி என்று பெயர். தியாகராஜருக்கு இரத்தின சிம்மாசன நீலவிடங்கன் என பெயர் உண்டு. இது ஸப்தவிடங்கன் ஸ்தலங்களில் ஒன்று. மூலவர் : திருவாய்மூர்நாதர், திருவேதாரணியேஸ்வரர், அம்பாள்: திருபாலினும் நன்மொழியாள், ஸ்தல விருட்சம் : பலாமரம். தீர்த்த விசேடம் கோவிலுக்கு எதிரிலுள்ள "ஆரிய தீர்த்தம்"

முன்னொரு காலத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் திருமறைக்காட்டில் வேதங்களாலே திருக்காப்பிடப்பட்ட திருக் கதவை திறக்கவும் அடைக்கவும் பாடி திருவேதநாயகனை தெரிசித்து மட ஆலயத்தை அடைந்தபின் திருநாவுக்கரசுசுவாமிகள் 'பண்ணினேர் மொழி யாளுமை' என்ற பதிகம் முழுவதும் பாடியபின் திருக்கதவு திறக்கப்பட்ட அருமையையும், ஞானசம்பந்த சுவாமிகள் "சதுரம்மறை" என்ற முதற் பாட்டை பாடிய உடனே அஃதடைக்கப்பட்ட எளிமையையும் சிந்தித்து நித்திரை செய்யும் பொழுது திரு சிவபெருமான் நாயனாரிடம் சென்று நாம் வாய்மூரில் இருப்போம் அவ்விடத்திற்குத் தொடர்ந்துவா என்று கட்டளையிட நாயனார் "எங்கே என்னை" என்னும் திருப்பதிகம் பாடிக்கொண்டு எழுந்து சுவாமியின் பின் தொடர்ந்து நெடுந்தூரம் செல்ல சிவபெருமான் சமீபத்தில் காட்சி கொடுப்பவர்போல் ஒரு திருக்கோயிலை எதிரே காண்பித்து அதனுள் புகுந்தருளினார். சம்பந்தசுவாமிகளும் நாயனார் வாய்மூருக்குப் போவதை கேள்வியுற்று அங்கு வந்து சேர்ந்தார். திருநாவுக்கரசு சுவாமிகள் சிவ பெருமான் பின் தொடர்ந்து சுவாமியைக் காணமல் அடியார்களில் சிறந்த ஞானசம்பந்த சுவாமிகளே. திருக்கதவை திறக்க வேண்டும் என்பதை நினை யாமல் திறந்த குற்றம் செய்த சிறியேனுக்கு ஒளிக்கலாம் ஒரு திருப்பதிகத் தின் முதற்பாட்டிலேயே அத்திருக்கதவை அடைப்பித்த ஞானசம்பந்த சுவாமிகளும் இங்கே வந்து இருப்பதால் அவருக்கு எப்படி ஒளிக்கலாம் என்றார். உடனே அப்பிரான் உமாதேவியாரோடும் பிரமன் விஷ்ணு முதலான சகல தேவர்களோடும் திவிய நடனம் செய்ய ஞானசம்பந்த சுவாமிகளும் கண் குளிர தெரிசித்து "தளிரிள வளரெனவுமைபாட" என்னும் திருப்பதிகம் பாடினார்.

இத்திருக்கோயிலில் இருந்து பள்ளிச் சிறுவர்களுக்கு பகல் உணவு அளிக்கப்படுகிறது. மேலும் இலவச மருத்துவமனை இக்கோயிலில் நடத்தப் படுகிறது. இந்தத் திருக்கோயிலுக்கு அருகாமையில் திருநெல்லிக்காவல் என்னும் சிற்றூரில் ரயில்வே ஸ்டேஷன் அமைந்துள்ளது.

நிர்வாக அதிகாரி

K. துரைசாமி B. A.,

அறங்காவலர்கள்;

K. ரெத்தினசபாபதி (தலைவர்) R. திருஞானசம்பந்தம்

தருமை ஆதீனம்

# ஸ்ரீ வீரட்டேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## திருப்பறியலூர் (தஞ்சை மாவட்டம்)

சிவபெருமானை அவமதிக்கக்கருதி வேள்வியியற்றிய **'தக்கனை'** சமர் புரிந்து இறைவன் மறக்கருணை வெளிப்பட்ட வீரட்டத் திருத்தலம் இது. அட்ட வீரட்டத்துள் ஒன்று. **'தாரகன்'** என்னும் அசுரனால் அமரர்க்கு உண்டாகிய அச்சத்தைப் பறித்ததனால் **'பறியலூர்'** என்று பாராட்டப் பெற்றது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பதிகம் பெற்றது. திருநாவுக்கரசர் திருவாக்கில் வைத்துப் பாடப்பெற்ற சிறப்புடையது. திருவாவடுதுறை ஆதீனக் குருமகாசந்நிதானமாக வீற்றிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ பின்வேலப்ப தேசிக சுவாமிகள் பாடியருளிய தலபுராணம் உண்டு.

இத்தலம்: மாயூரம் தரங்கம்பாடி வழியில் செம்பனார்கோயிலுக்குத் தென்மேற்கே ஒன்றேகால் கல் தொலைவிலுள்ளது.

தருமை ஆதீனம்

# ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## குத்தாலம் தஞ்சை மாவட்டம்

வற்றாத வளங்கொழிக்கும் காவிரியின் வனப்புமிக்கத் தென்கரையில் அமைந்துள்ளது இத்திருத்தலம். 'திருத்துருத்தி' என்ற தொன்மை பெயர் உடையது.

இறைவன் : சொன்னவாறறிவார்
இறைவி : அரும்பன்ன வனமுலையாள்
தலவிருட்சம் : உத்தாலமரம்

சுந்தரமூர்த்திசுவாமிகளின் உடற்பிணி போக்கிய தீர்த்தச் சிறப்புடையது இத்தலம். இத்தலம்: கும்பகோணம் – மாயூரம் பேருந்துப் பெருவழியில் உள்ளது. மாயூரமிருந்து 8 கல் தொலைவு.

# ஸ்ரீ சாரநாதப்பெருமாள் தேவஸ்தானம்

## திருச்சேறை

கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இந்தத் திருக்கோயில் குடந்தை புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே திருவாரூர் செல்லும் சாலையில் 9 கல் தொலைவில் உள்ளது. குடந்தையிலிருந்தும், திருவாரூரிலிருந்தும் இங்குச் செல்ல பேருந்து வசதியுண்டு. சோழமன்னர்களால் கட்டப்பட்ட இந்த ஆலயமானது திருமங்கை ஆழ்வாரால் பாடல்பெற்றது.

பெருமாளுக்கு இங்கு ஐந்து லட்சுமிகள் உண்டு. பெருமாளின் திருக்கையில் கமலமலர் உள்ளது.

தை மாதத்தில் தைப்பூசத் திருவிழா இங்கு நடைபெறுகிறது. இந்தக் கோயிலைத் தவிர வேறு எந்த விஷ்ணு ஆலயத்திலும் தைப்பூச விழா நடைபெறுவதில்லை. ஆவணி மாதத்தில் திருப்பவித்ரோத்சவம் புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா, ஐப்பசி மாதத்தில் மணவாள மாமுனி விழா, கார்த்திகை, மார்கழி மாதங்களில் திருவாய் மொழித் திருநாள் ஆகியவை இங்கு முக்கிய விழாக்களாகும்.

மேற்படி ஆலயத்தின் வடகிழக்கே ஒருபர்லாங் தூரத்தில் திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற ஸ்ரீ சாரபரமேஸ்வரர் ஆலயம் உள்ளது. அது ஸ்ரீ சாரநாதப்பெருமாள் ஆலயத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

நிர்வாக அதிகாரி

**S. பிச்சையா B. A. (Hons.)**

அறங்காவலர்கள் :

R. K. ராதாகிருஷ்ண செட்டியார் (தலைவர்)

K. ராமதாஸ் அய்யர் — T. S. கோவிந்தராஜன்

A. பழனிவேலு V. H. M. — P. கோவிந்தராஜன்

# தேவாரத்தலங்கள் - 275

## 1. சோழநாடு - 191

1 கோயில் (சிதம்பரம்)
2 திருவேட்களம்
3 திருநெல்வாயில் (சிவபுரி)
4 திருக்கழிப்பாலை
5 திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாள்புரம்)
6 திருமயேந்திரப்பள்ளி
7 தென்திருமுல்லைவாயில்
8 திருக்கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை)
9 திருச்சாய்க்காடு (சாயாவனம்)
10 திருப்பல்லவனீச்சுரம் (காவிரிப்பூம் பட்டினம்)
11 திருவெண்காடு
12 கீழைத்திருக்காட்டுப்பள்ளி
13 திருக்குருகாவூர்
14 சீர்காழி
15 திருக்கோலக்கா
16 திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன்கோவில்)
17 திருக்கண்ணார்கோயில் (குறுமாணக் குடி)
18 திருக்கடைமுடி (கீழையூர்)
19 திருநன்றியூர்
20 திருப்புன்கூர்
21 திருநீடூர்
22 அன்னியூர்
23 வேள்விக்குடி
24 எதிர்கொள்பாடி (மேலைத்திருமணஞ் சேரி)
25 திருமணஞ்சேரி
26 திருக்குறுக்கை
27 கருப்பறியலூர் (மேலைக்காழி) தலை ஞாயிறு
28 குரக்குக்கா
29 திருவாளொளிப்புத்தூர்
30 மண்ணிப்படிக்கரை(இலுப்பைப்பட்டு)
31 ஓமாம்புலியூர்
32 கானாட்டுமுள்ளூர்
33 திருநாரையூர்
34 கடம்பூர் (மேலைக்கடம்பூர்)
35 பந்தணைநல்லூர்
36 கஞ்சனூர்
37 திருக்கோடிக்கா
38 திருமங்கலக்குடி
39 திருப்பனந்தாள்
40 திருஆப்பாடி
41 திருச்சேய்ஞலூர்
42 திருந்துதேவன்குடி
43 திருவியலூர்
44 கொட்டையூர்
45 இன்னம்பர்
46 திருப்புறம்பயம்
47 திருவிசயமங்கை
48 திருவைகாவூர்
49 வடகுரங்காடுதுறை
50 திருப்பழனம்
51 திருவையாறு
52 திருநெய்த்தானம்
53 பெரும்புலியூர்
54 திருமழபாடி
55 திருப்பழுவூர்
56 திருக்கானூர்
57 அன்பில்ஆலந்துறை (அன்பில்)
58 திருமாந்துறை
59 திருப்பாற்றுறை
60 திருவானைக்கா (ஜம்புகேசுரம்)
61 திருப்பைஞ்ஞீலி
62 திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)
63 திருஈங்கோய்மலை (திருலிங்கநாதமலை)
64 திருவாட்போக்கி (மாணிக்கமலை)
65 கடம்பந்துறை (குழித்தலை)
66 திருப்பராய்த்துறை
67 கற்குடி (உய்யக்கொண்டான்)
68 முக்கீச்சுரம் (உறையூர்)
69 திருச்சிராப்பள்ளி
70 எறும்பியூர்
71 நெடுங்களம்
72 மேலைத்திருக்காட்டுப்பள்ளி
73 திருவாலம்பொழில்
74 திருப்பந்துருத்தி
75 கண்டியூர்
76 திருச்சோற்றுத்துறை
77 திருவேதிகுடி

78 தென்குடித்திட்டை (திட்டை)
79 திருப்புள்ளமங்கை
80 சக்கரப்பள்ளி (ஐயம்பேட்டை)
81 திருக்கருகாவூர் (திருக்களாவூர்)
82 திருப்பாலைத்துறை
83 திருநல்லூர்
84 ஆவூர்
85 திருச்சத்திமுத்தம்
86 பட்டீச்சுரம்
87 பழையாறைவடதளி
88 திருவலஞ்சுழி
89 குடமூக்கு (கும்பகோணம்)
90 குடந்தைக்கீழ்க்கோட்டம்
91 குடந்தைக்காரோணம்
92 திருநாகேச்சுரம்
93 திருவிடைமருதூர்
94 தென்குரங்காடுதுறை (ஆடுதுறை)
95 திருநீலக்குடி (தென்னலக்குடி)
96 வைகன்மாடக்கோயில்
97 திருநல்லம் (கோனேரிராசபுரம்)
98 கோழம்பம்
99 திருவாவடுதுறை
100 திருத்துருத்தி (குற்றாலம்)
101 திருவழந்தூர்
102 திருமயிலாடுதுறை (மாயூரம்)
103 திருவிளநகர்
104 திருப்பறியலூர் (பரசலூர்)
105 திருச்செம்பொன்பள்ளி
106 திருநனிப்பள்ளி (புஞ்சை)
107 திருவலம்புரம்
108 தலைச்சங்காடு
109 ஆக்கூர்
110 திருக்கடவூர்
111 திருக்கடவூர் மயானம்
112 திருவேட்டக்குடி
113 திருத்தெவிச்சேரி
114 தருமபுரம்
115 திருநள்ளாறு
116 கோட்டாறு
117 அம்பர்ப்பெருந்திருக்கோயில்
118 அம்பர்மாகாளம்
119 திருமீயச்சூர்
120 திருமீயச்சூர் இளங்கோயில்
121 திலதைப்பதி (மணிமுத்தம்)
122 திருப்பாம்புரம்
123 சிறுகுடி
124 திருவீழிமிழலை
125 திருவன்னியூர்
126 கருவிலி
127 பேணுபெருந்துறை (திருப்பந்துறை)
128 நறையூர்ச்சித்தீச்சுரம்
129 அரிசிற்கரைப்புத்தூர்
130 சிவபுரம்
131 கலையநல்லூர் (சாக்கோட்டை)
132 கருக்குடி (மருதாந்தநல்லூர்)
133 திருவாஞ்சியம்
134 நன்னிலம்
135 திருக்கொண்டீச்சுரம்
136 திருப்பனையூர்
137 திருவிற்குடி
138 திருப்புகலூர்
139 திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம்
140 இராமனதீச்சுரம்
141 திருப்பயற்றூர்
142 திருச்செங்காட்டாங்குடி
143 திருமருகல்
144 திருச்சாத்தமங்கை
145 நாகைக்காரோணம் (நாகபட்டினம்)
146 சிக்கல்
147 கீழ்வேளூர்
148 தேவூர்
149 பள்ளியின் முக்கூடல் (அரியான் பள்ளி)
150 திருவாரூர்
151 திருவாரூர் அரநெறி
152 திருவாரூர் பரவையுள்மண்தலி
153 திருவிளமர்
154 கரவரம் (கரையபுரம்)
155 பெருவேளூர் (காட்டுவராயன் பேட்டை)
156 தலையாலங்காடு
157 குடவாயில்
158 திருச்சேரை
159 நாலூர் மயானம்
160 கடுவாய்க்கரைப்புத்தூர்
161 இரும்பூளை (ஆலங்குடி)
162 அரதைப்பெரும்பாழி (அரித்துவார மங்கலம்)
163 அவளிவள்நல்லூர்
164 பரிதிநியமம்
165 வெண்ணி
166 பூவனூர்
167 பாதாளீச்சுரம் (பாமணி)
168 திருக்களர்
169 சிற்றேமம்
170 திருஉசாத்தானம்

171 இடும்பாவனம்
172 கடிக்குளம்
173 தண்டலைநீள்நெறி
174 கோட்டூர்
175 திருவெண்துறை
176 கொள்ளம்பூதூர்
177 பேரெயில்
178 திருக்கொள்ளிக்காடு
179 திருத்தெங்கூர்
180 திருநெல்லிக்கா
181 திருநாட்டியத்தான்குடி
182 திருக்காருயில் (திருக்காறைவாசல்)
183 கன்றுப்பூர்
184 வலிவலம்
185 கைச்சினம்
186 திருக்கோளிலி
187 திருவாய்மூர்
188 திருமறைக்காடு (வேதாரண்யம்)
189 அகத்தியான்பள்ளி
190 திருக்கோடி (குழகர்கோயில்)
191 திருவிடைவாய்

## 2. ஈழநாடு - 2

192 திருக்கோணமலை
193 திருக்கேதீச்சுரம்

## 3. பாண்டிநாடு - 14

194 திருஆலவாய் (மதுரை)
195 திருஆப்பனூர் (திருஆப்புடையார் கோயில்)
196 திருப்பரங்குன்றம்
197 திருவேடகம்
198 கொடுங்குன்றம் (பிரான்மலை)
199 திருப்புத்தூர்
200 திருப்புனவாயில்
201 இராமேச்சுரம்
202 திருஆடானை
203 திருக்கானப்பேர் (காளையார்கோயில்)
204 திருப்பூவணம்
205 திருச்சுழியல்
206 திருக்குற்றாலம்
207 திருநெல்வேலி

## 4. மலை நாடு - 1

208 திருஅஞ்சைக்களம்

## 5. கொங்கு நாடு - 7

209 அவிநாசி
210 திருமுருகன்பூண்டி
211 திருநணா (பவாநி)
212 திருச்செங்குன்றூர்
213 வெஞ்சமாக்கடல்
214 திருப்பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி)
215 கருவூர்

## 6. நடுநாடு - 22

216 திருநெல்வாயில் அரத்துறை (திருவரத்துறை)
217 பெண்ணாகடம்
218 கூடலையாற்றூர்
219 எருக்கத்தம்புலியூர் (இராசேந்திரன் பட்டினம்)
220 திருத்தினைநகர்
221 திருச்சோபுரம் (தியாகவல்லி)
222 திருவதிகை
223 திருநாவலூர்
224 திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)
225 திருநெல்வெண்ணெய்
226 திருக்கோவலூர்
227 அறையணிநல்லூர்
228 இடையாறு
229 திருவெண்ணெய்நல்லூர்
230 துறையூர்
231 வடுகூர் (ஆண்டார்கோயில்)
232 திருமாண்குழி
233 திருப்பாதிரிப்புலியூர்
234 திருமுண்டீச்சுரம்
235 புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்)
236 திருவாமாத்தூர்
237 திருவண்ணாமலை

## 7. தொண்டை நாடு - 32

238 திருக்கச்சியேகம்பம் (காஞ்சீபுரம்)
239 திருக்கச்சிமேற்றளி ,,
240 ஓணகாந்தன்தளி ,,
241 திருக்கச்சி அநேகதங்காபதம் ,,
242 திருக்கச்சி நெறக்காரைக்காடு ,,
243 குரங்கணில்முட்டம்
244 மாகறல்
245 திருவோத்தூர்
246 திருப்பனங்காட்டூர் (திருப்பனங்காடு)
247 திருவல்லம்
248 திருமாற்பேறு
249 திருவூறல் (தக்கோலம்)
250 இலம்பையங்கோட்டூர்
251 திருவிற்கோலம்
252 திருவாலங்காடு
253 திருப்பாசூர்
254 திருவெண்பாக்கம்
255 திருக்கள்ளில்
256 திருக்காளத்தி
257 திருஒற்றியூர்
258 திருவலிதாயம் (பாடி)
259 வட திருமுல்லைவாயில்
260 திருவேற்காடு
261 மயிலாப்பூர்
262 திருவான்மியூர்
263 திருக்கச்சூர்
264 திருவிடைச்சுரம்
265 திருக்கழுக்குன்றம்
266 அச்சிறுபாக்கம்
267 திருவக்கரை
268 அரகலி (ஒழிந்தியாப்பட்டு)
269 இரும்பைமாகாளம்

## 8. துளுவை நாடு - 1

270 கோகர்ணம்

## 9. வடநாடு - 5

271 ஸ்ரீ பருப்பதம் (ஸ்ரீ சைலம் மல்லிகார்ச்சுனபுரம்)
272 இந்திரநீலப்பருப்பதம்
273 அநேகதங்காபதம்
274 திருக்கேதாரம்
275 திருநொடித்தான்மலை (கயிலாயம்)

# திவ்வியபிரபந்தத் தலங்கள் - 108

## 1. சோழநாடு - 40

1 கோயில் (திரு அரங்கம்)
2 கோழி (உறையூர்)
3 தஞ்சைமாமணிக்கோயில்
4 அன்பில்
5 உத்தமர்கோயில் (கரம்பனூர்)
6 திருவெள்ளறை
7 புள்ளம்பூதங்குடி
8 திருப்பேர்நகர் (கோவிலடி)
9 ஆதனூர்
10 திருஅழுந்தூர் (தேரழுந்தூர்)
11 சிறுபுலியூர்
12 திருச்சேறை
13 தலைச்சங்கநாண்மதியம் (தலைச்சங்காடு)
14 திருக்குடந்தை (கும்பகோணம்)
15 கண்டியூர்
16 திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் கோயில்)
17 திருக்கண்ணபுரம்
18 திருவாலிதிருநகரி
19 திருநாகை (நாகபட்டினம்)
20 திருநறையூர் (நாச்சியார்கோயில்)
21 நந்திபுரவிண்ணகரம் (நாதன்கோயில்)
22 திருஇந்தளூர் (திருவிழந்தூர்)
23 தில்லைத் திருச்சித்திரக்கூடம் (சிதம்பரம்)
24 காழிச் சீராமவிண்ணகரம் (தாடாளன் சந்நிதி)
25 கூடலூர் (ஆடுதுறைப் பெருமாள் கோயில்)

26 திருக்கண்ணங்குடி
27 திருக்கண்ணமங்கை
28 கவித்தலம்
29 திருவெள்ளியங்குடி
30 மணிமாடக்கோயில் (திருநாங்கூர்)
31 வைகுந்த விண்ணகரம் ,,
32 அரிமேய விண்ணகரம் ,,
33 வண்புருடோத்தமம் ,,
34 செம்பொன்செய்கோயில் ,,
35 திருத்தெற்றியம்பலம்
36 திருத்தேவனார்தொகை
37 திருமணிக்கூடம்
38 காவளம்பாடி
39 திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்)
40 பார்த்தன்பள்ளி

## 2. பாண்டிநாடு - 18

41 திருமாலிருஞ்சோலை
42 திருக்கோட்டியூர்
43 திருமெய்யம்
44 திருப்புல்லாணி (தர்ப்பசயனம்)
45 திருத்தண்காலூர் (திருத்தங்கால்)
46 திருமோகூர்
47 திருக்கூடல் (தென்மதுரை)
48 ஸ்ரீவில்லிபுத்தூர்
49 திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி) நவதிருப்பதி
50 தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி)
51 திருப்புளியங்குடி
52 திருப்பேரை
53 ஸ்ரீ வைகுந்தம்
54 வரகுணமங்கை
55 திருக்குளந்தை (பெருங்குளம்)
56 திருக்கோளூர்
57 சிரீவரமங்கை
58 திருக்குறுங்குடி

## 3. மலைநாடு - 13

59 திரு அனந்தபுரம் (அனந்தசயனம்)
60 திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்)
61 திருக்காட்கரை
62 திருமூழிக்களம்
63 குட்டநாடு (திருப்புலியூர், புலியூர்)
64 திருச்செங்குன்றூர் (செங்கன்னூர் சிற்றாறு)
65 திருநாவாய்
66 திருவல்லவாழ் (திருவல்லாய்)
67 திருவண்வண்டூர் (திருவமுண்டூர்)
68 திருவாட்டாறு
69 வித்துவக்கோடு
70 திருக்கடித்தானம்
71 திருஆறன்விளை (ஆறன்விளை)

## 4. நடுநாடு - 2

72 திருஅயந்திரபுரம்
73 திருக்கோவலூர்

## 5. தொண்டைநாடு - 22

74 அத்தியூர் (காஞ்சி)
75 அட்டபுயகரம் (அஷ்டபுஜம்) ,,
76 திருத்தண்கா (விளக்கொளிக் கோயில்) ,,
77 வேளுக்கை ,,
78 பாடகம் (காஞ்சி)
79 நீரகம் ,,
80 நிலாத்திங்கள் துண்டம் ,,
81 ஊரகம் (உலகளந்த பெருமாள் கோயில்) ,,

82 திருவெஃகா (யதோத்காரிய சந்நிதி) (காஞ்சி)
83 காரகம் ,,
84 கார்வானம் ,,
85 கள்வனூர் ,,
86 பவளவண்ணம் (பவள வண்ணர் சந்நிதி ,,
87 பரமேச்சுவர விண்ணகரம் (வைகுண்டப்பெருமாள் கோயில்) ,,
88 திருப்புட்குழி
89 திருநின்றவூர்
90 திருஎவ்வுள் (திருவள்ளூர்)
91 திருநீர்மலை
92 திருஇடஎந்தை (திருவிடந்தை)
93 திருக்கடல்மல்லை (மகாபலிபுரம்)
94 திருவல்லிக்கேணி
95 கடிகை (கடிகாசலம்) (சோளிங்கபுரம்)

### 6. வடநாடு - 12

96 திருவேங்கடம் (திருப்பதி)
97 சிங்கவேள்குன்றம் (அகோபிலம்)
98 அயோத்தி
99 நைமிசாரணியம்
100 சாளக்கிராமம்
101 வதரியாச்சிரமம் (பதரிகாச்ரமம்)
102 கண்டம் என்னும் கடிநகர்
103 திருப்பிரிதி (ஜோஷிமடம்)
104 துவாரகை
105 வடமதுரை
106 திருஆய்ப்பாடி (கோகுலம்)
107 திருப்பாற்கடல்

### 7. பரமபதம் - 1

108 பரமபதம்


## ஸ்ரீ சக்கரபாணிசுவாமி தேவஸ்தானம்
## கும்பகோணம்

திருக்குடந்தை நகரின்கண் பெரியகடைத்தெருவின் வடகோடியிலும் காவிரிநதிக்குத் தென்கரையிலும் அமைந்துள்ளது.

**ஸ்ரீ சக்கரபாணி சுவாமியின் உருவத்தோற்றம் :**

மூன்று கண்கள், ஜுவாலாகேசம், எட்டுக் கைகள், அவைகளில் எட்டு ஆயுதங்கள், மும்மூர்த்திகளின் சொரூபம். ஸ்ரீ சக்கரபாணிசுவாமியின் பின்புறம் ஸ்ரீ நரசிம்ஹனின் சொரூபம் இருப்பதால் சுவாமி மிகவும் உக்கிர மூர்த்தியாய் விளங்குகிறார். மண்டலக்கணக்கில் பகவானை வலம் வந்தால் எல்லா அனுகூலங்களும் உண்டாகும்.

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னருக்கு வயிற்றுவலி நீங்கியதின் காரணமாக அன்னாரின் வெண்கல உருவச்சிலை சுவாமிசன்னதியில் உள்ளது. திருமழிசை ஆழ்வாரால் பாடப்பெற்றது.

எஸ். குருமூர்த்தி
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :
எம். கே. கந்தசாமி பிள்ளை (தலைவர்), வி. ராமையா முதலியார்

# மெய்க்கீர்த்தி

அ. மா. பரிமணம், எம். ஏ., எம். லிட்.,
தமிழ்ப்பேராசிரியர்,
பழனியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி, பழனி.

காதலும் வீரமும் தம் வாழ்வியல்புகளாகக்கொண்டு விளங்கிய பழந்தமிழர், போர்க்களத்தில் புறங்கொடாது, எதிர்த்து நின்று, போரிட்டு இறந்துபட்ட வீரர்கட்குக் கல்நட்டு, வழிபாடாற்றி நினைவுறும் வீரவழிபாட்டு மரபினைக் கொண்டிருந்தனர். அக் கல்லில் இறந்தவரின் பெயரும் சிறப்புக்களும் பொறிக்கப்பட்டிருக்கும். இந்நடுகல் அமைப்பு முறையினை,

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தவென்று
இருமூன்று வகையில் கல்லொடு புணர'

(தொல். புறம் - 5)

எனத் தொல்காப்பியம் விதிக்கின்றது. அக் கல்லில் இறந்தோரின் பெயரும், பெருமையும் எழுதப்பட்டிருக்குமாற்றை, நோய் பாடியார் என்னும் புலவர் தனது அகப் பாடலில்,

'... ... பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேலூன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்'

(அகம் 67 - 8, 10)

எனக் குறிப்பிடுகின்றார். மேலும், மருதன் இளநாகனர் என்ற புலவரும் தம் அகப் பாட்டில் (அகம் - 131) இவ்வடிகளாலேயே இச்செய்தியினை விளக்கியுள்ளார். நடுகல்லில் பெயர் எழுதும் வழக்கம் வளர்ந்து கல்லில் ஓர் ஆண் உருவத்தைப் பொறிக்கும் வழக்கமாக மாறியதை, மகேந்திரவர்மன் காலத்திய நடுகல் ஒன்றில், வீரன் ஒருவன் போர்க்கோலத்தோடு வாளும் கிடுகும் ஏந்தி நிற்கும் ஓவியத்தால் அறியலாம். அவ் வழக்கம் பின்னர் வீரன் உருவைச் சிலையில் வடித்து நடுவதாக மாறிப் பெண்களுக்கும் சிலை அமைக்கும் பழக்கமாக வளர்ச்சியுற்ற நிலையினைச் சிலப்பதிகாரக் காவியத்தால் அறியலாம்.

வீரவழிபாட்டுச் சின்னமாய் அமைந்த நடுகற்களில் எழுதப்பட்டு வந்த முறையினைப் பின்பற்றியே, பின்னர் வந்த சமண முனிவர்கள் தாமுறைந்த குகைப்பாறையிலும், பின்னர்க் குடைவரைச் சுவர்களிலும் எழுத்துக்களைப் பொறித்துவைக்கும் செயலை மேற்கொண்டனர். இக்கல்லெழுத்துக்களின் பயனை அறிந்த மன்னர்கள் தாங்கள் பொது மக்களுக்கு உணர்த்த விரும்பிய பொதுச் செய்திகளையும், தங்கள் கொடை வீரம் முதலியவற்றை உணர்த்தும் சிறப்புச்செய்திகளையும் கற்களில் பொறிப்பாராயினர். இப் பழக்கத்தின் பயனே தமிழக ஆலயங்களின் சுவர்களில் நாம்காணும்கல்லெழுத்துக்களும் (சிலாலேகை - சிலாசாசனம் - Inscriptions) புதைபொருள் அகழ்வாராய்ச்சியிற்கிடைத்த செப்பேடுகளும் (செப்புப்பட்டயம் - Copper Plates) ஆகும். இவை தமிழ் மக்களின் வரலாற்றையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் உணர்த்தும் சிறந்த கருவிகளாகும் என்பதைத் தமிழ் மக்கள் அண்மையில் உணர்ந்து போற்றிப் பயன்கொள்வாராயினர்.

தமிழகத்தில் இன்று காணப்படும் கல்வெட்டுக்களின் தோற்ற வளர்ச்சி ஒருதனி ஆராய்ச்சிக்கு உரியதாகும். இக்கல்வெட்டுக்கள் வட்டெழுத்து முதலான எழுத்து வேறுபாட்டாலும், பிராமி, வடமொழி, தமிழ் முதலிய மொழி வேறுபாட்டாலும், நன்கொடை, இலக்கியம், வரலாறு, சமயம், வாழ்க்கைநிலை, முதலான பொருள் வேறுபாட்டாலும், உரைநடை செய்யுள் முதலான யாப்பு வேறுபாட்டாலும் பல்வகைப்பட்டு

விரிவாக ஆராயும் நிலையில் உள்ளன. சமண முனிவர்கள் நோன்பியற்றி உயிர் துறந்த இடங்களில் அம்முனிவர்களைப் பற்றிய செய்திகளை அவர்தம் மாணவர்கள் பொறித்து வைத்தனர். சமாதி சாசனம் எனப்படும் இவ்வகைக் கல்வெட்டுக்களைத் தமிழகத்தில் செஞ்சிக்கடுத்த திருநாதர் குன்று, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கழுகுமலை, மதுரைமாவட்டம் ஆனைமலை, திருச்சிராப்பள்ளிக் குன்று முதலிய இடங்களில் காணலாம். ஆலயச் சுவர்களில் அமைந்த கல்வெட்டுக்கள் அரசனே அன்றி, குடிமக்களோ அவ்வாலயத்திற்குச் செய்த சிறப்புக்கள், அவ்வூர்க்குச் செய்த சிறப்புக்கள் முதலியவற்றை உணர்த்த எழுந்தனவாகும். ஆலயங்கட்கு வழங்கப்பட்ட சிறப்புக்களின் விவரங்களை ஆலயச்சுவர்களில் பலரும் அறியப்பொறித்து வைப்பதோடு அவற்றைச் செப்பேடுகளில் பொறித்து வழங்கும் முறையும் உண்டு.

வளர்ச்சியுற்ற நிலையில் அமைந்த கல்வெட்டுக்களை நோக்குமிடத்து அவைமங்கல வாசகம், கல்வெட்டு எழுந்த காலம், கல்வெட்டு உணர்த்தும் செய்திகள், கல்வெட்டில் தொடர்புடையோர் கையொப்பங்கள், ஓம்படைக்கிளவி ஆகிய ஐந்து பகுதிகள் கொண்டிருக்கக் காணலாம். கல்வெட்டு எழுந்தகாலம், அப்போது ஆட்சிபுரியும் மன்னர் தம் ஆட்சி ஆண்டினைக் (Reginal Year) குறிப்பிடுவதாகும். ஆட்சிபுரியும் அரசனைச் சுட்டும்போது அவனுடைய பெயரும், பீடும், (வீரம் கொடை கல்வி முதலான புகழ்) நிரல்படக் குறிப்பிடப்பட வேண்டும். இப்பகுதியே "மெய்க்கீர்த்தி" என வழங்கப் படுகிறது. இத்தொடர், அரசனுடைய மெய்யான புகழ் என்றும், அரசனுடைய புகழ் உடம்பு (கீர்த்திமெய்) என்றும் பொருள்படும்.

மன்னரின் பூதவுடல் மாயினும் மாயாது விளங்கும் புகழுடம்பிற்கு ஏதுவாகிய அவர்தம் வீரம், கல்வி, தறுகண், கொடை முதலிய சிறப்புக்களைக் கூறும் இம்மெய்க்கீர்த்திப் பகுதி, தமிழகக் கல்வெட்டுக்களில் தோன்றுவதற்கு முன்னால் அச்சிறப்புக்கள் அடைமொழிகளாக மன்னவர் பெயர்களுக்கு முன்னர்ச் சேர்த்து எழுதப்பட்டு வந்தன. முதலாம் இராசராசன் தன் ஆட்சித்தொடக்கத்தில் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்துப் பெற்ற சிறப்பு அவன்பெயரின்முன் அடையாக அமைந்து "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய கோராசகேசரி வர்மன்" என்று குறிக்கப்பட்டது. அதுவே, பிறகு மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதியாக அமைந்தவாற்றைப் பின்னர்த் தோன்றிய அவன் கல்வெட்டுக்களால் அறியலாம். பிற்காலத்தெழுந்த பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண விளக்கம் முதலிய இலக்கண நூல்கள் தனி இலக்கணம் வகுக்கும் அளவிற்குச் சிறப்பெய்தியதும், மன்னர்தம் உண்மைப் புகழைத் தொகுத்துக் காட்டுவதுமாகிய "மெய்க்கீர்த்தி" என்னும் இப்பகுதியைத் தொடக்கத்தில் கொண்டு கல்வெட்டுக்களைப் பொறித்த தனிச்சிறப்பு இராசராசப் பேரரசனையே சாரும். இப்பகுதி, 'சீர்மெய்க்கீர்த்தி' 'மெய்க்கீர்த்திமாலை' எனவும் வழங்கப்பெற்றன. தொல்காப்பியங் காட்டும் எண்வகை வனப்பினில் விருந்தின்கண் இதனை அடக்குவர்.

சங்கச்சேரமரபினருள் தொடர்ச்சியான சில அரசர்கள் மீது வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி பதிற்றுப் பத்து எனப்படும். ஒவ்வொரு அரசன்மீதும் பாடப்பட்ட பத்துப் பாடல்களின் இறுதியிலும் பதிகம் என்ற அமைப்பு அமைந்துள்ளது. அதில் அவ்வரசனுடைய வீரம் முதலிய சிறப்புக்கள் செய்யுள் வடிவில் கூறப்பட்டுள்ளன. சேர அரசர்களின் புகழ் கூறும் பதிற்றுப்பத்தின் பதிகங்களேசோழப் பெருவேந்தனை இராசராசன் தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் அமைத்த மெய்க்கீர்த்திகளுக்கு முன்னோடியாக இருந்திருக்கக் கூடும்.

மெய்க்கீர்த்தி எனப்படுவது, பேரரசனுடைய வீரம் கொடை முதலியவற்றால் அமையும் புகழ்ச் செய்திகளைக்கூறி, அம்மன்னன் தன் பெருந்தேவியுடன் நீடுவாழ்வானாக என வாழ்த்தி, அவனுடைய இயற்பெயரோடு ஆட்சியாண்டினை இணைத்துக் கூறும் செய்யுட் பகுதியாகும். அதனை,

"சீர்நான்காகி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்

அந்தத்து அவன் வரலாறு சோல்லியும்
அவளுடன் வாழ்க எனச் சொல்லியும்,
[மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்படவுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி''

எனப் பன்னிரு பாட்டியல் இலக்கணப் படுத்திக் காட்டுகிறது. இப்பாடல் வகை பெரும்பான்மையும் அகவலோசையும் சிறு பான்மை கலியோசையும் கொண்டு சொற் சீரடியால் அமையும்.

இம்மெய்க் கீர்த்தியை, அரசனுடைய முன்னோர் சிறப்பு, அவனுடைய வீரம், நியாயம் முதலியன குறித்துச் செய்யுள் நடையில் எழுதப்படும் 'பிரசஸ்தி' என்னும் வடமொழிச் சாசனப் பாட்டோடு ஒப்பிடுவர் சிலர். உண்மையில் மெய்க்கீர்த்தியும், பிர சஸ்தியும் வேறுபட்டபோக்கு உடையன வாகும். வேள்விக்குடிச் செப்பேடுகள், சின்னமனூர்ச் செப்பேடுகள் ஆகியவற்றில் பிரசஸ்தி சுலோகங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பாடிய புலவர்களின் பெயர் களும் கூறப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் மெய்க் கீர்த்திகளில் அவற்றைப் பாடியவர் பெயர் குறிப்பிடும் வழக்கம் இல்லை.

மெய்க்கீர்த்தி ஏதேனுமொரு மங்கலத் தொடரைத் தொடக்கமாகக்கொண்டு அமை யும். ஒரு அரசனுடைய மெய்க்கீர்த்தி முதன் முதலில் ஒரு புலவரால் பாடப்பட்டுக் கல் வெட்டில் இடம்பெறும். பின்னர், அவ் வரசன் ஆட்சி ஆண்டின் வளர்ச்சிக்கு ஏற்ப அமையும் அவனுடைய புகழ்ச் செய்திகளை யும் பிறவற்றையும், அவை தோன்றிய வரி சையில் பாடிச்சேர்க்கப்படும். இம்மெய்க் கீர்த்தி ஓரரசன் ஆட்சிக்காலத்தில் அவன் சிறப்புக்களாக அமைந்த செய்திகளை அவை நிகழ்ந்த முறையில் நிரல்படுத்திக் காட்டுவ தால் அம்மன்னனின் அரசியல் வரலாற்றை அறியப் பேருதவி புரிகின்றன. ஒரு அரச னுடைய பல்வேறு கல்வெட்டுக்களில் உள்ள மெய்க்கீர்த்தி அனைத்தும் ஒரே தொடரை மங்கலவாசகமாகக் கொண்டு அமையும். அன்றி ஒரு அரசனுக்கே வேறு பல மங்கலத் தொடரால் மெய்க்கீர்த்திகள் அமைவதும் உண்டு. அப்பேரரசர்களின் சிறப்புக்களை உணர்த்தவே இம்மெய்க்கீர்த்தியைப் பயன் படுத்தினர்.

இராசராச மன்னரின் மெய்க்கீர்த்திகள் அனைத்தும் ''திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்'' என்னும் ஒரே தொடரைத் தம் மங்கலத் தொடக்கமாகக் கொண்டிலங்கு கின்றன. இராஜேந்திரன் கல்வெட்டுக்கள் ''திருமன்னி வளர இருநில மடந்தையும்'' என்ற மொழிகொண்டு தொடங்குகின்றன. ஆனால், 'திருமன்னிவிளங்கும்' 'புகழ்சூழ்ந்த புணரி', 'புகழ் மாது விளங்க' முதலிய தொடர்களால் முதலாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகளும், 'பூ மருவிய புவி ஏழும்' 'பூ மன்னுபதுமம்', 'பூமன்னுபாவை', 'பூ மேவி வளர', 'பூமேவு திருமகள்' முதலிய தொடர்களால் இரண்டாம் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகளும் அமைந்துள்ளன. தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் இராச ராசன் முதன்முதலில் அமைத்த மெய்க் கீர்த்திப் பகுதி அவன்பின் வந்தவர்களால் தவறாது பின்பற்றப்பட்டது. அவன் காலத் திய மெய்க்கீர்த்திப் பகுதியில் அமைந்த தமிழ்நடை பிழையற்றதாகவும், தெளிவு உடையதாகவும் அமைந்துள்ளன. இது கொண்டு, இவனுடைய ஆட்சியில் தமிழ் மொழி அடைந்திருந்த சிறப்பினை ஒருவாறு உணரலாம்.

இராசராசன் தனது ஒன்பதாவது ஆட்சியாண்டில் முதன்முதலாக மெய்க் கீர்த்தியினை அமைத்துக் கல்வெட்டுக்களைப் பொறித்ததாக அறிகிறோம். அதற்குமுன் காந்தளூர்ச்சாலையில் கலமறுத்து அவன் அடைந்த சிறப்பு, அவன் இயற்பெயருக்கு முன்னால் ஒரு அடைமொழியாகவே குறிக் கப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் தோன் றிய அவனுடைய மெய்க்கீர்த்திகள் அனைத் தும் புகழ்ப்பட்டியலின் முதற்செய்தியாகவே அதனைக் குறித்துச் செல்கின்றன. இராச ராசன் தன் கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த் தியை அமைத்ததற்கு முன், அரசர்களின் வீரச்செயல்களை உணர்த்தும் அடைமொழி களையும், பட்டங்களையும் இயற்பெயருக்கு முன்னால் சேர்த்துக் கல்வெட்டுக்களிலே குறித்து வந்தனர்.

இராசராசப் பெருமன்னரின் இருபத் தைந்தாவது ஆண்டில் எழுந்த கல்வெட்டு ஒன்றில் காணும் மெய்க்கீர்த்தி வருமாறு:

" ஸ்வஸ்திஸ்ரீ
திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்எழில் வளர் ஊழியுள் எல்லாயாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் ஸ்ரீகோ ராஜராஜ ராஜகேசரி
[பன்மரான
ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு
[இருபத்தைந்தாவது "

இம்மெய்க்கீர்த்தி மாபலிபுரத்திலுள்ள கடற்கரைக் கோவிலின் தென்புறச் சுவர்த் தளத்தில் (S. I. I. Vol. 1-40 On the South base of the Shore temple Mamallapuram) காணப்படுகின்றது. மாபலிபுரத்திலேயே காணப்படும் இம்மன்னனுடைய இருபத்து ஆருவது ஆண்டுக் கல்வெட்டும் இதே மெய்க்கீர்த்தியைக் கொண்டுள்ளது. இம் மெய்க்கீர்த்திகளில், இவ்வேந்தனின் ஆட்சித் தொடக்கத்தில் பெற்ற காந்தளூர்ச் சாலைக் கலமறுத்த சிறப்பு. முதல் செய்தியாக இடம்பெற்றுளதைக் காணலாம். இராசராசனின் இருபத்து ஒன்ருவது ஆட்சியாண்டில் எழுந்த மெய்க்கீர்த்தியில், 'இரட்டபாடி ஏழரை இலக்கம்' என்ற பகுதி சேர்க்கப்படவில்லை. (S. I. I. Vol. 1-66 Tirumalai near Polur on the ruined rock in front of the Gopura at the base of the Tirumalai hill.) ஆனல் அவனுடைய இருபத்துநான்காவது ஆட்சி ஆண்டில் எழுந்த மெய்க்கீர்த்தியில் இரட்டபாடி ஏழரை இலக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. (S. I. I. Vol. 5. No. 521 Dakshina Kailasa Shrine in the Panchanadiswara Temple at Tiruvaiyaru) இதனல் இராசராசனுடைய போர் வென்றிகளில் இறுதி வென்றியாகத் திகழும் இரட்டபாடி ஏழரை இலக்கத்தைத் தனது படைச் சிறப்பால் அகப்படுத்திய வெற்றி அவனுடைய இருபத்தைந்தாவது ஆட்சி ஆண்டில் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று உய்த்துணரப்படுகிறது. இம்முறையினல், வேங்கைநாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம் ஆகிய பகுதிகள் எல்லாம் இங்குக்கூறப்பட்ட வரிசையிலேயே வென்று அவன் நாட்டோடு சேர்க்கப்பட்டன என்ற உண்மையும் புலனகிறது.

இராசராசனுக்குப் பின்னர் வந்த இராசேந்திரன் முதலான சோழ வேந்தர்களும், ஏனைப் பாண்டிய மன்னர்களும் இம்முறையிலேயே தத்தம் மெய்க்கீர்த்திகளைப் பெரும்பாலும் அமைத்து வருவாராயினர். அதனல் அவ்வவ்வேந்தர்தம் ஆட்சியில் அமைந்த வென்றிச் சிறப்புக்களை அவை நிகழ்ந்த முறையே அறிய முடிகிறது. மேலும் அரசியல் வரலாற்றை உருவாக்க அம்முறை பெரிதும் பயன்பட்டது. தன்புகழ்ப் பெருமையைப் பின்னவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் அவாவினல் இம்மெய்க்கீர்த்தியை இராசராசன் உருவாக்கியிருக்கலாமாயினும், அதுவே தமிழக அரசியல் வரலாற்றை உணர்த்தும் சிறந்த கருவியாகத் திகழ்தலின், அதனை முதன்முதலில் கல்வெட்டுக்களில் அமைத்த அவ்வேந்தர் பெருமானுக்குத் தமிழ் வரலாற்றுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. இவ்வகையில் தமிழக வரலாற்றைச் செம்மைபெற அறிந்துகொள்வதற்குப் பேருதவி புரிந்த பெருமை மாமன்னர் இராசராசனையே சேரும்.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்பும் இலக்கிய நயமும் ஒருங்கே திகழுமாறு இராசராசனல் அமைக்கப்பட்ட இம்மெய்க்கீர்த்திகள் சங்க காலச் சேர மன்னர்தம் பதிற்றுப்பத்து இலக்கியத்தில் கால்கொண்டு இடைக்காலச் சோழ பாண்டியர்தம் கல்வெட்டுக்களில் வளம்பெற்றுச் சிறக்கலாயின.

முதலாம் இராசேந்திரன் தான் வென்ற நாட்டுப் பகுதிகளை அடுக்கி உரைக்கும் மெய்க்கீர்த்தியில்,

" கலங்கா வல்வினை இலங்கா கோசமும்
காவலம் புரிசை மேவிலிம் பங்கமும்
விளைப்பந் தூருடை வளைப்பந் தூரும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் வல்வினை மாதமர் லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுறி தேசமும்

தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடல் காவல் கடுமுரண் கிடாரமும்
மாப்பெருந் தண்டால் கொண்ட
கோப்பர கேசரி வர்மன் ''

என வரும் பகுதிகள் இலக்கிய நயமிக்கதாகத் திகழக் காணலாம்.

இந்நிலையில், சிற்றிலக்கியங்களின் இலக்கணம் இயம்பும் பிற்கால இலக்கண நூற்களாகிய பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கம் முதலியன மெய்க்கீர்த்தியினைத் தனியே ஒரு சிற்றிலக்கிய வகையாகக் கொண்டு ''மெய்க்கீர்த்தி மாலை'', ''சீர்மெய்க்கீர்த்தி'' என்ற பெயரில் இலக்கணம் கூறியுள்ளமை அறியத்தக்கதாகும். பாட்டும் தொகையுமாய் விளங்கும் இலக்கியத்தில் பழந் தமிழகத்தின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை விளக்கும் வரலாற்றுக் கூறுகளைக் கண்டறிந்த தமிழ் அறிஞர்கள், ஆலயச் சுவர்களிலும் செப்பேடுகளிலும் அடங்கிக்கிடக்கும் வரலாற்றுப் பகுதியாம் மெய்க்கீர்த்திகளில் காணப்படும் இலக்கிய நயம் உணர்ந்து பயன்கொள்வார்களாக.

தருமை ஆதீனம்

## குமரக்கட்டளை

# ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

## குமரக்கட்டளை, மாயூரம்

மாயூரம் நகரில் ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலில் உள்ள இந்த முருகப் பெருமான் திருக்கோயில் தருமையாதீன அருளாட்சிக்குட்பட்டது ஆகும்.

" மாயூரநாதப்பெருமானை " வழிபட்டே " முருகப்பெருமான் " சூரசம்காரத்திற்குச் செல்ல எழுந்தருளினர் என்பது கந்தபுராணத்தால் அறியப் படுகிறது. கந்தபுராணத்தில் சூரசம்ஹாரத்துக்கு எழுந்தருளி வந்து பாடியிறங்கிய தலமாகக் குறித்த நிலையில் முருகப்பெருமான் வில்லேந்திய வேலனாகக் காலில் வீரக்கழலுடன் நிற்கும் எழில் வடிவில் திகழ்கின்றான்.

இங்கே ஐப்பசி " கந்தசஷ்டிப் பெருவிழாவில் '' முருகப்பெருமான் பேரழகுக்கோலம் பூண்டு வழிபடும் அன்பர் மனக்கவலைகளை அறவே அழித்து அருள் வழங்குபவன். மாதக்கார்த்திகை அபிஷேக விழா மிகச் சிறப்பானது. தங்கும் விடுதி திருக்கோயில் அருகில் இருக்கிறது.

# தந்தையும் தனயனும்

அ. மு. பரமசிவானந்தம்

## இராசராசன் இளமை

தமிழ் நாட்டு வரலாற்றிலேயே சிறந்த மன்னராகப் போற்றப் பெறும் இராச ராசனும் இராசேந்திரனுமே தந்தையும் தனயனுமாவார்கள். இராசராசன் பராந் தகனுக்கு வானவன் மாதேவி வழியாகப் பிறந்தவன். இவன் ஐப்பசிச் சதய நட்சத் திரத்தில் பிறந்தவன். திருவெண்காட்டில் அந்நாளில் இவன் இறைவனுக்கு விழாச் செய்து வந்தான். இவன் ஆட்சி பற்றிப் பலரும் பலவாறு புகழ்ந்துள்ளனர். உலகத் தைத் தான் தாங்கிக்கொண்டு, ஆதிசேட னுக்குண்டான பளுவைக் குறைத்தவன் என்று இவனைப் புகழ்ந்தனர். இவன்கையில் சங்கு சக்கரக் குறிகள் இருந்தமையின், இவன் காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமே என்றனர். இவன் இயற்பெயர் அருண்மொழித்தேவன் என்பது. இவனது ஆட்சி ஆண்டு நான்கில் மதுராந்தகக் கல் வெட்டு மும்முடிச்சோழன் எனப்புகழ்வதால் இவன் ஆட்சி ஆண்டு மூன்றிற்குள் மற்ற இருபெரு வேந்தரையும் வென்றவனுதல் வேண்டும். எனவே, மேலைக் கடற்கரையில் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்த போர் அதற்கு முந்தியதாக வேண்டும். அந்த வெற்றி ஆண்டிலிருந்து இவன் இராச ராசன் எனவே சிறக்க வழங்கப் பெற்றுன். இவனது தில்லைப் பணிகளைப் பாராட்டி கி. பி. 1004-ல் இவனுக்குத் தில்லைவாழ் அந்தணர்கள் இராசராசன் எனப் பெயரிட் டனர் என்பது பொருந்தாது. 1004-க்கு முன்பே இவனுக்கு இராசராசன் என்ற பெயர் நிலைத்து விட்டது. இவன் தன்சிறிய தந்தை உத்தம சோழனுக்குப் பின் 985-ல் பட்டத்துக்கு வந்தான்; இராசகேசரி என்ற பட்டம் புனைந்தான். இவன் செய்துவைத்த பல பணிகளும் வெற்றிகளும் இவன் மகன் இராசேந்திரனை மிக உயர்ந்தவனுக்க வழி கோலின. இளமையில் பெற்றோரை இழந்த இராசராசனைக் கண்டராதித்தரும் தமக்கை குந்தவையும் வளர்த்தனர் எனலாம்.

## போர்ச்செயல்கள்

இவன் காலத்திலேதான் கல்வெட்டுக் கள் மேல் கண்ட இலக்கணப்படி அகவற் பாவில் உருவாக்கப் பெற்றன. இவனது மெய்க்கீர்த்திகளில் இவன் காந்தளூர்ச்சாலை யில் கலமறுத்த வரலாறே சிறக்கப் புகழப் பெற்றுள்ளது. காந்தளூர்ச்சாலை திருவ னந்தபுரத்தின் ஒரு பகுதி என்பர். அக் காலத்தில் சேர நாட்டை ஆண்ட மன்னன் பாஸ்கர இரவிவர்மன் (978-1036) ஆவன். அவன் சோழர் தூதனைச் சிறைப்பிடித்து உதகையில் வைத்திருந்தான். உதகை என்பது இக்கால உதகமண்டலமன்று; நாகர்கோயில் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூர். அதை அடுத்து இருந்ததே காந்தளூர்ச் சாலை. இராசராசன் படை யெடுத்துச் சென்று காந்தளூர்க் கலமறுத்து வெற்றி கொண்டு தன் தூதனையும் மீட்டு வந்தான். உதகையில் கடல் நடுவே கலங்களில் தூது வன் வைக்கப்பட்டான் போலும்! எனவே, அவற்றை அழித்துத் தூதுவனை மீட்டுவந் தான் இராசராசன் என்பது பொருந்தும்.

சேர நாட்டுக் காந்தளூருக்குச் சோழன் செல்ல வேண்டுமாயின், அவன் பாண்டி நாட்டு எல்லையைக் கடந்தே செல்ல வேண்டும். அக்காலத்தில் பாண்டிநாட்டை அமர புயங்கன் என்னும் பாண்டியன் ஆண்டு வந்தான். எனவே, அப்பாண்டியனுடன் போர்செய்து வெற்றிகண்ட பிறகே இராச ராசன் காந்தளூர் சென்ருன் எனக்கொள்ளல்வேண்டும். எனவே, தன் ஆட்சி ஆண்டு மூன்றில் பாண்டியரையும் சேரரையும் வென்று மும்முடிச் சோழன் ஆனுன். அங்கிருந்து திரும்பிய பின் அவன் தன் பிறந்த நாளாகிய ஐப்பசிச் சதயநாளில் சோழ நாட்டில் பெருவிழாச் செய்தான்.

இராசராசன் போர்களைப் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் ஒரு வகையில் விளக்கிக் காட்டுகின்றன. முதலில் அமர புயங்கப் பாண்டியனை வெற்றிகொண்ட இராசராசன் பின்பு சேரனைக் கொல்லம், கொடுங்கோளூர் முதலிய இடங்களில் தோற்ருேடச் செய்தான். பின்பு குடமலை நாட்டில் பனசோகை என்ற இடத்தில் போர் நடைபெற்றது. அப்போரில் உதவிய 'பனிஜா' மன்னனுக்கு தான் வெற்றி பெற்ற நாட்டை அளித்துத் திரும்பினுன். பின்பு மைசூர், சேலம் பகுதிகளில் உள்ள குட நாட்டுக் கங்கபாடி நுளம்பபாடி நாடுகளையும் வெற்றி கொண்டான் இராசராசன். பின்பு மைசூர்ப் பகுதியிலுள்ள கடிகைப்பாடியை வென்ருன். 991-ல் அங்கு இராசராசனது சிறப்புப் பெயராகிய சோழ நாராயணன் என்னும் பெயரால் ஒரு கல்வெட்டு உண்டு. இப்போர்களிலெல்லாம் படைத்தலைமை பூண்டு, படையைச் செலுத்தினவன் இவன் மகன் இராஜேந்திரனே யாவான். எனவே, இப்போர்களை எல்லாம் இராசேந்திரன் மேல் ஏற்றிக் கூறுவதும் உண்டு.

## ஈழப்படை எடுப்பு

இராசராசன் காலத்தில் ஈழநாட்டில் ஐந்தாம் மகிந்தன் ஆட்சி செய்து வந்தான். அவன் இராசராசனேடு மாறுபட்ட பாண்டியனுக்கும் சேரனுக்கும் உதவியவன். எனவே, இராசராசன் அந்நாட்டின் மேல் படையெடுத்துச் சென்ருன். இவன் படை வருவதறிந்து மகிந்தன் அஞ்சித் தென் கிழக்கு இலங்கையில் ஓடி (இப்போதைய கதிர்காமப் பகுதி) ஒளிந்து கொண்டான். மகன் இராசேந்திரனே படையைச் செலுத்திச்சென்ருன். அவன் படையால் அனுராதபுரம் நிலைகுலைக்கப் பெற்றது. 'பொலனருவா'வைக் கைப்பற்றி அதைச் சோழர் தலைநகராக்கினுன் இராசேந்திரன். ஈழநாடு 'மும்முடிச் சோழ மண்டலம்' என்று சிறந்த வகையில் இராசாராசன் பட்டப்பெயரால் வழங்கப்பெற்றது. தமிழ்நாட்டு முறையில் அங்கேயும் பல கோயில்கள் கட்டப்பட்டன. அவற்றிற்கெனப் பல தானங்களும் வழங்கப்பெற்றன. இவ்வாறு தமிழ்நாடு முழுமையும் தெற்கேயுள்ள ஈழநாட்டையும் தன் கீழ்ப்படுத்தி எதிரிகளே இல்லை என்னுமாறு சிறக்க வாழ்ந்தான் இராசராசன். பொலனருவா இன்றும், அன்றைய சோழர் ஆக்கப்பணிகள் சிலவற்றைத் தாங்கி, தான் சோழர் தலைநகராய் இருந்ததை மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

## வடநாட்டுப் போர்கள்

தென்னுட்டைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திய இராசராசன் வடக்கு நோக்கித் திரும்பினுன். மேலைச் சளுக்கிய மன்னனுகிய சத்தியாசிரயனை வென்ருன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன. இவ்வெற்றியைப் புகழாவிடினும், இவன் சளுக்கியநாட்டைச் சூறையாடிய செய்தியைத் தார்வார் மாவட்டம் ஹொட்டூர் கல்வெட்டு (1007) ஒன்று குறிக்கிறது. இவன் ஆட்சி எல்லை வடமேற்கே துங்கபத்திரை ஆறு வரை பரவியிருந்தது எனலாம்.

அடுத்து வடக்கே கோதாவரி கிருஷ்ணை ஆறுகளுக்கு இடையிலுள்ள வேங்கை நாட்டின்மேல் இராசராசன் போர் தொடுத்தான். அங்கு ஆண்ட கீழைச்சளுக்கிய மன்னனுகிய சத்திவர்மன் சோழனிடம் அடைக்கலம் புகுந்தான். சத்திவர்மன் மகனுகிய விமலாதித்தனே பின் இராசராசன் மகளாகிய குந்தவையை மணம் புரிந்துகொண்டான். எனவே, கீழைச் சளுக்கியர் சோழருடன் நட்பினராகவே இருந்து வந்தனர்.

பின்னர் இராசராசனுனவன் நெல்லூர் மாவட்டத்தின் வட பகுதிகளாகிய சீட்புலி நாடு, பாகிநாடு முதலியவற்றின்மேல் படையெடுத்து வெற்றிகண்டான். அவற்றுடன்

மகாநதிக் கரையிலுள்ள கலிங்க நாட்டிற்கும் (தற்போதைய ஒரிசா) அவன் படையெடுத்து வெற்றிகண்டான். அங்கும் இராசராசன் கல்வெட்டுக்கள் உள்ளனவாம்.

## கடல் கடந்தும் போர்

இறுதியில் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தை இவன் வெற்றி கொண்டான் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இது அரபிக் கடலிலுள்ள லட்சத்தீவுகள் - மால்டாத் தீவுகள் என்பர் ஆய்வாளர். சேர நாட்டுக்குத் தென்மேற்கே உள்ள அத்தீவுகளில் வாழ்வோரால் சேரநாட்டுக் கடல் எல்லையில் அடிக்கடித் தொல்லை நேர்ந்திருக்கக்கூடும். ஒருவேளை சேர பாண்டிய நாடுகளில் தோற்ற பகைவர் சிலர் அங்குச் சென்று மறைந்திருந்து பின்னர்த் தொல்லை தந்துமிருக்கலாம். எனவே, அவர்களை அடக்க அத்தீவுகளையும் கொள்ள வேண்டியதாயிற்று. அதனல் அந்தத் தீவுகளின் மேல் இறுதியாகப் படையெடுத்துச்சென்று அவற்றையும் தன்னடிக்கீழ்க் கொணர்ந்தான். இவ்வாறு காந்தளூர்ச் சாலையில் தொடங்கிய இராசராசன் போர், அக்காந்தளூர்ச்சாலையை அடுத்த பழந்தீவு பன்னீராயிரத்தில் முடிவுற்றது. மீண்டும் அவன் மகனுகிய இராசேந்திரன் சேனைத் தலைவனுய் நின்று வெற்றி வீரனுகவே திரும்பி வந்தான்.

## போர்க்கிடையில் அமைதி

இவ்வாறு ஆட்சித்தொடக்கநாள் முதல் போரே புரிந்து நின்ற இராசராசன் நாட்டுக்கு என்ன நன்மைசெய்தான் என நினைக்கக்கூடும். போரே வாழ்நாளில் சிறந்திருந்தால் நாட்டில் அமைதி எங்கே நிலைக்கும் எனவும் எண்ணலாம். என்றுலும், இராசராசன் காலத்தில் தமிழ்நாடு நல்ல அமைதியிலே பல நலங்கள் பெற்றுச் சிறக்க விளங்கிற்று. மேலே கண்டபடி வலியவந்த போர்களிலும் பிறவற்றிலும் வெற்றிகண்ட இராசராசன், நாட்டை அமைதிமுறையில் ஆளவும் வழி வகுத்தான். தன் மகன் இராசேந்திரனுக்கு 1012-ல் இளவரசுப் பட்டம் கட்டினுன். அவனது ஆட்சி ஆண்டு 29-க்குப் பிறகு கல்வெட்டுக்கள் இல்லை. இளவரசுப் பட்டம் கட்டி இரண்டாண்டுகள் கழித்து 1014-ல் அவன் மறைந்தான் போலும்; அவன் பரம்பரையினர் செய்தமைபோன்று அவனும் துலாபாரம் ஏறினுன். அவன் மனைவியாகிய உலகமாதேவி இரணிய கருப்பம் புகுந்தாள். அவனது ஆட்சி இறுதியில் நாட்டுக்கு அவன்செய்த நலன்கள் பலப்பல.

## தஞ்சைப் பெரிய கோயில்

இன்றளவும் தன் பெருமை குன்ருது, இராசராசன் பெயரை உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவன் இராசராசனே. அக்கோயிலைக் காண்பார் அவனை வியவாதிரார். பல்லவர் ஆட்சிக்குக் கயிலாசநாதர்கோயில் எவ்வாறு மைல்கல்லாய் அமைந்ததோ, அவ்வாறே இந்தப் பிற்காலச் சோழர் ஆட்சிக்கு இத்தஞ்சைப் பெரிய கோயில் மைல்கல்லாய் அமைந்தது. இக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உள்ளது. விமானம் 216 அடி உயரம் உள்ளது. இராசராசன் ஆட்சி ஆண்டு 19-இல் தொடங்கி 24இல் முடிக்கப்பெற்ற கோயில் இது. கருங்கல்லே காண இயலாத அந்தக் காவிரிக் கரையில் எங்கிருந்தோ கற்களைக் கொண்டு வந்து இத்துணைப் பெரிய கோயிலை நான்கே ஆண்டுகளில் கட்டி அமைத்த அந்த இராசராசனை வியவாதிருக்க முடியுமோ? கி. பி. 1010-இல் தன் ஆட்சி ஆண்டு 25-இல் விழா எடுத்துக் கோயிலைச் சிறப்பித்தான் இராசராசன். இதன் வாயில்களுக்கு அவன் பெயர்களே இடப்பெற்றுள்ளன. கேரளாந்தகன் வாயில், இராசராசன் வாயில் என்பன அப்பெயர்கள். இக்கோயிலுக்குக் கருவூர்த் தேவர் திருவிசைப்பாப் பதிகமும் உண்டு. இக்கோயிலும் தேவாரத்தில் வரும் தஞ்சை தளிக்குளமும் ஒன்று என்பர் திரு. பண்டாரத்தார் அவர்கள். எனினும், சிலர் அது வேறு என்றும், திருவாரூர்ப்பக்கத்திலிருந்த ஒரு சிற்றூர்க் கோயிலே அது என்றும் கூறுவர். தேவார காலத்தில் தஞ்சாவூர் இன்மையின், அவர் கூற்று மெய்யெனவே கொள்ளத் தகும். ஆய்வாளர் இதுபற்றி மேலும் ஆய்ந்து முடிவு காண வேண்டும். இவ்வாறு கோயில் அமைத்து அழியாப் புகழ் பெற்ற இராசராசன், சிவபாதசேகரன் எனப் புகழப் பெற்றுன். 'சிவனுடைய பாதங்களைத்தலையில் தாங்கியவன்' என்பது

இதன்பொருள். இவன் சிறந்த சைவனேயாயினும் பிற சமயங்களை வெறுத்தானல்லன். இவன் காலத்தில் கடாரத்தரசன் சூளாமணிவர்மன் நாகபட்டினத்தில் சைனர்களுக்காக கட்டிய இக்கோயிலை 'இராசராசப்பள்ளி' என்றே வழங்கியமை இவனுடைய பரந்த நோக்கை நமக்குக் காட்டுமன்றோ! இவன் திருமாலுக்குச் 'சயங்கொண்ட சோழ விண்ணகரம்' எனப் பங்களூர் மாவட்ட மணவூரில் ஒரு கோயிலும், தலைக்காட்டுக்கு அருகில் மற்றொரு கோயிலும் அமைத்தான் என்றும் கூறுவர். எனவே, இவன் சமயக் காழ்ப்பற்ற சிறந்த [மன்னனாய் விளங்கினான் என்பது பெறப்படும்.

## நில அளவை :

இவன் காலத்தில் தமிழ்நாடு பல நன்மைகளைப் பெற்றது என்கிறோம். அவற்றுள் ஒன்று நில அளவை. சோழ இராச்சியத்தில் உள்ள நிலங்கள் அனைத்தும் இவன் காலத்தில் (கி. பி. 1000இல்) அளக்கப்பெற்றன. அதனால், இவன் உலகளந்தான் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். அந்த அளவு கோல் 15 சாண் நீளமிருந்ததாம். 'மாராயன்' என்ற பெயர் அதற்கு உண்டு என்பர். இவ்வாறு நிலத்தினை அளந்து பிரித்துப் பல்வேறு வகையினில் நிலத்தின் தரம் கண்டதோடு, நீர்ப்பாசன வசதிகளும் செய்தமைத்து நல்ல விளையுளைப் பெருக்கினான் இராசராசன்.

## நாட்டுப் பிரிவுகள்

நாடு, ஆட்சி முறையின் எளிமைக்காகப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் தக்கவர் தலைமையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்டது. நாட்டிலுள்ள ஊர்கள் பெரும்பாலும் சுதந்திரம் பெற்ற வகையில் தம் தம் தேவைகளை நிறைவு செய்து கொண்டன. ஊர்ச் சபைகளே ஊர்களின் நிர்வாகத்துக்கும் பொறுப்பாய் இருந்தன. இராசராசனுக்கு உதவியாகப் பல சிற்றரசர்களும் பல அரசியல் அதிகாரிகளும் இருந்தனர். பல குருநில மன்னர் திறை செலுத்தினர். பழவேட்டரையன் (திருச்சி), கொல்லி மழவன், சங்கர தேவன் (திருவல்லம்), வேளாண் சுந்தரசோழன் (கொடும்பாளூர்), நன்னமரையன் (கடப்பை), இலாடப்பேரையன், வாணகோவரையன் முதலியோர் அவருள் முக்கியமானவர். அவர் போன்றே பல நல்ல அரசியல் அதிகாரிகள் இராசராசனுக்கு அரச காரியங்கள் செவ்வையாக நடைபெற உதவினர். இவன் வரலாற்றைக் கூறும் 'இராசராச விசயம்' என்னும் நூல் இருந்ததாகக் கல்வெட்டால் அறிகிறோம். இன்னும் இவன் குடும்பத்தாரும் இவன் காலத்தில்செய்த அறங்கள் பலப்பல. இவன் காலத்துத் தமிழகம் பெற்ற நன்மைகளைப் பின், 'சோழர் காலத்தில் தமிழ்நாடு' என்னும் பகுதியில் காணலாம்.

## இராசேந்திரன்

இராசராசனுக்குப் பின் இவன் மகன் முதலாம் இராசேந்திரன் பட்டத்துக்கு வந்தான். இவன் தந்தை காலத்திலேயே அரச காரியங்களில் பங்குகொண்டு படைத்தலைமையேற்றுப் பல போர்களில் வெற்றி கொண்டவன் என்பதைக் கண்டோம். இராசராசன் தன் ஆட்சிக் காலத்திலேயே (கி. பி. 1012) இவனை இளவரசாக்கினான். இராசேந்திரன் 1044 வரை சோழ நாட்டைச் சிறக்க ஆண்டான். தந்தையின் வழியைப் பின்பற்றிக் கங்கைக்கரைவரையில் சென்று 'கங்கைகொண்ட சோழன்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றான். இவன் காலத்தில் சோழ நாடு உச்ச நிலையில் விளங்கிற்று.

இராசராசனுக்கு வானவன் மாதேவியினிடம் பிறந்தவன் இராசேந்திரன். மார்கழித் திருவாதிரையில் இவன் பிறந்தான். திருவொற்றியூர்க் கல்வெட்டின் மூலம் அம் மார்கழி ஆதிரை நாளில் இவன் திருமுதுகுன்றத்தே (விருத்தாசலம்) ஆண்டுதோறும் விழாச்செய்து வந்தான் என அறிகின்றோம். இவனுக்குத் தந்தை இட்ட பெயர் மதுராந்தகன் என்பது. இவன் அழகன். திருவாலங்காட்டுச் செப்பேடு இம்மன்னனை 'நெற்றிக்கண் காணாத காமவேள்' எனப் புகழ்கின்றது. இவன் பரகேசரி ஆனான். 1012-ல் இளவரசாகித் தந்தைக்குப் பின் 1014-ல் சோழப் பேரரசின் தலைவனானான். தனது மகன் இராசாதிராசனுக்கு 1018 லேயே இளவரசுப்பட்டமும் கட்டிவிட்டான். தாம் இருக்கும் பொழுதே தம் மக்களையும் அரசகாரியங்களில் நன்கு பழக்கவேண்டும்

என்ற ஏற்பாட்டில் தந்தையும் மகனும் இவ்வாறு இளவரசுப் பட்டங்களைத் தத்தம் மக்களுக்களித்து, ஆட்சிப் பொறுப்பிலும் பங்கு கொடுத்தனர் போலும்; இவனது மெய்க்கீர்த்திகள் 3-ஆம் ஆண்டுமுதல் வளர்ந்து 13-ஆம் ஆண்டில் நிலைபெற்றன. எனவே, இவனது வெற்றிகளும் பிறவும் அதற்குள் அமையப்பெறப் பிற்காலத்தில் அமைதியாக நாட்டை ஆண்டவன் இவன் என்பது புலனாகிறது.

இவனது மூன்றாம் ஆண்டுக்கு முன் கல்வெட்டில்லை. ஒருவேளை இளவரசுப் பட்டம் கட்டிய நாள்முதல் ஆட்சி ஆண்டைக் கணக்கிட்டு இராசராசனுக்குப் பின் மூன்றாம் ஆண்டினை ஆட்சியாண்டாகக் கொண்டனர் போலும்! தன் தந்தைக் காலத்தில் அவனது படையைச் செலுத்திப் பல நாடுகளை இவன் வெற்றிகொண்டதை மேலே கண்டோம். இராசேந்திரன் தன் ஆட்சிக்காலத்தில் இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப்பாகை, மண்ணைக்கடகம் முதலிய நாடுகளையும் வென்று தன் அடிப்படுத்தினதாக இவனது மெய்க்கீர்த்திகள் குறிக்கின்றன.

## போர்கள்

இவனது ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டு இவனது ஈழநாட்டுப் படையெடுப்பைப் பற்றிக் குறிக்கிறது. மகாவமிசமும் 1017-ல் அப்போர் நடைபெற்றதாகக் காட்டுகிறது. எனவே, இவன் ஆட்சியாண்டு இவன் இளவரசாகி நின்ற 1012-ஆம் ஆண்டிலிருந்தே கணக்கிடப்பெறுகின்றது என்பது தெளிவு. இராசராசன் காலத்தில் தென்கிழக்கு நாட்டில் மறைந்த ஐத்தாம் மகிந்தன் மீண்டும் தளிர்த்து, ஈழநாட்டுச் சோழர்தம் பகுதியைக் கொள்ளப் படையெடுத்தான். ஆயினும் இராசேந்திரன் படைக்குமுன் நிற்க ஆற்றாதவனாய்த் தோற்று அடிபணிந்தான். ஈழ நாடு முழுவதும் சோழர் வசமாயிற்று. ஈழ வேந்தன் முடியையும், பிறவற்றையும், தேவியரையும் இராசேந்திரன் சோழ நாட்டுக்குக் கொண்டு வந்தான்; அவற்றுடன் முன் பராந்தகன் காலத்தில் ஈழநாட்டுக்குப் பாண்டியனால் அனுப்பப் பெற்ற பாண்டியர் முடியையும் இலச்சினை முதலியவற்றையும் கொண்டு வந்தான். இவனுடன் மகிந்தனும் சோழ நாடு வந்து வாழ்ந்திருந்து கி. பி. 1029-ல் சோழ நாட்டிலேயே இறந்தான் என்று மகாவமிசம் கூறுகிறது. எனினும் இராசேந்திரன் கல்வெட்டு ஒன்றும் அவ்வாறு குறிக்கவில்லை. கோனேரிஇராசபுரக் கல்வெட்டு ஒன்று மட்டும் மகிந்தன் சோழநாடு கொண்டு வரப்பட்ட பின்பே பணிந்தான் எனக் குறிக்கின்றது. பின்பு ஈழ நாட்டில் மறைந்திருந்த இந்த மகிந்தன் மகன் காசியபன் 1029-இல் வெளிப்பட்டு உரோகண நாட்டைக்கைப்பற்றி 1041வரை அரசாண்டான் என்பது தெரிகிறது.

## சோழ பாண்டியனானன்

சேர பாண்டிய நாடுகள் தந்தை காலத்திலேயே சோழர் ஆணையின் கீழ் வந்துவிட்டமையின், இராசேந்திரன் மதுரையில் இருந்துகொண்டே ஈழத்தில் மீட்ட பாண்டியன் முடிகொண்டு பட்டாபிடேகம் செய்து கொண்டான். அதுமுதல் 'சோழ பாண்டியன்.' எனற பட்டத்தையும் பெற்றான். வடக்கே சாளுக்கியரோடு இரு தலைமுறையாக மகட்கொடை காரணமாக நட்பு ஏற்பட்டிருந்தது அறிவோம். விமலாதித்தன் இராசேந்திரன்தங்கை குந்தவையை மணந்து கொண்டான். கோட்டாற்றில் சாளுக்கியன் 'நந்தாவிளக்கு' இருந்ததைக் காட்டுகிறது.

கீழைச்சாளுக்கியர் நட்பினராய் இருந்த போதிலும் மேலைச் சாளுக்கியர் விரோதிகளாகவே இருந்தனர். ஐந்தாம் விக்கிரமாதித்தன் தம்பி சயசிங்கன் அப்போது ஆண்டு வந்தான். அவன் சோழ நாட்டு வடமேற்கு எல்லைப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு ஆளத்தொடங்கினான். அதை அறிந்த இராசேந்திரன் தனது படையொடு சென்று பல்லாரி ஜில்லாவிலுள்ள முயங்கி என்ற இடத்தில் அவனுடன் போர்செய்து வெற்றிபெற்று மீண்டான்.

## கங்கைக்கரை நோக்கி

தென்னாடு முழுவதும் வெற்றி கொண்ட பின் இராசேந்திரன் வடநாடு நோக்கிப் படை யெடுக்க நினைத்தான். கங்கை நீரைக்

காவிரிக்கரைக்குக் கொணர்ந்து நாட்டைத் தூய்மைப்படுத்த நினைத்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கின்றது. எனவே, இவனது ஆட்சி ஆண்டு பதினைன்றில் வடநாட்டுப் படையெடுப்புத் தொடங்கியது. தான் நினைத்தபடியே வழியிலுள்ள அனைவரையும் வென்று கங்கையைக் கொணர்ந்து, அதன் நினைவாகக் கங்கைகொண்ட சோழபுரம் என்ற தலைநகரையும் அமைத்து, அதில் சிறக்க ஆண்டான் இவன்.

வடநாட்டுப் படையெடுப்பின்பொழுது வழியில் உள்ள எத்தனையோ நாடுகளை வென்றாக வேண்டுமன்றோ? அதற்குத் தக்க வகையில் ஒரு சிறந்த படைத்தலைவனைத் தக்க சேனையுடன் வடநாடு நோக்கி அனுப்பினான். அதேவேளையில் காவிரிக்கு வடகரையில் ஒரு புது தலைநகரை அமைக்கத் திட்டமிட்டு, அதற்கான வேலைகளில் முனைந்து, நகரை உருவாக்கிக் கொண்டிருந்தான் இராசேந்திரன். வடக்குநோக்கிச் சென்ற சேனை வேங்கிநாடுவரை யாதொரு மாறுபாடும் இன்றிச் சென்றது எனலாம். வேங்கிநாட்டுக்கு வடக்கிலிருந்த இக்கால விசாகப்பட்டின மாவட்டத்தில் அக்காலத்தில் நாகர் ஆண்டிருந்தனர். எனவே அந்நாடு 'மாசுணதேசம்' என வழங்கப்பெற்றது. அதற்குச் சக்கரக்கோட்டம் என்ற மறு பெயரும் உள்ளதுபோலும். அந்த நாட்டைவென்று, பின் மகா கோசலநாட்டில் புகுந்து அதையும் சோழரின் படை வென்றது. அதற்குப் பிறகு தம்மபாலனுடைய தண்டபுத்தி நாடும், இரணசூரனது தக்கணலாடமும், கோவிந்த சந்தனுடைய வங்காளதேசமும், மகிபாலனது உத்திர லாடமும் சோழரால் கைக்கொள்ளப் பெற்றன. இவ்வாறு கீழ்க்கரை வழியாகவே சென்று வங்காள எல்லையைக்கடந்து, இராசேந்திரன் சேனை கங்கைக்கரையை அடைந்தது. எனவே, இக்கால ஆந்திரம், ஓரிசா, வங்காளம், பீகார் மாகாணங்களுள் பெரும் பகுதியினை இராசேந்திரனனவன் வெற்றிகொண்டே கங்கைக்கரை சேர்ந்தான் என்பது பொருந்தும். இவ்வாறு பல அரசர்களை வென்று கங்கையையும் கடந்து சென்றான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுகின்றது.

## கங்கைகொண்ட சோழபுரம்

இவ்வாறு கங்கைக்கரைவரை வெற்றி பெற்ற சோழர் படைகள் அங்கங்கே தம் ஆணையை நிலைநிறுத்தியதோடு, தம் பண்பாடு நாகரிகம் முதலியவற்றையும் தங்க வைத்தனபோலும்; அக்காலத் தொடர்பால் உண்டான பல இயல்புகள் இன்றும் வங்காள மக்கள் வாழ்வில் இடம்பெற்றுள்ளன என்பர் வரலாற்றுளர்கள். இவ்வாறு கங்கை நீரைக் கொண்டுவந்து அதன் அறிகுறியாகக் கங்கைகொண்ட சோழபுரத்தை நிறுவி, அதிலிருந்து வீராபிடேகமும், விசயாபிடேகமும்செய்துகொண்டு இராசேந்திரன் ஆட்சி செலுத்தினான். அங்குக் கங்கைகொண்ட சோழேச்சுரம் என்ற கோயிலையும் அமைத்தான். அதற்குக் கருவூர்த்தேவர் திருவிசைப்பாவும் உண்டு. அக்கோயில் சற்று அளவில் சிறியதாயினும் தஞ்சைப் பெரிய கோயிலை ஒத்தே விளங்கியது.

அவ்வூரின் அருகில் இராசேந்திரன் 'சோழ கங்கம்' என்ற ஏரியையும் வெட்டி அப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு நீர்ப்பாசன வசதியையும் செய்து கொடுத்தான். அதைக் கல்வெட்டுக்கள் ' நீர் மயமான வெற்றித்தூண்' எனப் புகழ்கின்றன. அதன் வடிகாலே, இன்று தென்னார்க்காட்டில் வீராணத்தேரி என வழங்கும் பெரிய வீரநாராயண ஏரியாகும். இவ்வாறு பல வகையில் தன் நினைவுச்சின்னமாக எழும்பிய கங்கைகொண்ட சோழபுரம் பெரியகோயிலைக் கொண்ட தந்தைக்கு மாறாக அமைந்தது. இதை மக்கள் விரும்பவில்லை போலும்; தனது பெருமையாக வெற்றியை விளக்க இராசேந்திரன் அந்நகரை அமைத்தானேனும், மக்கள் அதைப் போற்றாது உண்மைத் தொண்டே சிறந்த பெரிய கோயிலையும், அதைச் சூழ்ந்த தஞ்சையையுமே மதித்தனர். எனவே, அவன் காலத்திற்குப் பின் அவன் பரம்பரையினர் தொடர்ந்து ஆள, சில நாட்களுக்குப்பின் கங்கை கொண்ட சோழபுரம் சிற்றூராகி விட்டது. இன்று அது சிதைந்த கோலத்தில் கோயிலைமட்டும் கொண்டு, காவிரியின் வட கரையில் சிற்றூராய்க் காட்சி அளிக்கின்றது.

### பிற நாடுகளின்மேல் படையெடுப்பு

இது நிற்க. இவ்வேந்தன் போர் கங்கை கொண்டதோடு முடிவுபெறவில்லை. இவன் சிறந்த கடற்படை வைத்திருந்தான். எனவே, அதன் துணைகொண்டு கடாரத் தின்மேல் படையெடுத்தான். அந்நாட்டு மன்னனாகிய சங்கராமவிசயோத்துங்கனை வென்று பட்டத்து யானை, தோரணம், பெரும்பொருள் ஆகியவற்றைக் கொண்டு வந்தான். பின்பு இக்காலச் சுமத்திரா, ஜாவா எனப்படும் ஸ்ரீவிசய நாட்டையும் கொண்டான். இவையன்றிப் பண்ணை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரிதேசம், நக்கவாரம் முதலிய நாடுகளையும் கடற் படையின் உதவியால் கொண்டான் என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இவையெல் லாம் இக்காலப் பர்மா தொடங்கி ஜாவா வரையிலுள்ள தேசங்களின் அக்காலப் பெயர்கள் என ஆய்ந்து எழுதியுள்ளனர் ஆய்வாளர். அந்தமான் நிக்கோபார்த் தீவுகளும் அவற்றுள் அடங்கியுள்ளன. நக்கவாரமே நிக்கோபார் ஆயிற்றென்பர். இவ்வாறு பிற நாடுகளிலெல்லாம் வெற்றி கண்ட பெருவேந்தனாக விளங்கினான் இரா சேந்திரன். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இவனுக்கு முன்னும் பின்னும் இவனைப் போன்று சிறந்து வெற்றிகண்ட வீர வேந்தர் யாரும் இல்லை என்பது துணிவு. இவன் இவ்வாறு வெளியில் கருத்திருத்திய காலத்தில் முன்வென்ற ஈழம், சேரநாடு, மேலைச்சாளுக்கிய நாடு முதலியவற்றால் சிறு சிறு குழப்பங்கள் தோன்றின. எனினும், எல்லாவற்றையும் அடக்கி, பரந்த நிலப் பரப்பையும் விரிந்த கடல் எல்லையையும் தன் ஆணையுள் கொண்டுவந்து சிறக்க வாழ்ந் தான் இராசேந்திரன். இவனது பிற்காலப் போர்களுள் சிலவற்றிற்கு இவன் மகன் இராசாதிராசன் உதவி புரிந்தான்.

### அமைதி

போர் நடைபெற்றாலும் நாட்டிலே அமைதி குலையாவகையில் தன் நாட்டைக் காத்த நற்பெருவேந்தன் இந்த மன்ன னவான். இவன் சிவநெறி போற்றி வளர்த் தவன். இவன் குடும்பப் பெண்களும் பல வகையில் கோயில் பணிபுரிந்து வந்தனர். இவனுக்கும் இராசராசனுக்கு இருந்தமை போன்றே பல அரசியல் அதிகாரிகளும் உடன் கூட்டத்து அதிகாரிகளும் இருந் தனர். இவனுக்கு மக்கள் பலர். இவனுக் குப் பின் இவன் மக்கள் இராசாதிராசன், இராசேந்திரன், வீரராசேந்திரன் மூவரும் முறையே ஆண்டனர். பெண் மக்களும் இருந்தார்கள். தமிழர் பெருமையை உலகறி யச்செய்தவன் இராசேந்திரனே ஆவான்.

---


## ஸ்ரீ ஸாக்ஷிநாதர் ஆலயம்

கும்பகோணம் வட்டம் **திருப்புறம்பயம்** தஞ்சை மாவட்டம்

கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்து கல் தொலைவில் உள்ளதும், தஞ்சை மன்னர் ஸ்ரீ ராஜராஜசோழ மன்னரால் கட்டப்பட்டதும் சமயாசாரியர்கள் நால்வராலும் பாடல் பெற்றதும் இந்திரனால் கிளிஞ்சல் முதலிய கடல் விளைபொருள்களாலாக்கி போற்றி வழிபடப் பெற்ற ஸ்ரீ பிரளயங்காத்த விநாயகப்பெருமானையும் சநகாதி நால்வர்க்கு அறப்பயனாகிய ஐந் தெழுத்தை உபதேசித்தருளிய ஆலமர் கடவுளையும் சிறப்புடை மூர்த்திகளாகக் கொண் டிருப்பதும் அரவு தீண்டி இறந்த வணிக மைந்தனை உயிர்ப்பித்து மணமுடித்து வைத்து "வன்னிமரமும் மடப்பள்ளியும் சான்றாக" என்று சங்கநூலிற் கண்டபடி சாக்ஷியும் சொல்லிய அருட்செயலால் ஸ்ரீ ஸாக்ஷிநாதர் என்னும் திருப்பெயர்பெற்று ஸ்ரீ கரும்படு சொல்லம்மை சமேதராய் புறம்பயநாதர் வீற்றிருந்து அருளும் திருக்கோயில்.

**K. S. விஜயரெகுநாதன்,**
கண்காணிப்பாளர்.


---

# மன்னர் மன்னனும் மாபெரும் கோயிலும்

வெற்றிவேல் பிரஸ் **K. V.** பக்கிரிசாமி,

**தஞ்சாவூர்.**

மரபு :

அன்றும் இன்றும் புகழுதற்கு இலக்காய் தென்னாட்டில் அரசு புரிந்த முடியுடை மன்னர்கள் பலரில் சூரிய வம்சத்தவரும், சரித்திராரம்பத்திற்கு முற்பட்டவரும், சமயப்பற்று, வள்ளன்மை, உலகப் பிரசித்தி இவைகளிற் சிறந்தவரும், தொன்னூல் பலவற்றால் புகழப் பெற்றவரும், மனுக்குலத்து உதித்தவரும் நம் சோழ மன்னர்களேயாவர். ஸ்ரீ இராம பிரான் ஆஞ்சனேயரை இலங்கைக்கு அனுப்பும்போது "சோழ நாட்டைக் கடந்துசெல்" என்று சொல்லியதும், பாரதப்போரில் வீமன்படையில் சோழன் ஒருவன் துணையாய் இருந்தான் என்பதூஉம் குறிப்பிடற்பாலது. இச்சோழ மன்னர்களில் பொற்குன்றமேறி நின்று சிவபக்தியிற் சிறந்து ஆட்சியை உரியோர்க்களித்து பக்தியில் விருப்புற்று தில்லைபுக்கு நடேசரைத் துதித்துக்கொண்டு தன் வாழ்நாளைப் போக்கிப் "பொன்மாளிகைத் துஞ்சின தேவன்" எனப் பேரும் பெற்று, மகிஷி வானவன்மாதேவியார் உடன்கட்டை ஏற விண்ணுலகேகிய இரண்டாம்பராந்தகனின் அருமைத் தவப்புதல்வனே, நம் இராசராச சோழ மன்னன். இராசராசன் என்றாலே வீரஞ் செறிகின்றது; தியாகம் ஊறுகின்றது; அன்பு பெருகுகின்றது.

கோயில் கட்டிய மன்னர் மன்னன் :

நமது இராசராசனுக்குப் பெயர்கள் பல உள. எனினும் தில்லையில் (S. I. I. Vol. II Introduction PP. 13 & 14) பெற்ற "இராச இராசேச்சுவரன்" என்ற பெயரே சிறப்பு மிக்குடையதாயிற்று. இவன் அரியணையேறி சில்லாண்டுகட்குள் பாண்டிய, சேர மன்னர்களையும் வென்று மும்முடி பூண்டான்.

"முந்நீர் பழந்தீவு பன்னீராயிரங் கொண்ட இராச இராச தேவர்" என்பதையும் கல்வெட்டுக்கள் காட்டும். இவன் தன் ஆட்சிக்காலத்தில் தரைமார்க்கமாக பர்மா சென்று அங்கு பிகு (Pegu) என்னும் ஓர் ஊரில் டாங்கோ ரோடிலுள்ள கோர்ட் காம்பவுண்டில் வெற்றித்தூண் நாட்டியது இன்றும் நின்று நிலவுகிறது. இவன் காலத்தே தான் நிலத்திற்கு எல்லைகாட்டும் கல்லும், கள்ளியும் போட்டதும் தவிர மருத்துவச் சாலைகளில் பெண் ஊழியர்களையும் நியமித்தது. ஆனால் இவன் ஆட்சிக் காலம் இருபான்எட்டு ஆண்டு எனினும் ஆளும் நோக்கம் ஒன்றினையே மனம் வைத்தானில்லை. தந்தையைப் போன்றே தானும் சிவபக்தியில் சிறந்திருந்தான். வடகுரங்காடுதுறை சிவாலயத்தில் இரணிய கருப்பம் புக்கியும், திருவிசை நல்லூர் (திருவிய

லூர்) சிவாலயத்தில் துலாபாரம் செய்தும் இறைவனைப் பூசித்தான். முற்செயலும், பிற்செயலும் ஒருசேர, சமய குரவர்களால் ஆக்கிய தேவாரப் பாசுரங்களை அறியவுந் தேடவும் முற்பட்டான். திருநாரையூர் நம்பி யாண்டார் நம்பிகளின் பேருதவியால், பொன்னம்பலத்துப் புறத்து ஓர் அறையில் புதைத்திருந்த தேவாரப் பாசுரங்களை எடுப்பித்து ஏழு திருமுறைகளாக (திரு முறைகண்ட புராணம் 6-வது செய்யுள், சேக்கிழார் புராணம், Ephigraphica Indica பக்கம் 113) வகுத்த பெருமை இச்செம்பிய னுக்கே. இராச இராசேச்சுவரன் என்ற திருநாமமும் பெற்றான். வேட்கை தணிந் திலது. ஆலயம் பல அமைக்க ஆசை யுற்றான். இதுபோது நம் மன்னர் பிரா னுக்கு யாண்டு இருபத்து நான்கு. இது முதல் இருமூன்று யாண்டுகட்குள் செய்த செயற்கரிய - நிலைத்த என்றும் அணையா விளக்காய - ஐந்து கண்டத்தவரும் இறும் பூதெய்த ஆக்கிய ஆலயமே நந்தஞ்சைப் பெருங் கோயில். இவன் இப்புவனத்து வந்துதித்த ஞான்று கையில் சங்குசக்கரம் இருந்ததென்றும் (திருவாலங்காட்டு செப் பேடு) அணிபணமாயிரங்களார்ந்த அரவர சப் பெருஞ்சோதி, அனந்தனது காதற் கிழத்திகள் நமது நாயகனின் பூபாரம் குறைந்தது என ஓதைசெய்து கூத்தாடி னர் என்றது எத்திரத்துப் புகழவல்லோம்.

**ஆலயம் :**

ஆலயம் என்பதன் பொருள் ஆன் மாவை பிரமத்தில் லயிக்கச்செய்யும் இடம் என்பதாம். மானிட சரீரமாகிய கோயிலின் சாயா சித்திரங்களே புறத்தே காணும் திருக்கோயில்கள் பலவும். யோகிகள், முனி புங்கவர், ஞானிகள் பலரும் அவ்வப்போது ஆலயங்களில் புகுந்து இறைவனை வழுத் திப் போவார்களாதலால் அன்னார்களின் பரிசத்தால் இடன் தூய்மையுறுவதன்றி ஆலயவெளியில் அவர்களது பரிசுத்த எண்ணங்கள் அணுவிற்கணுவாய்ப் பிரிந்து நிறைந்து இயங்கும். அத்தன்மையோரின் வழிபாட்டானும், சிற்பியின் தெய்விக சக்தி யானும் மூல விக்கிரகங்கள் எழில்பெற்று உயிருடன் துலங்கும். எனவே, ஆலய வழிபாட்டை அநுதினம் சிரத்தையுடன் செய்து வருவோர் மனத்தை ஆங்கு நிறை தூய எண்ணங்கள் தாக்கி ஊக்கந்தர மூர்த்திகரம் மிக்க சிலைகளும் அன்னாருக்கு அனுக்கிரகம் செய்ய, உள்ளும் புறனும் ஒத்து ப்ரம்ம சாக்ஷாத்காரம் வாய்த்து சிறந்த அனுபூதிமான்களாய்த் திகழ்வது திண்ணம்.

**இராச இராசேச்சுரம் :**

இக்கற்றளி கி. பி. 1003-ல் தொடங்கி 1009-ல் பூர்த்தி ஆயது. இப்பெயரைப் புதி தாய்க் கேட்போர் அது ஓர் நகரமாதல் வேண்டும் என நினைப்பர். மலையரண், காட் டரண், மதிலரண், நீரரண் என்னும் நால் வகை அரணமைக் கோட்டைக் கொத்த ளங்களுடன் சூழப்பெற்ற இந்தக் கோயி லானது வானுற ஓங்கி வளம்பெற நிற்கும் காட்சியைக் கண்டனுபவிக்க வேண்டுமே யன்றி செப்பற்கெளிதல்ல. இக்கோயிலைக் கண்டு மயங்காதார் எவருமிலர். அளவிற் காக அழகைக்குலைக்காமல், போக்குவரத்து சாதனங்கள் சரியாய் இல்லாத அக்காலத் தில் உபானம்முதல் தூபிவரை கருங்கல் லினால் கட்டிய பெருமை நம் சோழ மன்ன னுக்கும், சிற்பிகளுக்குமே உரித்தாம். இவ் வாலயம் தோன்றிய இடம் முந்தை நைமி சாரணிய முனிபுங்கவர்கள் தவங்கிடந்த நற்றபோவனம் எனவும் கூறுவர்.

**பிராகாரம் :**

கருங்கல்லானும் அடுக்கடுக்காய செங் கல்லானும் பாவப்பெற்று ஐந்நூறு அடி நீளமும், இருநூற்று ஐம்பது அடி அகல மும்கொண்ட இப்பிராகாரமானது கண் டார் கருத்தைக் கவரும் பான்மையது. திருச்சுற்று மாளிகையின்கீழ்த் தென் பாரி சங்களில் யாகசாலை, பாகசாலை, பண்டசாலை, போசனசாலை அமைந்துள்ளன. மேல் வட பாரிசங்களில் சிவலிங்கப் பிரதிட்டையும், சுவர்களில் சிவனாரின் அறுபானான்கு திரு விளையாடல்களும் வண்ணமுறச் சித்திரிக்

கப்பெற்று மிளிர்வது காணத் தெவிட்டாது.

**பெருவுடையார் கோயில் :**

பிராகாரத்து மேற்புறமாகப் பெருவுடையாரின் திவ்ய தேஜோமயமான திருவுருவச்சிலை திகழும் கருப்பக்கிரகம் ஓர் உட்பிரகாரத்துடன் சுரகண்டேஸ்வரர், மயானருத்திரர், இராச இராஜேஸ்வரி இவர்கள் சூழ அமைந்துளது. இது அர்த்தமண்டபம், பக்கவாயில், மகாமண்டபம், தியாகராஜர் கோயில் அடங்கிய ஸ்தாபன மண்டபம், நர்த்தனமண்டபம், வாத்தியமண்டபம் இவற்றுடன் கூடியது. இந்தக்கோயிலின் வாயில்களுக்கு கேரளாந்தகன் திருவாயில் என்றும், அணுக்கன் திருவாயில், இராசராசன் திருவாயில் என்றும் பெயர். திருவாயிலிலுள்ள பென்னம் பெரிய கைத்திரன் மிக்க ஒற்றைக் கல்லாலாய துவாரபாலகர்கள் பதினெட்டடி உயரமும், எட்டடி குறுக்களவும் உள்ளனர்.

**சிவலிங்கம் :**

மூலத்தானத்தில் முக்கண்ணுடைய மாமருந்தின் இலிங்காகாரமாம் அருள் திருமேனியின் பொலிவினை எம்மனோர் புகழுந்திரத்ததல்ல. பருத்துத் திரண்டு உருண்டு மலைபோல் எழுந்து பிரகாசத்துடன் இலங்கும் மகாலிங்கத்தின் சன்னிதியில் நின்றோர் எத்துணைச் செருக்காளராயினும் மனமடங்கி உணர்ந்து மெய்ம்மறந்து நிற்பர். காண்போரின் கண்ணிறைந்து கண்ணில் நீர் நிறைந்து காட்சியும் பெறுவர். சற்றே அண்மையில் நின்று சேவிப்போர், கயிலையங்கிரியை முகிற் குழாங்கள் அடைந்து சூல் கொண்டு மழைப்பேறு அடைவது போன்று, பத்தியெனும் பயன் பெற்று சித்தியடையவர் என மீண்டும் புகழ்வது சாலப்பொருந்தும். இருள் வெளியில் வெண்மதி பூத்ததென்ன நுதற் பொட்டழகும், வெண்டுகிலின் தூய்மையும், தேஜசும் ஆகிய அருட்பிழம்பாய இச் சிவலிங்கம் உருவத்தில் உலகிலேயே பெரியது. இக்கோயிலில் ஏனைய இலிங்கங்கள் இருநூற்று ஐம்பத்திரண்டும் உள்ளன. இருமருங்கும் கதிரவர் மதியவரும் அண்மையிலிரு வாயில்களினும் நாமகளும், பூமகளும் காட்சிதர இருக்கின்றனர். கோயில் கட்டி முடிந்ததும் சிவலிங்கத்தினை எழுந்தருளச் செய்து ஆதி சைவரைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்வித்த பொழுது மருந்து இளகிப் பந்தனமாகாமற் போக, அது கண்டு இராசராசன் மனம் வெதும்பி நின்றனன். அது காலைக் "கருவூர்த்தேவர் ஈண்டுவரின் நீ நினைத்த காரியம் சித்தியாகும்" என்றோர் அசரீரி வாக்குப் பிறந்தது. மன்னன் ஒருவாறு மனந்தேறி, அப்பெரியாரைக் காண்பதெப்படி எனப்பலரிடமும் உசாவியபோது, மாற்றுருவம்கொண்டு அங்கிருந்த போகநாதரெனும் யோகியார் "வேந்தே, கவலற்க கருவூர்த்தேவரை ஈண்டு யாம் வரவழைப்போம்" என்று உறுதி கூறிக் காக்கைக் காலிற் சீட்டெழுதிக்கட்டி பொதிகைக் கனுப்ப போகநாதரின் ஆணைக்கியைந்து கருவூர்த்தேவர் தஞ்சையைக்குறுகி, தம்முடன் வந்த தேவர்களுக்கு நகருக்கணித்தாயுள்ள ஈசுவர மூர்த்திக் காட்டில் இருக்கை தந்து, திருக்கோயில் புக்குத் தம் தவவன்மையால் சிவலிங்கத்தை ஆவுடையாருடன் செவ்வனே நிறுத்தி, தம் வாய்த் தம்பலத்தை மருந்தாக உபயோகித்து இருகப் பிடித்திடச் சிவலிங்கம் தம்பனமாயிற்று. (கருவூர்ப் புராணம்-கதிபெறு சருக்கம்) அதுகாலை இலிங்கத்திற்கு இராச இராசேச்சரமுடையார் என்பது பெயராயிற்று. எனினும், ஆடவல்லான், தட்சிணமேருவிடங்கன் என்னும் பெயர்களுமுண்டு. பின்னர் இறையவன் திருநாமம் பெருவுடையார் என்றும் அம்மைக்கு பெரிய நாயகி (உலக முழுதுடையாள்) என்றும் வழங்கியது. அதுவே இன்று பிருகதீஸ்வரர் என்றும் பிருகந்நாயகி என்றும் வடமொழியில் வழங்கி வருகின்றது. இதை இராசஇராசன் நர்மதை நதிக்கரையினின்றும் கொணர்ந்ததென்பர். இதற்கு ஆதாரமாக சைத்ர விழாவில் அஷ்டகொடியன்று தஞ்சை அறுபானுன்கு மனை

வேளான் செட்டிமார் பிரதிநிதியை அழைப்பித்துச் சிறப்பிக்கும் ஐதீகம் இன்றும் காணலாம்.

**தியாகராஜர் :**

இது சோழ மன்னர்களின் குலதெய்வமாகும். தஞ்சையில் ஆலயம் அமைப்பதன் முன் மன்னன் அடிக்கடி திரு ஆரூர் சென்றே தியாகேசரைத் துதிப்பது வழக்கம். கோயில் கட்டுவித்ததும் தான் கொண்டிருந்த மாளாக் காதற்கறிகுறியாயும், தம் முன்னோன் முசுகுந்தனின் தீர வீரச் செயல்களை நினைப்பூட்டும் நிமித்தமும் தஞ்சைக் கோயிலிலேயே தியாகேசனைப் பிரதிட்டை செய்தான். சைத்ர விழாவின் அட்ட கொடியில் தியாகேசரும் அம்மையும் சுத்தமத்தளம், எக்காளம், அஜபா நடனம் இவற்றுடன் பிராகாரத்தில் பவனி வருதல் இற்றைக்கும் உண்டு.

**கோபுரம் :**

பார்வதி சமேதராய் பரமசிவன் வீற்றிருக்கும் கயிலாயத்திற்கு உத்தரமேரு என்றும் அதையொட்டிய இவ்விமான (கோபுர)த்திற்கு தக்ஷிணமேரு என்றும் கூறுவர். இது நாற்கோண வடிவந்தாங்கி ஈரேழு கோபுரமாடிகளுடன் 216 அடிகள் உயர்ந்து நாற்புறமும் காட்சி அளித்த வண்ணமே இருக்கும் சுவரகத் தூண்கள், வண்ண மாடங்கள், தெய்வப் படிமங்கள் முதலியன கொத்தப் பெற்றிருப்பது காண்போர் கண்களைப் பறிக்கும் பான்மையது. அடித்தளம் 96 அடி சதுரமாய் அமைந்துளது. உச்சியில் பிரமரந்தர தளத்திற்குப் போடப்பட்ட ஒரே கல் 80 டன் நிறை பூண்டு, தஞ்சைக்கு வடக்கில் 4வது மைலில் உள்ள வயலூர் சாரப்பள்ளத்தினின்றும் சாரம் போட்டு சிகரமேற்றியதென்பர்.

இக்கல்லின் மையத்தில் எண்கோண வடிவாய் எழில்பெற்று இலங்கும் ஸ்தூபியுடன்கூடிய சிகரம் உண்டு. ஸ்தூபிக்குடம் $12\frac{1}{2}$ அடி உயரம் உள்ளது. இது வீரபத்திர ஆச்சாரியாரால் கொடுக்கப்பட்ட பஞ்சலோகக் கம்பத்தில் இருத்தப் பெற்றிருக்கிறது என்று, அக்குடத்திலேயே பொறிக்கப்பெற்றிருக்கின்றது. பிரமரந்திரக் கல்லின் மூலைகளில் சோடி சோடியாக வைக்கப் பெற்றிருக்கும் நந்திகள் அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள மற்றொரு பெரிய நந்தியில் முக்கால் பாகத்திற்கு சற்றே சிறுத்து அத்துணைப் பெரியதாயிருக்கும். பிரமரந்திரக்கல் அழகி எனும் ஓர் நரைமூதாட்டியினுடையது என்றும், அதற்குப் பிரதி பலனாக உள்ளது பனகால் கட்டிடத்திற்கு அருகாமையிலுள்ள அழகிகுளம், அழகி தோட்டம் இவை மன்னனால் கொடுக்கப்பட்டது என்றும் தெரிகிறது. இவ்விமானத்தின் தென்புறம் மகாவிஷ்ணு, பிள்ளையார், பிக்ஷாடனர், சூலதேவர், தக்ஷிணமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராஜர் விக்கிரகங்களும், மேற்புறம் இலிங்கோத்பவர், அர்த்தநாரீஸ்வரர் விக்கிரகங்களும், வடபுறம் கங்காதரர், கலியாணசுந்தரர், மகிடாசுரமர்த்தனி விக்கிரகங்களும் சற்றுமேற் பரப்பில் தொப்பி அணிந்த ஐரோப்பியரின் சிரசும் உள்ளது. இதை டென்மார்க் தேசத்து ரோலண்டு கிரேப் என்பர் ஒரு சாரர். மார்க்கோ போலோ என்பர் மற்றொரு சாரர். ஆனால் சோழர் காலத்தில் பிறநாட்டு வாணிபத் தொடர்பு இருந்தமையால் அந்நாட்டு ஓர் ஐரோப்பியனின் உருவமே செதுக்கப்பட்டுள்ளது என்பது துணிந்து கூறற் பொருந்தும்.

**ஆறுமுகக்கடவுள் :**

அறுமுகவுருவம், மயில், திருவாச்சி இவைகள் ஒரே சிலையில் ஆக்கப்பட்டது. சிற்ப நுட்பங்கள் மிக அமைந்தது. இக்கோயில் தென்னிந்தியாவிலேயே தனக்குவமை தாமே என்றியம்புமாதிரி சிற்றுளி கொண்டு அத்துணைச் சிறப்புடன் செய்த சிற்பியின் கைத்திறனைப் புகழ பின்புறம் உள்ள ஊசி நுழையும் துவாரங்களே ஓர் எடுத்துக் காட்டாகும். அருணகிரிநாதர் இங்கு மூன்று திருப்புகழ் பாடியுள்ளார்.

**ஸ்ரீ பெரியநாயகி அம்மன் :**

இக்கோயில் ஆலயத்தின் வடபால் உள்ள சிவகங்கைத் தோட்டத்திலிருந்த தெனவும் பிற்றை ஞான்று ஓர் நாயக்க மன்னனால் இப்போதிருக்கும் இடத்தில் கட்டப்பெற்றதென்றும் அறியப்படுகிறது.

**நந்தியம்பெருமான் :**

இறைவன் சன்னதிக்கெதிரே மேடை மண்டபத்தில் ஒற்றைக்கல்லால் ஆகியது. இது இந்தியாவிலேயே பெரியது. நிறை 25 டன். உயரம் 12 அடிக்கு மேலும், நீளம் $19\frac{1}{2}$ அடி, அகலம் $8\frac{1}{4}$ அடி. இது திரிசிர புரம் சார்ந்த பெரும்பலூருக்கு அணித்தா யுள்ள பச்சை மலையினின்றும் கொணரப் பட்ட ஒரே கல்லால் செய்தது, இந்நந்தி நாளடைவில் வளர்ந்து கொண்டிருந்த தெனவும், முதுகில் இருப்பாணி செருகப் பெற்று நிலைபெற்றதெனவும், இதற்குள் மண்டுகம் (தேரை) இருந்ததெனவும், அத னால் இது வளர்ந்ததெனவும், பிறகு அத் தேரையை எடுப்பித்து இப்போது நடராசர் கோயிலுக்கு மேற்புறமிருக்கும் குளத்தில் (இப்பொழுது கிணறு) இடப்பெற்றதென வும் கூறும்சொற்கள் கர்ணபரம்பரையாக வழங்குகின்றன.

**ஆடவல்லான் :**

இக்கோயில் ஈசானியத்தில் உள்ளது. ஆடும் கருணைத் திருநடனத் திருமேனி. ஒருகை உடுக்கை தாங்கும், ஒருகை அபயம் கொடுக்கும், ஒருகை அனலை ஏந்தும், ஒரு கை "பற்றுக வென் தாளினை" எனக்குறிக் கும். இராச இராசனுக்கு நடேசர் பேரி லுள்ள பேரன்பின் மிகுதியால் அளவைக் கோல் முதல் கஞ்சி ஊற்றும் கலயம்வரை ஆடவல்லான் என்பதைச் சேர்த்தே நாமம் சூட்டியுள்ளான்.

**ஸ்ரீ கருவூரார் :**

இக்கோயில் மேலைப் பிராகாரத்தின் மத்தியில் இருக்கிறது. இச்சித்தர் பெரு மானே பொன்னம்பலத்துப் பொலியும் நடேசரைச் செய்துவைத்தாரெனப் போகர் நூல் கூறுகிறது.

இவரைக் கன்னுரென்றும் பிராமணர் என்றும் கூறுவர். இவரே மூலலிங்கத் தைப் பிரதிட்டைசெய்து இப்போது தனக் கென உள்ள கோவிலிருக்கும் இடத்தில் இருந்த மேடைமீதிருந்து தவஞ்செய்து கொண்டிருந்தாரென்பர். ஆனல் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சையிலுள்ள காவல் துறையிலிருந்த ஓர் நரை மூதைய யாதவ அன்பரால் இக்கோயில் கட்டுவித் ததும், சித்தர் உருவம் பிரதிட்டை செய் வித்ததும் மூதையர் பலர் அறிவர். எனி னும் மீண்டும் 1926-ல் செப்பு விக்கிரகம் ஒன்று செய்து கருவூரார் கோயிலையும் சிறிது பெரிதாக்கி கும்பாபிஷேகம் செய்த தும், நாமும் அம்மூதையருடன் உடனி ருந்து செயல்பட்டோம்.

**கருட யாகமேடை :**

மேலைத் திருச்சுற்று மாளிகையின் மேற்புறம் மூன்றும் பிராகாரத்தில் அறு கோண வடிவமுள்ள ஓர் பெரிய மேடை உண்டு. இதை கருட யாகமேடை என்பர். இங்கு ஆண்டிற்கொருமுறை யாகம் செய் யப்படுகிற பயனாய் ஊரில் யாருக்கும் விஷ பயம் ஏற்படாதென்பர். இப்போது இது மண்ணால் மூடப்பெற்று புற்பூண்டுகளுடன் காட்சியளித்து சில பாகங்களை மட்டும் காட்டுகிறது.

**மார்க்கண்டேயர் :**

கோபுரத்தின் தென்கீழ்ப் பாரிசத்து தென்முகப் பரமாசாரியர் கோயிலுக்கு மேற்புறம் மார்க்கண்டேயரின்மீது எமன் கயிறு வீசும்போது சிவலிங்கத்தை அடைய மெனப் பிடிக்கும் பரிதாபக் காட்சி ஓர் அமைச்சல்தான்.

## முன்முறைகள்

**பிடாரர்கள் :**

நமது திருமுறைகண்ட மன்னன் முதன் முதலில் தஞ்சைப் பெரிய கோயி

லில் நாற்பானெண்மர் பிடாரர்களை வைத்துத்தினமும் சன்னிதியில் திருமுறை விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்தான். இவர்களுக்குப் பட்டப்பெயர் ஞானசிவன். இவர்களுக்காக மன்னன் அளித்த ஆதரவும் சலுகையும் வேறு எவருக்கும் இல்லை. ஆனால் திருப்பதிகம் விண்ணப்பம் செய்துதான் நிசதம் முக்குறுணி பெறக்கடவர் என்னும் நியதியும் உண்டு. பூசைக்குரிய புட்பங்களை எண்ணி வாங்குமாறும் கோயிற் பணிக்காக பதியிலார் நானூற்றுவரையும் நியமித்தான்.

### பூசைக் கலன்கள் :

பூசைக்குரிய கலன்கள் பொன்னால் செய்யப் பெற்றவையே. செம்பினாலோ, வெள்ளியினாலோ எதுவும் இல்லை என்பதையும் இவைகளுக்கு விறற்கடை உசரம் என்ற கணக்கையும் கல்வெட்டுக்கள் சொல்லிக்கொண் டிருக்கின்றன.

### அணிகலன்கள் :

வைரத்தினால் இழைத்த உருத்திராக்க மாலையின் அளவும் ரத்தபிந்து, காகபிந்து, அரக்கு செப்பாணி நீக்கிய எடையும் கோபுரத்தின் மேற்பக்க கல்வெட்டுக்கள் சொல்லும். பலவிதமான முத்துக்களைப் பற்றித் தென்புற கருங்கல் தூண்களில் கல்வெட்டு உண்டு. அக்காலத்தில் மிகமிக உயரிய அணிகலனான சோணகச் சிடுக்கின் கூடு இக்கோயிலில் இருந்திருக்கிறது.

### தீபம் :

ஒவ்வொரு கிராமங்களுக்கும் ஆடு, பசு, எருமை இவைகளைக் கொடுத்து இவைகளால் கிடைக்கும் நெய் தீபங்களை போடுவதென்பதும், ஈழத்தை வென்று இக்கோயிலுக்கு, இலுப்பைப் பாலாக கப்பம் கட்டவேண்டு மென்பதும் மறைந்த கல்வெட்டுகள் போலும்.

### அரசர் அறிவிப்பு :

பாண்டியர்களையும், மலைநாட்டுமன்னர்களையும் எறிந்து கொண்டுவந்த பெரும் பொருட்களை இக்கூற்றத்திற்கே கொடுத்தோம் எனவும், நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டிர் கொடுத்தனவும் மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் இன்னும் உப்பு முதல் கப்பூரம் வரை யாதும் குறைவின்றிக் கொடுத்தோம் எனவும் முடிக்கின்றார் திருமுறை கண்டு அருண்முடி பெற்ற செம்பொருட் செல்வர் நமது முதலாம் இராஜ இராஜேஸ்வரன்.

[எல்லாவற்றிற்கும் அகச்சான்று கிடைப்பது அரிதென்பதும், ஆங்கிலேயர் கல்வெட்டு எடுப்பதற்கு முன்னர் உதிர்ந்து போனதும், காசி முதல் கன்னியாகுமரி வரை உள்ள இராச இராசனின் கல்வெட்டுக்களைப் பார்த்துவிடமுடியாது என்பதும், இராசராசன், கோயில் இவற்றினைப் பற்றி மிகச் சிறிதே இக்கட்டுரையில் இடம் பெற்றது என்பதும் உண்மையே.]

# திருமுறைகளின் சிறப்பு

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

ஆசிரியர் : "திருக்கோயில்"

அருமையாம் தமிழ்ப்பண் பாட்டின்
அற்புதச் சின்னம் ஆகத்
திருமுறை கண்ட சோழன்
சிறந்தநல் இராச ராசன்
பெருமையாம் கலைகள் போற்றிப்
பெருவுடையார் கோயில் கண்டான்;
இருநிலத்து இணையில் லாத
அவன்புகழ் இனிது வாழ்க.

எங்காயி னும்காண இயலாத
எழில்நலஞ்சேர்ந்து, இணையற் றோங்கி,
இங்காரும் வியந்துவக்கும் இனியதஞ்சைப்
பெருவுடையார் கோயில், என்றும்
மங்காத வகைஅமைத்த இராசராச
சோழன்விழா, மாண்பிற் கண்ட
நம்காதல் தமிழரசு, நாள்நாளும்
சிறந்தோங்கி வளர்க நன்றே.

எத்தனையோ பலநூல்கள் எண்ணற்ற நிலையில்
இருக்கின்ற நம்தமிழில் என்றாலும், அவைகள்
அத்தனையும், தெய்வநல அருட்சிறப்பான் மிகும்நம்
அளப்பருஞ்சீர்த் திருமுறைகட்கு ஈடாக மாட்டா
" இத்தரையில் இவைபோன்ற இலக்கியங்கள் யாண்டும்
இறையருளின் நலம்செழிப்ப இல்லைஇல்லை" என்றே
வித்தகராம் மேனாட்டார்[1] வியந்துமிகப் புகழ்ந்தார்
மேதகைய திருமுறைச்சீர் விளம்பற் பாற்றோ? 1

---

[1] "No cult in the world has produced a richer devotional literature, or one more instinct with brilliance of imagination, fervour of feeling and grace of expression."

— Prof. L. D. Barnett, The Heart of India, P. 82.

"இலக்கியங்கள் எலாம், நாட்டின் இயல்பை, வர லாற்றை,
இன்கலையை, எழிற்பண்பை இனிதெடுத்துக் காட்டும்;
இலக்கியங்கள் நாகரிகத்து எழில்விளக்கம்; நாட்டை
எழில்வளஞ்செய் இன்னமிழ்தப் பெருவெள்ளம்; நல்ல
இலக்கியங்கள் எழுந்தனவேல் எழுச்சியுறும் நாடும்
இலக்கியத்தின் தரம்குறைந்தால் சமுதாயம் வீழும்;
இலக்கியங்கள் புரட்சிபல தோற்றுவிக்கும்" என்பர்;
இணையில்சைவத் திருமுறைக்கும் இவையனைத்தும் பொருந்தும். 2

ஒருநாடும் காணாத ஒப்பில்பெரும் புரட்சி
உருவாகித், தீங்கொழிந்து நன்மையெலாம் ஓங்கத்,
திருஞான சம்பந்தர் திருமுறைகள்[2] செய்த;
திசையனைத்தும் ஊரூரும்[3] செந்தமிழை வளர்த்த;
அருள்நாடும் அவர்க்கிணையாம் ஆற்றல்மிக்க தலைவர்
அரியபெரும் பரப்புநர்தாம் தோன்றுகிலர் யாரும்;
மருள்ஓட வைத்தவர் தமிழ்வளம்[4] தான்; "வீறும்
வளஞ்செறிந்த தமிழ்"என்று மகிழ்ந்துரைத்தார் நம்பி. 3

ஞானத்தின் திருவுருவாம் ஞானசம்பந்
தப்பெருமான், நற்றமிழ்க்கண்
தேனத்திற் சிறந்தபல திருப்பதிகம்
முன்பின்இலா வகையிற் செய்து
கானத்தின் களஞ்சியமாய்க் கலைவளங்கள்
பெருகுவித்தார்; தமிழ்த்தாய்க் கன்னி,[5]
வானத்தின் இலங்குசைவ மணம்புணரச்
செய்தஅவர் மாண்பென் சொல்கேன்? 4

---

"In no literature with which I am acquainted has the individual religious life-has its struggles and dejections, its hopes and fears, its confidence and triumph-received a delineation more frank and more profound."

— Charles Eliot, Hinduism and Buddhism. Vo. III, P. 27.

"In the matter of pure devotional outpouring, exuberance and ebullience of language Tamil has hardly a parallel in the world's literature."

— Dr. C. P. Ramaswamy Aiyer, P. E. N. Conference.

2 "Sambandha was a bron poet who 'lisped in numbers, for the numbers came'. He must be reckoned as a genuine Tamil poet, certainly the greatest in the lyrical department. His hymns are models of pure and elevated diction, generally and touching, but always melodious and well-turned."

— Prof. P. Sundaram Pillai, M. A.

திருநாவுக் கரசுகள்தம் திருமுறைகள் மூன்றும்,
சிறந்தநன்மெய் யுணர்வுவளம் திகழ்ந்தொளிரத் தேற்றும்;
வரு'ஞானப் பாடல்' எனப்போற்றிமிக மகிழ்ந்தார்
மாதவத்துச் சிவஞான யோகிகள்தாம்; மாண்பார்
குருநாதர்இவர், குறளில் 'மெய்யுணர்வு' என்றோங்கிக்
குலவும்அதி காரவைப்பாய்க் கூறுகிற்பர் மேலோர்;[6]
ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணுமோ? 'சொற்கண்
உறுதியினுக்கு அப்பர்'[7] என உலகுரைக்கும் அன்றே. 5

மெய்யுணர்வு வளஞ்சான்ற மேலோராய் விளங்கும்
வித்தகர்நம் அப்பர்பெம்மான், வியனுலகம் எல்லாம்
உய்யும்வகை உளம்இரங்கி உவந்தருளிச் செய்த
உபதேச வளநலன்தான், உயர்ந்த'திரு விருத்தம்'
செய்ய திரு நேரிசை, சீர்க் குறுந்தொகைசெந் தமிழ்நல்
திருத்தாண் டகம் என்னும் தேன்மழையாய்ப் பெருகித்
தெய்வஅருள் நெறிப்பயிர்தான் செழித்தோங்கச் செய்து,
'தேவாரம்' எனும்பெயரால் திகழ்ந்தொளிரும் அன்றே. 6

நந்தம்அருட் பெருங்குரவர் நம்பியா ரூரர்
நவின்றதிரு முறைஏழாம் திருமுறையா நவில்வர்;
சுந்தரமூர்த் திகள்எனும்அத் தூயவன்போல், யாண்டுச்
சூழினும்,ஓர் தலைமகன்,நற் பெருங்கவிஞன் உண்டோ?
செந்தமிழிற் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம்
செப்புதற்குத் திருத்தொண்டத் தொகைசிறக்கப் பாடித்
தந்து,அவர்தம் காப்பியத்தின் தலைமகனாய் வைகித்
தமிழ்கொண்டு, கடவுளையும் பணிகொண்டான் தானே: 7

---

3 "Sambandha appears to have been an indefatigable traveller, and to have visited almost every town and every village of any consequence in the Tamil land."

— Prof. P. Sundaram Pillai, M. A.

4 "In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and it is at the same time the symbol and safeguard of their common life. What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group? It is their sign of recognition and their badge of brotherhood."

— J. Vendryes, Language.

5 தமிழ்த்தாய் ஆகிய கன்னியை, ஞானசம்பந்தர் ஆகிய தலைமகன், சைவமணம் புணரச் செய்தார் என்னும் சொல்நயமும், பொருள்நயமும் போற்றற்பாலன.

— அதிசய அணி.

ஆசில்சீர் நம்நம்பி ஆரூரர்
அரும்பெருமை அளத்தற் காமோ?
நேசமிகப் புகழ்ந்துரைத்து நெடிதேத்த
வேண்டும்எனும் நியமம் மாற்றி,
ஏசியும்மிக்கு இகழ்ந்துரைத்தும், இன்றமிழால்
இறையருளை எய்தி நின்ற
தேசுடைய சுந்தரர்தம் செந்தமிழ்ச்சொல்
நயவளம்தான், செப்பற் பாற்றோ? 8

"தேன்படிக்கும் அமுதாம்நற் றிருப்பாட்டு
சுந்தரர்தம் திருப்பாட்டு" என்றார்
வான்படிக்கும் சீர்த்திமிகு வடலூர்நல்
இராமலிங்க வள்ள லார்தாம்.
தான்படிக்கும் தமிழ்மறையின் தனிச்சிறப்பைப்
பொன்மலைக்கும், சங்க தத்தின்
ஊன்படைக்கும் பழிமறையை அணுநிலைக்கும்
ஒப்பிட்டார்; உரைத்தல் என்னே. 9

" தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே; மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்றுமோ?" என்று,
ஏவருமே துதித்துவக்கும் தாயு மானார்
இனிதெடுத்துப் புகழ்ந்தனரேல், இறைய ருட்டான்
பாவருஞ்சீர்த் திருமுறையின் பரிசாம்; இன்பப்
பண்புவளம் செறிஅதன்சீர் பரவற் பாற்றோ. 10

இரும்புதரு மனத்தினையும் ஈர்த்துருக்கி,
எழிற்பொன்னாய் இனிது மாற்றிக்
கரும்புதரு சுவைபெருக்கிக் கனிவுவளம்
திருவாச கம்தான்[8] காட்டும்;

---

[8] There are, indeed, but few poems in any language that can surpass Thiruvasakam or the holy word of Manikkavasagar, in profundity of thought, in earnestness of feeling, or in that simple childlike trust, in which the struggling human soul, with its burdens of intellectual and moral puzzles, finally finds shelter."

— Prof. P. Sundaram Pillai, M. A.

" There are few works in Tamil devotional literature that compare with, certainly none that excel the Thiruvasakam, in light and grace, in lofty feeling and fervid piety, in passionate longing for spiritual peace and purity, and in the uplifting faith in divine grace in which the human soul, tossed about on the stormy billows of intellectual and moral puzzles, finds a safe haven of rest."

— Prof. M. S. Purnalingam Pillai.

இரும்புவியிற் சிற்றின்பை இணையில்பெரும்
பேரின்பாய் இயலச் செய்தே
அரும்புலவோர் புகழ்கோவை [9] அருள்அனுப
வத்தின்வளம் அமைந்து நிற்கும். 11

செய்யதிரு மாளிகைநற் றேவர், அருட்
சேந்தனர், கருவூர்த் தேவர்,
மெய்உயர்கண் டராதித்தர், வேணாட்டார்,
காடநம்பி, சேதி ராயர்,
பொய்யில்புரு டோத்தமர், சீர்த் திருவாலி
'அமுதர்'எனப் புகலும் சான்றோர்,
உய்யும்வகை புகழ்ந்திசைத்த திருவிசைப்பா
திருமுறையில் ஒன்பஃதாகும். 12

கருமூலம் நாம்அனைவோம் கழன்றுய்யக்
கயிலைநின்றும் போந்த சித்தர்,
திருமூல தேவர்அருள் திருமந்தி
ரச்சிறப்பைத் தெரிந்து ரைத்தல்,
அருள்மூலம் இலாதார்க்கும் அமையுமோ?
தமிழ்நூல்கள் அனைத்தி னுள்ளும்
பெருமூல நூல்என்னப் பிறங்குவது
மூலர்நூல்; பிறிதென் சொல்கேம்? 13

நலன்சிறந்த ஞானமுதல் நால்நெறியும்
நவிற்றுவது; நானி லத்திற்
பலன்சிறந்த மந்திரங்கள் சக்கரங்கள்
பயிற்றுவது; பரிந்தி ரங்கிக்
குலன்சிறந்த அறவுரைகள் கொள்கைகள்தாம்
கூறுவது; குறிக்கொண் டுய்யத்
திறன்சிறந்த நுண்பொருள்கள் தெருட்டுவது;
திருமூலர் திருமந் திரம். 14

ஆலவாய் அண்ணல், அருட் காரைக்கால்
அம்மையார், காட வர்கோன்,
சீலமார் சேரமான் பெருமாள், நக்
கீரரொடு, சீர்க்கல் லாடர்,

---

9 "In India, the Conditions of human love, from the first meeting of eyes to ultimate self oblivion, have seemed spiritually significant, and there has always been a free and direct use of sexual imagery in religious symbolism.

— Dr. Ananda K. Coomaraswamy.
The Transformation of Nature in Art. P. 44.

ஏலஉயர் கபிலரொடு பரணர்,
இளம்பிரான், அதிராஅடிகள் ஏத்தி
ஞாலமகிழ் பட்டினத்தார், நம்பியாண்டார்
நவின்ற, பதினொன் றாகும். 15

பெருகுபல சிறப்புடைய நாற்பதுநற்
பிரபந்தம் பிறங்கும் இஃதில்;
முருகனுக்கும், விநாயகர்க்கும், முதன்மைமிகும்
அடியவர்க்கும், முதல்வ னுக்கும்,
உருகுசுவை அமைந்தொளிரும் உலாமுதல்நூல்
இருபத்தொன் றிதன்கண் உண்டு;
அரியதமிழ் நூற்பெருக்கில் பதினொன்றாம்
திருமுறைச்சீர் ஆற்ற நன்றாம். 16

சுவைகள்என எட்டினையே சூழ்ந்துணர்தொல்
காப்பியனார் சொல்லிப் போந்தார்;
நவையறுசீர் நூலினுக்கு நல்அமைதிச்
சுவைஒன்றும் நலக்கச் சேர்த்தே,
உவகைதரும் நூற்சுவைகள் ஒன்பஃதென்
றேபுலவோர் உரைத்துப் போந்தார்;
அவைகளின்மேல் அரியபக்திச் சுவையதனைச்
சேக்கிழார் ஆக்கித் தந்தார். 17

“வரலாற்றின் உணர்வுசற்றும் வாய்த்திலது
தமிழ்மக்கட்கு”[10] என்றே வாய்சோர்ந்(து),
உரையாற்றி மகிழ்வர்சிலர்; உண்மையது
சிறிதெனினும், ஓர்ந்து ணர்ந்தே
நிரலாற்றிற் சேக்கிழார் நெடிதாய்ந்து
வழங்குபெரு நூல்நி னைப்பின்,
திறனூற்றும் தமிழகத்தின் தேசியநற்
காவியம்அஃ தேயாம் அன்றோ? 18

( வேறு )

திருமுறை நூல்களின் தெய்வநலம் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து); – அருமைமிகும்
நல்ல மறுமலர்ச்சி நூல்கள்என நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து. 1

---

[10] “The historical spirit, the antiquarian spirit, to a great degree even the critical spirit, are developments only of modern times.”

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்
மயற்கையறும் மெய்யறிவு வானில் - உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்(கு)
இல்லை திருமுறைபோல் இன்பு.[11] 2

மனக்கவலை மாற்றும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்; – தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தன இல் மற்று. 3

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்ருய், – விலைவரம்பின்(று)
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு திருமுறைநூற் சீர். 4

---

[11] "To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a soul soaring high into ethereal regions of religion and philosopy, to a spirit seeking serene rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective, as the study of a fine piece of poetry."

— Maraimalai Adigal.

# ஸ்ரீ செயசக்தி விநாயகர் ஆலயம்

## தஞ்சை

இந்த ஆலயம் தஞ்சை புகைவண்டி நிலைய உள் நடைபாதையில் உள்ளது. இந்த ஆலயத்தின் மகிமை என்னவென்ருல் விநாயகப்பெருமான் கிழக்கு நோக்கி வீற்றிருந்து, பலவெளியூர் சேவார்த்திகள் தரிசித்து வேண்டுவதை அளித்து அருள் புரிவதே.

இவ்வாலயத்தில் விநாயகர் சதுர்த்தி திருவிழா சதுர்த்தியிலிருந்து 5 நாட்களுக்கு அதிவிமரிசையாக நடாத்தப்படுகிறது. ஸ்தல விருட்சம்: அரசமரம்.

A. R. சுப்பிரமணியம் B. A., B, L.,
நிர்வாக அதிகாரி

---

# ஸ்ரீ கரும்பாயிரம்பிள்ளையார் கோவில்

## கும்பகோணம் தஞ்சை மாவட்டம்

இக்கோவில் கும்பகோணம் கும்பேஸ்வரர் திருமஞ்சன வீதியிலுள்ளது. இந்த விநாயகருக்கு ஆதியில் வராகவிநாயகர் எனப்பெயர். ஒரு வியாபாரி விற்பனைக்கு ஆயிரம் கரும்புகளை ஏற்றிவர விநாயகர் சிறுவனாக வந்து ஒரு கரும்பு கேட்டார். வியாபாரி மறுக்கவே விநாயகச் சிறுவன் ஒரு கரும்பை உறுவிகொண்டு கோவிலுக்குள் சென்று விட்டார். வியாபாரி கோவிலுக்குள் சென்றுபார்க்க சிறுவனைக்காணுது வெளியில்வந்தான் வண்டியிலிருந்த கரும்புகளும் சாரற்று சக்கையாகக் கிடந்தன. வியாபாரி சிறுவனாக வந்தவர் விநாயகர் எனத்தெரிந்து வழிபட கரும்புகள் மீண்டும் சாறு உள்ளனவாக மாறின. அன்று முதல் இவ்விநாயகருக்கு கரும்பாயிர விநாயகர் எனப்பெயர் வழங்கலாயிற்று.

M. A. V. கணபதி சாஸ்திரிகள்
அறங்காவலர்

---

# ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம்

## தஞ்சை மாவட்டம் உள்ளிக்கோட்டை மன்னார்குடி வட்டம்

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம் மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் பஸ் மார்க்கத்தில் 6 கல் தொலைவில் உள்ளது. ஸ்ரீ பெருந்தேவியார் ஸமேத ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் சோழராஜாக்களால் கட்டப்பட்டது. பிரதி செவ்வாய் வெள்ளி தோறும் பொது ஜனங்கள் கால் நடைகள் இவைகளின் பிணி, நோய்களுக்கு பெருமாள் பிரசாதம் வழங்கப்பட்டு, குணமடைந்து வருகிறது. இவ்வாலயம் திருப்பணி வேலை செய்யப்பட்டு 24—6—71ல் மகாசம்புரோக்ஷணம் நடைபெற்றது.

நிர்வாக அதிகாரி
P. சேதுராமன்

# திரு இரத்தினகிரீசுவரசுவாமி திருக்கோயில்

## திருமருகல்

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்

தல மகிமை

பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

— திருநாவுக்கரசர்

மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று. நாயன்மார்களால் பாடல் பெற்ற திருத்தலங்களுள் ஒன்றுகும். உங்களுக்குத் திருமணம் ஆகவில்லையா? இத்தலத்து இறைவனை வந்து வழிபடுங்கள். உடனே திருமணம் நடைபெறும்.

நிர்வாக அதிகாரி

கி. தியாகராஜன்

அறங்காவலர்கள்:

வி. சிங்காரம்பிள்ளை
எஸ். ராஜாங்கம்
செ. வெங்கட்ராயலு

## ஸ்ரீ கைலாசநாதஸ்வாமி கோயில்

பாபநாசம் வட்டம் **வழுத்தூர்** தஞ்சை மாவட்டம்

இவ் ஆலயம் தஞ்சை-கும்பகோணம் பெருவழிப் பாதையில் அய்யம்பேட்டை புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இறைவர் திருநாமம் கைலாசநாதர். இறைவி திருநாமம் சுந்தராம்பிகை. இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பாள் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப் படுகிறாள்.

A. கரும்பாயிரம் — டிரஸ்டி

T. சொக்கலிங்கம் — நிர்வாக அதிகாரி

## ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

மாயூரம் வட்டம் **திருமயானம்** தஞ்சை மாவட்டம்

திருமயானம் கோயிலின் விஸ்தீரணம் 6 ஏக்கர். திருக்கடையூர் புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஒருமைல் தூரத்தில் உள்ளது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவராலும் தேவாரப்பதிகம் பெற்றது.

கை. கனகசபைபிள்ளை
டிரஸ்டி.

## ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் **திருமெஞ்ஞானம்** தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் புகைவண்டிப்பாதையில் உள்ள பேரளம் நிலையத்திலிருந்து மேற்கே 5 கி. மீ. தொலைவிலும் பேரளம் பேருந்து நிலையத்திலிருந்து காரைக்கால் - குடந்தை நெடுஞ்சாலையில் ஏ. கிளியனூருக்குத் தெற்கே 1 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இறைவனின் திருப்பெயர் ஸ்ரீஞானபுரீஸ்வரர். இறைவியின் பெயர் ஸ்ரீ ஞானம்பிகை. இங்கு வைகாசி மாதத் தில் விசாகத்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

அறங்காவலர் — சி. சீனிவாசன்

நிர்வாக அதிகாரி — ஆர். இராமையா

# முதல் இராசராசன்
# குடிதழுவிக் கோலோச்சியவன்

பேராசிரியர் சி. கோவிந்தராசனுர்

கரந்தை — தஞ்சை

முதல் இராசராசன், கி. பி. 985 முதல் 1014 வரையில் சோழப் பேரரசை வளர்த்துக் காத்தவன். இம்மன்னனுக்குரிய விருதுப்பெயர்களுள் "ராஜாஸ்ரயன்" என்பதும் ஒன்ருகும். இதன் பொருள், அரசர்களாகிய கொடிகள் வளர்வதற்குரிய பற்றுக் கொம்பானவன் என்பதாகும். இவன் தன் ஆட்சியில், மக்கள் யாவரும் மனித உரிமைகளுடன் வாழ வழிவகுத்திருந்தான். அதனுல், மக்களும் இம்மன்னனைப் 'பெரிய பெருமாள்' என்றே அழைத்தனர். தஞ்சை இராசராசேச்சரத்தில் கோயில் அதிகாரியாக இருந்த, ஸ்ரீ கார்யம் தென்னவன் மூவேந்த வேளான் என்பவன், பெரிய பெருமாளாகிய இராசராசனுக்கும், அவன் கோப்பெருந்தேவி ஒலோகமா தேவிக்கும் சிலைகளமைத்துக் கோயிலில் நிறுவியிருந்தான். இவ்வாறு, மக்களும் அதிகாரிகளும் மனமுவந்து போற்றும் தகுதியைப் பெற்றிருந்த இராசராசன் குடி தழுவி கோலோச்சியவன் என்பதை, அவன் காலத்துக் கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு விளக்குவதே இக்கட்டுரையாகும்.

### முடியரசில் குடியரசு கண்டவன்

இராசராசனுடைய ஆட்சியில், சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு, தொண்டைமண்டலம், கொங்கு மண்டலமாகிய நாடுகள் அடங்கியிருந்தன. அவைகளில் அடங்கியிருந்த கிராமங்கள்தோறும் கிராமசபைகளை அமைத்து. இராசராசன் தனது ஆட்சிமுறையை மக்கள் ஆதரவில் செயல்படுத்தி வந்தான். அச்சபைக்கு உரிய அதிகாரிகளை குடவோலை முறையில் (தேர்தல் முறை) மக்களே தேர்ந்தெடுத்தனர். அந்தச் சபையினரே தத்தம் ஊரிலுள்ள நிலங்களுக்குரிய இறைவரி ஆகியவற்றை ஏற்படுத்தி, மக்களிடம் பெற்று, அரசனுக்குரிய முறைமையைச் செலுத்தி வந்தனர். ஊரிலுள்ள நிலங்களை விற்கவும், விலைக்குப் பெறவும் உரிமை பெற்றிருந்தனர். மன்னனுயினும் சரி, ஒரு மாநிலம் அறம்செய்ய விரும்பின், அந்நிலமுள்ள கிராம சபையார்க்குத் தன் கருத்தை ஓலை வழியே தெரிவிப்பான். சபையோர் அதனை ஏற்று மன்னனுக்கு அந்நிலத்தை அளந்து எல்லைக்கல் நட்டு அறவோலை செய்து கொடுப்பர். கிராம சபையோரே ஊரில் நிகழும் நன்மை தீமைகளை நேரில் கண்டும் கேட்டும் ஆராய்ந்து அதற்கேற்ற உதவியோ, தண்டமோ விதித்தனர். நீதி முறையை, தர்மாசனம் என்னும் நீதி மன்றத்திலிருந்து விசாரித்துத் தீர்ப்பு அளித்தனர். இவ்வாறு கிராமசபை என்பது மக்கள் ஆட்சியாக செயல்பட்டது. கிராம சபையோரின் உரிமைகளுக்கு அரசு பாதுகாவலாக இருந்தது. இவ்வாறு ஒரு பேரரசின்கீழ் உள்ள நாடுகளில், மக்களாட்சியே மலர்ந்திருந்தது என்பதால், முடியரசில் குடியரசு கண்டவன் முதலாம் இராசராசன் என்னும் உண்மை புலனுகும். இதனை,

"ஸ்ரீ கோவிராஜகேசரி வர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்ருவது நாட்டொழுக்குத் திருமுகம்வர, திரு

முகம் கண்டு சபையோர் எதிரெழுந்து சென்று தொழுது வணங்கித் தலைமேல் வைத்துப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து எல்லை தெரித்துக் கல்லும் கள்ளியும் நட்டு அறவோலை செய்த நிலம்'' என்று கூறும் ஆனைமங்கலச் சபையோரின் சாசனப் பகுதி யால் நன்கு அறியலாகும்.

### பொதுநோக்கால் புகழ்பெற்றவன்

இராசராசன் கி. பி. 1009-ல் தஞ்சை யில் இராசராசேச்சரத்தைக் கட்டி முடித்து அக்கோயிலுக்கு அறங்கள் பல செய்ய எண் ணினான். பாண்டியரையும் சேரரையும் வென்று கொண்டுவந்த பெரும் பொருளைக் கொண்டு, தான் ஒருவனே கோயிலுக்கு வேண்டிய அறங்களைச் செய்யலாகும். இராசராசன் அவ்வாறு செய்ய விரும்ப வில்லை. உறவினர், அதிகாரிகள், மக்கள் ஆகியோரைக்கொண்டே அந்த அறம் நிகழ வேண்டுமென்று கருதினான். அவ்வளவில் இராசராசனுடைய தமக்கையார் குந்தவை பிராட்டியாரும், மனைவியரும், மக்களும், பொன்னும், மணியும், பொருளும் அளித் தனர். அவற்றை ஏற்று மகிழ்ந்த மன்னன், அவ்வறச்செயலை முறையாக,

''பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ் சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுத்த திருக்கற்றளி ஸ்ரீ இராசராசேச்சரம். இதற்கு நாம் கொடுத்தனவும் நம் அக்கன் கொடுத் தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் கல் லில் வெட்டுக'' என்று ஆணையிட்டான். அவ்வாறே மேலே கண்ட கல்வெட்டு, இராசராசேச்சரக் கல்வெட்டுகளின் முக வுரையாகப் பொறிக்கப்பட்டது.

இவ்வாறு இராசராசன் தான் அமைத்த கோயிலுக்குரிய அறச்செயலில் எல்லோருக் கும் இடமளித்ததின் நோக்கமென்ன? நாட் டில் எல்லோருக்கும் அவ்வறம் உரியதாயின் நிலையாகப் பாதுகாக்கப்பெறும் என்பது டன், நாட்டில் உண்டாகும் நல்லறங்களில் எல்லோர்க்கும் பொறுப்புண்டாக்கும் அரச மதிநுட்ப நோக்கமல்லவா? இவ்வாறு தான் செய்தற்கமைந்த அறச்செயலை எல்லோர்க் கும் உரிமையாக்கிய பொது நோக்கால், இராசராசன் மக்கள் விரும்பும் மன்னனாக விளங்கினான்.

### மக்கள் உரிமைகளை மதித்தவன்

இராசராசனுடைய பாட்டன் அரிஞ் சயசோழன் ஆற்றூரில் பகைவரோடு போர் புரிகையில் இறந்தான். இராசராசன் தன் பாட்டன் நினைவாக பள்ளிப்படைக் கோயி லொன்று, அங்கு எழுப்ப எண்ணினான். அவ்வாறே வடாற்காடு மாவட்டம் என்று இப்பொழுது குறிக்கப்பெறும் ஜெயங் கொண்ட சோழமண்டலத்தில், திருவல்லத் திற்கு 6 கல் மேற்கே உள்ள மேற்பாடி என்னும் ஊரில், அரிஞ்சயேச்சுரம் என்னும் பெயரால், கி. பி. 1014-ல் கோயிலொன்று கட்டினான். அக்கோயிலுக்குரிய நாள் வழி பாட்டிற்கும் பிற செலவுகளுக்கும் உரிய தாக, இராசராசன் நிலபுலன்களை அறமாக ஏற்படுத்தவில்லை. காரணம் தன் ஆட்சியில் அமைக்கப்பட்ட கிராம சபையோர்களே ஊரின் எத்தகைய உரிமைகட்கும் பொறுப் புடையவர்கள் என்னும் சட்ட திட்டங்க ளுக்கு மாறாகத் தான் எதுவும் செய்ய முற் படவில்லை என்பதேயாகும். ஆனால், மேற் பாடியிலுள்ள மக்கள் தாங்களே, 5136½ குழி நன்செய் நிலத்துடன் நந்தவனத்திற்கு உரிய இடத்தையும், கோயிலுக்கு வேண் டிய இடத்தையும் அளவிட்டு எல்லைக் கல் நட்டு தேவதான இறையிலியாக அரசனுக் குக் கொடுத்துள்ளார்கள். இக்கருத்தினை மேற்பாடியிலுள்ள

''உடையார் ராஜராஜதேவர் எங்கள் நக ரத்தில் எடுப்பித்தருளிய திரு அரிஞ்சயேச் சரத்து மகாதேவர் ஸ்ரீ கோயிலுக்கும், திருச் சுற்றாலைக்கும், திருமுற்றத்துக்கும், திருநந்த வனத்திற்கும் ஆக நாங்கள் இத்தேவர்க்கு அளித்த நிலம்'' என்னும் கல்வெட்டு விளக்குகின்றது.

பேரரசனாகிய இராசராசன் தன் ஆட்சி யில் எத்தகைய அறச்செயலும் செய்வதற்கு உரிமை உடையானாயினும், தான் கிராம

சபையோர்க்கும், மக்கட்கும் அளித்துள்ள அதிகாரங்கட்கும் உரிமைகட்கும் மாருக எதுவும் நிகழாமல் குடி தழுவி அறம் செய்துள்ளான். இதனுல் இராசராசன் மக்களுக்கு அளித்திருந்த உரிமைகளை முறையாகக் காத்து, செங்கோல் செலுத்திய செம்மல் என்பது தெளிவாகும்.

## வருமுன் காக்கும் வள்ளல்

ஒரு நாட்டில் பருவமழையின்றி வளங்குறையும் காலத்திலும், பகையால் படையெடுப்போ, போர் நிகழ்ச்சியோ ஏற்படும் காலத்திலும், இயல்பாகவே நாட்டில், மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு பஞ்சம் உண்டாகும். இவ்வாருன காலநிலைத் துன்பம் மக்களுக்கு ஏற்படுமாயின், அதனைச் சமாளிப்பதற்கு, இராசராசன் முன்னதாகவே எண்ணி, ஏற்பனசெய்து வருமுன்காக்கும் மன்னனுக விளங்கினுன்.

பஞ்சவாரம் என்ற பெயரால், நாட்டில் அரசுக்குரிய நிலங்களுள் ஒருபகுதியை ஆங்காங்கே இராசராசன் ஒதுக்கிவைத்தான், கிராமங்கள்தோறும் அமைத்திருந்த சபைகளின் வழியாக மக்களிடத்தில், பஞ்சவாரம் என்னும் பெயரால் விளைவில் ஒரு பகுதியுடன் பொற்காசினையும் வசூல் செய்து, சேமித்து, அதனைத் தஞ்சையிலிருந்த மூல பண்டாரத்திற்குக் கொண்டுவந்து சேர்க்க, 'பஞ்சவார வாரியம்' என்னும் பெயரால் நிர்வாகத்துறை அதிகாரிகளையும் நியமித்திருந்தான். இவ்வாறு, நாடு முழுவதும் உண்டாகும் விளைவுப் பொருள்களில் நெல், வரகு ஆகிய தானியங்களுடன் பஞ்சவார நிதியையும் மக்களிடம் ஆண்டுதோறும் பெற்று, அவற்றைப் பாதுகாத்து, பஞ்ச காலங்களில் மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்திருந்தான். இப்பஞ்சவார மகமை கொள்வதற்குரியதாக பஞ்சவார மரக்கால் ஒன்றும் இராசராசன் ஆட்சியில் இருந்தது. கிராமசபையாரின் உட்பிரிவாகிய வாரியத்தாருள் (Department) ஒரு பிரிவினர் பஞ்சவார வாரியம் என்ற பெயருடன் செயல் புரிந்தனர். இவ்வாறு பஞ்சவாரமாக அளக்கும் நெல்லிற்கு அரசாங்கவரி இல்லைஎன்றும் ஆணையிட்டிருந்தான். இக்கருத்தினை,

"இத்தேவதானம் இங்நம்பர் நாட்டு, தத்தங்குடியும், ஒதியங்குடியும் பால் அகழத்துவப்பேறு, நிலம் மூவேலி. இது பஞ்சவாரம் அளக்கும் நெல்லுப் பதின்கலமும், பொன் ஐங்கழஞ்சே முக்காலே மூன்று மஞ்சாடியும் இரண்டு மாவும் இறை நீக்கி''

என்னும், திருவலஞ்சுழிக் கல்வெட்டு தெளிவாக உணர்த்துகின்றது. இக்கல்வெட்டு இராசராசனுல் கி. பி. 1006ல் ஏற்படுத்தப்பட்டதாகும். இவ்வருஞ்செயலால், இராசராசன் மக்கள் வாழ்வில் எத்துணையளவு பொறுப்புள்ளவனுக, வருமுன் காக்கும் மாண்புடன் விளங்கினுனென்பது நன்கு புலனுகும்.

## உளமறிந்து வளம் செய்தவன்

இராசராசன், தொண்டை மண்டலம் தன் ஆட்சிக்கு வந்ததும், நாடு முழுவதையும் நில அளவு செய்து வரிவகைகளை முறையாக அமைத்தான். இச்செயல் கி. பி. 1005ல் நிகழ்ந்ததாகும். அம்மண்டலத்தில் போளூருக்கு அருகிலுள்ள சிற்றூர் திருவைகாவூர் என்பதாகும். அவ்வூரின் ஒருபகுதி மலையாகும். அம்மலையைச் சார்ந்து ஏரி ஒன்று இருந்தது. ஏரி இருப்பினும் அவ்வூரவர்க்கு உரிய நிலங்கள் யாவும் பாசன வசதியின்றி புன்செய் நிலங்களாக வானம் பார்த்த பூமியாகவே இருந்தன. மக்கள் உழைப்பாளிகளாக இருந்தும் வறுமை வாய்ந்தவர்களாகவே இருந்தார்கள். இவ்வைகாவூர் மலையிலுள்ள குகையில் குணவீர மாமுனிவர் என்ற சமணத்துறவி வாழ்ந்து வந்தார். ஏரி இருந்தும் பாசன வகையின்றி அவ்வூர் மக்கள் படும் துயரைக்கண்ட அம்முனிவர், இச்செய்தியை இராசராசனுக்கு விண்ணப்பம் செய்தார். செய்தி அறிந்த இராசராசன், அப்பொழுது அப்பகுதியைக் கண்காணித்து வந்த தமது நாட்டதிகாரி, வெண்ணுட்டுக்கிழவன் என்பவனுக்குஓலை அனுப்பி, ஏரிக்கு கலிங்கு அமைத்து, ஏரி நீரை வாய்க்கால் வழியாகப் பிரித்து நீர்ப்

பாசன வசதிசெய்ய ஆணையிட்டான். அவ்வாறே வெண்ணுட்டுக் கிழவன் கலிங்கமைத்து ஏரிநீரை வாய்க்கால் வழியாக வழியச்செய்து, பாசனக்கால் ஆக்கினுன். அதுவரையில், புன்செய்ப்பயிர் நிலங்களாக இருந்த புலன்கள் யாவும் நன்செய்ப்பயிர் நிலங்களாயின. நெற்பயிர் நிமிர்ந்து விளைந்தது. மக்கள் மகிழ்ந்தனர். கலிங்கும் வெண்கிழான் கலிங்கென்றும் பெயர்பெற்றது. ஆண்டியின் விண்ணப்பத்திற்கு ஆதரவு செய்த மன்னனை மக்கள் வாயார வாழ்த்தினர். குணவீர மாமுனிவர் இராசராசனையும், வெண்ணுட்டுக் கிழவனையும் பாராட்ட விரும்பினுர். கருத்துடைய பாடலொன்று வாழ்த்துரையாக அவர் வாயினின்றும் ஒலித்தது. அப்பாடலை வைகாவூர்சபையார் திருமலையிலுள்ள பாறையில் கல்லெழுத்துக்களால் பொறித்து வைத்தனர். அக்கல்வெட்டுப் பாடல் இன்றும் நின்று, இராசராசன் மக்களின் குறைகேட்டு முறைசெய்த மேன்மையினை விளக்குகின்றது. அக்கல்வெட்டுப்பாடல்:-

"அலைபுரியும் புனற்பொன்னி
 ஆறுடைய சோழன்
அருமொழிக்கு யாண்டிருபத்
 தொன்ருவ தென்றும்,
கலைபுரியு மதிநிபுணன்
 வெண்கிழான் (என்னும்)
கணிச்செக்ககர் மருபொற்
 சூரியன்தன் பெயரால்
நிலைபுரியும் கலிங்கிட்டு
 நிமிர்வைய்கை மலைக்கு
நீடுழி இருமருங்கும்
 நெல்விளையக் கண்டோன்
குலைபுரியும் படையரசர்
 கொண்டாடும் பாதன்
குணவீர மாமுனிவன்
 குளிர்வைய்கைக் கோவே."

என்பதாகும். இக்கல்வெட்டுப்பாடல் கி. பி. 1005-ல் தோன்றியதாகும்.

மேலே கண்ட சான்றுகளைக் கொண்டு, முதல் இராசராசனின் அரசியல் எவ்வாறு நிகழ்ந்த தென்பதை ஆராய்ந்து முடிபு செய்வோமாளுல்,

முடியரசில் குடியரசு கண்டு, தனக்கென வாழாப் பெருந்தன்மையோடு; மக்களின் உரிமைகளை மாண்புறக் காத்து, நாட்டில் வறுமை வாராமல் முறைமை செய்து, குறை யறிந்து நிறைசெய்து அரசு நடத்தினுன் இராசராசன் என்பதை அறியலாகும். எனவே, மக்கள் நலமே மன்னனுட்சிக்கு வளர்ச்சியாகும் எனும் அரசியல் நுண்மதியுடன் மக்களைத்தழுவி மாண்புடன் செங்கோலோச்சியவன் முதல் இராசராசன் என்னும் உண்மை குன்றின்மேல் இட்ட விளக்காகும்.


## ஸ்ரீ ஆபத்சகாயேசுவர சுவாமி ஆலயம்

### ருத்ரகங்கை

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கில் 4 பர்லாங் தூரத்தில் உள்ளது. இறைவன் பெயர் ஆபத்சகாயேஸ்வரர். தலவிருட்சம்; வில்வம். வழிபட்டோர் கௌரி, பிரமன், விஷ்ணு, சரசுவதி, யமுனை, பாஸ்கரர், விசுவாமித்திரர், பரத்துவாசர். ஆறு: அரசிலாறு எனும் காவிரி. இதில் கங்கையும் யமுனையும் சரசுவதியும் சாசுவதமாய்க் கலந்து செல்கின்றன என்பது புராணச் செய்தி.

**சுவாமிவேங்கடாசலம்**
நிர்வாக அதிகாரி

# ஸ்ரீ சுப்ரமணியசுவாமி திருக்கோயில்

## பெரம்பூர்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் – திருவாரூர் பெரு வழியில் உள்ள மங்கநல்லூரிலிருந்து 5 கி. மீ. தொலைவில் உள்ளது. மாயூரத்தில் இருந்து டவுன் பஸ் வசதி உண்டு.

மயிலுக்கு உபதேசம் செய்த திருத்தலம். இங்கு விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்த சஷ்டி, திருக் கார்த்திகை முதலான திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

நிர்வாக அதிகாரி
கே. எம். சுப்ரமணியம்

அறங்காவலர்
என். சந்திரசேகரம் பிள்ளை

# திரு பாலகிருஷ்ண நாயுடு அறக்கட்டளை

வடுகச்சேரி நாகை வட்டம்

1. ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
2. வடுகச்சேரி ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாளுக்கு ஒரு காலப்பூசை.
3. சித்திராபௌர்ணமி விழாக் காலங்களில் அன்ன தானம், தண்ணீர்ப்பந்தல் தர்மங்கள் நடத்தப்படு கின்றன.

பரம்பரை அறங்காவலர்
எஸ். ரெங்கராமானுஜம்

---

# எமுனதீஸ்வரர் திருக்கோயில்

## பாலையூர்

இவ்வாலயம் எமனால் பூசிக்கப்பட்ட தலம். இங்கு எமதீர்த்தம் என்ற புஷ்கரணி கோவிலுக்கு அருகில் உள்ளது. இத்தலத்தை வழிபடுபவர்களுக்கு பிணியற்ற வாழ்வு ஏற்படும். இத்தலத்தைத் தரிசிக்க வேண்டுகிறோம்.

ஆலய நிர்வாகிகள்

---

# சேஷபுரீஸ்வரசுவாமி திருக்கோயில்

நன்னிலம் வட்டம் திருப்பாம்புரம் தஞ்சை மாவட்டம்

திருஞானசம்பந்தர் பாடியுள்ள திருத்தலம். ஆதிசேடன் சிவ ராத்திரியன்று முதல் யாமத்தில் குடந்தை நாகேஸ்வரரையும், இரண்டாம் யாமத்தில் திருநாகேஸ்வர நாதரையும், மூன்றாம் யாமத்தில் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பாம்புரேஸ்வரரையும், நான்காம் யாமத்தில் நாகூர் நாகநாதரையும் பூசித்துள்ளார். இத்திருத்தலத்தைக் கண்டு இன்புறக் கோருகிறோம்.

ஆலய நிர்வாகிகள்

## ஸ்ரீ சோடசமகாலிங்க சுவாமி தேவஸ்தானம்

தஞ்சை மாவட்டம் கும்பகோணம்

குடந்தை மாநகர்க்கு மாண்பினைத் தருவது மாமகத் தீர்த்தம். கங்கையாதி நதிகளும் வந்து நீராடி வினை தீர்த்துக் கொள்கின்றன.

மகாமகக்குளத்தைச் சுற்றிலும் அமைந்துள்ள பிர்ம்மதீர்த்தேச்சுரர், முகுந்தேச்சுரர், தனேச்சுரர், இடபேச்சுரர், பாணேச்சுரர், சோனேச்சுரர், திணேச்சுரர், பைரவேச்சுரர், அகத்தீச்சுரர், வியாசேச்சுரர், உமாபாகேசர், நைருதீச்சுரர், பிர்ம்மேச்சுரர், கங்கேச்சுரர் முக்தேச்சுரர், க்ஷேத்திரபாலேசர் என்னும் சோடச (பதினாறு) லிங்க மூர்த்திகள் தெரிசித்து இன்புறுவதற்குரியனவாகும். பதினாறு லிங்க மூர்த்திகள் அமைந்து இருப்பதால் அதற்கு சோடச மகாலிங்க சுவாமி எனப்பெயர் பெற்றது.

நிர்வாக அதிகாரி

எம். செல்லபெருமாள் பி. காம்., எப். எஸ். ஏ. ஏ. (இந்தியா)

---

## ஸ்ரீ கல்யாணபசுபதீஸ்வரசுவாமி திருக்கோவில்.

கருவூர் (அஞ்சல்) திருச்சி மாவட்டம்

ஊருக்கு கருவூர் என்றும் கோவிலுக்கு ஆனிலை என்றும் பெயர். கொங்கு நாட்டு பாடல் பெற்ற சிவ ஸ்தலங்கள் ஏழில் முதன்மைபெற்றது. இங்குள்ள இறைவன் பெயர் ஸ்ரீ கல்யாண பசுபதீஸ்வரர். ஸ்ரீ அலங்காரவல்லி, ஸ்ரீ சௌந்தரநாயகி - இரண்டு அம்மன் சந்நிதிகள். இந்த மூலஸ்தான இறைவன் சுயம்புமூர்த்தி. வஞ்சிவனமாக இருந்த காலத்தில் முதல் முதலாக பசுவினால் வழிபாடு செய்யப்பெற்றது. தெற்கு வெளிப்பிரகாரத்தில் கரூர்த்தேவர் கோவில் இருக்கிறது. திருவிசைப்பாவில் பத்து பதிகங்கள் அருளியவர் இவரே. தாடகை தீர்த்தம் முதலிய பலவகைத் தீர்த்தங்களைக் கொண்டுள்ளது. திருஞான சம்பந்தரால் தேவாரப்பதிகம் பெற்றது. அருணகிரிநாதரால் ஆறுமுகப் பெருமான் மீது பாடிய ஐந்து திருப்புகழ் கொண்டது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் எறிபத்தர், புகழ்ச் சோழர் என்ற இருவர் வரலாறுகள் நிகழப்பெற்றது.

நிர்வாக அதிகாரி

M. சேதுராமலிங்கம் B.A.,

---

## திருவலம்புரிநாதசுவாமி திருக்கோயில்

## திருவலம்புரம்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - காவேரிப்பட்டினம் நெடுஞ்சாலையில் மேலையூர் கடை அணையிலிருந்து ஒரு கல் தொலைவிலுள்ளது. சைவ சமயக் குரவர்கள் நால்வரில் மூவரால் பாடப்பெற்ற இத்திருக்கோயில் சுமார் 720 ஆண்டுகட்கு முன்பு "கழுமலமுடைய ஆடல் வல்லான் பிள்ளை ஆழ்வானை திருவீதி திருவலம்புர நம்பி" என்பவரால் கட்டப்பட்டதாக கல்வெட்டு கூறுகின்றது.

நிர்வாக அதிகாரி

கி. கஸ்தூரிரெங்கன்

# ஸ்ரீ பார்வதீஸ்வரசுவாமி திருக்கோயில்

## இஞ்சிகுடி

**நன்னிலம் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்**

இந்த திருக்கோயில் மாயூரம் - திருவாரூர் புகைவண்டிப் பாதையில், பேரளம் புகைவண்டி நிலையத்தில் இருந்து தெற்கே அரை கல் தொலைவில் உள்ளது. சந்தன மரத்தை தலவிருட்சமாகக் கொண்டுள்ள இத்தலத்தைக் குறித்து அருணகிரிநாதரும், இரட்டைப்புலவர்களும் பாடியுள்ளார்கள். சந்தன மரங்கள் நிறைந்திருந்ததால் இவ்வூருக்கு ''கந்தவனம்'' என்ற மறுபெயருமுண்டு. பார்வதி தேவியார் பரமேஸ்வரனைக் குறித்து தபஸ் கோலத்தில் இங்கு அமர்ந்திருக்கும் காட்சி வெகு அழகுடையதாக இருக்கிறது.

இத்தலத்தில் சிவபெருமானைக்குறித்து தவமிருந்த வேடுவருக்கு சிவராத்திரி நாலாம் காலத்தில் சுவாமி ரிஷபாருடராய் காட்சி கொடுத்தருளியிருக்கிறார். இங்கு வைகாசி விசாகத் திருவிழா பிரம்மோற்சவமாக ஆண்டு தோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மாயூரம் - திருவாரூர் - நன்னிலம் ஆகிய இடங்களிலிருந்து பேருந்து வசதியும் உண்டு.

நிர்வாக அதிகாரி

**சி. வி. சிகிவாகனன் நாயர் பி. எஸ்ஸி.**

அறங்காவலர்கள் :

எஸ். நடராஜன் (தலைவர்) எஸ். இராமநாதன்

கவி. தமிழ்நேசன், என். இராமநாதன்

ஜி. கிருஷ்ணமூர்த்தி

# ஸ்ரீ ஆலடி விநாயகர் தேவஸ்தானம்

## உடையார்கோயில்

இந்த ஆலயம் அம்மாப்பேட்டைக்கு மேற்கே 1 கிலோமீட்டர் தூரத்தில் கப்பிச் சாலையின் அருகில் அமைந்து உள்ளது. பூண்டி, உக்கடை போன்ற பெருநிலக் கிழார்கள் இஷ்ட குலதெய்வமாக கொண்டாடி அதனல் பெரும் பயனடைந்து வருகின்றனர். அதேபோல் பொதுமக்களில் பலரும் நித்தம் விநாயகப் பெருமானை தரிசித்து பெரும் பயன் எய்தி வருகின்றனர். ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் பிள்ளையார் சதுர்த்தி பிரமோற்சவம் பத்து நாட்கள் வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

அறங்காவலர்

**அ. க. அண்ணுமலை தென்கொண்டார்**

கருவேந்தநாதபுரம்

# ஸ்ரீ அன்னச்சத்திரம்

தலைச்சங்காடு

ஏழை மாணவர்களுக்கு உணவு,
உறைவிடம் இலவசமாய்
அளிக்கிறது.

பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீமதி M. பட்டம்மாள்

# சோழர்காலத்தில் சைவசமயம்

ஜி. கலியாணம் எம். ஏ., டிப். எக்கான்.,

## சைவத்தின் தொன்மை

சைவம் சிவசம்பந்தமுடையது. சமயம், ஒழுங்காக அமைக்கப்பெற்றது; நன்ருகச் செய்யப்பெற்றது; உலகம் உய்ய உண்மை நெறிகளைக் கூறுவது. சிவம் செம்மை, நன்மை, மங்கலம், அன்பு என்னும் பொருள் களையுடையது. எனவே சைவ சமயத்தை 'அன்புநெறி' என்று கூறலாம். சில சமயத்தினர் 'கடவுள்தான் அன்பு' (*God is love*) என்று கூறுவர். ஆனல் சைவ சமயமோ 'அன்பே கடவுள்' (*Love is god*) என்று கூறும். 'அன்பும் சிவமும் இரண்டல்ல; அன்பே சிவம்' என்பது திருமூலர் திருவாக்கு. சைவசமயம் மிகவும் பழைமையானது; உலகம் முழுவதும் பரவியிருந்தது. வட அமெரிக்காவில் கொலரேடோ (*Colarado*) ஆற்றங்கரையில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் கோயில் இருந்ததாக அமெரிக்கப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்துள்ளனர். (*News Review, London – 23-rd September 1937*). ஆப்பிரிக்க லிபியாவிலுள்ள பாலைநிலப் பசுந்தரை (*oasis*) ஒன்றுக்கு சிவன் என்று பெயர். பாபிலோனியாவில் ஒரு இடத்தின் பெயர் சிவன் என்பது. எகிப்துநாட்டில் நீல நதிக்கரையில் சிவலிங்கங்கள் காணப்பட்டன; அரசர்கள் சமாதிக் கோயில்களிலும் (*Pyramids*) சிவலிங்க உருவங்கள் பொறிக்கப்பெற்று உள்ளன. கிரெத்தா (*Crete*) தீவில் ஒரு நகரத்திற்குப் பெயர் சிவன் என்றிருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் தமிழி (தமிழர்) என்று வரலாற்ருசிரியர் எரதோதஸ் (*Heradotus*) கூறியுள்ளார். சின்ன ஆசியாவில் சிவாஸ் என்ற பழைய நகர் ஒன்று உண்டு. மேற்கு ஆசிய மக்களின் ஆண்டின் மூன்ரும்மாதம் சிவன் எனத் தெரிகிறது. மோசே என்பவர் எகோவா அருளிய பத்துக் கட்டளைகளை (*Ten Commandments*) சிவன் (சிமானு) மாதத்தின் ஆரும்நாளில் சிஞய் மலைமேல் நின்று மக்களுக்கு வெளியிட்டார் என்று கிறிஸ்துவ மறையின் பழைய ஏற்பாடு (Old Testament) கூறுகிறது. அக்கேடிய மக்களின் ஏழு விண்மீன்களில் மூன்ருவது சிவன் எனப்பட்டது. செய்ரோரேயிஸ் (Chosroros) என்ற சுமேரிய அரசன் மனைவியின் பெயர் சிவன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. வட இந்தியாவில் சிவபுரம் என்ற பெயரை பாணினிமுனிவர் குறிப்பிடுகிருர். மோகஞ்சோதாரோ, ஆரப்பா என்ற இடங்களில் அகழ்வாராய்ச்சியில் சிவ வழிபாடே மேல் ஓங்கியிருந்ததாகத் தெரிகிறது. ஆரப்பா என்ற இடத்தில் மட்டும் ஏறக்குறைய 400 சிவலிங்கங்கள் காணப்பட்டனவாம். எங்கும் இலிங்கமயம்! இலங்கையில் சிவபாதமலை, சிவன் ஒளி மலை என்பது புத்தர் காலத்துக்கு முன்பே இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகிருர். பாபிலோனிய கடவுளான 'ஜெஹோவா' (*Jehova*) விவிலிய மறையின் பழைய ஏற்பாட்டில் கூறப்பெறும் 'சியன்' (*Chien*), கிரேக்க கடவுளான 'சியஸ்' (*Zeus*), ஜப்பானியத் தெய்வமான 'சுவா' (*Suwa*) ஆகியவை 'சிவன்' என்ற பெயரிலிருந்து திரித்து வழங்கப்பட்டன என்று ஆராய்ச்சி வல்லுநர் கருதுகின்றனர். இதுகாறும் கூறியவற்ருல் சைவ சமயம் மிக மிகத் தொன்மையானதென்றும், அது உலகம் முழுவதும் பரவியிருந்ததென்றும் கண்டோம். சிந்துவெளி நாகரிகம் (*Indus Valley Civilisation*) என்ற பெருநூலை

எழுதிய சர் ஜான் மார்ஷல் (Sir John Marshall) என்ற பேரறிஞர் 'சைவசமயம் ஒன்றுதான் உலகத்தில் மிகப் பழைய இன்றுமுள்ள சமயம்' (Saivism is the most ancient living faith in the world) என்று கூறியிருக்கிறார். இந்த முன்னுரையுடன் சோழமன்னர் காலத்தில் சைவசமயத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்பதைக் காண்போம்.

## கோயிற் பணிகள்

சோழர் காலத்தை முற்காலச் சோழர் காலம், பிற்காலச் சோழர்காலம் என்று பிரித்துக் கொள்ளலாம். சங்ககாலத்தையடுத்துள்ளவர்களை முற்காலச் சோழர் என்று கூறலாம். அவர்களில் மிகச் சிறப்பானவர் கரிகாலன், கோச்செங்கண்ணன் என்ற இருவர். கரிகாலன் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான். அந்த நகரில் சிவன் கோயில், திருமால் கோயில், முருகன் கோயில், இந்திரன் கோயில், பௌத்த மடங்கள், சமணப்பள்ளிகள் முதலியவை விளங்கின. எனினும் கரிகாலன் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவன் என்பது அவன் காஞ்சிமா நகரில் ஏகாம்பரநாதர் கோயில் திருப்பணி செய்து வழிபட்டமையால் அறிகிறோம். திருஞானசம்பந்தர் ஏகம்பத்துத்தேவாரப் பாசுர மொன்றில் கரிகாலனைச் சிறப்பித்துக் கூறுகிறார். ஏகாம்பரநாதர் கோயில் உட்கோபுர வாயிலின் வலது பக்கத்தில் கரிகாலன் உருவம் இருப்பதை இன்றும் காணலாம். இனி, கோச்செங்கட் சோழன் சைவம் வளர்த்ததைப்பற்றி ஒரு சிறிது காண்போம். திருமங்கையாழ்வார் திருநறையூர்ப் பதிகத்தில் "எண்டோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்து உலகாண்ட திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்தகோயில்" என்றும், திருநாவுக்கரசர் "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்" என்றும் கோச்செங்கட் சோழன் மாடக்கோயில்கள் கட்டியதைப் புகழ்ந்து கூறியுள்ளனர். இம்மன்னன் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகும் பேறு கிடைத்ததால் அவன் பெருமையைக் கூறவும் வேண்டுமோ! "மண்ணெலாம் நிகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன் தன் மகளாம் பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி பாங்கினாற் பணிசெய்து" என்று திருஞான சம்பந்தர் மொழிந்தருளியபடி பாண்டிய நாட்டில் சைவசமயத்தை நிலைபெறச்செய்த மங்கையர்க் கரசியாரை ஈன்றெடுத்தது சோழநாடன்றோ! மணிமுடிச் சோழனின் திருமகளாரே அப்பெரும் பணியைச் செய்தார் என்றால் சோழமன்னர்பரம்பரையினர் சைவசமயத்திற் காற்றிய திருத் தொண்டைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ!

இனி, பிற்காலச் சோழர் காலத்தில் சைவசமயத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்பதைக் காணமுயல்வோம். தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு சோழப் பேரரசை நிலைநாட்டிய விஜயாலயன் முதல் மூன்றாம் இராஜேந்திரன் காலம் வரையில் 23 சோழமன்னர்கள் ஆண்டார்கள். காலம் கி. பி. 800 முதல் கி. பி. 1280 வரையில் உள்ள 430 ஆண்டுகள் என்று ஒருவாறு கொள்ளலாம்.

"விஜயாலய சோழன்" புதுக்கோட்டைக்கருகிலுள்ள நார்த்தாமலையில் சிவன் கோயில்களைக்கட்டினான். அதற்கு 'விஜயாலய சோழேச்சுரம்' என்று பெயர். அவன் காலத்தே தஞ்சையில் நிசும்பசூதினி என்ற துர்க்கைக்கு ஒரு கோயில் எடுப்பித்தான். அவன் மகன் 'ஆதித்த சோழன்' காவிரியாற்றின் இருகரைகளிலும் சிவன்கோயில்களைக்கட்டினான். மண், மரம் போன்ற அழிபொருள்களாலான கோயில்களைக் கற்கோயில்களாக ஆக்கினானென்று அன்பில் செப்பேடுகளால் தெரிகிறது. திருப்புறம்பயத்தில் அவன் கட்டியகோயில் "ஆதித்தேச்சுரம்" எனப்பட்டது. திருவெறும்பியூர்க்கோயிலைக் கற்றளியாக்கினான். திருச்சிற்றம்பலத்தின் முகட்டைப் பொன் வேய்ந்தான்.

ஆதித்தன் மகன் 'முதற் பராந்தகன்' சிறந்த சிவபக்தன்: தில்லைக் கூத்தனிடம் எல்லையிலாப் பேரன்புடையவன். இவன் திருப்பணிகளில் மிகச் சிறந்தது தில்லைத் திருச்சிற்றம்பலத்தைப் பொன்னினால் வேய்ந்தது. இவன் காலத்தில் திருவிடைமருதூர், திருவாவடுதுறை, திருச்செந்துறை, உறுமூர் முதலிய இடங்களிலுள்ள கோயில்கள் கற்றளிகளாக்கப் பெற்றன. பராந்தகன் மூத்தமகன் 'இராஜாதித்தன்' பட்டத்திற்கு வராமல் தக்கோலத்தில் போரில் இறந்தான். அவன் சுந்தரர் திரு அவதாரத்தலமாகிய திருநாவலூரில் ஒரு புதிய கோயிலைக் கட்டினான். அதற்கு "இராஜாதித்தேச்சுரம்" என்று பெயர். அவனுடைய தம்பியே முடிசூடிய 'கண்டராதித்தர்.' சிறந்த சிவனடியார். திருமழவாடி அருகே கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை அமைத்து, கண்டராதித்த விண்ணகரம் என்ற திருமால் கோயிலையும், தென்னார்க்காடு மாவட்டத்தில் பள்ளிச்சந்தல் என்ற ஊரில் கண்டராதித்தப்பெரும்பள்ளி என்ற சமணப் பள்ளியும் அமைத்தார் என்றால் இவருடைய சமய சமரசப் பண்பு தெரிகிறது. இவர் 'சிவஞான கண்டராதித்தர்' என்றே அழைக்கப்பெற்றார்.

கண்டராதித்தர் மனைவியார் 'செம்பியன்மாதேவியார்.' சிறந்த சிவபக்திச் செல்வராயினமையின் 'மாதேவடிகள்' என சிறப்புப் பெயர் பெற்றவர். இவ்வரசியார் ஆற்றிய சமயத்தொண்டுகள் அளப்பில. இந்திய வரலாற்றிலேயே எந்த அரசியும் செய்யாத அளவினவாகும். திருத்துருத்தி (குத்தாலம்), திருக்கோடிகா, திருவாரூரரநெறி, திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), தென்குரங்காடு துறை, ஆநாங்கூர், திருமணஞ்சேரி, திருவக்கரை இக்கோயில்களை எல்லாம் கற்றளிகளாக்கினார். கோனேரிராஜபுரம் என்ற திருநல்லத்தில் 'கண்டராதித்தம்' என்ற சிவன்கோயில் எழுப்பி அதில் தம் கணவனார் சிவலிங்கத்தை வழிபடுவது போன்ற ஒரு படிமத்தை அமைத்திருப்பது இவருடைய பதிபக்தியைக் காட்டுகின்றது. மேலும் தம் பெயரால் நாகைக்கருகில் ஒருஊரையமைத்து அங்கு ஒரு சிவன் கோயிலையும் எடுப்பித்தார். கணவனார் இளவரசராக இருக்கும்போதே கி. பி. 941-ல் திருக்கற்குடி (உய்யக்கொண்டான்மலை)க் கோயிலுக்கு விளக்கு எரிக்க ஆடுகள் தானம் செய்திருக்கிறார். இவர் வாழ்நாளில் கடைசியாக கி. பி. 1001-ல் கட்டியது திருவக்கரை கோயில். பல திருக்கோயில்கட்கு, பொன், வெள்ளி, மணிகளாலான அணிகலன்கள், பொன் வெள்ளிப் பாத்திரங்கள், கோயில்களில் நாள் வழிபாடு, திங்கள்விழா, ஆண்டுவிழா இவைகளின் செலவுகளுக்காகவும், இறை பணியாளர்க்கு ஊதியம், நந்தனவனம் பராமரித்தல், தேவாரத் திருப்பதிகங்கள் விண்ணப்பித்தல் முதலியவற்றிற்கு அளவிறந்த பொன், வெள்ளி, நிலம் வழங்கியிருக்கிறார். இப்பேரரசியார் தம் மாமனார் பராந்தகர், கணவனார் கண்டராதித்தர், கொழுந்தனார் அரிஞ்சயர், அவர் மகனார் சுந்தரசோழர், தம் மகனார் உத்தமசோழர், சுந்தரசோழர் மகனார் இராஜராஜசோழர், அவர் மகனார் இராஜேந்திரசோழர் ஆகிய ஏழு மன்னர்களின் ஆட்சியைக் காணும் நீண்டநாள் வாழ்வு பெற்றவர். இப்பெருமாட்டியின் அறச்செயல்களைக் கண்ட அம்மன்னர்களும் அவர் வழி நின்று பெரும்பணி புரிந்தனர் என்பதற்கு ஐயமுண்டோ! செம்பியன்மாதேவி என்ற ஊரிலே இவர் கட்டிய கயிலாயநாதர் கோயிலில் கி. பி. 1020-ல் இராஜேந்திரசோழன் இவர் உருவத்தை நிறுவி இவர் பெயரால் வழிபாட்டிற்கு நிவந்தங்கள் ஏற்படுத்தினார். இராஜராஜ சோழர் திருமுக்கூடல் பெருமாள் கோயிலில் 'செம்பியன்மாதேவிப் பெருமண்டபம்' ஒன்றையமைத்தார். அறப்பெருஞ் செல்வியாகிய இவ்வரசியார் சைவ சமயத்திற்குச் செய்த தொண்டுகளை விரித்துக்கூற ஈண்டு இடம்போதாது.

கண்டராதித்தர் தம்பி 'அரிஞ்சயன்' ஆட்சிக்கு வந்தான், இவன் மனைவி பூதி ஆதித்த பிடாரி என்பவர் திருச்செந்துறைக் கோயிலைக் கற்றளியாக்கினார். அரிஞ்

சயனுக்குப் பிறகு 'சுந்தரசோழன்' அரசேற்றான், இவனது ஆட்சிக் காலத்தில் "மக்கள் துன்பத்தால் 'ஆ' என்று ஓலமிட்டு அரற்றவில்லை; அதற்கு மாறாக 'அர' என்ற திருநாமத்தின் பெருமுழக்கம் தான் கேட்டது" என்று திருவாலங்காட்டுச் செப்பேடு புகழ்ந்து கூறுகிறது. கண்டராதித்தர் மைந்தன் 'உத்தமசோழன்' ஆட்சியில் அரசாங்க அதிகாரியாயிருந்த விக்கிரமசோழ மாராயன் என்பான் கோவந்தபுத்தூரிலுள்ள திருவிஜயமங்கைச் சிவன் கோயிலைக் கற்றளியாக்கினான்.

சுந்தரசோழன் மகன் 'முதலாம் இராஜராஜன்' இவன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் (பிரகதீசுவரர்) திருக்கோயில் வானுற ஓங்கி அவன் பெரும்புகழுக்கு நிலைக்களனாக விளங்கி நிற்கிறது. "உலகத்திலேயே தமிழர்களே பெருங் கோயில்களைக் கட்டுவதில் தலைசிறந்தவர்கள்; தஞ்சைப் பெரியகோயில் இந்தியாவிலேயே மிக அழகிய கோயில்" என்று மேலைநாட்டினர் பாராட்டியுள்ளனர். (The Tamil races are the greatest temple builders in the world and the great pagoda at Tanjore is by far the grandest temple in India). அப்பர் சுவாமிகள் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் "தஞ்சைத் தளிக்குளம்" என்றது இக்கோயிலுள்ள இடம் என்பர். இக்கோயிலைக்கட்ட 6 ஆண்டுகள் ஆயின. பல தெய்வங்கள், நாயன்மார்கள் இவர்களுடைய திருவுருவங்களை எழுந்தருளச் செய்து விலையுயர்ந்த நகைகளையும் அளித்தான். பூசை விழாக்களுக்கு ஏராளமான நிலங்களை மானியமாக விட்டான். இசை, நடனம் இவைகளை வளர்க்க 400 பதியிலார்களைக் கோயிலைச்சுற்றிக் குடியேற்றி ஒவ்வொருத்திக்கு ஒரு வீடும், ஒரு வேலி நிலமும் கொடுத்தான். தேவாரம் ஓத 48 பிடாரர்கள் (ஓதுவார்கள்) பல கோயில்களிலிருந்து வரவழைத்துக் குடியேற்றினான். இவன் மூதாதையான அரிஞ்சயச் சோழன் நினைவுச் சின்னமாக மேல்பாடி என்ற ஊரில் "அரிஞ்சயேச்சுரம்" என்ற சிவன்கோயிலைக் கட்டினான். ஈழமும் இவன் ஆட்சிக்குட்பட் டிருந்ததால் இவன் தலைவன் ஒருவனால் மாதோட்டத்தில் 'இராஜராஜேச்சுரம்' என்ற சிவன்கோயில் எழுப்பப்பெற்றது. இதுதான் இலங்கையிலே பாடல்பெற்ற பதியான திருக்கேதீச்சுரம் என்பது.

இராஜராஜனின் வீரப் பெருமகன் 'முதலாம் இராஜேந்திர சோழன்' இவன் ஆட்சிக்காலத்தே தான் தமிழ்நாடு மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. தலைநகரைத் தஞ்சையில் இருந்து கங்கைகொண்டசோழபுரத்திற்கு மாற்றினான். "கங்கைகொண்டசோளேச்சுரம்" என்ற அற்புதசிற்பவேலைப் பாடுடைய சிவன்கோயிலைக் கட்டினான். அவனுடைய ஆட்சி கடல்கடந்து கடாரம் முதலிய நாடுகளுக்குச் சென்றதால் அங்கெல்லாம் சைவசமயம் பரவியது. சயாம் தேசத்து மன்னர் முடிசூட்டு விழாவில் 'லோரிம் பாவாய்' என்று பாலிமொழியில் திருவெம்பாவைப் பாடப்பெறும் வழக்கம் ஏற்பட்டது ஈண்டு நினைவுகூர்தற்குரியது.

இராஜேந்திரன் மூத்தமகன் 'முதல் இராஜாதிராஜன்' இவன் காலத்தில் மன்னார்குடியில் ஜயங்கொண்டசோளேச்சுரம், இராஜராஜேச்சுரம் என்ற கோயில்களைக் கட்டினான். குடந்தைக் காரோணம் கோயிலைப்புதுப்பித்தான். இவன் தம்பி 'இரண்டாம் இராஜேந்திரன் காலத்தில் அரசாங்க அதிகாரி செம்பியன் மூவேந்தவேளான் என்பவன் திருவாரூர்க் கோயில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம் இவைகளைப் பொன் வேய்ந்தான். முதல் இராஜேந்திரனின் மூன்றாம் மகன் 'வீரராஜேந்திரன்'. இவன் ஆட்சிக்காலத்தில் அரசியலதிகாரியாயிருந்த இராஜேந்திர மூவேந்தவேளான் என்பவன் திருவொற்றியூர்ப் படம்பக்க நாதர் கோயிலைக் கற்றளியாக்கினான். வீரராஜேந்திரன் மகன் அதிராஜேந்திரன் திருவக்கரையில் திருமால்கோயிலைக் கற்றளியாக்கினான். இதனால் இவ்வரசனின் சமய சமரசப்போக்கு புலனாகிறது.

முதல் இராஜேந்திரனின் மகள் அம்மங்கைதேவியின் புதல்வன் 'முதல்குலோத்

துங்க சோழன்' "திருநீற்றுச் சோழன்" என்ற சிறப்புப்பட்டம் பெற்றவன். மன்னார் குடி இராஜகோபால சுவாமி கோயில் இவனுடைய காலத்தில் கட்டப்பெற்றதே. சூரியனார் கோயிலைக் கட்டியவனும் இம்மன்னனே. வைணவ, சமண, பௌத்தகோயில்களில் இவன் கல்வெட்டுக்கள் காணப்படுவதால் இவனுடைய சமயப் பொதுநோக்கு தெரிகிறது. இவனுடைய படைத்தலைவன் குலோத்துங்கசோழகேரளராசன் என்பான் கோட்டாற்றில் சிவன் கோயிலை எடுப்பித்தான். மற்றொரு படைத்தலைவனான நரலோகவீரன் என்ற காலிங்கராயன் ஆற்றிய சமயத்தொண்டுகள் எண்ணிறந்தன. தில்லைப் பேரம்பலத்துக்கு செப்போடு வேய்ந்தான்; திருஞானசம்பந்தர் கோயிலுக்குப் பொன்வேய்ந்தான்; நூற்றுக்கால் மண்டபம், திருச்சுற்று மாளிகை, தேவார மண்டபம், சிவகாமகோட்டம் இவற்றைக் கட்டினான்; திருவதிகைக் கோயிலுக்குப் பொன் வேய்ந்ததும், காமகோட்டம், நூற்றுக்கால்மண்டபம், திருநாவுக்கரசருக்குத் தனிக்கோயில், நடராஜருக்கு ஆடரங்கு முதலியன அமைத்ததும் இவனுடைய அரும்பெருஞ் செயல்கள். மூவர் தேவாரத்தையும் செப்பேடுகளில் எழுதுவித்து தில்லையம்பதியில் சேமித்து வைத்தது இவனுடைய சிறந்த சைவசமயத் தொண்டு.

முதற்குலோத்துங்கன் மகன் 'விக்கிரம சோழன்' திருச்சிற்றம்பலத் திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில் இவைகளுக்குப் பொன் வேய்ந்தான். நூற்றுக்கால் மண்டபம் கட்டினான். இவன் மகன் 'இரண்டாம் குலோத்துங்கன்' தில்லைப் பேரம்பலம் பொன் வேய்ந்தான்; சிவகாமியம்மன் கோயிலைப் பெரிதாக்கினான்; சிவகங்கை திருக்குளத்தை வெட்டினான். "தில்லைக்கூத்தன் திருவடித் தாமரையிலுள்ள அருளாகிய தேனையுண்ணும் வண்டு போன்றவன்" என்று இவனைத் திருவாரூர்க்கோயில் கல்வெட்டுக் கூறுவதிலிருந்து இவனுடைய சிவனடிப்பேரன்பு விளங்குகிறது. 'இவன் மகன் இரண்டாம் இராஜராஜன்' கும்பகோணத்திற்கு அடுத்த தாராசுரம் என்ற இராஜராஜேச்சுரம் கோயிலை எடுப்பித்தான். அது ஒப்பற்ற அற்புதச்சிற்பவேலைப்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக நிற்கின்றது. அக்கோயிலில் 63 நாயன்மார் வரலாற்றுச் சிற்பங்களையும், 108 சைவாசாரியர் படிமங்களையும் அமைத்திருப்பது இவனுடைய அழுந்திய சைவசமயப் பற்றை விளக்குகின்றது. மலைய (குடகு) மலைப் பக்கத்தில் அடைப்புண்டு காவிரி நீர் வராமல் தடைப்பட்டதைக் கண்டு மலை வெட்டி காவிரிக்கு வழிசெய்தான். "மலை கொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்" என்று தக்கயாகப் பரணியிலும், "சுழியிட்ட காவிரிக்குச் சோழநாடு வாழ வழியிட்ட"வன் என்று இராஜராஜ சோழனுலாவிலும் புகழப்பட்டிருக்கிறான்.

விக்கிரமசோழனின் பேரன் 'இரண்டாம் இராஜாதிராஜன்' ஆட்சிக்காலத்தில் அவனுடைய அதிகாரியொருவன் திருவக்கரையில் சூரியன் திருக்கோபுரத்தைக் கட்டினான். இவனுக்குப் பின் அரசேற்ற 'மூன்றாம் குலோத்துங்கன்' திருவிடைமருதூருக்கு அருகிலுள்ள திரிபுவனம், பெரிய கோயிலைக் கட்டினான். காஞ்சி, மதுரை, திருவிடைமருதூர், தாராசுரம், திருவாரூர், சிதம்பரம் முதலிய இடங்களில் உள்ள கோயில்களில் பல திருப்பணிகளைச் செய்தான். இவனுக்குப் பின்னர் அரசாண்ட 'மூன்றாம் இராஜராஜன்' 'மூன்றாம் இராஜேந்திரன்' இவர்கள் சமயப் பொறையும், சைவசமயப் பற்றும் மிக்கவர்களாய் முன்னவர் கட்டிய கோயில்களைப் பாதுகாத்தனர். மலைகளே இல்லாச் சோழநாட்டில் பெருங்கோயில் பல எடுப்பித்த சோழ மன்னர் தமது புகழ் அக்கோயில்களால் நிலைத்து நிலவுதல் கண்கூடு.

## சைவசமய இலக்கியம்

கண்டராதித்தர் என்ற சோழமன்னர் தில்லையைப் பற்றி 'திருவிசைப்பா' பாடியுள்ளார். தம் தந்தை பராந்தகன் தில்லைச் சிற்றம்பலம் பொன் வேய்ந்ததை அதில்

குறித்துள்ளார். முதல் இராஜராஜன் திருநாரையூர் நம்பிகளைக்கொண்டு தில்லையில் அடைபட்டுக்கிடந்த மூவர் தேவாரத்தை வெளிப்படுத்தி அவர் உதவியால் ஏழு திருமுறைகளாக வகுத்தான்; திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபில்வந்த ஒரு பெண்ணைக்கொண்டு பண்ணமைக்கச் செய்தான்; ஆகவே இவன் 'திருமுறைகண்ட சோழன்' என்று போற்றப் பெற்றான். இவன் காலத்தும் இவன் மகன் இராஜேந்திரன் காலத்தும் வாழ்ந்த கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில் 10 திருப்பதிகங்களை, பாடியுள்ளார். ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. முதற் குலோத்துங்கன் காலத்தில் ஜயங்கொண்டார் என்பவர் 'கலிங்கத்துப் பரணி' என்ற ஈடுமெடுப்புமில்லாத நூலை யாத்தார். நெற்குன்றவாணர் இயற்றிய "திருப்புகலூரந்தாதி'யும், 'தில்லையுலா'வும் இவன் காலத்தனவே. இவன் காலத்தில் வீரைப் பரசமய கோளரிமாமுனிவர் இயற்றிய 'கன்னிவன புராணம்' (திருப்பாதிரிப் புலியூர்) 'பூம்புலியூர் நாடகம்' என்ற நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அவன் வேண்டுகோளுக்கு இணங்க அவனுடைய முதலமைச்சரான அருண்மொழித்தேவர் என்ற சேக்கிழார்பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளைத் 'திருத்தொண்டர் புராணம்' என்ற பெரிய புராணத்தில் அமைத்தார். திருமுறைகளுக்கும், பாடல்பெற்ற தலங்களுக்கும் பெருமை தேடித்தந்து, சைவசமயம் பரவுவதற்குப் பெருந்துணை புரிந்த சிறந்த திருவருட் காவியம் அது என்றால் மிகையாகாது.

விக்கிரமசோழன் காலத்தில் ஒட்டக்கூத்தர் "தக்கயாகப்பரணி' என்ற அருந்தமிழ் நூலைப் பாடினார். இரண்டாம் இராஜராஜன் காலத்தில் கி. பி. 1147-ல் திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் 'திருவுந்தியார்' என்ற சித்தாந்தநூலை இயற்றினார். அவரது மாணவரின் மாணவரான திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் கி. பி. 1177-ல் 'திருக்களிற்றுப்படியார்' என்ற சைவ சித்தாந்த நூலைப் பாடியருளினார். மூன்றாம் இராஜராஜன் காலத்தில் சைவசித்தாந்தத் தலைமணி நூலான 'சிவஞான போதத்தை' திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் இயற்றியருளினார். இவர் மாணவரான திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியர் 'சிவஞான சித்தியார்' 'இருபா இருபஃது' என்ற நூல்களையும், மற்றொரு மாணவரான திருவதிகை மனவாசகங் கடந்தார் 'உண்மை விளக்கம்' என்ற நூலையும், இயற்றியதும் இக்காலத்தேதான். இவைகளே அன்றி, பிற்காலச் சோழ மன்னராட்சியில் பலகாவியங்கள், பௌத்த, சமண, சைவ, வைணவ இலக்கிய இலக்கண நூல்கள் பல பெரும் புலவர்களால் இயற்றப்பெற்றன.

## திருமடங்கள்

கோமடம், கோளகி மடம், கபாலிகர் மடம், வாரணசிக் கொல்லா மடம், பிட்சா மடம் முதலிய வடநாட்டுத் தொடர்புடைய மடங்கள் தமிழ்நாட்டில் இருந்தன. மேலும் சோழநாட்டில் இறைவன், அரசர், நாயன்மார் பெயர்களில் எண்ணிறந்த மடங்கள் இருந்தன. திருச்சத்திமுற்றத்து முதலியார்சந்தானம், திருவிடைமருதூர்மாளிகை மடத்து முதலியார்சந்தானம், செண்பைக்குடி முதலியார் சந்தானம் என்ற தமிழ்ச் சைவமடங்களைச் சிறப்பாகச் சொல்லலாம். இவையன்றி 'குகைகள்' என்ற ஒருவகை மடங்களில் சைவத் துறவியர் இருந்து தேவாரம் முதலியவற்றை ஓதுவித்து வந்தனர். தேவாரம் கற்பிப்பாருக்குத் 'தமிழ் விரகர்' என்றும், திருமுறை ஓதும் மண்டபத்துக்குத் 'திருக்கைக்கோட்டி மண்டபம்' என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோயில்களில் தேவாரத் திருமுறைகள் பாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையிட 'தேவார நாயகம்' என்ற அரசாங்க அதிகாரியும் இருந்தார் என்றும் தெரிய வருகிறது.

## சைவத்தின் பொற்காலம்

பிற்காலச் சோழர் ஆட்சிக்காலத்தே (கி. பி. 850 முதல் 1280 வரை) எண்ணிறந்த கோயில்கள் கட்டப்பெற்றன. ஏறக்குறைய 3000 சிவாலயங்கள் எழுப்பப்பெற்றன. அரசர்கள் சைவசமயப் பற்றுடையவராயிருந்தும் மற்ற சமயங்களைப் பெரிதும் ஆதரித்தனர். இந்திய வரலாற்றுப் பேராசிரியரான வின்செண்ட் ஸ்மித் என்பவர் "சோழ மன்னர்கள் எல்லாருமே சிறந்த சிவபக்தர்கள்; என்றாலும் மற்ற சமயங்களிடத்துப் பொறையுடையவர்கள்" என்று கூறியுள்ளார். (The Chola Kings apparently without exception were votaries of the God Siva, but as a rule, were tolerant of the other sects in the normal Indian manner – Vincent Smith's History of India) அரசர்கள் தமக்கென்று கட்டிய அரண்மனைகள் மறைந்து போயின. அவர்கள் இறைவனுக்கு எழுப்பிய கோயில்கள் சமயச் சின்னங்களாகவும், மௌனமதப் பிரசாரகர்களாகவும் (Silent missionaries) அன்றும், இன்றும், என்றும் நின்று நிலவுகின்றன. சோழமன்னர் காலத்தேதான் திருமுறைகள் நாட்டில் பரவின. சைவசித்தாந்தப் பெருநூல்கள் தோன்றின. அக்காலமே சைவசமயத்தின் பொற்காலம். அக்காலம் எக்காலம்வருமோ அப்போது நாட்டிற்கு நற்காலம். அது இறையருளால் விரைவில் வருவதாகுக.

மேன்மைகொள் சைவநெறி
விளங்குக உலகெலாம்.


# ஸ்ரீ மகாகாளநாதசுவாமி கோயில்

நன்னிலம் வட்டம் **கோயில் திருமாகாளம்** தஞ்சை மாவட்டம்

இத்தலம் கோயில் திருமாகாளம் என்று வழங்கப்படுகிறது. சோழநாட்டில் காவிரித்தென்கரைத் தலங்களில் இதுவும் ஒன்று. அம்பன், அம்பராசுரன் என்ற இரு அரக்கர்களை கொன்ற பாவம் நீங்கக் காளி பூசித்து பேறு பெற்றதால் இப்பெயர் பெற்றது.

பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கில் சுமார் 2 கல் தொலைவில் கப்பிச்சாலையை ஒட்டி அமைந்துள்ளது. பேருந்து வசதி உண்டு. சோமாசிமாற நாயனார் யாகம் செய்த இடம் ஊரின் எல்லையை ஒட்டி உள்ளது. யாக உற்சவம் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம் ஆயிலியத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இறைவனின் பெயர் : மகாகாளநாதர், காளகண்டேசுவரர். இறைவியின் பெயர்: பட்சநாயகி. கிழக்கு நோக்கிய சந்நிதி. தீர்த்தம் மங்களதீர்த்தம். திருஞானசம்பந்தர் இங்குள்ள இறைவனை மூன்று திருப்பதிகங்களால் பாடியுள்ளார்.

**சுவாமிவேங்கடாசலம்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள் :

மு. சிவராமன் (தலைவர்)
க. வி. தமிழ் நேசன், தி. ராமமூர்த்தி

தருமை ஆதீனம்

# ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## திருவையாறு

(தஞ்சை மாவட்டம்)

"யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்"

என்று போற்றும்படி
அப்பரடிகளுக்குத் தென்கயிலாயத் திருக்காட்சி அருளிய தலம்.
திருநந்திதேவர் திருவவதாரஞ் செய்த சிறப்புடையது
சுந்தரர் சேரருடன் இத்தலத்திறைவனைவழிபட எழுந்தருளியபோது
காவிரி வழிவிட்ட அற்புதங்கண்ட தலம்.
பெருமான் ஐயாறதனில் சைவனுகி மாகேஸ்வர பூஜை
நிகழ்த்தியருளிய பெருந்தலம்
சப்தஸ்தானப் பெருவிழாச் சிறப்புடையது.
இறைவர் : ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் இறைவி : தர்மசம்வர்த்தினி
சிறப்புத் திருமேனியாக ஆட்கொண்டார் திருக்கோலம்
அமைந்துள்ளது.
திருஞானசம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் அருளிய
தித்திக்கும் தெய்வத்தமிழ் இத்திருத்தலத்திற்கு உண்டு.
கர்நாடக சங்கீத வல்லுநர் தியாகையர் போன்ற பெருமக்கள்
வாழ்ந்த பெருந்தலம் இது

திருக்கோயில் முழுதும் புதுப்பிக்கப்பெற்றது 31—3—71 அன்று
மிகச் சிறப்பாக மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது.

# ஸ்ரீ சுவேதாரணியசுவாமி

## திருக்கோயில்

**திருவெண்காடு** **தஞ்சை மாவட்டம்**

இவ்வாலயம் சீர்காழி புகைவண்டி நிலையத்திலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காசிக்கு சமமாக கருதப்படும் இத் திருத்தலம், சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்றது. பட்டினத்தார் ஞான உபதேசம் பெற்றதும்,சிறுத்தொண்டரின் மனைவி வெண்காட்டு நங்கை பிறந்ததும் இத்திருத்தலத்தில்தான்.

இங்குள்ள முக்குள தீர்த்தங்களில் மூழ்கி வழிபடுவோர் பிள்ளைப் பேற்றுடன் மற்றெல்லாப் பேறும் பெற்று மகிழ்வர் என்பது திருஞான சம்பந்தரின் திருவாக்காகும். மெய்கண்டார் வரலாறு இதற்குச் சான்றாகும்.

இத்தலத்தில் சுவேதவனப்பெருமாள், பிரும்மவித்யாம்பிகை, அகோர மூர்த்தி, நடராஜர், துர்க்கை, காளி, முருகன் இவர்கள் வரமளிக்கும் தெய்வங்களாய் விளங்குகின்றனர். புதனுக்கு தனி ஆலயமுண்டு. அதிலும் மிக கம்பீரமாய் எட்டுத்திருக்கரங்களுடனும் தாங்கிய சூலத்தோடும் திகழும் அகோரமூர்த்தி மருத்துவாசுரனை வதைத்து தேவர் குலத்துக்கு அருளினர்.

*நிர்வாக அதிகாரி*

**S. மகாலிங்கம் B. Sc.,**

*அறங்காவலர்கள் :*

K. கனகசபைபிள்ளை (தலைவர்)

T. G. பாலசுப்பிரமணிய முதலியார்

M. ராமசாமி

R. ராஜசேகரன் B. SC., BL.,

# திருவெங்கிடாசலபதிபெருமாள் ஆலயம்

நாகை வட்டம் புலிவலம் தஞ்சை மாவட்டம்

புலிவலம் திருவெங்கிடாசலபதி பெருமாள் ஆலயம் அகத்திய முனிவரால் பூசிக்கப் பட்டது. திருஆரூர் மும்மூர்த்திகளில் ஒருவரான திரு முத்துசாமி தீட்சதர் அவர்களால் பாடப்பட்டது. வியாக்ரபாதர் என்ற முனிவர் சிவபெருமான் உத்தரவின்பேரில் பெருமாளை வலம் வந்து அருள்பெற்று புலிரூபம் நீங்கியதால் புலிவலம் என்று வழங்கப்படுகிறதுடன் தென் திருப்பதி என்றும் வழங்கப்படுகிறது. இந்தக் கோவில் திருஆரூர் புகைவண்டி நிலை யத்திலிருந்து தென்புறம் நான்கு கிலோ மீட்டரில் அமைந்துள்ளது.

கோ. பாண்டுரெங்கன்
நிர்வாக அதிகாரி

---

# ஸ்ரீ கரைவீரநாதசுவாமி ஆலயம்

நன்னிலம் வட்டம் கரைவீரன் தஞ்சை மாவட்டம்

ஆரூர் – குடந்தை நெடுஞ்சாலையில் திருவாரூரிலிருந்து சுமார் பத்து கிலோமீட்டர் தொலைவில் சாலையின் ஓரமாக அமைந்துள்ள இத்தலம் சம்பந்தர், நாவுக்கரசர் பாடியுள்ள திருத்தலங்களில் ஒன்றாகும். இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நடராசரைத் தரிசிக்க வேண்டியது அவசியம்.

ஆர். கோவிந்தராஜன்
நிர்வாக அதிகாரி

---

# ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில்

திருத்துறைப்பூண்டி வட்டம் செம்படவன்காடு தஞ்சை மாவட்டம்

ஓதியடிக்காடு என விளங்கும் சிற்றூரில் தேவர் மரபில் தோன்றிய ஒருவர்க்கு கனவில் தோன்றி வரமளித்த ஸ்ரீ வரதராஜப்பெருமாள் இரு மருங்கிலும் ஸ்ரீ இலக்குமி ஸ்ரீ பூமிதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கும் திருத்தலமாகும் இது. எம்பெருமான் இயற்கையில் பூமியிலிருந்து சுமார் 70 ஆண்டுகளுக்குமுன் கிடைக்கப்பெற்ற திவ்ய மங்கள ஸ்வரூபமான திருக்கோயில் நீர்வளம் செழிக்கச் செய்யும் பாமணியாறு மேற்கிலும், கோரைஆறு கிழக்கிலும் ஓடுகின்றன. இத்தலத்திற்குக் கிழக்கே சுமார் இரண்டு கல் தொலைவில் முத்துப்பேட்டை புகைவண்டி நிலையமும், சுமார் மூன்று பர்லாங் தூரத்தில் சுந்தரம் புகை வண்டி நிலையமும் இருக்கின்றன.

V. பூரணலிங்கம்
நிர்வாக அதிகாரி

N. ராமசுவாமி
பரம்பரை டிரஸ்டி

# "தஞ்சைப் பெருவுடையார் கோயில்"

(கி. கோதண்டபாணி M. A., புட்பம் கல்லூரி, பூண்டி)

"உலகிலேயே தமிழர்கள்தாம் அரும் பெருங் கோயில் அமைக்கும் பணியில் தலை சிறந்து விளங்குகின்றனர். பாரதத்திலேயே தஞ்சைப் பெரிய கோயிலே தனக்கு ஒப்பும், உயர்வும் இல்லாத உயர்ந்த கோயிலாகும்.'' என்று மேலைநாட்டுப் பேரறிஞர் ஒருவர் தமிழரது கோயிற்பணியைப் புகழ்ந்துரைத் துள்ளார். தஞ்சாவூர் என்ற பெயரினை இந்நகர் பெற்றமைக்குப் பலர் பலவாறு விளக்கம் கூறுவர்.

சோழ மன்னர்களில் சிறந்த மன்னனாகிய விசயாலயன் (கி. பி. 846-880) என்பவனே இந்நகரைத் 'தஞ்சைபுரி' என்ற பெயருடன் அமைத்தான். இன்றும் தஞ்சையின் வட பால் விண்ணாற்றங்கரையிலுள்ள பழைய சிவாலயம் 'தஞ்சைபுரீஸ்வரர்' ஆலயமென்ற பெயரால் விளங்குவது இதற்கு ஒரு சான்றாகும். இவ்விசயாலயன் மரபில் சோழப் பெருவீரனாய்த் தோன்றிய சோழன் இராச ராசனே (கி. பி. 985 - 1013) இப்பெரு வுடையார் ஆலயத்தை நிறுவினான். இக் கோயில் அவன் பெயரால் "இராசராசேச் சுரம்'' என வழங்கப்படுகிறது. இப்பெருங் கோயிலில் வீற்றிருக்கும் பெருமான் பிருக தீசுவரர் (பெருவுடையார்) என்றும் அம்மை யார் 'பிருகந்நாயகி' (பெரிய நாயகி) என்றும் கூறுவர். இப்பேராலயத்தை நிர்மாணிப்ப தற்குச் சோழப்பெருமன்னன் இராசராசன் 6 ஆண்டுகள் அயராது உழைத்தான் என்று கல்வெட்டுக்கள் வாயிலாக அறிகிறோம். கீழைநாட்டைக் கண்டுகளிக்க வரும் வெளி நாட்டுப்பயணிகள் தமிழகத்தின் தலைசிறந்த கோயிலாகிய, இவ்வாலயத்தைக் காணாது செல்லார். நஞ்சையே சூழ்ந்த தஞ்சையில், மருந்துக்கும் மலையே காணவியலாத ஒரு சமநிலப் பகுதியில் இத்தகு வியத்தகு பேராலயம் கல்லால் அமைத்தது செயற்கரிய செயலாகும்.

இக்கோயில் அமைப்பினை உற்று நோக்கினால் இது ஒருகோட்டையின் அமைப்பினை ஒத்து விளங்குவதை உணரலாம். இக் கோயில் கோட்டையினைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற அகழி விளங்குவதையும் காண லாம். இக்கோயில் அமைந்துள்ள இடப் பரப்பு 800 அடி நீளமும். 400 அடி அகல மும் அமைந்துள்ளது. இக்கோயில் கேரளாந்தகன் வாயில், அணுக்கன் திருவாயில், இராசராசன் திருவாயில் என்ற மூன்று வாயில்களைப் பெற்றுள்ளது. இப்பெரு வுடையார் ஆலயத்தில் நுழைந்தவுடனே, அனைவர் கவனத்தையும் கவரக்கூடியது நந்தியின் உருவமேயாகும். ஒரு பெரிய கல்லால் சிறந்த வேலைத்திறனோடு அமைந்த சிற்பவடிவே இந்நந்தி உருவமாகும். இப் பெருநந்தி 12 அடி உயரமும் 19½ அடி நீளமும் 8¼ அடி அகலமும் உடையதாகும். இதன் நிறை 25 டன் ஆகும். இந்தியாவில் உள்ள பெருநந்திகளுள் இதுவும்ஒன்றாகும்.

இப்பெருவுடையார் ஆலயம் கருவறை யையும் அதனைச்சார்ந்த அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தபன மண்டபத்தையும் ஒருங்கு பெற்றுள்ளது. இம்மண்டபத்தில் தியாகராஜர் உருவம் பொலிவுடன் விளங்கு கிறது. நர்த்தன மண்டபமும், வாத்திய மண்டபமும் அதனைச் சார்ந்து அமைந் துள்ளன.

திறக்கும்'' என்றனர். வேதச் சைவநெறி தழைக்கத் திருவுளங்கொண்ட இறைவனது அருளின் திறத்தால் இராசராசசோழன் சிறிதும் திகைக்காமல், தமிழ் மூவரின் விக்கிரகங்களை அலங்கரித்து வீதியுலா செய்வித்து, "மூவர் வந்தனர் அறையைத் திறப்பிக்க'' எனச் செப்பினன். மறையோரும் வேறொன்றும் செய்ய இயலாதவராய், அவ்வறையினைத் திறக்க அதனுள் மண் மலையே முதலில் காணப்பட்டது. இதனை நோக்கிய மன்னன் சிந்தை தளர்ந்து, கண்ணீர் வாரக் கவன்று நின்றான். பின்னர் "வேதச் சைவ நெறித் தலைவரெனும் மூவர் பாடல், வேய்ந்தனபோல் மண் மூடச் செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம்'' என்று விண்ணில் ஓர் ஒலி கேட்டது. இதனைச் செவியுற்ற வேந்தன் சோர்வுநீங்கி, மண் மலையை அகற்றிப் பார்க்குமளவில், மேற்கூறியவாறு சில பதிகங்கள் மட்டில் சேதமுறாமல் எஞ்சி நின்றன. மன்னன் நெஞ்சந்தேறி, உவகைக் கடலில் ஆழ்ந்து, திருவருளின் கருணைத் திறத்தை வியந்தவண்ணம் நம்பியாண்டார் நம்பியை அப்பதிகங்களைத் தக்கவாறு வகுத்துத் தரும்படி வேண்ட, அவரும் முறைப்படி அவற்றினை வகுத்துத் தந்தனர். மற்றும் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா மாலையை ஒன்பதாந் திருமுறையாகவும், திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், 'சித்திதரும் இறைமொழிந்த திருமுகப்பாசுரம் முதலாம், உய்த்த பதிகங்களையும்' ஒருமுறையாக்கி; அவற்றைப் பதினோராந் திருமுறையாகவும், பின்னர் வகுத்தனர். திருத்தொண்டர் திருவந்தாதியை இயற்றி, பன்னிரண்டாந் திருமுறையாகிய சேக்கிழார் பெரிய புராணத்திற்கும் வழி வகுத்து, சைவப் பயிர் தழைத்தற்குவேண்டிய அனைத்தையும் செய்து முடித்தபின், "நல்லிசை யாழ்ப்பாணனர் நன்மரபின் வழி வந்த வல்லி ஒருத்தி''யிடம் சென்று அவள் வழி தேவாரப் பதிகங்கள் அனைத்துக்கும் இசை அடைவும் அமைத்து அருளினர். இதுவே கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அறிந்துரைத்த திருமுறை கண்ட வரலாறாகும்.

இத்திருமுறைகளின் தெய்வீகத்தன்மை பொல்லாப் பிள்ளையாருடைய வாயிலாக அமைந்த அடியிற்காணும் செய்யுளால் ஒருவாறு அறியலாம்.

'' அருமையைச் சிச்சிலி பண்டருந்த தேடும்
அதுபோ லன்றிது என்றும் உளதாம்
உண்மைப் பரபதமும் தற்பரமும் பரனே
அன்றிப் பலரில்லை என்றெழுதும் பனுவல்
பாரின் எரியினிடை வேவாது ஆற்றெதிரே
யோடும் என்புக்கும் உயிர்கொடுக்கும்
[இடுநஞ்சாற்றும்
கரியை வளைவிக்கும் கல்மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே ''

(திருமுறை கண்ட புராணம் 17ஆவது செய்யுள்)

திருமுறைப் பாடல்கள் நல்ல தமிழுடையன, நல் இசையைப் பெற்றுள்ளன, மந்திரங்களின் சக்தியைப் பெற்றுத் தெய்வீகப் பாடல்களாக அமைந்துள்ளன. இச்சிறப்புக்கள் அனைத்தும் தமிழில் யாக்கப்பட்ட பல நூல்களிடத்துக் காணுதல் அரிது. புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் நல்ல தமிழ் உண்டு. ஆனால் இசையோ தெய்வீகத் தன்மையோ அமைந்ததாகக் கூறல் இயலாது. எனவே மேற்கூறிய சிறப்புக்கள் அனைத்தும் தம்மகத்தே பெற்று, வாழ்க்கை நெறியில் "நல்ல வண்ணம் வாழ வழி அமைத்துத் தந்து, பதி, பசு, பாச இலக்கணங்களை ஐயந்திரிபற அறிவித்து, இறைவன் நற்றாளினைச்சேர அன்றும், இன்றும், என்றும் உதவுவனவாகும் இத்தெய்வீகத் திருமுறைகள். இவற்றைச் சைவ நன்மக்களிடையே நன்கு பரவும்படி செய்தல் சிவநெறி செழித்தோங்குமாறு செய்யும் சீரிய செயல்களில் ஒன்றாகும்.

இத்தன்மைச் சிறப்பு வாய்ந்த திருமுறைகளை நமக்குத் தேடித்தந்த பெருமை இராசராசப் பெருவேந்தனையே சாரும்.

வாழ்க அபயகுல சேகரன்.

# தமிழ்ப் பண்பாட்டுத் தெய்விகக் கலைஞானப் பேரரசன்

வித்துவான் G. M. முத்துசாமிபிள்ளை I.A.S.
(முன்னாள் மாவட்டக் கலெக்டர்)

ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விசயாலய சோழன் தஞ்சாவூரை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றி அதைச் சோழமண்டலத்தினது தலைநகராக்கினான். அதன் பின் ஏறத்தாழ 400 ஆண்டுகளாக சோழர் ஆட்சி இந்நாட்டில் நிலைபெற்றது. இராசராசசோழன் ஆட்சி கி. பி, 985 முதல் 1015 ஆண்டு வரையில் சிறப்புற்று விளங்கியது. இச்சிறப்பை ''திருமகள் போலப் பெருநிலச் செல்வி'' எனப் பாடலாக அமைந்துள்ள இராசராசனின் காலத்து மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது. பேரரசர்கள் பலர் வல்லரசர்களாக ஆட்சி புரிந்துள்ளார்கள். ஆனால் நல்ல அர்சர்களாகத் திகழ்ந்த பேரரசர்களே இறவாப் புகழ் பெற்று உள்ளார்கள். இத்தகைய பேரரசர்களில் தனிச் சிறப்புப் பெற்றுள்ளவன் இராசராசன். அவன் திருக்கோயில் பணி முறையிலே மக்களுக்கு உலகியல் வசதிகளையும் மறுமைக்கு ஏற்ற வழிமுறைகளையும் வகுத்து உதவியுள்ளான். தன் முன்னோர்கள் எழுப்பிய கோவில்கள் பலவற்றிற்கு நன்கொடைகள் பல அளித்ததோடு, பல கோவில்கட்கு புதிய அமைப்பும் ஏற்படுத்தியுள்ளான். இவன் காட்டிய நெறிமுறையில் இவன் குடும்பத்தினர் மட்டுமன்றி, பணியாள்கள், ஊர்மக்கள் ஆகியோர் பலர் கோயில் பணிக்கு உதவினார்கள். இவ்விவரங்கள் எல்லாம் இவனது ஆட்சிக் காலத்துக் கல்வெட்டுக்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றைத் தவிர, சித்தூர் மாவட்டத்தில் உள்ள மேல்பாடியில் சோமநாதர் கோயிலும் அரிஞ்சிகை ஈசுவரமும் இந்தப் பேரரசனால் எடுக்கப்பட்டனவாகும். இவனது பாட்டனான அரிஞ்சயன் ''கூர்த்த மதியுடையவன், திருமகள் கேள்வன், பகைவர்க்குக் கூற்றுவன் செல்வப் பெருமைக்கேற்பக் குணநலனும், செயல் தூய்மையும் உடையவன்'' என்பதற்காகவும் மேல்பாடிக் கருகில் ''போரில் உயிர் கொடுத்து புகழ் கொண்டான்'' என்பதற்காகவும் இராசராசன் இக்கோயிலை எடுத்ததாகத் தெரிய வருகிறது.

இப்பணிகள் எல்லாவற்றிலும் தலை சிறந்ததாகத் திகழ்வது அவன் கட்டிமுடித்த தஞ்சைப் பெரியகோவில். இக்கோவிலின் அமைப்பிலிருந்தும் அதில் காணப்படும் சிற்பங்களிலிருந்தும் இக்கோயில் பிற்காலத்திலும் தக்க வகைகளிலே பயன்படுமாறு அவன் செய்துவைத்த ஏற்பாடுகளிலிருந்தும் அவனுடைய தமிழ்ப் பண்பாட்டுத் தெய்விகக் கலைஞானத்தை ஓரளவிலாயினும் அறிந்து கொள்ளலாம்.

## 1. சிவலிங்க வழிபாட்டைச் சிறப்பித்த சீலர்

இராசராசன் போரிட்டடைந்த வெற்றிகள் பல. இவ்வெற்றிகளுக்கெல்லாம் தலையாயது அவன் கட்டிய பெரிய கோயிலில், அவன் காலத்தில் மிகப் பெரிய விமானம் அமைத்ததும், மிகப் பெரிய சிவலிங்கம் நிறுவியதும், இவற்றிற்கேற்ப மிகப் பெரிய நந்தியை நிலைநாட்டியதுமாகும். சிவலிங்க வழிபாட்டின் தொன்மையும் பெருமையும் இராசராசன் நன்கு உணர்ந்திருந்தான். தன் பாட்டனாகிய அரிஞ்சயனின் தமையன் கண்டராதித்தன் சோழநாட்டை கி. பி. 949 ஆண்டு முதல் 957 வரை அரசாண்டான். இவன் சிவபெருமானிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவன். இவ்வாறே இவன் தேவியாராகிய செம்பியன் மாதேவியாரும் வாழ்ந்தார். இத்தேவியார் ஒரு கோவில்கட்டி அதில் தன் கணவரைச் சிவலிங்க வடிவில்

வழிபாடுசெய்தார். அக்கோவில் அத்தேவியார் பெயரைக்கொண்டுள்ள கிராமத்தில் இன்றுமுள்ளது. இத்தகைய நற்பணியெல்லாம் இப்பேரரசனுடைய கவனத்தை ஈர்த்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

## 2. தெய்விகக்கலை ஞானப்பேரரசன்

பெரிய கோவிலின் விமானம் பல சிற்பங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் மிக எடுப்பாகக் காணப்படுவன சிவமூர்த்தங்களுள் மூன்று. அவையாவன. திரிபுராந்தகர், இராவண அனுக்கிரகர், நடராஜர் மூன்றுக்கும் இப்பேரரசன் மதிப்பு அளித்திருப்பது அவனுடைய சைவப் பேரறிவை சுட்டுவதாகத் தெரியவருகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களிலும் அழித்தல் ஏற்பட்ட பின்னரே படைத்தல் நிகழும் என்பதால் அழித்தலுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. எனவே திரிபுராந்தகச் சம்ஹார மூர்த்தியாகத் திருக்கோலம் கொள்கிறார்.

பொன் வெள்ளி இரும்பு ஆகியவற்றால் ஆயகோட்டைகளில் பறந்து சென்று தீங்கிழைத்த தாரகாட்சகன், கமலாட்சகன். வித்துனமாலி என்னும் அசுரர்களைச் சிவபெருமான் சம்ஹாரமூர்த்தமாகிய திரிபுராந்தக மூர்த்தி வடிவில் அழித்தார். இம்மூன்று கோட்டைகளையும் அவர் அழித்தது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அவர் அழித்தது என்பர் திருமூலர். இத்தகைய தத்துவம்கொண்ட திரிபுராந்தக மூர்த்தியின் சிற்பத்திற்கு நேரே, அம்மூர்த்தியை இராசராசன் வழிபடும் சிற்பமும் காணப்படுகிறது. அவன் உருவத்திற்கு அடுத்ததாக, குருவாகத்தான் ஏற்றுக்கொண்ட கருவூர்த்தேவர் உருவமும் பதிக்கப்படுமாறு அவன் ஏற்பாடு செய்துள்ளான். இம்மூன்று சிற்பங்களைக் கண்ணுற்ற பின்னரே, கீழ்க்காணும் திருவிசைப்பா பாடலைக் கருவூர்த்தேவர் பாடியிருக்கவேண்டும் என்னும் கருத்து அந்தப்பாடலில் அடங்கியுள்ளது.

"நெற்றியிற்கண் என்கண்ணின் நின்றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிருவடி என்குடி முழுதாளப்
புகுந்தன போந்தன இல்லை
மற்றெனக்குறவேன் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில் வாழ்முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ்தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே."

### இராவண அனுக்கிரக மூர்த்தம்

அனுக்கிரக மூர்த்தங்களில் "Yatra, yatra cha yatimsa Ravana raksheswara Jambunadamayam Lingam. sthapya Ravana archayamcsa gandhaischamrita ganhibhit" வகுக்கப்படுகிறது. இராவணன் சிவலிங்கவழிபாட்டில் திளைத்தவன். எங்கெல்லாம் சென்றானோ அங்கெல்லாம் தன்னுடன் பொன்லிங்கத்தை எடுத்துச் சென்று வழிபாடு செய்து பேரரசு எய்தும் நிலைபெற்றான் என இராமாயண உத்தர காண்டம் குறிப்பிடுகிறது. தனிப் பேரரசனாக விளங்கி, வியக்கத்தக்க சிவலிங்கத்தை நிலைநாட்டிய இராசராசனும் இராவண அனுக்கிரக மூர்த்திக்கு மதிப்புக் கொடுத்ததில் பொருத்தம் உள்ளது.

## 3, நடனக்கலையை நிலைநாட்டிய பேரரசன்

அடுத்துச் சிறப்பாக இராசராசனின் கவனத்தை ஈர்த்தது நடராஜ மூர்த்தம். இதில் பஞ்ச கிருத்தியம் எனச் சொல்லப்படும் ஐந்தொழிலும் திருவைந்தெழுத்து மந்திரமும் அடங்கியுள்ளன. சிவபெருமான் ஆடிய நடனங்கள் 108 வகையெனச் சிவாகமங்கள் கூறுகின்றன. இத்தகைய நடனங்களைக் கோவில் விமானச் சுவர்கள் காட்டுகின்றன. இந்நடனக்கலையைப் பரதநூல் விளக்குகிறது. இதில் 'பாவம்' 'ராகம்' 'தாளம்' ஆகிய மூன்று கூறுகள் உள்ளன. 'பாவம்' உட்கருத்துக்களை விளக்குவது. 'ராகம்' ஓசையின் வேறுபாடு. பாவராகங்களுக்கு ஒத்திருக்குமாறு இசைக்கும் ஓசைதாளம். இவ்வற்றின் (பாவம், ராகம், தாளம் ஆகியவற்றின்) முதல் எழுத்துக்களின் (பா. ரா, தா ஆகியவற்றின்) குறில்களாகிய 'பரத' ஆகிய எழுத்துக்கள் பரதத்தைக் குறிக்கும். 'ப' பிரமன், 'ர' மாயன் (திருமால்) 'த' ஈசன்; 'ம' சத்தியின்கூறு எனக்காட்டும்.

இவ்வுண்மைகளை:

"பாவமோ டராகந் தாளம் இம்மூன்றும்
பயின்றிடும் முறையில் பரதம்"

எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணச் செய்யுளைக் கொண்டும்,

"பகரமே பிரமன் மாயன்
பண்பெனப் பகரந்தன்னைத்
தகரமே யீசன் மவ்வே
சத்தியின் கூறதாகும்
அகரமே பிரமஞ் செய்த
லளித்தல்பின் னழித்தலென்றே
சிகரமார் மலய வெற்பின்
செந்தமிழ் முனிவன்சொன்னான்"

என்னும் பரத நூல் பாடலைக் கொண்டும் அறிந்துகொள்ளலாம்.

எனவே, பரதநாட்டியம் என்பது தெய்விகமானது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இத்தகைய தெய்விக சிவ கலையை 400 இளம்பெண்கள் மேற்கொள்ள இராசராசன் திட்டம் வகுத்தான். இவர்களில் முதல் வகுப்பினர் அரச பரம்பரையினர்: இவர்கள் "நக்கன் ராஜகேசரி வகுப்பினர்" இரண்டாம். வகுப்பினர் உயர் குலத்தில் உதித்தவர்கள்: இவர்கள் "நக்கன்சோழகுல சுந்தரி" வகுப்பினர். மூன்றும் வகுப்பினர் சாதாரண நிலையினர்: இவர்கள் "நக்கன் எடுத்த பாதம்" வகுப்பினர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் ஒரு வேலி நிலமும் அளிக்கப்பட்டன. நடனம் கற்றுக்கொடுப்பவர்கள் உட்பட 212 பணி மக்கள் நியமிக்கப்பட்டார்கள். இசைக்கருவிகளுடன் திருப்பதிகங்களை ஓத 50 பேர்கள் நியமனம் பெற்றார்கள்.

## 4. திருப்பதிகங்களை ஓதுவித்த உத்தம சோழப் பேரரசன்

இத்தகைய நடனங்களையும் திருப்பதிகங்கள் ஓதப்படுவதையும் நேரில் கண்டு இன்புற்ற நிலையில் அக்காலத்தில் இராசராசன் சபையில் திகழ்ந்த கருவூர்த் தேவர்,

"வாழியம் போதத் தருகுபாய் விடையும்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசலர் ஆதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளிர்
கங்குல்வாய் அங்குலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சி சூழ்தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே."

எனப்பாடிய திருவிசைப்பா குறிப்பிடுகிறது. இராசராசன் இவ்வாறு வகுத்த திட்டத்தின் அடிப்படையிலே திருக்கோவில்களில் நடனம் புரியும் "தேவதாசிகள்" என்னும் பெயரில் பெண்கள் தெய்வப்பணி செய்து வந்தார்கள். நாளடைவில் சமுதாயத்தின் தீய செயல்கள் பலவற்றின் காரணமாக இத்திட்டம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே சட்டமுறையில் கைவிடப்பட்டது. இத்திட்டம் சரிவர இயங்கி வராமைக்குச் சமுதாயம் காரணமே தவிர இதன் தோல்விக்கு இராசராசன் வகுத்த திட்டத்தின் குறைபாடு காரணம் எனக் கொள்வதற்கு இல்லை.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் சோழர் பேரரசை நிலைநாட்டிய இராசராசன் கட்டி முடித்த தஞ்சைப் பெரிய கோயில் சோழ ஆட்சியின் பெருமையையும் மாட்சியையும் எடுத்துக் காட்டுகிறது. அதிலுள்ள சிற்பங்களும் சித்திரங்களும் இராசராசனது கலைஞானத்தைப் பட வடிவில் காட்டுகின்றன. அவன் அளித்த நடனக் கலை, இடைக்காலத்தில் ஓரளவு குன்றியிருந்தபோதிலும், தற்காலத்தில் வளர்ச்சி அடைந்து உலகப்புகழை அடைந்து வருகிறது. எல்லாவற்றிற்கு மேலதாக கோயிலில் தேவாரத் திருப்பதிகங்கள் ஓதப்பட வேண்டுமென அவன் வகுத்த திட்டம் நிலைகுலையாது இப்போதும் கோயில்கள்தோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ்ப் பண்பாட்டு முறையில் சிவஞானக் கலைஞராக ஆட்சிபுரிந்து மாட்சிபெற்ற இராசராசனைத் தமிழ் நாடன்றி உலகப் பெருமக்கள் யாவரும் தம் நினைவில் கொள்ளுவது பொருத்தமும் கடமையுமாகும்.

தருமை ஆதீனம்

## ஸ்ரீ சக்திபுரீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

### கருங்குயில்நாதன்பேட்டை

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

காவிரியின் வடகரைத் தலம். கல்லணையிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லும் கரிகாலன் பெருவழிப்பாட்டையில் மாயூரமிருந்து ½ கல் தொலைவில் அமைந்தது. அழகான சோலைசூழ் பெரும்பதி. இந்திரனுக்கு ஏற்பட்ட சாபத்தின் பயனாக அவன் கரிக்குருவியாகி அதிலும் தொழுநோய்ப் பற்றியதாகி உழன்றதாகவும், இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கிப்பெருமானை வழிபட்டு அவன் சாபவிமோசனம் பெற்று மீண்டும் இந்திரபதவி பெற்றதாகவும் வரலாறு. இதனைக் கொண்டு ஊர் கருங்குயில்நாதன்பேட்டை ஆயிற்று. பராசக்தி சப்தமாதாவாக உருவெடுத்து இவ்விடம் வந்து பெருமானை வழிபட்டு சித்திகள் பல பெற்றதாகவும், அதிலிருந்து பெருமான் ஸ்ரீ சக்திபுரீஸ்வரர் என்ற திருநாமத்தோடு விளங்குவதாகவும் வரலாறு. தொழுநோயில் துன்புறுவோர் பலர் இங்குள்ள தீர்த்தத்தில் முறையாக மூழ்கி நோய் நீக்கம் பெறுவது கண்கூடு. கார்த்திகை ஞாயிறுகளில் சுவாமி காவிரிக்கு எழுந்தருளி வந்து தீர்த்தம் கொடுத்தல் சிறப்பு. பெருமான்: ஸ்ரீ சக்திபுரீஸ்வரர். கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்மை: ஆனந்தவல்லி. தெற்கு நோக்கிய சந்நிதி. சனி தோஷத்துக்குப் பரிகாரம் செய்தல் சிறப்பு.

---

தருமை ஆதீனம்

## ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி தேவஸ்தானம்

மாயூரம் வட்டம் **விளநகர்** தஞ்சை மாவட்டம்

மாயூரம் நகரைச்சுற்றிப் பல வள்ளல்கள் உண்டு. அதில் இங்குறையும் பெருமான் துறைகாட்டும் வள்ளலாக விளங்குபவர். உயிர்களுக்கு உய்யும் துறைகாட்டும் வள்ளல் ஆவர். அவரே, திருஞானசம்பந்தர் மாயூரத்திற்குத் தரிசனத்துக்கு எழுந்தருளி வந்தபோது தாமே மனித உருவில் எழுந்தருளிப் போந்து காவிரியில் அவருக்கு இறங்கு துறை இங்கு (விளநகரில்) காட்டி அழைத்துவந்து அருள் புரிந்திருக்கிறார். இதனாலும் துறைகாட்டும் வள்ளல் என்ற திருநாமம் பெருமானுக்கு வழங்குவதாயிற்று.

பாடல்பெற்ற பழம்பதிகளுள் காவிரித் தென்கரைத் தலம். திருஞான சம்பந்தர் பதிகம் ஒன்றுண்டு. மாயூரம் – தரங்கம்பாடி பெரும்பாட்டையில் மாயூரத்திலிருந்து 3 கல் தொலைவில் அமைந்து விளங்குவது. மிக அழகான சோலை சூழ்ந்த ஆலயம். பெருமான் : ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி. கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்பிகை : வேய்த்தோளியம்மை. தெற்கு நோக்கிய சந்நிதி.

# ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி
# திருக்கோயில்
## திருமக்கோட்டை

மன்னார்குடி வட்டம் தஞ்சை மாவட்டம்

திருமக்கோட்டை என்னும் கிராமம் மன்னார்குடியிலிருந்து 10 மைல் தெற்கே உள்ளது. தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, திருத்துறைப் பூண்டி மற்றும் திருவாரூரிலிருந்தும் நேரிடையாக பஸ் வருகின்றன.

வசிஸ்டர் இக்கோயிலின் ஸ்தலவிருக்ஷமான பாரிஜாத மரத் தினடியிலுள்ள சிவலிங்கத்தை வழிபாடு செய்து வருவாராயினர். பூஜைக்குகந்த பெருங் கூத்தர் சிவலிங்கத்தின் வாயிலாக வெளிப்பட்டு, "உமக்கு வேண்டும் பேறு என்ன?" என்று வினவ, என்றும் நீங்காத ஞானம் வேண்டும் என்று வேண்டியதால் "ஞானபுரீச்சுரம்" என்று வழங்கப்பட்டதாகவும், தாமும் ஞானபுரீஸ்வரர் என்னும் நாமத்தை ஏற்று அருளினர் என்பதும் தல வரலாறாகும்.

இக்கோயிலினுள் பதினாறு கணபதிகள் பல இடங்கள்தோறும் விளங்குவதால் 'சோடச கணபதி ஸ்தலம்'' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இக்கோயிலுக்கு எதிரேயுள்ள தீர்த்தத்தில் இருதசேகர சோழமகாராஜா குளித்ததால் பெருநோய் அகன்று விட்டதாகவும் அத்தீர்த்தத்திற்கு "ஞானதீர்த்தம்" எனவும் கூறப்படுகிறது. இறைவனின் பெயர் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர். இறைவியின் பெயர் பிரஹன்நாயகி.

கோபுர வாயிலின் முற்ற வெளியில் வசந்த மண்டபம் உள்ளது. இரண்டாவது பிரகாரத்து கோபுர வாயிலின் இடது கைப்புறம் கணபதி, வலதுகைப்புறம் குமாரக்கடவுள் முன்வாயிலில் தரிசன கணபதி, சுவாமிவிமான தென்பக்கத்தில் தக்ஷிணாமூர்த்தி முதலிய முக்கிய திருவுருவங்கள் உள்ளன. கல்வெட்டு கி. பி. 1070 - 1120ல் பொறிக்கப் பெற்றதிலிருந்து இது குலோத்துங்க சோழ மன்னன் காலமென தெரிகிறது.

நிர்வாக அதிகாரி

R. சிவதேவு

அறங்காவலர்கள் :

P. R. ரெத்தினசாமி வாண்டையார் (தலைவர்)

கோ. வீ. காசிநாதன், P. சத்திதானந்தம்

# தஞ்சை அரண்மனை தேவஸ்தானம்

## தஞ்சாவூர்

"உலகத்திலே கோயில்கள் கட்டுதலில் ஈடும் எடுப்பும் அற்றுச் சிறந்த தொரு பெருங் கோயிலாக எழில்மிக்கு விளங்குவது தஞ்சைப் பெரிய கோயி லாகும்'' என அயல்நாட்டு அறிஞர்களால் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து இன்புறு கின்றதும், "தமிழர்களின் கட்டிடக் கலையின் உச்சநிலைக் கீர்த்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக எழில்மிக்கு விளங்குவதுமான'' தஞ்சைப் பெரியகோயில் இந்த தேவஸ்தானத்தின் 88 கோயில்களில் ஒன்றாகும். இந்த தேவஸ்தானம் தஞ்சை மகாராஷ்டிர மன்னர்களின் வாரிசு பரம்பரையிலும், தற்காலம் மேற்படி பரம்பரையில்வந்த ராஜஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப் அவர்களாலும் பரிபாலிக்கப் பட்டு வருகிறது. சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையால் நியமிக்கப் பட்ட பொருளாளர் மேலாளர் உதவியுடன் பரம்பரை டிரஸ்டி அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. டி தேவஸ்தானத்தின் தற்கால பொருளாளர் மேலாளராக A. N. பார்த்தசாரதி B. Sc., அவர்கள் இருந்துவருகிறார்.

இந்தத் தேவஸ்தானத்தின் பல்வேறு கோயில்களின் நிர்வாகம் சிறப்புடன் நடத்திவர 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டும் ஒவ்வொரு பிரிவும் ஒரு அமீனாவின் பொறுப்பிலும் இருந்து வருகிறது. 1 முதல் 5 பிரிவு கோயில்கள் தஞ்சை நகரத் திலும், பிரிவு 5-ல் தஞ்சை புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயிலும், பிரிவு 6-ல் வடகுரங்காடுதுறை ஸ்ரீ தயாநிதேஸ்வரஸ்வாமி கோயிலும், 7-வது பிரிவு கும்ப கோணம் வட்டம் தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரஸ்வாமி கோயிலும், 8 ஆவது பிரிவு அம்மாசத்திரத்தைச் சேர்ந்த திருவியலூர் ஸ்ரீ சிவயோகநாதஸ்வாமி கோயில் வகையறாவும் இருக்கிறது.

### தஞ்சை நகர்ப்பகுதி கோயில்களில் முக்கியமான கோயில்கள்

### கலைக்கோயில்கள்

#### ஸ்ரீ பிரகதீஸ்வரசுவாமி கோயில்

கி. பி. 985 - 1013 ஆண்டுகளில் புகழுடன் அரசாட்சிசெய்த முதலாம் ராசராச சோழ மன்னரால் எடுப்பிக்கப்பட்டது. இந்த மாபெருங்கோயில் தமிழ் இனத்தின் அழகுணர்ச்சிக்கும் அறிவாற்றலுக்கும் இணையற்ற ஓர் எடுத்துக்காட் டாகும். சோழர்களின் கலைச் சிற்பத்திற்கும் அழியாத சின்னம் இக்கோயிலே யாகும். 82 அடி நீளமும் அகலமும் உள்ள சதுர அடிப்படையில் எழுப்பப்பட் டுள்ள 200 அடி உயரமுள்ள விமானம் இப்பெருங்கோயிலின் அமைப்பிற்கே அழகையும் பெருமையையும் தருகிறது.

#### ஸ்ரீ ஐராவதேஸ்வரஸ்வாமி கோயில்

கும்பகோணம் வட்டம் தாராசுரம் புகைவண்டி நிலையம் வடபுறமாக ஒரு பர்லாங்கு தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து தென்மேற்கில் 2 கல் தொலை விலும் உள்ளது. சோழ மன்னர்களான ராஜாதிராஜ (A. D. 1018 - 35) குலோத் துங்கன் (A. D. 1070-1118) இவர்களின் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இக்கோயில் சிற்பக்கலைக்குப் புகழ்பெற்றது.

# பாடல்பெற்ற ஸ்தலங்கள்

## ஸ்ரீ வஸிஷ்டேஸ்வரஸ்வாமி கோயில்

இந்தக் கோயில் தஞ்சை கருந்தட்டாங்குடியில் இருக்கிறது. இக்கோயில் அப்பர் சுவாமிகளால் வைப்புஸ்தலமாக பாடல்பெற்றது.

## ஸ்ரீ தயாநிதேஸ்வரஸ்வாமி கோயில்

இக்கோயில் பாபநாசம் வட்டத்தில் திருவையாறு - கும்பகோணம் நெடுஞ்சாலையில் திருவையாற்றுக்குக் கிழக்காக 7 கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து 14 கல் தொலைவிலும் உள்ளது. திருஞானசம்பந்த ஸ்வாமிகளால் திருப்பதிகம் பாடல்பெற்றதும் வாலி பூஜைசெய்ததுமான சிவஸ்தலம்.

## ஸ்ரீ சிவயோகநாதஸ்வாமி கோயில்

இக்கோயில் கும்பகோணம் வட்டம் கும்பகோணம் - வேப்பத்தூர் நெடுஞ்சாலையில் 4 கல் தொலைவிலுள்ளது. இத்தலமும் திருஞானசம்பந்தர் அவர்களால் திருப்பதிகம் பாடப்பெற்ற சிவஸ்தலம்.

தஞ்சைநகர் வடபுறம் தஞ்சை - கும்பகோணம் நெடுஞ்சாலையில் 3 கல் தொலைவில் வெண்ணாற்றங்கரையில் ஆழ்வார்களால் நாலாயிரப் பிரபந்தம் பாடியதும் 108 திருப்பதிகள் அடங்கியதுமான ஸ்ரீ நீலமேகப்பெருமாள், ஸ்ரீமணிகுன்னப்பெருமாள், ஸ்ரீ மேலசிங்கப்பெருமாள் ஆகிய திவ்யதேசப் பெருமாள் கோயில்கள் இருக்கின்றன. ஷ திவ்யதேசப் பெருமாள் கோயில்கள் சமீபத்தில் தமிழ்நாடு அரசு மான்யம் உதவியாலும் பொது ஜனங்களுடைய ஆதரவினாலும் திருப்பணி செய்யப்பட்டது.

## புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோயில்

இக்கோயில் தஞ்சையின் கீழ்ப்புறம் தஞ்சை - நாகபட்டினம் நெடுஞ்சாலையில் 4 கல் தொலைவிலுள்ளது. ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திர ஸ்வாமிகள் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக வழங்கப்படுகிறது. பிரதி ஆவணிமாதம் உத்ஸவம் நடைபெறுகிறது. தஞ்சை மகாராஷ்டிர மன்னர்களால் ஷ கோயில் கட்டப்பட்டு பூஜைக்கான சொத்துக்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

# ஸ்ரீ சுந்தரேஸ்வரசுவாமி ஆலயம்

## கொரநாட்டுக் கருப்பூர் (திருப்பாடலவனம்)

குடந்தை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் பாதையில் 2 கி. மீ. தொலைவில் உள்ளது. குடந்தைப் புராணத்தில் கூறப்படும் சுவாமிமலை முதலான பஞ்ச குரோசத் தலங்களுள் ஒன்று. இங்குள்ள பிரமதீர்த்தத்தில் நீராடுவோர் பல யாகங்களைச் செய்த பயனைப் பெறுவார்.

இவ்வாலயத்தில் பெட்டிக்குள் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுந்தரமகா காளியம்மன் சக்தி வாய்ந்தது; புகழ் பெற்றது. குபேரன், இந்திரன், சோமகேது என்ற வடநாட்டரசன் ஆகியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம்.

நிர்வாக அதிகாரி

**சா. இராமசாமி**

அறங்காவலர்கள் :

**கோ. வி. நாராயணசாமி** (தலைவர்)

**சீ. இராமமூர்த்தி**

**கு. சுப்பையன்**

# திரு அட்சயலிங்கசுவாமி ஆலயம்

## கீழ்வேளூர்

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் – நாகூர் புகைவண்டிப் பாதையில் கீழ்வேளூர் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. திருவாரூர் – நாகபட்டினம் பெருவழிப்பாதையில், மத்தியில் அமைந்துள்ளது. சமயக்குரவர்களில் மூவரான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் இத்திருக்கோயிலைச்சிறப்பித்துப்பதிகம் பாடியுள்ளனர். முருகன் இப்பூவுலகில் இறைவனைப் பூசித்த தலமாகையால் கீழ்வேளூர் என்பதாகப் பெயர் பெற்றது.

இத்திருக்கோயிலில் ஆனிமகத்தில் எம்பெருமான் தன் திருமணக் கோலத்துடன் கால் மாறி நடனம் ஆடி அகத்திய மாமுனிவருக்குக் காட்சிக் கொடுத்திருக்கிறார்.

இத்திருக்கோயிலில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ அஞ்சுவட்டத்தம்பாள் மிகவும் சக்தி வாய்ந்த வரப்பிரசாதியாகக் கருதப்படுகிறாள். இங்கு ஸ்ரீ அஞ்சுவட்டத்தம்பாளுக்குப் பங்குனி மாதத்தில் பெருவிழா சிறப்பாக நடத்தப்படுகின்றது.

இங்கு ஆனி மகத் திருவிழாவும், ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டி விழாவும், சித்திரை விழாவும் மிக்க சிறப்புடையன.

நிர்வாக அதிகாரி

**இரா. நரசிம்மன், B. Sc.,**

அறங்காவலர்கள் :

செ. கி. கோவிந்தாசலு நாயுடு (தலைவர்) கு. கணபதி

# ஸ்ரீ பிச்சைக்கட்டளை

## திருக்கடையூர்

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்தக்கட்டளை பரம்பரை அறங்காவலர் திரு. கை. கனகசபை பிள்ளை அவர்களின் முன்னோர்களால் நிறுவப் பட்டது. திருக்கடையூர் ஸ்ரீ அபிராமி அம்மனுக்கு நித்திய பூசை இக்கட்டளை நிதியிலிருந்து நடைபெறுகின்றது.

ஸ்ரீ அபிராமிபட்டர், ஸ்ரீ உய்யவந்ததேவநாயனர், ஸ்ரீ காரிநாயனர், ஸ்ரீ குங்கிலியக்கலயநாயனர் ஆகியோருக்கு இக்கட்டளையின் சார்பில் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. இத் திருக்கோயிலில் திருமணம் செய்து கொள்ளும் ஏழை தம்பதி களுக்கு கட்டளை நிதியிலிருந்து திருமாங்கல்யம் வழங்கப் படுகிறது.

தேவாரப்பாடசாலை ஒன்றும், ஆரம்பபாடசாலை ஒன்றும் இந்தக் கட்டளையினுல் நடத்தப்படுகின்றன.

திருக்கடையூர் மருத்துவ மனையில் ஒரு மகப்பேறு பகுதி இந்தக் கட்டளையால் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டளை நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் பூம்புகார் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பரம்பரை அறங்காவலர்

**கை. கனகசபை பிள்ளை**

இத்தலம் (வடுவூர்) தஞ்சை, மன்னார்குடி பஸ்ரூட்டில் தஞ்சையிலிருந்து 22 கி.மீ. தொலைவிலுள்ளது. இத்தலத்திற்கு வகுளாரணியம், தக்ஷிண அயோத்தி, பாஸ்கர க்ஷேத்திரம் என்ற பெயரும் வழங்கி வருகிறது. ஸ்தலவிருட்சம் "வகுளமரம்". வால்மீகியாலும் கம்பராலும் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிற லட்சணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்றது இங்குள்ள திருவுருவம். ஸ்ரீ தியாகப்பிரம்மத்தால் ஸ்ரீ ராமனைக் குறித்துப் பாடிய சில முக்கிய பாக்கள் கல்வெட்டில் பதித்து வைக்கப் பட்டுள்ளது. பல மாகாணங்களிலிருந்தும் பக்தர்கள் தரிசித்து அவரவர்கள் இச்சை கள் பூர்த்தியாகி, பல காணிக்கைகளை செலுத்தி வருகின்றனர். இது ஒரு பிரார்த்தனை ஸ்தலமாகும்.

இப்புகழ்பெற்ற ஆலயத்தை சுமார் ரூ. 1,20,000 செலவில் திருப்பணி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பல அன்பர்களின் மூலம் ரூ. 60000 வரை நிதி திரட்டி திருப் பணிகள் நடந்து வருகிறது. குறைந்த வருவாயுள்ள கோயிலாக இருப்பதால் பாக்கித் தொகையும் பொதுமக்களிடமே எதிர்பார்க்கப்படுகிறது. நன்கொடை அளிப்போர்க்கு மத்திய நிதியமைச்சகத்தால் வருமான வரி விலக்கும் அளிக்கப்பட்டு உள்ளது. அன்பர்கள் யாவரும் தங்களாலியன்ற உதவிசெய்து திருப்பணியை விரை வில் பூர்த்திசெய்து ஸ்ரீ ராமபிரானின் அருளுக்கு பாத்திரராக வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்பவேண்டிய விலாசம்:
தலைவர் or காரியதரிசி & பொக்கிஷதார்
ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோயில் திருப்பணி கமிட்டி
வடுவூர், மன்னார்குடி வட்டம், தஞ்சை மாவட்டம்.

இப்படிக்கு
**ஆலய நிர்வாகிகளும்**
**திருப்பணி கமிட்டியாரும்**

# ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமாள் திருக்கோயில்

கும்பகோணம் வட்டம் நாச்சியார்கோயில் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் பெருவழியில் தெற்கே ஐந்து கல் தொலைவில் உள்ள நாச்சியார் கோயில் கிராமத்தில் அமைந்திருக்கிறது. இங்கிருந்து திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன்கோயில் ஆகிய திருத்தலங்களுக்குச் செல்லும் பஸ் வசதி உண்டு.

இத்திருத்தலம் வைணவப் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்று இருக்கிறது. ஸ்ரீ தாயார் மிகுந்த வரப் பிரசாதியாக இருப்பதால் இத்தலத்திற்கு நாச்சியார்கோயில் எனப் பெயர் வந்தது.

ஸ்ரீ பட்சிராஜன் நாச்சியாரைத் தேடிக் கண்டு திருமணம் செய்ய உதவியாக இருந்தபடியால் அவர் வரப்பிரசாதியாகப் போற்றப்பெற்று பூஜைக்கு உரியவராக இங்குத் திகழ்கிறார். உற்சவங்களில் நான்காம் திருநாள் இவருடைய புறப்பாடு மிக விசேஷமாக கொண்டாடப்படுகிறது.

இங்கு கருடாழ்வார் பூஜைக்கு உரியவராக விளங்குகிறார். அவர் பிரார்த்தனைக்கு உரியவராகவும், 6 கால பூஜைகளுடன் தனி சந்நிதியில் இருப்பதுவும் ஆறு திவ்விய உபாசன தெய்வங்களுள் ஸ்ரீ பட்சிராஜனும் ஒருவராக ஆராதிக்கப்படுதல் மிகவும் விசேஷம்.

இக்கோயிலில் கீழ்கண்டவாறு முக்கியத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

1. ஆவணி மாதம் விசாக விண்மீன் திருக்கல்யாணம்.
2. மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி முக்கோடி தெப்ப உற்சவம்.
3. பங்குனி மாதம் உத்திர விண்மீன் திருத்தேர், பிர்மோற்சவம்.

பல ஆண்டுகளாக சுதைத் தைலக்காப்புடன் கூடிய பெருமாள் தாயார் மற்றும் மூலவர்கள் விக்கிரகங்கள் நன்கு சுத்தம்பெற்று சுதைகளை நீக்கி வேலைசெய்து வருங் காலை சுதை திருமேனியுள் நல்ல சிலா திருமேனிகள் கிடைக்கப்பெற்று இப்போது மூலவர்கள் மிகவும் அழகாகவும் பார்ப்பவருக்கு மிகவும் வனப்பூட்டும் விக்கிரகங்களாகவும் காட்சி அளித்து வருகிறார்கள். திருப்பணிகள் செய்விக்கப்பெற்று சம்ரோக்ஷணம் சிறப்புற 17—5—70ல் நடைபெற்றது.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து சேவார்த்திகளுக்கு ஓர் தங்கும் விடுதியும் தினம் 30 சேவார்த்திகளுக்கு பிரசாதங்களும் உற்சவ காலங்களில் வரும் சேவார்த்திகளுக்கு பிரசாதங்களும் கொடுக்கப்பட்டுவருகின்றன.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து ஓர் "அன்பு இல்லம்" நடத்தப்பெறுகிறது. அதில் 35 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் இதர பராமரிப்பு செலவுகள் செய்துதரப்படுகின்றன. அவர்கள் பள்ளி இறுதி வகுப்பு வரை பயில வசதி செய்யப்பட்டிருக்கிறது. தற்பொழுது திருக்கோயிலின் முன்புறம் பொது ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு திருமணமண்டபம் கட்டப்பட்டுள்ளன.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

V. சீனிவாசன் (தலைவர்) C. கிருஷ்ணமூர்த்தி, V. S. வெங்கடாசலம்

R. சிவசுப்பிரமணியம்

# ஸ்ரீ அக்கினீஸ்வரசுவாமி திருக்கோயில்

## திருப்புகலூர்

தொலைபேசி எண் 37

**நன்னிலம் வட்டம்** **தஞ்சை மாவட்டம்**

இத்தலம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலியவர்களால் தேவார திருப்பதிகங்கள் பெற்று விளங்குவது. தேன்பொழியும் செந்தமிழ் நாட்டினிலெங்குஞ் சென்றிறைஞ்சிப் பொய்ப்பாசம் போக்குவாராய் திருநாவுக்கரசு நாயனார் வந்தணைந்து பெருமானோடு இரண்டறக் கலந்த பெருமையினையுடையது இப்பூம்புகலூர். நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து (மாயூரம் - திருவாரூர்) கிழக்கே 4 மைல் தொலைவில் நாகபட்டினம் - நன்னிலம் பெருவழியிலுள்ளது இத்தலம்.

தலத்தின் திருநாமங்கள் :- புன்னாகவனம், சரண்யபுரம், சரண்யபுரி, இரத்தனாரணியம், புகலூர் முதலியன.

மூர்த்திகள் :- சுவாமி - அக்கினீஸ்வரர், அம்பிகை - கருந்தார்குழலி, மூலத்தான சுயம்புலிங்கத் திருமேனி சிறிது வடபுரம் சாய்ந்துள்ளமையால் இறைவன் கோணப்பிரான் என்றும் பெயர் பெற்றார் போலும்.

தீர்த்தம் :- பொய்கை இக்கோயிலைச் சூழ்ந்து நான்கு பக்கங்களிலும் அகழிபோல் அமைந்துள்ளது, பாணதீர்த்தம், அக்கினிதீர்த்தம்.

தலவிருட்சம் :- புன்னை. "புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூர்".

முருகநாயனார் திருவவதாரம் செய்து புஷ்பத்தொண்டு செய்யவந்த தலம். முருகநாயனார் அவர்தம் திருமடத்தில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் அளவளாவி மகிழ்ந்திருந்தனர். பிள்ளையார் நாயனார், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய சீரடியார்கள் பலரும் திருத்தொண்டின் நிலையுணர்த்தும், திருப்பதிகச் செந்தமிழின் திறம் போற்றியும் திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தும் இவ்வாறு ஒருப்படு சிந்தையுடையவராய் உடல் உறைவின் பயன்பெற்று எழுந்தருளியிருந்த பெருமையினை நன்குடையது இத் திருத்தலமே.

சித்திரை சதய நன்னாளை பத்தாம் நாளாகக்கொண்டு பத்து தினங்களிலும் திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாறுகளைக்கொண்ட ஐதீகமே மக்களுக்கு நினைவூட்டப்படுகிறது.

வைகாசி மாதத்து பௌர்ணமி நன்னாளை இறுதியாகக்கொண்டே இங்கு பிர்மோற்சவம் நடைபெறுகிறது.

இந்த தலத்தில் சந்திரசேகரர் விசேடமான மூர்த்தியாகும்.

இலவச உணவு, உடை தங்கும் வசதிகளுடன் ஆகமபாடசாலை ஒன்றும், இலவச மருந்து விநியோகத்துடன் சித்த வைத்தியசாலை ஒன்றும் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ-ல-ஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டாரசந்நிதிகள்
பரம்பரை அறங்காவலர் (வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர்)

**சி. சுப்பிரமணிய பிள்ளை**, பி. ஏ., பி. எல்., பொருளாளர்

# ஸ்ரீ நாகநாதசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி வட்டம் **பாமணி** தஞ்சை மாவட்டம்

இத்தலம் மன்னார்குடி நகரத்துக்கு வடக்கே 1½ கல் தொலைவில் உள்ளது. மன்னார்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து நேர் வடக்கே 1 கல் தொலைவில் உள்ளது. சைவசமய ஆசாரியர்களாகிய நால்வரில், தேவாரம் பாடும் மூவரும் இத்திருக்கோவிலைப்பற்றி பாடியுள்ளனர். சிவக்ஷேத்திரக் கோவையில் திருநாவுக்கரசுநாயனரும், சுந்தரமூர்த்திநாயனரும் இத்தலத்தை சேர்த்து பாடியுள்ளார்கள்.

திருப்பாற்கடல் கடையும்போது வாசுகி கக்கிய ஆலகாலவிடத்தை சிவ பெருமான் உண்ணும்படி நேர்ந்தது. அதனை எண்ணி எண்ணி நைந்துருகி வாசுகி இப்பாபத்தைப் போக்கிக்கொள்ள இந்த லிங்கத்தை பக்தியுடன் பூசித்தது. பிறகு நாகலோகத்திலிருந்து அட்ட நாகங்களும் முறையே பூசித்தன. இக்காரணங்களால் இந்த லிங்கம் நாகலிங்கம் எனப்படும். நாகங்களுக்கு சிறந்ததாயாய் விளங்குவதால் இத்தலத்தின் சிவபெருமானுக்கு நாகநாதர் என்னும் பெயர் உண்டாயிற்று.

வைகாசி மாதம் நடைபெறும் விசாக தீர்த்தப் பெருவிழா மிகவும் சிறப்புடையது.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா விஜயதசமி விசேடமானது.

மார்கழி மாதம் திருவாதிரையில் நடராஜர் அபிஷேக தரிசனமும் விசேஷமாகும்.

தைப்பூசத்தன்று சுவாமி பாம்பணி நதியில் தீர்த்தம் கொடுத்தல் மிகவும் நன்னாளாம்.

ஆலய நுழைவாயிலில் கைலாசபர்வதம், பார்வதி, பரமேஸ்வரர் கோபுரம் அமைந்துள்ளது.

அறங்காவலர்கள்:

ப. நாராயணசாமி M. L. C. (தலைவர்)

ரா. வெங்கடாசலம் செருமாடார் சு. ராமலிங்கம்

ஒக்கூர் சி. கரு. சி. லெ. கரு. ஆதப்ப செட்டியார் உ. பஞ்சநதன்

நிர்வாக அதிகாரி

**K. ராமலிங்கம்**

# ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில்

## ( பழமலைநாதர் திருக்கோயில் )

### விருத்தாசலம் தென்னாற்காடு மாவட்டம்

இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமான் பழமலைநாதரும் பெரியநாயகியுமாவர். பாடல்பெற்ற நடுநாட்டு சிவத்திருக் கோயில்களில் இதுவும் ஒன்று. சைவசமய ஆசிரியர் மூவராலும் பாடல் பெற்றது. மற்றும் அருணகிரியார், குருநமச்சிவாயர், குமாரதேவர், சிவப்பிரகாச முனிவர், இராமலிங்க வள்ளல், சொக்கலிங்க அடிகள் முதலியோராலும் திருப்பாடல்கள் பெற்றுத் திகழ்வது.

இத்திருக்கோயிலைச் சுற்றி மணிமுத்தாறு நதி பாய்கின்றது. இதுவே புண்ணிய நீராகும். இந்த நதியில் எலும்பையிட்டால் கல்லாக மாறிவிடுகின்றது. பெருமானிடம் சுந்தரர் பொன்னைப்பெற்று இந்நதியில் இட்டுத் திருவாரூர் கமலாலயத்தில் எடுத்தார் என்பர்.

இத்திருக்கோயில் காசியினும் வீசம் அதிகம் என்பர். காசியில் எவ்வாறு இறைவனை எழுந்தருளச்செய்து இருக்கின்ருர்களோ அத்தகைய நிலையில் இங்கு இறைவனை எழுந்தருளச்செய்து இருக்கின்ருர்கள். தமிழகத்தில் எங்கும் இல்லாத ஆழத்துப் பிள்ளையார் கோயில், இருபத்தெட்டு ஆகமகோயில்கள் இங்கு இருந்து பொலிகின்றன. குருநமச்சிவாயருக்காக அம்மன் இளமைநாயகியாக வந்து அன்னம் தந்தாள் என்பர்.

இத்திருக்கோயிலில் வன்னிமரம் கற்பகமரமாக புண்ணிய இடமரமாக (ஸ்தல விருட்சம்) பொலிகின்றது, இதன் வயதை எவரும் அறியார். இத்திருக்கோயிலில் இரண்டு பெருவிழாக்கள் உண்டு. ஒன்று மாசிமகத் திருவிழா, மற்ருென்று ஆடிப் பூரத் திருமணம்.

வான் உயர் கோபுரங்கள் ஐந்தும் அழகிய ஒப்புயர்வில்லா வேலைப்பாடுகள் உடையன. இத்திருக்கோயிலை செம்மையாக்க திருப்பணிக்குழு அமைத்து இருக்கின் ருர்கள். இதற்கு பத்து இலட்ச ரூபாய் தேவைப்படுகின்றது.

முதல் கட்டமாக கீழ இராஜகோபுரத் திருப்பணியை தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு எம். கண்ணப்பன் அவர்கள் (6—5—1971ல்) தென்ஞற்காடு மாவட்ட செயலாளரும், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினருமான திரு, எம். செல்வ ராசு எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள். அன்பர்கள் திருப் பணிக்குப் பொன்னும் பொருளும் பணமும் கொடுத்து எல்லாம் வல்ல பழமலைநாத பெரியநாயகியின் அருளுக்கு ஆளாக விழைகின்ருேம்.

அறங்காவலர்
**T. S. சுப்பிரமணிய பிள்ளை B.A., B.L.,**
தலைவர், திருப்பணிக்குழு

நிர்வாக அதிகாரி
**A. சண்முகசுந்தரம்**

# ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி
# தேவஸ்தானம்

**திருத்தணிகை** செங்கற்பட்டு மாவட்டம்

திருமுருகன் உறையுஞ் சிறப்புத்தலங்கள் ஆறுபடை வீடுகளில், ஐந்தாவது படைவீடாகும் திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருட்பிரகாச இராமலிங்கர், அருணகிரிநாதர், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

இத்தகு சிறப்புவாய்ந்த இத்தணிகை, செங்கை மாவட்டத்தில் சென்னை - பம்பாய் இருப்புப்பாதையில், அரக்கோணம் சந்திப்பிலிருந்து வடக்கே 8 கல் தொலைவிலும் சென்னையிலிருந்து 54 கல்தொலைவிலுமுள்ளது.

இத்தலத்தில் நடைபெறுகின்ற ஆடிக் கிருத்திகைப் பெருவிழாவில் லட்சோபலட்சம் காவடிகள் செலுத்துவதும், பிரார்த்தனை முடிப்புகள் செலுத்துவதும், திருப்புகழ் முடிப்புகள் செலுத்துவதும், ஒவ்வோருண்டும் டிசம்பர் 31-ம் நாள், ஜனவரி 1ந் தேதி திருப்படித் திருவிழாவில் திருப்படிகள்தோறும் திருப்புகழ்பாடி செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

நாள்தோறும் இத்தலத்தை நாடி ஆயிரமாயிரம் அன்பர்கள் வருகின்றனர். வருகின்ற யாத்ரீகர்களுக்கு தங்குவதற்கு குடியிருப்பு இல்லங்களும், குடியிருப்பு அறைகளும், தங்கும் விடுதியும், சிற்றுண்டி சாலையும் மலைக்கு வாகனங்களில் செல்ல மலைப்பாதையும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

கே. எஸ். சண்முக முதலியார் (தலைவர்) சி. சிதம்பரம் பி. ஏ.,
ஜி. எஸ். துரைசாமி முதலியார் ஜி. துரைசாமி நாயுடு
வி. சங்கரன் கே. கன்னையா நாயுடு

# ஸ்ரீ ரெங்கநாதர் ஆலயம்

மன்னார்குடி வட்டம் திருமக்கோட்டை தஞ்சை மாவட்டம்

திருமக்கோட்டை ஸ்ரீ ரெங்கநாதப்பெருமாள் ஆலயம், மன்னார்குடியில் இருந்து தெற்கே 10 மைல் தூரத்தில் உள்ளது.

அயோத்தி ஸ்ரீ ராமன், தம்பி இலக்குமணன், சீதாபிராட்டியாருடன் இங்கு வருகைதந்து ஸ்ரீ ரெங்கநாதரை எழுந்தருளச்செய்து சேவித்தார்கள்.

ஸ்ரீ விபீஷண ஆழ்வார் ஸ்ரீ ராமனுடைய திருப்பாதங்கள் தோய்ந்த பல திவ்வியதேசங்களைக் கண்டதுபோல் இங்கு ஸ்ரீராமன் வழிபட்ட ஸ்ரீ ரெங்கநாதன் என்று அறிந்துவந்து, நித்திய சேவை செய்ய எண்ணி பகவத் பக்தியில் ஈடுபட்டு திருவாராதனை செய்துவந்தார். ஆராதனைக்குகந்த அரங்கநாதர், ஸ்ரீ விபீஷண ஆழ்வாருக்கு பிரத்யக்ஷமாகி, "நீ சிரஞ்சீவிகளில் எண்மருள் ஒருவராக இருப்பாயாக" என்று அனுக்கிரகித்தார். ஸ்ரீ விபீஷணஆழ்வார் மீண்டும் நமஸ்கரித்து எழுந்து நிற்க, அவன் உள்ளப்பாங்கை அறிந்த ஸ்ரீ ரெங்கநாதர் என்ன வேண்டுமென்று கேட்டருள, விபீஷண ஆழ்வார், தேவரீர் அடியேனுக்கு பிரத்யக்ஷமானதுபோல ஆராதனைக்கு வருகின்ற பக்தர்கள் அனைவருக்கும் பிரத்யக்ஷமாக வேண்டும். சேவை சாதித்து அருள வேண்டும் என்று உபயபாதங்களையும் கரத்தால் பிடித்துக்கொண்டு வேண்டினார். அதுமுதல் திருமக்கோட்டை ஸ்ரீ ரெங்கநாதப் பெருமாள் வரப்பிரசாதமூர்த்தியாக நின்று வேண்டுவோருக்கு வேண்டும் வரமளித்து காத்துவருகின்றார்.

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் சித்தரை மாதத்தில் பிர்மோத்ஸவம் மிகச் சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

நிர்வாக அதிகாரி

**ஆர். சிவதேவு**

அறங்காவலர்கள் :

P. R. ரெத்தினசாமி வாண்டையார் R. கணேசன்

M. பிச்சைய்யன்சாம்பான்

# ஸ்ரீ சந்தானராமசுவாமி வகையரு ஆலயம்

மன்னார்குடி வட்டம் நீடாமங்கலம் தஞ்சை மாவட்டம்

நீடாமங்கலம் என்கிற இந்த ஊரில் பிரசித்தி பெற்ற மகாராஷ்டிர மன்னர்களால் கட்டப்பட்ட ஆலயங்கள் 2. அவை ஸ்ரீ சந்தான ராமசுவாமி ஆலயம், ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி ஆலயம். இவைகள் இரண்டும் கி. பி. 1761-ம் ஆண்டு கட்டப்பட்டவை.

நீடாமங்கலம், தஞ்சை ஜில்லாவில் நடுமத்தியிலுள்ள ரயில் சந்திப்பு. இந்த ஊருக்கு வருவதற்கு ரயில் பஸ் வசதிகள் உண்டு. கிழக்கே ஆரூர் 15 மைல். தெற்கே மன்னார்குடி 8 மைல். மேற்கே தஞ்சை 19 மைல். வடக்கே திருக்குடந்தை 15 மைல்.

மகாராஷ்டிர மன்னரான ஸ்ரீ பிரதாபசிம்ம மகாராஜாவுக்கும், எமூரும்பாள்பாய் சாகேபுக்கும் புத்திரனில்லாக் குறையைப் போக்கியதால் "சந்தானராமன்" என்ற சிறப்புப் பெயர் கொண்டவர். ஸ்ரீ இராமர், ஸ்ரீ லெக்ஷ்மணர், ஸ்ரீ சீதாதேவி இந்த 3 உற்சவ விக்கிரகங்களுக்கு, திருமுக மண்டலம் உள்ளம் கவரும்படியாக தனி ஒளிவீசும் தன்மையுடையவை.

சிவன் கோயில் பிரதான மூர்த்தியான ஸ்ரீ காசி விசுவநாதர் நர்மதையிலிருந்து கிடைத்த பாணலிங்கம். வடநாட்டு துறவியொருவரால் அளிக்கப்பட்டது.

பெருமாள் கோவில்:- ஆடிப்பூரம் தெப்பத்திருவிழா, மார்கழிமாதம் அத்யான உற்சவம், திருவெம்பாவை, திருப்பாவை மாநாடு, பங்குனிமாதம் ஸ்ரீ ராமநவமி பிர்மோற்சவம்.

ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயில்:- ஆடிப்பூரம், நவராத்திரி, மார்கழிமாதம், மாணிக்கவாசகர் உற்சவம். வைகாசி மாதத்தில் பெருவிழா. எல்லாவித வசதிகளும் நிறைந்த சிற்றூர். பிரதி ஞாயிறுதோறும் இங்கு நாய்க்கடிக்கு மருந்து கொடுக்கப்பட்டு வருவது மிகப் பிரசித்தம்.

பொதுமக்கள் சௌகரியத்திற்காக சுமார் ரூபாய் 60,000 செலவில் திருமண மண்டபம் கட்டப்பட்டு 9—4—71-ல் வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திருமண மண்டபத்திற்கு இணைப்பாக, சமையல் அறை, சாப்பாட்டுக் கூடம் இவைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கான அடிக்கல் நாட்டு விழாவை 5—5—71-ல் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். ஷை திருமண மண்டபத்திற்குத் தற்பொழுது ரூ. 25 வாடகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

அறங்காவலர்கள் :

**ந. சோமசுந்தரம் M.L.A. (தலைவர்)**

**ஆ. சுப்பிரமணியன் சே. சந்தானராமன்**

நிர்வாக அதிகாரி

**சே. சஞ்சீவி**

# நடுதறிநாதசுவாமி

## திருக்கோயில்

### கோயில்கன்றுப்பூர்

**நாகை வட்டம் — தஞ்சை மாவட்டம்**

இத்தலம் மாயூரம் — காரைக்குடி புகை வண்டிப் பாதையில், மாவூர் ரோடு இரயில் நிலையத்திலிருந்து 4 கல் தொலைவில் கீழ்த்திசையில் அமைந்துள்ளது. சைவசமயக் குரவராகிய நாவுக்கரசரால் பாடல்பெற்ற தலமாகும். நட்ட தறியிலிருந்து வெளிப்பட்ட காரணத்தால், நடுதறிநாதரென இறைவன் திருநாமம் அமைந்துள்ளது. இறைவியின் பெயர் மாதுமைநாயகி.

இத்தலத்தின் வரலாறு சைவ வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

நிர்வாக அதிகாரி

P. திருநாவுக்கரசு

அறங்காவலர்கள் :

V. ரெங்கராமானுஜம், (தலைவர்)

T. கோபாலசாமி

N. வேணுகோபால்

# ஸ்ரீ மந்திரபுரீசுவரர் திருக்கோயில்

## கோயிலூர்

திருத்துறைப்பூண்டி வட்டம் தஞ்சை மாவட்டம்

இறைவன் : **ஸ்ரீ மந்திரபுரீசுவரர்** இறைவி ; **பெரியநாயகி**

**அமைந்துள்ள இடம் :** தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் முத்துப்பேட்டை புகைவண்டி நிலையத்தில் இருந்து வடக்கே ஒரு கல் தொலைவிலுள்ளது.

**தீர்த்தங்கள் :** அனுமார் தீர்த்தம், மார்க்கண்டேயர்தீர்த்தம், நெல்லித் தீர்த்தம், குஞ்சு தீர்த்தம், கிடங்கரின் தீர்த்தம், இரட்டையான் தீர்த்தம், கௌதம தீர்த்தம் முதலியன.

**பார்க்கவேண்டிய இதர முக்கிய மூர்த்திகள் :** கையில் மாவிலை கொத்துடன் அமைந்திருக்கும் சூதவனவிநாயகர், மூன்று கால்களுடன் கூடிய ஜுவரத்தேவர், அழகு நிறைந்த ஸ்ரீ நடராஜர், தனியாக உள்ள சனீஸ்வர பகவான்.

**தலத்தின் விசேடங்கள் :** ஸ்ரீ ராமர் சேது அணை கட்டுவதற்கு முன் திருமறைக்காடு மணல்மேல்குடி முதலிய இடங்களில் அணைகட்டுவதற்கு முயன்று அணைகட்ட முடியாமல்போகவே இத்தலத்திற்குவந்து இறைவனை வழிபட்டு இறைவனிடம் மந்திரஉபதேசம்பெற்று சேது அணை கட்டி முடித்ததாகவும் இதனால் இறைவனுக்கு ஸ்ரீ மந்திரபுரீஸ்வரர் என்று பெயர் அமைந்துள்ளதாகவும் வரலாறு.

**மார்க்கண்டேயர் தீர்த்த விசேடம் :** மார்க்கண்டேயர் மீது எமதர்மனால் வீசப்பட்ட பாசக்கயிற்றினால் கருமேகம் உண்டாகி இத்தலத்தில் உள்ள மார்க்கண்டேயர் தீர்த்தத்தில் நீராட கருமேகம் மறைந்ததாக ஐதீகம்.

ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம்.

**இதர பணிகள் :** 1. முத்துப்பேட்டையில் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளி திருக்கோவில் நிதியிலிருந்து ஆரம்பித்து நடத்தப்பெற்றுவருகிறது. 2. மேல் நிலை நீர்த்தொட்டி கட்டப்பெற்று குழாய்மூலம் தண்ணீர் வழங்கப்பட்டுவருகிறது. 3. கோவிலூர் கிராமத்தில் சாலை மின்விளக்குகள் தேவஸ்தானத்தாரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 4. திருக்கோயிலின் நிதியிலிருந்து ஆலயம்வரை சாலை பராமரிக்கப்பட்டுவருகிறது.

ப. முத்துசாமி,
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர்கள்:

ஆர். கே. மாரியப்பதேவர் (தலைவர்)
எம். தண்டாயுதபாணி பிள்ளை
ஏ. கே. சுப்பையா எம். எல். ஏ.,
எஸ். ராஜகோபால் பிள்ளை
ந. தருமலிங்கம்

## ஸ்ரீ வெங்கடாஜலபதிபெருமாள் கோயில்

மன்னார்குடி வட்டம் கோட்டூர் தஞ்சை மாவட்டம்

மேற்படி ஆலயம் கோட்டூர் ஸ்ரீ கொழுந்தீஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் உள்ளது. ஸ்ரீ கொழுந்தீஸ்வரர் ஆலயத்துக்கு தெரிசனத்துக்கு வருபவர்கள் ஸ்ரீ வெங்கடாஜலபதி பெருமாள் ஆலயத்துக்கும் வருகைதருமாறு அழைக்கிறோம்.

A. சுவாமிநாதன்

தக்கார்

---

## ஸ்ரீ வண்டுறைநாதசுவாமி ஆலயம்

திருவண்டுறை மன்னார்குடி வட்டம்

இத்தலம் மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில் மன்னார்குடியில் இருந்து 6-கல் தொலைவிலுள்ளது. இறைவன் பெயர்: திருவண்டுறை நாதர். இறைவியின் பெயர்: வேனெடுங்கண்ணி. ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இத்தலத்தில் பிருங்கி முனிவர் இறைவரையும், இறைவியையும் வணங்கி நற்பேறு பெற்றதாகக் கூறப்படுகிறது.

அறங்காவலர்
S. ராமதுரை

நிர்வாக அதிகாரி
P. சேதுராமன்

---

## ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள் ஆலயம்

மன்னார்குடி வட்டம் நீடாமங்கலம் தஞ்சை மாவட்டம்

மூலவர் ஸ்ரீ லட்சுமி நாராயணன். இது தென்கலை சம்பிரதாய ஸ்தலம். இதைக் கிருஷ்ணன் கோயில் என்ற பெயரால் அழைப்பதும் உண்டு.

ஐப்பசி மாதத்தில் மணவாள மாமுனிகளுக்கு உத்சவம், அட்சய திருதியை தினம் காலையில் உதய கருட சேவை, பகலில் விசேஷ திருமஞ்சனம், ஆவணி மாதத்தில் உறியடி உத்சவம் இவைகள் நடைபெறும்.

பரம்பரை அறங்காவலர்
கே. சீனிவாச நாயுடு

மேலாளர்
கோ. சஞ்சீவி

## ஸ்ரீ சக்திவனேஸ்வரசுவாமி திருக்கோயில்

### திருச்சக்திமுற்றம் (பட்டீஸ்வரம்)

கும்பகோணம் வட்டம்] [தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயில் தாராசுரம் புகைவண்டி நிலையத்தின் அருகிலுள்ள பட்டீஸ்வரத்தைச் சேர்ந்த திருச்சத்தி முற்றத்தில் உள்ளது. சத்திமுற்றப் புலவர் வாழ்ந்த இடம் இதுவேயாகும். இத்தலம் இயற்கை வளத்துடன் இயங்குகிறது. திருநாவுக்கரசரால் பாடல் பெற்றது. ஒவ்வொரு வருடமும் தைமாதம் சப்தமியில் ரதசப்தமி என்னும் பெருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

S. கந்தசாமி பாண்டியன் B.A.,
இறைபணியாளர்

## ஸ்ரீ அம்பிகா விருப்பாக்ஷிதேவர் மடம்

மேலத்திருப்பூந்துருத்தி தஞ்சை வட்டம்

இம்மடத்தில் தினந்தோறும் ஸ்ரீ சுப்பிரமணியர் விக்கிரகத்துக்கு பரம்பரை டிரஸ்டி அவர்களால் பூஜை, நைவேத்தியம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் டி மடத்தின் முன்னோர்களான பரம்பரை டிரஸ்டிகள் சமாதிகளுக்கும் குருபூஜை ஆராதனை செய்யப்பட்டு வருகிறது. இம்மடம் தஞ்சாவூர் - அகரப்பேட்டை பஸ்ரூட்டில் திருக்கண்டியூருக்கு மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ளது.

மாணிக்கம் ஆச்சி
பரம்பரை தர்மகர்த்தா

## ஸ்ரீ சுவர்ணஸ்தாபனேஸ்வரசுவாமி கோயில்

### (பொன்வைத்தநாதர்)

சித்தாய்மூர் திருச்சிற்றேமம்

அப்பர், ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம். ஆலத்தம்பாடி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கில் 4 கல் தொலைவிலும், ஆலந்தம்பாடி பேருந்து நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. அர்த்த மண்டபத்தில் கல் சாளரத்தில் நெடுங்காலமாக அமைந்துள்ள "தேன் அடை" பார்க்க வேண்டியது. "மேலும் வணிகப் பெண்ணின்கற்பின் மேன்மையை உலகிற்குஉணர்த்த, வைகாசித்திங்களில் விசாகத்திற்கு முதல் நாள் இரவு அகாலத்தில் அகாலதரிசனம் தந்து உய்வித்த இடம்.

எம் பசுபதி
நிர்வாக அதிகாரி

# திரு நீலகண்டபிள்ளையார் திருக்கோயில்

## பேராவூருணி (ஏந்தல்)

பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் வளம்கொழிக்கும் சோணாட்டின் தெற்கே பொன்னி யாற்றின் தென்கரையில் மிக அழகாகக் காட்சி அளிக்கின்றது. இதன் அருகிலேயே காரைக்குடி – மாயூரம் புகைவண்டிப் பாதையிலுள்ள பேராவூரணி புகைவண்டி நிலையம் உள்ளது. இங்கிருந்து பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, புதுக்கோட்டை, மீமிசல் ஆகிய ஊர்களுக்குப் பேருந்துகள் சென்றவண்ணம் இருக்கின்றன. இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரைப் பெருந்திருவிழா மிகச் சிறப்போடு நடைபெற்று வருகின்றது. துளசிமாவேந்தனின் அமைச்சரது தீராதநோயைத் தீர்த்துவைத்த பெருமை இத்திருக்கோயிலைச் சாரும். ''இன்னலுற்றோரின் இன்னல் களைந்து இன்ப மூட்டும் திருநீலகண்டன்'' என மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வரும் இத்திருக்கோயிலின் பெருமையைப் பேசவும் வேண்டுமோ!

நிர்வாக அதிகாரி

கு. வேலுச்சாமி.பி. ஏ.,

---

# ஸ்ரீ புற்றிடங்கொண்டீசுவரசுவாமி

## தேவஸ்தானம்

பாபநாசம் வட்டம் புத்தூர் தஞ்சை மாவட்டம்

இந்தத் தலம் அம்மாப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இறைவன் பெயர் ஸ்ரீ புற்றிடங்கொண்டீஸ்வரர், இறைவியின் பெயர் ஸ்ரீ சௌந்தரநாயகி. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ முருகப்பெருமான் அருள்பாலிக்கும் சக்தியுடையவர். பங்குனி உத்திர விழாவிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் பால்காவடி எடுத்து முருகப்பெருமானின் விழாவினைக் கொண்டாடுவது மிகச் சிறப்புடையதொன்றாகும். இத்தலத்து இறைவனையும், முருகப்பெருமானையும் முறையாக வழிபட்டு நலங்கள் பல பெற்று பலனடைந்தவர்கள் பலருண்டு.

ஆலய நிர்வாகிகள்

## திரு புட்பவனேசுவரர் திருக்கோயில்

தஞ்சை வட்டம் மேலத்திருப்பூந்துருத்தி

சமயக்குறவர்கள் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசரால் பாடல்பெற்ற இத் திருக்கோயில் சப்ததானங்களில் ஒன்றாகும். தொன்மை மிக்க இத்திருத்தலம் காலத்தின் கொடுமைக்கு ஆளாகி சீர்கேடுற்றுள்ளதால் திருப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப் பெற உள்ளன. திருக்கோயிலின் நிதிநிலை நெருக்கடிமிக்கதாய் இருப்பதால் ஆன்மீக உணர்வு மிக்க அன்பர்கள் பொருள் உதவி அளிப்பதினால்மட்டிலுமே இத்திருக்கோயிலின் சீர்கேடுகள் செம்மைப்படுத்தி விரைந்து குடமுழுக்குசெய்ய இயலும், அன்பர்கள் விரைந்து உதவிட விழைகிறோம்.

நிர்வாக அதிகாரி

V. K. மறைமணி

---

## திரு வடமூலேசுவரர் திருக்கோயில்

தஞ்சை வட்டம் திருவாலம்பொழில்

தொன்மை மிக்க இத்திருக்கோயில், சம்பந்தரால் பாடல்பெற்ற சிறப்புடையது. தஞ்சையிலிருந்து கண்டியூர் வழியே திருக்காட்டுப்பள்ளி செல்லும் பெருவழிப் பாதையில் கண்டியூரிலிருந்து சுமார் 3 கல் தொலைவில் குடமுருட்டி ஆற்றுக்கு தென்புறமாய் அமைந்துள்ளது. நவக்கிரகங்கள் மருந்து சாற்றி தனி குடமுழக்கு செய்யப்பெற நிதி உதவி அளிக்கும்படி அன்பர்களை வேண்டிக் கொள்ளப்படுகிறது.

நிர்வாக அதிகாரி

V. K. மறைமணி

---

## திரு அரிபிரமேசுவரர், இலக்குமிநாராயணப் பெருமாள்

நடுக்காவேரி திருக்கோயில்கள் தஞ்சை வட்டம்

தஞ்சை, கண்டியூர், திருக்காட்டுப்பள்ளி பெருவழித்துறையில் நடுநாயகமாக அமைந்துள்ள இத்திருத்தலம் தொன்மைமிக்கது. சிவன் கோயிலில் இராசகோபுரம் புதிதாய் அமைக்கப்பெற்றுள்ளது. இதர திருப்பணி வேலைகளை செய்துமுடித்து விரைந்து குடமுழுக்கு செய்யவேண்டியுள்ளது. நிதிநிலை பற்றாக்குறை இருப்பதால் அன்பர்கள் நிதி அளித்து உதவி ஆண்டவனின் அருளுக்கு ஆளாகும்படி வேண்டப்படுகிறது.

நிர்வாக அதிகாரி

V. K. மறைமணி

# ஸ்ரீ பசுபதீசுவரசுவாமி
# ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள்
## திருக்கோயில்
### பந்தணை நல்லூர்

கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம் கும்பகோணத்திலிருந்து வடகிழக்கில் 18 கல் தொலைவிலும் குத்தாலத்திற்கு வடக்கே 6 கல் தொலைவிலும் உள்ளது.

இத்தலத்து இறைவன் ஸ்ரீ பசுபதீசுவரசுவாமி, இறைவி ஸ்ரீ வேணுபுஜாம்பிகை. இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய சமயக்குரவர்களால் பாடல் பெற்றது. இத்தலப்பெருமாள் திருநாமம் ஸ்ரீ ஆதிகேசவப்பெருமாள், இறைவி ஸ்ரீ பரிமளவல்லி என்பதாம்.

இத்திருக்கோயில் மிகவும் பழைமையானது. எந்த நூற்றாண்டில் யாரால் கட்டப்பட்டது என்பதை உறுதியாக கூற முடியவில்லை. இக்கோயில் அமைந்திருக்கும் கட்டிடக் கலையின் பாணியிலிருந்து இது சோழன் காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம் என ஒருவாறு ஊகிக்க வேண்டியுள்ளது. இத்திருக்கோயிலை சுமார் இரண்டு லட்ச ரூபாய் செலவு செய்து திருப்பணி வேலைகள் நன்கு செய்யப்பட்டு கடந்த 6-6-69-ல் மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தது.

ஸ்ரீ பசுபதீசுவரருக்கு மாசி மக உற்சவமும், ஸ்ரீ ஆதி கேசவப்பெருமாளுக்கு பங்குனி உத்திர உற்சவமும் இங்கு சிறப்புடையது.

| பரம்பரை அறங்காவலர்கள்: | நிர்வாக அதிகாரி |
|---|---|
| P. மணிப்பிள்ளை (தலைவர்) | V. நாராயணன் B. A. |
| P. பெத்துராஜபிள்ளை | |

# ஸ்ரீ ஓதனவனேஸ்வரசுவாமி ஆலயம்

## திருச்சோற்றுத்துறை

இவ்வாலயம் நால்வரில் மூவரால் (அப்பர், சம்பந்தர், சுந்தரர்) பாடல்பெற்ற சிறப்பினையுடையது. சப்தஸ்தலம் என்று புகழ்பெற்ற ஏழு ஸ்தலங்களுள் இது மூன்ருவது இடத்தினைப் பெறுகிறது. இது குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது.

கௌதம மகரிஷி ஆசிரமம்கட்டி இவ்விடததில் தங்கிவந்தார். தாதுவருஷத்தில் உலகத்தில் பஞ்சமேற்பட்டு மக்கள் யாவரும் வருந்தி மகரிஷியிடம் முறையிட, மகரிஷி இறைவனிடம் முறையிட, இறைவனே உமையுடன் வந்திருந்து அன்னம் சமைத்து பாலித்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது. அதனல் சுவாமிக்கு ஓதவனேஸ்வரர் (ஓதனம் - சோறு) என்றும், அம்பாளுக்கு அன்னபூரணி என்றும் பெயர் வழங்கி வருகிறது. இங்கு சப்தஸ்தான திருவிழா சித்திரை மாதத்தில் வெகு விமரிசையாய் நடைபெறும்.

| | |
|---|---|
| அறங்காவலர் | நிர்வாக அதிகாரி |
| R. கணேசன் | K. கந்தசாமி B. A. |

# ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரஸ்வாமி திருக்கோயில்

## திருக்களர்

மன்னர்குடி வட்டம் தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ ஞானசம்பந்தர், ஸ்ரீ நாவுக்கரசர் ஆகியோரின் பாடல் பெற்றது இத்தலம். மன்னர்குடியிலிருந்து 13 மைல் தொலேவில் உள்ளது,

சுவாமியின் பெயர் ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வரர். அம்பிகையின் பெயர் ஸ்ரீ அமுதவல்லி அம்பாள், ஸ்தல விருக்ஷம், பாரிஜாதம், (பவளமல்லிகை). தீர்த்தம், துருவாச தீர்த்தம். 6 கால பூஜை நடைபெறுகிறது. திருவாதிரை உற்சவம் விசேஷம். சித்திரை மாதம் பிர்மோற்சவம் நடைபெறுகிறது.

இவ்வூரிலுள்ள கோ. ஆ. வீர, மடாலயத்தின் தலேவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ம. கிருஷ்ணனந்த சுவாமிகள் இவ்வாலயத்திலுள்ள ஸ்ரீ நடராஜர் சன்னதியின் உள் வெளி விமானங்களுக்குத் தன் உபயமாக சுமார் ரூ. 35000 செலவு செய்து செப்பேடுகள் வேய்ந்து வெள்ளி முலாம்பூசித் தந்துள்ளார்கள். கோயில் உபயோகத்திற்கு குடனும், அமுதுபடிக்கு அரிசியும் சுவாமிகள் உபயமாக தந்து வருகின்ருர்கள்.

| | |
|---|---|
| அறங்காவலர்கள்: | நிர்வாக அதிகாரி |
| சு. நாராயணசாமி (தலேவர்) | S. ராமநாதன் |
| P. ராமசாமி தேவர், D. முருகையாக்கோனர் | |

# திரு இருதய கமலநாதசுவாமி ஆலயம்

நாகை வட்டம் வலிவலம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் திருவாரூர் - அறந்தாங்கி இருப்புப் பாதை கிளையில் திருநெல்லிக்காவல் புகைவண்டி நிலயத்திலிருந்து கிழக்கே 8 கி. மீட்டர் தொலைவிலும், கீவளூர் - திருத்துறைப்பூண்டி பேருந்து மார்க்கத்திலும் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில்கோச் செங்கண்ணன் என்ற சோழ அரசர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டதால், கி. மு. 2000 நூற்றுண்டிற்கு முற்பட்டதாகிறது. இத்தலத்தைப்பற்றி சமயகுறவர்களால் பாடல் பெற்றதும், அருணகிரிநாதர் திருப்புகழ் பதிகம் பாடிய பெருமையும், ''வலிவலம் மும்மணிகோவை'' என்ற அரிய இலக்கிய நூல் ஒன்றும், சிறப்புடையது ஆகும். ''புன்னை மரம்'' புனித மரமாகவும், ''சக்கரதீர்த்தம்'' புனித நீராகவும் உடைய இத்தலத்தில் எழுபத்திரண்டு அடியார்களின் திருவுருவங்களையும், வலம்புரி விநாயகரும், மனைத்துணை நாதர், மாழையுண்கண்ணியும், ஆறுமுகப்பெருமானும், சுற்றுப்புரங்களில் பரிவார தேவதைகளுடனும் அமைந்திருப்பது மனதில் அழியா இறையுணர்வை வளர்க்கிறது.

நிர்வா அதிகாரி

N. சிவலிங்கம்

# திரு வேதபுரீச்சுரசுவாமி ஆலயம்

நாகை வட்டம் சாட்டியக்குடி தஞ்சை மாவட்டம்

காவிரிக்குத் தென்கரையில் 84-வது சிவத்தலமான திருக்கீழ்வேளூர் தலத்திலிருந்து மேற்கே திருக்கைச்சின்னம் வழியாக திருத்துறைப்பூண்டி செல்லும் பெருவழியில் சுமார் 7-வது மைலில் உள்ளது இத்தலம். திருவாரூர் நாகூர் செல்லும் புகைவண்டிப் பாதையிலுள்ளது கீழ்வேளூர்.

இங்கு வெப்பு நோயாளர்கள் தம் வெப்பு நோய் நீங்க, இத்தலத்து இறைவனை வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர். அன்றியும் இத்தலத்தில் சாட்டியமுனிவர் வழிப்பட்டு பேறுபெற்றதாலும், சாட்டியக்குடி எனப் பெயர் வந்தது. ஆலயத்தில் சாட்டிய முனிவரின் சிலை உருவம் பிரதிஷ்ட்டை செய்யப்பெற்றுள்ளது.

திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் திகழும் திருக்கோயிலின் பெயர் ''ஏழிருக்கை'' என்பதாகும். திருச்சாட்டியக்குடி ஒன்பதாம் திருமுறையாகிய கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாவில் ஒவ்வொரு பாடலிலும் ''ஏழிருக்கையில் இருந்த ஈசனுக்கே'' என்று வருகிறது. மேற்கு நோக்கிய சந்நதி. தலவிருட்சம் வன்னிமரம். தீர்த்தம் வேத புஷ்கரணி.

அறங்காவலர்
A. கோபாலகிருஷ்ணன்

நிர்வாக அதிகாரி
N. சிவலிங்கம்

## ஸ்ரீ பிரம்மசிரக்கண்டீஸ்வரசுவாமி கோயில்

### கண்டியூர் தஞ்சை மாவட்டம்

சிவபெருமானின் வீரச்செயல்களை அடிப்படையாகக்கொண்டு அமைந்த அட்ட வீரட்டானங்களுள் முதலாவது கண்டியூரே. பிரமனது ஐந்தாம் தலையை நீக்கிய பெருமான் பிரம சிரக்கண்டீசராக விளங்கு கிறார். தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற இத்திருக்கோயில் ஆதித்த சோழன் காலத்துக் கற்றளி. மேற்கு நோக்கிய சந்நிதியை உடையது. ஆண்டுதோறும் மாசித்திங்கள் 13, 14, 15-ஆம் நாட்களில் மாலையில் நிகழும் சூரியபூசை அடியார்களுக்குப் பெருவிருந்தாகும். வட பிரகா ரத்தில் பிரமன் கலைமகளுடன் கிழக்குநோக்கிக் காட்சி வழங்குகிறார், திருவையாற்றிலிருந்து இரு கிலோ மீட்டர் தெற்கில் விளங்கும் திருக் கோயிலையுடைய இத்திருத்தலம் திருவையாற்றோடு கணக்கிடப்படும் ஏழு திருத்தலங்களுள் ஐந்தாவது தலமாகும்.

நிர்வாக அதிகாரி

**கே. நடராஜன்**

## ஸ்ரீ கைச்சினேஸ்வரசுவாமி தேவஸ்தானம் கச்சனம்

திருத்துறைப்பூண்டி - திருவாரூர் நெடுஞ்சாலையில் திருத்துறைப்பூண் டிக்கு வடக்கே 6 கல் தொலைவிலும், திருவாரூருக்குத் தெற்கே 12 கல் தொலை விலும், காரைக்குடி - மாயூரம் புகைவண்டிப் பாதையில் அம்மனூர் புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 2 கல் தொலைவிலுமுள்ளது. சமயக் குறவர்களால் பாடல்பெற்ற சிறப்பினையுடையது. கோச்செங்கட் சோழ மன்னர் ஈசர்க்கு அமைத்த எழில்மாடக் கோயில்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது. கோங்கு மரங்கள் சூழ்ந்திருந்தமையால் கோங்குவனம் என்ற பெயர் உடையதாயிற்று. தலப்பெயர் கைச்சின்னம். இறைவன் பெயர் கைச்சின்னேஸ்வரர். இறைவியின் பெயர் வெள்வளைநாயகி. அகத்திய முனிவர் வில்வலன், வாதாபி என்ற இருவரைக்கொன்ற பாவத்தையும் விதூமர் பிர்மாவினால் தனக்கு நேர்ந்த சாபத்தையும் இங்கு வந்து போக்கிக் கொண்டார்கள். இத்தலத்தில் அகத்தியலிங்கம், விதூமலிங்கம், தேவலிங் கம், காசி விஸ்வநாதலிங்கம், ஆதி கர்ணிகாவனேஸ்வரலிங்கம் என்ற பஞ்ச லிங்கங்கள் இருக்கின்றன. இந்திர தீர்த்தம், வச்சிர தீர்த்தம், தேவ தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன.

பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஆதீனகர்த்தர்

நிர்வாக அதிகாரி P. **நெல்லையப்பன் B.A.,**

தருமை ஆதீனம்

# ஸ்ரீ சட்டைநாதசுவாமி

# தேவஸ்தானம்

## சீர்காழி

### தஞ்சை மாவட்டம்

" பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரும் வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய்ச் சிரபுரம்முன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால் "

எனப் பன்னிரண்டு திருப்பெயர் பெற்றிலங்கும் இப்பழம்பதி

" திருஞானசம்பந்தப் பிள்ளையார் "

திருவவதாரஞ் செய்த சிறப்பு மிக்கது!
தோணியப்பர் திருக்காட்சி கண்டு, அம்மை சிவஞானப் பாலுண்டு

" தோடுடைய செவியன் "

என்ற தெய்வத் தமிழைப் பாலருவாயர் பாடிய அரும்பதி!

இறைவர் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி
இறைவன் சட்டைநாதத் திருமேனிகொண்டு மலைக்கோயிலுள்
அருள் வழங்கும் சிறப்பு உண்டு.

சித்திரைத் திருவிழாவில் இரண்டாம் திருநாள் அன்று
திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் அருளப்பெற்ற விழா
மிகச் சிறப்பானது

சட்டைநாதர் பலருக்குக் குலதெய்வமாகத் திகழ்வது
ஆண்டுக்கு ஒருமுறை எழுந்திருத்து நடைபெறும்.

# ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

## திருலோக்கி

### கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்தலம், கும்பகோணம் வட்டத்தில், கும்பகோணம் - அணைக்கரை நெடுஞ்சாலையில் உள்ள திருப்பனந்தாளிலிருந்து கிழக்கே சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

தஞ்சை பெருவுடையார் கோவிலை எடுப்பித்த முதலாம் ராஜ ராஜ சோழனின் குருவான கருவூர்த்தேவரின் திருவிசைப்பாப் பாடல்கள் பதினொன்று பெற்ற சிறப்புத்தலம் இது. இந்த ஆலயத்தின் இறைவனை "திரைலோக்கிய சுந்தரம்" என்று கருவூர்த்தேவர் குறிப்பிட்டு உள்ளார்.

தற்போது இறைவன் பெயர் சுந்தரேஸ்வரர் என்றும், இறைவியின்பெயர் அகிலாண்டேஸ்வரி என்றும் வழங்குகிறது. இவ்வாலயத்திலுள்ள ரிஷபாரூடர் சிலா மூர்த்தமும், ரதிமன்மத ஆலிங்கன சிற்பமும் வேறெங்கும் காணக்கிடைக்காதவை.

குருபகவானுக்கு, பரமேஸ்வரன், மார்கழி திருவாதிரையில், சகல தேவர்களும் புடை சூழ காட்சி அளித்து பாபவிமோசனம் அளித்ததாக ஐதீகம். இத்தலத்திலுள்ள மானசதீர்த்தம், லக்ஷ்மி தீர்த்தம், வருண தீர்த்தம் ஆகிய தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழிபட்டால் ஊமை முதலான பிறவி குறைகள் நிவர்த்தியாகுமென நம்பப்படுகிறது.

தலவிருட்சம் :- சரக்கொன்னை

அனைவரும் வந்து தரிசித்து இன்புற வேண்டுகிறோம்.

நிர்வாக அதிகாரி
**S. நல்லநாயகம்**

அறங்காவலர்கள் :

**தி. மு. இராசமாணிக்கம் (தலைவர்)**
**கு. இராசமாணிக்கம் எம். எல். ஏ.**
**ரெ. கிருஷ்ணமூர்த்தி**

# ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி
# திருக்கோயில்
## எட்டுக்குடி

நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இந்த திருக்கோயிலுக்குச் செல்ல நாக பட்டினத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும், திருத்துறைப்பூண்டியில் இருந்தும் பேருந்து வசதிகள் இருக்கின்றன. இத்தலம் அருண கிரிநாதரால் பாடல் பெற்றது. வன்னிமரம் தலவிருட்சம். வான்மீகி முனிவர் அடக்கம். மூலவர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஒரு அரிய அமைப்பு.

இங்கு நடைபெறும் கந்தர்சஷ்டி விழாவும், சித்திராபௌர்ணமி விழாவும் மிகவும் சிறப்புடையன.

நிர்வாக அதிகாரி
**ஜி. சோமசுந்தரம் பி. எஸ்ஸி.**

அறங்காவலர்கள் :

**M. சுவாமிநாத முதலியார்** **V. செல்வராஜ்**
**S. நடராஜபிள்ளை** **R. துரைசாமித் தேவர்**
**P. சிங்காரு வாய்க்காரர்**

# திரு அருள்வள்ளல்நாதசுவாமி ஆலயம்

மாயூரம் வட்டம் திருமணஞ்சேரி தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் உமாதேவியாருக்கும், பரமேஸ்வரனுக்கும் திருமணம் நடந்த சிறப்பு வாய்ந்த இடம். திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடல்பெற்றது.

வயதுவந்த திருமணமாகாத ஆடவரும் பெண்டிரும் திருமணசாந்திக்காக மாலை சாத்தி வழிபட்டால் தோஷம் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

இவ்வாலயத்தை ஒரு முறை தரிசித்து அருள்வள்ளல் நாதர் அருள் பெற்று உய்வீர்.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

K. சுப்பிரமண்ய செட்டியார் (தலைவர்) இரா. ஞானசம்பந்தம் B.A.,

M. மாரிமுத்து படையாட்சி, K. திருவேங்கடாச்சாரி

# திரு தாமோதரநாராயணப் பெருமாள் கோயில்

## திருக்கண்ணங்குடி

(கீழ்வேளூர் வழி) நாகை வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் திருவாரூர் - நாகூர் புகைவண்டிப்பாதையில் கீழ்வேளூர்புகைவண்டி நிலையத்திலிருந்துகிழக்கே 2 கி. மீ. தொலைவிலுள்ளது. திருவாரூர் - நாகபட்டினம் பெருவழிப் பாதையில் ஆழியூரிலிருந்து தெற்கே 2 கி. மீ. தொலைவிலுள்ளது. இத்தலம் 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது.

கருடாழ்வார் இங்கு கைகட்டி காட்சியளிக்கின்றார். இங்கு சித்திரைப் பெருவிழாவும்,மார்கழி அத்யயனவிழாவும், மாசி மகவிழாவும் சிறப்புடையன.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

வி. என். குருசாமிபிள்ளை (தலைவர்) இரா. நரசிம்மன், பி. எஸ்ஸி.,

டி. என். இராமசாமி முதலியார்

டி. எஸ். இராஜம் அய்யங்கார்

எஸ். கோவிந்தராஜலு நாயுடு டி.ஆபத்தோத்தாரணம் செட்டியார்.

★

# ஸ்ரீ வசிஸ்டேஸ்வரசுவாமி திருக்கோயில்

## திட்டை

தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ வசிஸ்டேஸ்வரர் கோவில் தஞ்சையில் இருந்து கும்பகோணம் செல்லும் புகைவண்டி மார்க்கத்தில் தஞ்சையில் இருந்து இரண்டாவது நிலையத்தில் உள்ளது. இவ்வசிஸ்டேஸ்வரருக்கு தேருஞதசாமி என்ற பெயர் உள்ளது. இக்கோயில் கருங்கல்லால் கட்டப்பட்டது. கோயிலின் முன் பக்கம் தீர்த்த குளம் உள்ளது.

அன்பர்களுக்கு எல்லாம் அருள் பாலிக்கும் கைகண்ட தெய்வம்.

அறங்காவலர்

R. நடராஜ பிள்ளை

# ஸ்ரீ கோணேஸ்வரசுவாமி
## திருக்கோயில்

### திருக்குடவாயில் (குடவாசல்)

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்திருத்தலம் கும்பகோணம் - திருவாரூர் பெருவழித்துறையில் உள்ளது. ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலம். கோச்செங்கட் சோழனல் அமைக்கப்பெற்ற மாடக்கோயில்களுள் ஒன்ருகும். இங்கு எழுந்தருளியுள்ள சுப்பிரமணியசுவாமியை அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

மிகச் சிறப்பாகத் திருப்பணி நடைபெற்று 10-6-70-ல் பெருஞ்சாந்திவிழா நடைபெற்றது. இத்திருக்கோயிலுக்கு வந்து தரிசித்து பயன் அடையுங்கள்.

நிர்வாக அதிகாரி

**எம். சுப்பிரமணியன்**

அறங்காவலர்கள் :

கே. எஸ். இராமசாமி (தலைவர்)
ஆர். சுந்தரமூர்த்தி முதலியார்
எஸ். முத்துகிருஷ்ண தேவர்
ஆர். வெங்கடாசல உடையார்
வி. எஸ். சண்முகவேலு அதியமார்

# அருள்மிகு மீனுட்சிசொக்கநாதசுவாமி திருக்கோயில்

## மன்னார்குடி

சோழ மண்டலத்தின் திலகமென விளங்கும் மன்னையில் படிந்தார் பாவம் போக்கும் பாம்பணி நதியின் மேல்கரையில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு மீனுட்சிசொக்கநாதராய் விளங்குகின்ற இந்த திருக்கோயில் பிற்கால சோழமன்னர் ஒருவரால் திருப்பணி செய்யப்பெற்றது. இங்கு இறைவன் மீனுட்சிசொக்கநாதராய் இருப்பதால் திருமணங்கள் மிக அதிகமாக நடைபெறுகின்றன. அவர்களது சௌகரியத்திற்காக தற்போது ரூ. 50,000 ல் திருமணக்கூடம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் வழிபடுவோர் வசதிக்காக தங்கும் விடுதிகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

அறங்காவலர்கள் :

R. S. இராசகோபாலன் (தலைவர்)

S. சிவசுப்பிரமணியம் B. SC., B. L., A. சுப்பையா

நிர்வாக அதிகாரி

S. சீனிவாசன்



# திருவெண்ணியூர் கோவில்வெண்ணி

காவிரித் தென்பால் 102 வது திருத்தலம். வெண்ணிப் பறந்தலைப் போரில் கரிகாலன், சேரபாண்டியரை வென்ற வரலாற்றுச்சிறப்பு பெற்ற இடம். இறைவன்: கருப்பங்கழிகள் பதிந்தன போன்ற அடையாளங்களோடு வெண்ணிக்கரும்பர். இறைவி: அழகியநாயகி. இத்தலம் மூவராலும் பாடல் பெற்றது. இத்தலம் திருவாரூர் - தஞ்சாவூர் புகைவண்டி மார்க்கத்தில் கோவில்வெண்ணி நிலையத்திற்கு வடக்கே ஒரு கி. மீ. தொலைவிலும், பேருந்து மார்க்கத்தில், வடக்கே 2 கி. மீட்டர் தொலைவிலுமுள்ளது.

சித. இராமனுதன் M.A., B.com.

திருப்பணியாளர் - அறங்காவலர்

## ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

பட்டுக்கோட்டை வட்டம் **கரம்பயம்** தஞ்சை மாவட்டம்

பட்டுக்கோட்டை - தஞ்சை நெடுஞ்சாலையில் பட்டுக்கோட்டையிலிருந்து 5 கல் தொலைவில் உள்ளது.

இங்கே கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் வீற்றிருக்கின்ற இடத்தில் முன்பு ஒருநாள் யாதவர் ஒருவர் பால் கொண்டு போகும்போது பால்தவறி விட்டது. அது போலவே தொடர்ந்து இரண்டு மூன்று தினங்களாய் அந்த இடத்திலேயே பால் தவறிக்கொண்டே இருந்தது. அந்த யாதவர் பால் தவறிய ஸ்தலத்தை வெட்டிப் பார்க்க தீர்மானித்து வெட்டிய உடன் இரத்தம் பீரிட்டு யாதவர் முகத்தில் அடித்து, இரத்தம்பட்ட இடங்களெல்லாம் சிவப்பு கொப்புளங்கள் கண்டன. அந்த ஸ்தலத்தில் இரத்தம் தெரித்ததாலும் யாதவருக்கு கொப்புளங்கள் ஏற்பட்டதாலும் அந்த இடத்தை பிரித்து பார்க்கையில் தற்போது வீற்றிருக்கும் அம்மன்சிலை மண்வெட்டி பட்ட இரத்த காயத்துடன் தென்பட்டது. அந்த இடத்திலேயே ஆலயத்தைக் கட்டி பூஜை நிவேதனங்களுக்கு ஏற்பாடுசெய்து வழிபட்டு வருகின்றனர்.

அறங்காவலர்கள்: நிர்வாக அதிகாரி

**அய்யாவு முதலியார் V. R. சுந்தரராஜன் M. S. முத்துசாமி**

## ஸ்ரீ வேதபுரீஸ்வரர் திருக்கோயில்

**மாயூரம் வட்டம் தேரழுந்தூர் தஞ்சை மாவட்டம்**

இறைவன் ஸ்ரீ வேதபுரீஸ்வரர், இறைவி ஸ்ரீ சௌந்தரநாயகி. தீர்த்தம் வேதாமிர்ததீர்த்தம், தலவிருட்சம் சந்தனவிருட்சம், இறைவனின் சாபத்தினால் பசுவான இறைவி பின் சௌந்தர உருவம் பெற்றதலம். வேதியர்களுக்கு வேதத்தை ஓதுவித்து இறைவன் அகத்தியர் சாபம் நீக்கிய திருத்தலம். காவிரிக்கு தனிக்கோவில் உண்டு. திருஞானசம்பந்தருக்கு ஈஸ்வரர் ஆலய இருப்பிடத்தை சுட்டிக்காட்டிய ஸ்ரீ ஞானசம்பந்த விநாயகர் ஆலயம் இதன் உபகோயில். மாசிமாத புனர்வசு தினத்தன்று இவ்வூர் பெருமாளுக்கு இறைவன் காட்சி அளித்தல். மாசி மாதம் 22, 23, 24 தேதிகளில் சூரிய பூஜைநடைபெறும். கல்வெட்டுகள்பல நிறைந்தது. சிவன் விஷ்ணு சொக்கட்டான் ஆடிய மண்டபம் பார்க்கச் சிறந்தது. சரித்திர பிரசித்தியும் பெற்றது. திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலம்.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

**டி. ஆர். ராஜு (தலைவர்) டி. ஆர். கேசவன் பி. பத்மநாபன்**

**டி. எஸ். சுவாமிநாத முதலியார்**

# ஸ்ரீ சௌரிராஜப்பெருமாள் திருக்கோயில்

## திருக்கண்ணபுரம்

நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்

பாநாளும் பணியத் தணியும் பிணி
ஏதம்சார எனக்கே லினியேன் குறை
வேதநாவலர் விரும்பும் திருக்கண்ண புரத்
தாதியானை அடைந்தார்க் கல்லலில் லையே.

108 திவ்விய தேசங்களுள் ஒன்ருகிய இந்தத் தலத்தைத் தரிசித்து விட்டீர்களா? இன்றேல் உடனே தரிசியுங்கள்.

நிர்வாக அதிகாரி

டி. உதயராஜ் பி. ஏ.

அறங்காவலர்கள் :

ஜி. கோவிந்தசாமி நாயுடு (தலைவர்)
S. சுந்தரேச அய்யர்
ஆர். எஸ். எம். ராமலிங்கம் பிள்ளை

# ஸ்ரீ கிருத்திவாகேஸ்வரசுவாமி ஆலயம்

பாபநாசம் வட்டம் சூலமங்கலம் தஞ்சைமாவட்டம்

இவ்வாலயம் பசுபதி கோவில் புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் உள்ளது. அஸ்திரதேவரால் பூஜிக்கப்பட்ட ஸ்தலம். திருநாவுக்கரசர் ஸ்தலப் பதிகம் பாடி உள்ளார். சப்தஸ்தான விழா அன்று ஸ்ரீ சக்கரவாகேஸ்வர சுவாமியை வரவேற்று, வழி அனுப்பும் வைபவம் மிகச் சிறப்பாக இருக்கும். சப்த மங்கை க்ஷேத்திரங்களில் இது 3-வது ஸ்தலம்.

நிர்வாக அதிகாரி

T. சொக்கலிங்கம்

# ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமி திருக்கோயில்

பாபநாசம் வட்டம் இலுப்பக்கோரை தஞ்சை மாவட்டம்

இவ்வாலயம் திருவையாறு - கும்பகோணம் கப்பிச் சாலையில் உள்ளது. வெண்ணாற்றுக்கு தென்கரையில் உள்ளது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுப்பிரமணியஸ்வாமியை தரிசிக்க வேண்டியது அவசியம்.

அறங்காவலர்கள் : நிர்வாக அதிகாரி

G. சீனிவாஸம் பிள்ளை, (தலைவர்) T. சொக்கலிங்கம்

சி. தங்கவேலுபிள்ளை

# ஸ்ரீ ஜம்புநாதசுவாமி திருக்கோயில்

நல்லிச்சேரி தஞ்சை வட்டம்

இவ் ஆலயம் சப்தமங்கை ஸ்தலங்களில் ஒன்று. நந்தி மங்கை என்றும் கூறுவார்கள். தஞ்சை-அய்யம்பேட்டை பெருவழிப் பாதையில் அய்யம்பேட்டை புகைவண்டி நிலையத்திற்குத் தெற்குத் திசையில் 1 கி. மீட்டர் தொலைவிலுள்ளது இங்கு சப்தஸ்தான விழா சிறப்பு வாய்ந்தது. இவ்வாலயத்தில் எழுந்தருளி யிருக்கும் அம்பாள் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள்.

நிர்வாக அதிகாரி

T. சொக்கலிங்கம்

# சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதி அம்பாள் திருக்கோயில்

## திருநெல்வேலி

இத்திருக்கோயில், ஏழாம் நூற்றுண்டைச் சேர்ந்தது. இதன் மொத்தப் பரப்பு, பதினுன்கு ஏக்கர் பரப்புள்ளது. பஞ்ச சபைகளில் ஒன்று. இத்திருக்கோயிலின் ஆதரவில் 625 மாணவியரைக்கொண்ட ஒருமகளிர் உயர்நிலைப் பள்ளியும், 575 மாணவ மாணவியரைக்கொண்ட ஓர் ஆதார ஆரம்பப் பாடசாலையும். 75 மாணவியரைக்கொண்ட அனுதை ஆசிரமமும், 2000 புத்தகங்களைக்கொண்ட நூல் நிலையமும் நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் திருப்பணி சுமார் 7 லட்ச ரூபாயில் நடைபெற இருக்கிறது. திருக்கோவில்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.

**வி. டி. ஏ. சேவுகபாண்டியன்**
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளை (தலைவர்)
ஏ. எம். கே. முத்தையா பிள்ளை
ப. இலக்குமணன்,
திருமதி வாமசுந்தரம் அம்மாள்

# ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

## கஞ்சனூர்

கும்பகோணம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

இத்திருக்கோயில் மாயூரம் - கும்பகோணம் புகைவண்டிப் பாதையில் உள்ள நரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 2 கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து கிழக்கே 10 கல்தொலைவிலும் உள்ளது. நாவுக்கரசரால் பாடல்பெற்ற இத்திருக்கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவைகளினுல் சிறப்பு வாய்ந்தது. இங்கு மாசி மாதத்தில் பிரமோத்சவம் சிறப்புடையது.

வைஷ்ணவமதத்தில் தோன்றிய சுதர்சனர் மழுமுக்காலியில் நின்று சைவத்தை ஸ்தாபித்து ஹரதத்தசிவாசாரியார் என்ற திருநாமம் பெற்றுர். இது அவர் அவதரித்த தலம். இவர் மோக்ஷமடைந்த தை மீ சுக்கில பஞ்சமி திதியில் உத்ஸவம் நடைபெறுகிறது. தனிக்கோயிலும் உண்டு.

மதுரை ஆதீன கர்த்தர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரியசுவாமிகள்**
பரம்பரை அறங்காவலர்

**திரு. பி. எஸ். இராமலிங்கம்**
நிர்வாக அதிகாரி

தருமை ஆதீனம்

# ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

## திருக்கடவூர்

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

### மார்க்கண்டேயர்க்காகக் காலனை அழித்த வீரட்டத்தலம்

"......... ...................அருமுனிக்காச்
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்தபிரான் கடவூருரை உத்தமனே"

என அப்பர் பெருமான் இவ்வற்புதத்தை வியக்கிறார்.

மூவர் முதலிகள் தேவாரம் பெற்ற முதன்மைத்தலம்.

அமிர்தகடேஸ்வரராக அண்ணலும், அபிராமியாக அன்னையும் அருள் வழங்குகின்றனர்.

காலசம்ஹாரமூர்த்தி இங்கே தனிச் சிறப்பு உடையது

"அபிராமி அந்தாதி"

என்னும் அம்மை அருள்வியக்கும் அன்பு நூலை அபிராமிபட்டர் அருளி அளித்துள்ளார்.

ஆண்டுதோறும் சித்திரை ஆரும் நாள் நடைபெற்றுவரும்

"காலசம்ஹார விழாவை"

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு மகிழ்வர்!

கார்த்திகைச் சோமவார நாட்களில் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

ஆயுள்விருத்தி வேண்டுவோர் இங்கு வந்து பரிகாரங்கள் செய்துகொள்வர் தங்கும் விடுதி உண்டு

மாயூரம் — தரங்கம்பாடி புகைவண்டிப்பாதையில் இத்தலம் உள்ளது

# பழனித்திருமலை

( தொலைபேசி எண் - 236 )

*காண்பீர் !* *களி கொள்வீர் ! !*

குன்றுதோறும் குமரப்பெருமான் கோயில்கொண்டு, ஆறுபடை வீடுகளுள் அழகுபடை வீடாகத் திகழ்வது திருப்பழனி மலையாகும். இங்கு கலியுகவரதனும் முருகப்பெருமான் ஞான தண்டாயுதபாணியாய், திருக் கோலங்கொண்டு காட்சியளிக்கின்றார். யோக முனிவராம் போக சித்தரால் உருப்பெற்றுக் கண்டாரைக் கவரும் கவினெடு காட்சியளிக்கும் முருக தரிசனம் காணரிய பேரின்பமாகும். புன்னகை தவழ, பொன்னகை பொலிய முருகப்பெருமான் தங்கத் திருத்தேரில் பவனி வரக்காண்பது, பிறவிப் பெரும் பயனாகும். பெருமானைக் கண்டு இருமை இன்பமும் பெறுவீர். ஞானப்பழமாய் மலையில் விளங்கும் ஆண்டவனுடைய திருமேனிபட்டு வரும் இராக்கால சந்தனம் முதலிய பிரசாதங்கள் உடற்பிணியையும், உள்ளப்பிணியையும் ஒருங்கே போக்கவல்லன. மலை மருந்தாம் அப்பெரு மருந்தைக் கண்டும், உண்டும் ஆனந்தம் பெறுவீர்.

தேவஸ்தானம் நடத்தும் பல்வேறு நிறுவனங்கள் :

1. ஸ்ரீ பழனியாண்டவர் இந்திய பண்பாட்டுக் கல்லூரி, 2. ஸ்ரீ பழனி யாண்டவர் கலைக்கல்லூரி, 3. ஸ்ரீ பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, 4. பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி, 5. நாதசுரப்பள்ளி, 6. பழனி யாண்டவர் நூலகம் வாசகசாலை, 7. அன்பு இல்லம், 8. வேதாகம பாட சாலை, 9. கோசாலா, 10. சித்த மருத்துவச்சாலை, 11. தேவஸ்தான கூட்டுறவு விற்பனை நிலையம்.

*ஆண்டவனைக் கண்டு ஆனந்தம் கொள்வீர் !*
*மீண்டும் பழனி வந்து மேன்மை மிகப்பெறுவீர் ! !*

மேலும் விளக்கம் பெற எழுதுங்கள்.

நிர்வாக அதிகாரி (துணை ஆணையர்)

**ஜி. ஆதிமூலம்** பி. ஏ., பி. எல்.,

ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம்
பழனி (மதுரை மாவட்டம்).

தருமை ஆதீனம்

# ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம்

## திருப்பனந்தாள்

(தஞ்சை மாவட்டம்)

'தாடகை' என்ற சிவபூசைச் செல்வியின் திருமாலையை முடிசாய்த்து ஏற்ற முதல்வன் அருணஜடேசப் பெருமான் பின்னர், எண்ணற்ற படைகளுக்கெல்லாம் தலைநிமிராமல் 'குங்குலியக்கலய நாயனர்' பேரன்பிற்குத் தலைநிமிர்ந்த அருளாளன்!

இறைவன் : செஞ்சடையப்பர் இறைவி : பெரியநாயகி

தலவிருட்சம் 'பனை' என்பதனுல் 'பனந்தாள்' எனப்பெயர் பெற்றது

திருஞானசம்பந்தர் தெய்வத்தமிழ் பெற்றது.

இத்தலம்

கும்பகோணம் — அணைக்கரைப் பேருந்துப் பெருவழியில் உள்ளது

# திரு வேங்கடாசலபதிசுவாமி திருக்கோயில்

## ஒப்பிலியப்பன்கோயில்

கும்பகோணம் வட்டம் தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ வைணவத் திருத்தலங்கள் 108-ல் இத்திருக்கோயிலும் ஒன்ருகும். திருவிண்ணகர், தென்னகத் திருப்பதி என வணங்கி வழிபட்ட திருத்தலம். ஆழ்வார்கள் நால்வரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது. பேயாழ்வாரின் பாசுரத்தால் இப்பெருமாளின் திருமேனி வடிவழகும், நம்மாழ்வாரின் பாசுரத்தால் இப்பெருமாளின் திருவருள் புரியும் தன்மையும், திருமங்கையாழ்வாரின் பாசுரத்தால் இப்பெருமாளின் வீரமும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. பல்வகையிலும் இப்பெருமாள் நிகரில்லாமல் இருப்பதால் ஒப்பு இல்லாதவன், ஒப்பிலியப்பன் என நம்மாழ்வார் புகழ்ந்து இத்திருநாமம் சூட்டியுள்ளார். திருப்பதிக்கு முன்னுலேயே பெருமாள் வைகுந்தத்திலிருந்து இங்கு எழுந்தருளியதால் திருப்பதிக்கு முந்திய தலமாக கருதப்படுகிறது. மாமுனிவர் மார்க்கண்டேயரின் பிரார்த்தனைக்கு இணங்கி உப்பு இலாத உணவை உகப்பாக ஏற்றுக்கொண்டதால் உப்பிலியப்பன் என்ற பெயரும் உண்டு.

பிரார்த்தனை, திருக்கல்யாணம், கருடசேவை, தர்பார் உத்சவம் ஆகிய உத்சவங்களை நித்தியப்படியில் பெருமாளுக்கு செய்வித்து சேவார்த்திகள் மகிழ்கின்றனர். புரட்டாசி, பங்குனி மாதங்களில் பிரம்மோத்சவமும், ஐப்பசி மாதத்தில் திருக்கல்யாண உத்சவமும் ஒவ்வொரு மாதமும் சிரவண உத்சவமும் சிறப்பாக நடைபெறுகிறது.

வழிபடுவோர் வசதிக்காக சத்திரங்களும் தங்கும் அறைகளும் திருமண மண்டபமும் உள்ளன. கும்பகோணத்திலிருந்து டவுன்பஸ் வசதியும் உண்டு. தமிழில் அர்ச்சனை நன்கு செய்விக்கப்படுகிறது.

அறங்காவலர்கள் :

V. ஜனுர்த்தனம் (தலைவர்)

R. நரசிம்ம அய்யங்கார் B. A., B. L.,

D. ஆதிமூலம்

நிர்வாக அதிகாரி

N. தியாகராஜன் B. Com.

# ஸ்ரீ சதுரங்கவல்லபநாதசுவாமி திருக்கோயில்

மன்னார்குடி வட்டம் **பூவனூர்** தஞ்சை மாவட்டம்

இந்தத் திருக்கோயில் மன்னார்குடி – நீடாமங்கலம் பெருவழியில் நீடாமங்கலத்திலிருந்து 2 கல் தொலைவில் உள்ளது. "பூவனூர் புகுவார் வினைபோகுமே" என்று திருநாவுக்கரசரால் போற்றப்பட்ட தலம். இன்றும் வழிபடும் அடியவரின் வினைபோக்குதல் காணக்கூடிய ஒன்று. எத்தலத்திலும் இல்லாததாய் இத்திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் மைசூர் மன்னர்களின் குலதெய்வமான ஸ்ரீ சாமுண்டியம்மன் சந்நிதியில் பிரதி ஞாயிறு தோறும் எலிக்கடி முதலான விடங்களுக்கு காலை 9 மணி முதல் 12 மணி வரை வேர் கட்டப்படுகிறது. வேர் கட்டியதும் விடம் நீங்குகிறது. தமிழகம் பூராவும் உள்ளவர்கள் வந்து தரிசித்து பயனடையும் பேறு பெற்றது இத்திருத்தலம்.

இது தீர்த்த விசேடமும் மூர்த்தி விசேடமும் கொண்டது. கிழக்கு நோக்கிய சந்நிதி. இறைவன் ஆதிபெயர் புஷ்பவனேஸ்வரர். இறைவி கற்பகவல்லி. வசுவேச மன்னனுக்கு மகளாக பார்வதிதேவி, ராஜராஜேஸ்வரி என்ற பெயரோடு அவதாரம் செய்து சதுரங்க ஆட்டத்தில் சிறப்புற்று விளங்கிய காலத்தில் இத்தலத்து இறைவன் சதுரங்கமாடிவென்று மாலையிட்டதால் ஸ்ரீ சதுரங்கவல்லபநாதர் என்ற காரணப்பெயர் நிலைக்கப் பட்டது. ஸ்ரீ ராஜராஜேஸ்வரிக்கு தனி சந்நிதி இருக்கிறது. செவிலித் தாயாக வந்த சாமுண்டிபேரில் "ஸ்ரீ சாமுண்டியம்பிகைமாலை" என்ற நூல் உள்ளது. அதுவும் அதிருத்திரகும்மி என்ற நூலும் தேவஸ்தான வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் வைகாசிப் பெருந்திருவிழாவும், சித்திரை மாதத்தில் சாமுண்டி பெருந்திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

நிர்வாக அதிகாரி
**என். பன்னீர்செல்வம்**

அறங்காவலர்கள் :

P. சுப்பையா முதலியார் (தலைவர்)
T. B. அய்யாத்துரை உடையார், M. செல்லையன்

தருமை ஆதீனம்

# ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம்

## திருக்குவளை

தஞ்சை மாவட்டம்

சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று.

விடங்கன்: அவனிவிடங்கர், நடனம்: பிருங்கநடனம்
கோளிலியாகப் பெருமான் எழுந்தருளியிருப்பதால்
"நவக்கிரக தோஷங்கள்" எனப்படும் குற்றங்கள்
இத்தலத்தை வழிபட்டால் நீங்கப்பெறும்.

'ஆளில்லை எம்பெருமான் அவை
அட்டித்தரப்பணியே' — என

குண்டையூரில் பெற்ற நென்மலையைச் சுமக்க சுந்தர
மூர்த்தி சுவாமிகள் ஆள் வேண்டி வழிபட்டுப்
பெற்ற அருள் தலமிது.

திருவாரூர் - தலைஞாயிறு பேருந்து வழியில் அருள்
கொழிக்கும் இத்தலம் அமைந்துள்ளது.

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்

## தாயமங்கலம்

### இளையாங்குடி பரமக்குடி வட்டம்

தாயமங்கலம் என்னும் இத்தலம் சிவகங்கையிலிருந்து இளையாங்குடி-பரமக்குடி செல்லும் பெருவழியில் 18-வது கல்லில் பிரிகிற கிளை வழியில் 5 கல் தொலைவில் இருக்கிறது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் தாயமங்கலம் கிராம கண்மாய் கரையில் இராச கோபுரமும் மூலத்தான மேல்விமானமும் கோயிலின் வடபுறம் ஊரணியும் அமைந்து ஓர் பாடல்பெற்ற தலத்துக்கு ஒப்பாக இச்சுற்றுப்புறங்களில் மிகவும் பிரசித்திபெற்று விளங்குகிறது. இக்கோயில் 16-ம் நூற்றுண்டில் ஸ்தாபனமான தாக சில பாடல்களின் வாயிலாக தெரிகிறது.

இத்திருக்கோயில் தற்போது பரம்பரை அறங்காவலராக பணியாற்றிவரும் முத்துபால் செட்டி என்பவரின் முன்னேரான திரு. முத்து செட்டியாரவர்கள் தவசங்களை காளை மாடுகளின்மேல் பொதி ஏற்றி மதுரை போன்ற பெருநகரங்களில் விற்று, அங்கிருந்து மளிகை போன்ற பொருள்களை திரும்ப வாங்கிவருவார். ஒரு நாள் மதுரையை அடுத்துள்ள கண்ணனூர் காட்டில் 5 வயதுள்ள ஓர் பிராமண பெண்குழந்தை தன்னந்தனியே அழுதுகொண்டு நிற்பதை கண்ட செட்டியார் அவர்கள் மனம் துடித்து அன்புடன் அச்சிறுமியை தூக்கிவந்தார். பக்கத்து கிராமமெங்கும் விசாரித்தும் குழந்தைக்கு உடையவர் எவருமில்லாததால் தம் சொந்த ஊரான தாயமங்கலத்திற்கு தூக்கிவந்தார். கிராமத்திற்கு மேற்கே கண்மாய் உள்பகுதியிலுள்ள ஓர் ஊரணி கரையில் குழந்தையை இறக்கிவிட்டு மாடுகளுக்கு தண்ணீர் காட்டிவரச் சென்றுர். சென்று திரும்பிவந்து பார்க்கும் போது குழந்தையைக் காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்காமல் கவலையுற்று வீட்டில் வந்து படுத்தார். படுத்துறங்கும்போது கனவில் அக்குழந்தை தோன்றி, "அப்பா! நான் எங்கும் சென்றுவிடவில்லை. நீ இறக்கிவிட்ட இடத்திலேயே நிலைத்திருக்கிறேன். ஆதலால் அதேயிடத்தில் எனக்கோர் ஆலயம் அமைத்து நீயும் உனது வம்ச பரம்பரையினரும் என்னை பூசித்து கொண்டாடி வாருங்கள். நீ பாதுகாத்து என்னை இங்கு கொண்டுவந்து சேர்த்ததால் உன் பெயரை முன்னுல் சேர்த்து முத்து மாரியம்மன் என பெயரிட்டு அழையுங்கள்'' என கூறி மறைந்தது. உறக்கம் நீங்கி எழுந்த செட்டியார் கனவில் சொன்னது போலவே அவ்விடத்தில் ஓர் பீடம் அமைத்து முறைப்படி பூசைகள் நடத்திவர அங்கு பற்பல அற்புதங்கள் நிகழ்ந்தன. காலப்போக்கில் அக்கோயிலுக்கு கர்ப்பக்கிரகமும் இராசகோபுரமும் திருமதிலும் கட்டப்பெற்று ஸ்ரீ முத்துமாரியம்மன் இன்று ஓர் கண்கண்ட தெய்வமாக விளங்குகிருள்.

ஆதியில் ஸ்தாபிதமான பங்குனி மாதம் 15-ம் நாள் எத்தன்மையுடைய நாளாக இருப்பினும் அன்று காப்புக் கட்டி 10 நாட்கள் திருவிழா மிக்க சிறப்பாக நடைபெற்று வருகிறது. அச்சமயம் லட்சக்கணக்கான மக்கள் கூடி தங்களின் பலவகையான நேர்த்திக்கடன்களைசெலுத்தி அம்பாளின் அருளைப்பெறுகின்றனர்.

பரம்பரை அறங்காவலர் — ந. அ. முத்துப்பால் செட்டியார்

தருமை ஆதீனம்

## ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி தேவஸ்தானம்

ஆச்சாள்புரம் (தஞ்சை மாவட்டம்)

" காதலியைக் கைப்பற்றிக்கொண்டு வலங்கொண்டருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞானசம்பந்தர்
நாதன் எழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுந்த "

சிறப்புமிக்க தலம் இது!

அண்ணல் : சிவலோகத்தியாகராஜர்

அம்மை : திருவெண்ணீற்றுமை

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களால் பாடப் பெற்ற 'திருவெண்ணீற்றுமையம்மைப்பிள்ளைத் தமிழ்' இத்தலத்திற்கு உண்டு. இத்தலம் கொள்ளிடம் மகேந்திரப்பள்ளிப் பேருந்து வழியில் கொள்ளிடத்திற்குக் கிழக்கே 4 கல் தொலைவிலுள்ளது. யாத்ரீகர் தங்குவதற்கு விடுதி கட்டப்பெற்றுள்ளது.

## அருள்மிகு அமர்ந்தாளம்மன் துர்க்காபரமேஸ்வரி திருக்கோயில்

சேந்தங்குடி — மாயூரம்

இத்திருக்கோயில் காவிரி நதியின் வடபால் கல்லணை - காவிரிப் பூம்பட்டினம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மாயூரம் பேருந்து நிலையத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அம்பாள் அடியவர் வேண்டும் வரனை வேண்டியபடி அருள்பாலித்து வருகிருள்.

இத்திருக்கோயிலில் 5-9-1971 அன்று திருப்பணி தொடங்கப் பட்டு சுமார் ரூ. 30,000/- செலவில் நடைபெற்று வருகிறது. இதற்கு அன்பர்கள் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கி அம்பாளின் அருளுக்கு பாத்திரமாக வேணுமாய் வேண்டிக் கொள்கிருேம்.

என். சுப்பிரமணியன்
நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்:

ஆர். நாராயணசாமி, பி. கோவிந்தசாமி பிள்ளை

தருமை ஆதீனம்

# ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி

## தேவஸ்தானம்

## திருபுவனம்

குடந்தை வட்டம் — தஞ்சை மாவட்டம்

பிற்காலச் சோழப் பெருவேந்தன் 'மூன்ரும் குலோத் துங்கன்' கட்டி முடித்த வரலாற்றுச் சிறப்பும், சிற்ப அழகும் உடைய பொற்புடைத்தலம் இது! இரணியனைக் கொன்ற நரசிங்கத்தைப் பெருமான் 'சரபராக' எழுந்தருளி வந்து அழித்து அருள் வழங்கும் அன்புத்தலம்.

நடுக்கந்தீர்த்த நாயகன் என்ற் பொருள்படும் கம்பக ரேசஞக இறைவனும், அறம் வளர்த்த நாயகியாக இறைவி யும் எழுந்தருளி அருள் வழங்குகின்றனர். சிறப்புத் திரு மேனியாக 'சரபமூர்த்தி' அருள் வழங்குகிருர்.

ஆண்டுக்கொருமுறை சித்திரைத் திருவிழா முடிவில் சரபமூர்த்தி திருவீதி எழுந்தருளும் சிறப்புடையது. உபா சனைகளில் சரபஉபாசனை சிறந்தது. பலருக்கும் குலதெய்வ மாகத் திகழ்வது.

இத்தலம் கும்பகோணம் - மாயூரம் பேருந்து வழியில் கும்பகோணத்தை அடுத்து 4-வது கல்லில் உள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ மாணிக்கியநாதசுவாமி திருக்கோயில்

## திருநீலக்குடி

மாயூரம் வட்டம் — தஞ்சை மாவட்டம்

மாணிக்கியநாதசுவாமி என வழங்கும் நீலக்குடி அரன்தன் கோயில் தென்னல்குடி என வழங்கும் திருநீலக்குடியில் அமைந்து உள்ளது. இவ்வூர் ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து தென்பால் நான்கு கி. மீட்டர் தொலைவிலுள்ளது. இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் நிருவாகத்திற்குட்பட்டது. இந்தத்தலத்துக்கு அப்பர் சுவாமிகளது திருப்பதிகம் ஒன்று உண்டு. மேற்படி திருப்பதிகத்திலே,

"கல்லினோ டெனைப்பூட்டி அமண் கையர்
ஒல்லைநீர் புக நூக்க என்வாக்கினால்
நெல்லுநீள் வயல் நீலக்கு டியரன்
நல்ல நாமம்நவிற்றி உய்ந்தேனன்றே"

என்ற தேவாரம் அப்பரது வரலாற்றுக்கு ஓர் அகச்சான்று போல் அமைந்து உள்ளமை அறிஞர்கள் சிந்தனைக்குரியது. இந்தத் தலத்தில் வருணனும், தேவகன்னியரும் இங்குள்ள இறைவனைப் பூசித்ததாகப் புராணம் கூறும். மூலவரான லிங்க மூர்த்திக்கு எண்ணெய் அபிஷேக காலத்தில், அந்த எண்ணெயில் பாதியளவு லிங்கத்தில் சுவர்வது ஒரு தனி விசேஷம். அன்பர்கள் திருநீலக்குடி அரனைத் தரிசித்து திருவருள் பெறுவார்களாக.

திருவாவடுதுறை ஆதீனம்

# ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோயில்

## திருவிடைமருதூர்

இத்தலம் கும்பகோணம் — மாயூரம் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திற்கு கிழக்கே 6 கல் தொலைவிலுள்ளது. மூவர் தேவாரமும் திருவாசக தனிப்பாடல்களும் பெற்ற சிறப்பினை உடையது. கருவூர்த்தேவரது திருவிசைப்பாவையும் பட்டினத் தடிகளால் பாடப்பட்ட திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்ற துதிப்பாவினையும் பெற்றது. சீரார்ந்த கோயில், செல் லாய கோயில், புலமல்கு கோயில், கனமல்கு கோயில், நலம் மொய்த்த கோயில், நிறைமல்கு கோயில் என்றெல்லாம் ஞான சம்பந்தப் பெருமானால் பாராட்டப்பெற்ற பெருமையினை உடை யது இத்திருக்கோயில். இடைமருதினை வலமிட உடல் நலிவும் உள வினையும் இலதாகும் என்பது அப்பெருமானது அருள் வாக்கு. 'இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே' எனப் போற்றியுள்ளார் அப்பர் பெருமான். மணிவாசகருக்கு இறை வன் திருவடி சூட்டிய பெருமையினையுடையது இத்திருத்தலம். இடைமருது அதனில் ஈண்ட இருந்து படிமப் பாதம் வைத்த அப்பரிசினைப்பற்றி மணிவாசகம் பேசுகிறது.

பெரிய அன்பின் வரகுணதேவர் என்று பட்டினத்தடி களால் பாராட்டப்பெற்ற பாண்டிய மன்னரது தொடர்பினையும், பட்டினத்தடிகளது சீடரான பத்ரகிரியாரது தொடர்பினையும் உடையது இத்தலம். பட்டினத்தடிகள் பல்லாண்டுகள் வதிந்து தவம் செய்ததும், இறைவனிடம் அடிகள் பேய்க்கரும்பினைப் பெற்றதும் இத்தலத்திலேயாம்.

பிரசுரிப்போர்: இராஜராஜசோழன் சதயவிழாக் குழுவினர், தஞ்சாவூர்.
அச்சிட்டோர்: ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை.

தருமை ஆதீனம்

# ஸ்ரீ வைத்தியநாதசுவாமி

# தேவஸ்தானம்

## வைத்தீஸ்வரன்கோயில், தஞ்சை மாவட்டம்.

“பிரிவிலா அடியார்க்கு என்றும்
வராத செல்வம் வருவிப்பான்” என்றும்
“மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்” என்றும்

**அப்பர்பெருமானல் சிறப்பித்துப்பாடப்பெறும் சிவபெருமான்
வைத்தியநாதராக வீற்றிருக்கும் பெருந்தலம்**

| | |
|---|---|
| அம்மை : | தையல்நாயகி |
| தீர்த்தம் : | சித்தாமிர்தம் |
| முருகன் : | செல்வமுத்துக்குமாரர் |
| தலவிருட்சம் : | வேம்பு அங்காரகத்தலம் |

**திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய
தெய்வத்தமிழ் பெற்றதலம்**

தருமையாதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்
சிவஞானதேசிக பரமாசாரியசுவாமிகள், குமரகுருபரர்,
படிக்காசுப் புலவர் மூவரும் பாடிய
பக்தி இலக்கியங்கள் இத்தலத்திற்கு உண்டு

**முழுதும் புதுப்பிக்கப்பெற்றது**

**[illegible]ல மகாகும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்விக்கப்பெற்றது**

# ஸ்ரீ பங்காருகாமாக்ஷி அம்மன் திருக்கோயில்

மேலவீதி :: தஞ்சாவூர்

இக்கோயிலில் நவராத்திரி விழா அதிவிமரிசையாக கொண்டாடப்படும். இந்த பங்காருகாமாக்ஷியைத் தரிசித்தால் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியைத் தரிசனம் செய்வதற்குச் சமம் என்பது ஸ்ரீ சங்கராசார்யசுவாமிகளது அருள்வாக்கு.

தலைமை அறங்காவலர்
திரு. R. சுவாமிநாதன்

நிர்வாக அதிகாரி
திரு. V. K. கண்ணபிரான், B. A.,

அறங்காவலர்கள்:
திரு. T. N. ராமச்சந்திரன், B. Com., B. L.,
திரு. Dr. J. சேதுராமன், G. C. I. M.

ஸ்தானீக அறங்காவலர்கள் :
திரு. T. V. சீனிவாச சாஸ்திரிகள்
திரு. R. சுந்தர சாஸ்திரிகள்

Printed at the Sri Namasivayamurthi Press, Thiruvavaduthurai.